தொல்காப்பியம்

உரைவளம்

எழுத்ததிகாரம்

குற்றியலுகரப் புணரியல்

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

(உரைவளம்)

குற்றியலுகரப் புணரியல்

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

International Institute of Tamil Studies

டி.டி. டி. ஐ., தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டம் வெளியீடு-12

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	Tolkāppiyam-Kuṛṛiyalukarap puṇariyal
Editor	A. SIVALINGAṆAR International Institute of Tamil Studies, Madras-113.
Publisher and Copyright	International Institute of Tamil Studies, T.T.T.I, Taramani, Madras-600 113.
Publication Number	76
Language	Tamil
Edition	First
Date of publication	September 1983
Paper used	16 k.g D/Demy
Size of the Book	21 × 18 cms.
Printing types used	10 point
Number of pages	xxiv + 200
Number of copies	1200
Price	Rs. 11/- (Eleven only)
Printers	Sri Gomathy Achagam, 7, Chinnappa Rowther Street., Triplicane, Madras-5.
Binding	Card Board
Artist	Eswari
Subject	Grammar
Summary	Commentaries on kuṛṛiya lukarappuṇariyal of Tolkāppiyam

இயக்குநர்
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ, (அஞ்சல்) சென்னை-600113.

முன்னுரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் 'தொல்காப்பிய உரைவள வெளியீட்டுத் திட்டத்தில்' இதுவரை 11 நூல்களை வெளியிட்டுள்ளது. 12-ஆவது நூலாகத் 'தொல்காப்பியக் குற்றியலுகரப் புணரியல்' வெளிவருகிறது. நன்முறையில் தொல்காப்பிய உரைவள நூல்கள் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. அது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

வழக்கம்போல் இதுவரை வெளிவந்துள்ள உரைகள் அனைத்தையும் தொகுத்துத் தருவதோடு அதனுடைய கருத்துகளையும் தெளிவாக உரைவளத்தில் தருகின்ற பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்களுடைய நல்முயற்சியினைப் பாராட்டுகிறேன்.

இப்போது எழுத்ததிகாரம் நிறைவாகியுள்ளது. எழுத்ததிகார உரைவளத்தில் பல இயல்களுக்குரிய உரைவள நூல்கள் இப்போது கிடைக்கவில்லை ஆதலால் தொகுப்புகள் உரைவளக் களஞ்சியம் என்ற பெயரில் எழுத்ததிகார உரைவளத் தொகுப்புகள் அனைத்தையும் சேர்த்து ஒரே நூலாக வெளியிட்டால் என்ன என்ற எண்ணம் வந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு வெளியிட்டால் பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் நிரந்தரப் பார்வை நூலாக (Reference Book) அது அமையும். அதைச் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதே வேகத்தில் தொல்காப்பிய உரைவளம் ஏனைய இயல்களுக்கும், விரைவாக வெளிவரும் என நான் நம்புகிறேன். தன்னுடைய குறிக்கோளைச் சிறப்பாகவும், விரைவாகவும் நிறைவேற்றி வருகின்ற பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் என்றும் பாராட்டிற்கு உரியவர்.

நிறுவனத்தின் எல்லாப் பணிகளுக்கும் வளர்ச்சிக்கும் ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

உரிய காலத்தில் நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ கோமதி அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

10—8—1983 ச. வே. சுப்பிரமணியன்

பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் மூலம், குற்றியலுகரப் புணரியல் உரைவள நூலைப் பன்னிரண்டாம் நூலாக வெளியிடுகின்றது.

முன்னர் வந்த வெளியீடுகளிற் போலவே இதன் கண்ணும், இளம்பூரணர் முதலான பழைய உரையாளர் உரைகளும், தற்கால உரையாளர் கருத்துகளும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும், சி. இலக்குவனார், கமீல் சுவலபில் ஆகியோர் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் உள்ளன.

இந்நூலுடன் எழுத்ததிகாரத்து ஒன்பது இயல்களுக்கும் உரைவளம் நிறைவுறுகின்றது. தொல்காப்பிய எழுத்ததிகார உரைவளம் எனத் தனியொரு நூலைச் செப்பமுற வெளியிட வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ள நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கு என் பணிவார்ந்த வணக்கத்தை நன்றியுடன் செலுத்துவதைத் தவிர வேறு என் செய்ய வல்லேன்.

இந்நூற்பதிப்புக்குப் பெரிதும் உதவிய டாக்டர் ச. சிவகாமி, டாக்டர் வை. இரத்தினசபாபதி, புலவர் க. வா. சச்சிதானந்தம் ஆகியோர்க்கு நன்றியுடையேன்.

எங்கள் நிறுவனத் தலைவர் மாண்புமிகு, கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கட்கும் நன்றிக்கடப்பாடுடையேன்.

குறித்தகாலத்தில் அச்சிட்டுதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர்கட்கும், இந்நூலைப் பார்த்துக் கருத்துரை வழங்கும் தமிழ் அறிஞர் பெருமக்களுக்கும் நன்றியுடையேன்.

ஆ. சி.

10—8—1983

பொருளடக்கம்

முன்னுரை	iii
பதிப்புரை	iv
பொருளடக்கம்	v—vi
சுருக்க விளக்கம்	vii—viii
System of Transliteration	ix
குற்றியலுகரப் புணரியல் பொருட் சுருக்கம்	x—xxiv
குற்றியலுகரப் புணரியல் விளக்கம்	1—2
1. குற்றியலுகரத்தின் இயல்பு	
குற்றியலுகரத்தின் பெயர், முறை, தொகை	2—8
ஈரொற்றுத் தொடர்கள்	9—12
இருவழியிலும் குற்றுகரம் வரும்	13—24
2. குற்றிய லிகரம்	
குற்றியலிகரம் வருமாறு	24—30
3. குற்றியலுகரப் பொதுப்புணர்ச்சி	
நெடில் தொடர், உயிர்த்தொடர்	30—34
இடைத்தொடர் ஆய்தத் தொடர்	34—35
வன்தொடர் மென்தொடர்	36—44
மரப்பெயர்	44—45
மேலும் ஓர் முடிபு	
நெடிற்றொடர், வன்தொடர்	48—50
சிலமென் தொடர் மொழிகள்	50—54
எண்ணுப் பெயர்	54—5
4. குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி	
வண்டு, பெண்டு	55—56
வினா, சுட்டுப் பெயர்	57—58
அல்வழியில் சுட்டுப் பெயர்	58—59
மேலும் ஓர் முடிபு	—60
அல்வழியில் குற்றுகர வீறுகள்	60—63
வன்றொடர்	—64
ஆங்கு, யாங்கு	65—66
யாங்கு இயல்பாதல்	66—67
அவற்றின் நிலை மொழிச் செய்கை	67—69
உண்டு	69—72
திசைப்பெயர்	72—73
திசைப் பெயர் முன் திசைப் பெயர்	73—77
5. குற்றுகர எண்ணுப் புணர்ச்சி	
பத்தொடு எண்ணுப் பெயர்	78—80
பத்தின் முன் இரண்டு	81—82
பத்தின் முன் ஆயிரம்	83—84

பத்தின் முன் நிறை அளவுப் பெயர்கள்	84—86
ஒன்றுமுதல் ஒன்பான்முன் பத்து	86—88
ஒன்று இரண்டு—திரிபு	88—90
இரண்டு மேலும் ஓர் முடிபு	—90
மூன்று ஆறு திரிபு	91—92
நான்கன் திரிபு	92—93
ஐந்தன் திரிபு	—93
எட்டின் திரிபு	—94
ஒன்பதின் திரிபு	94—110
ஒன்றுமுதல் ஒன்பான்முன் அளவு நிறைப் பெயர்கள்	110—112
மூன்றன் திரிபு	112—113
ஐந்தன் திரிபு	114—116
எட்டின் திரிபு	116—119
ஐந்து, மூன்று—திரிபு	119—121
வகர முதல் மொழி முன் மூன்று	122—123
அதன்முன் நான்கு	123—124
அதன்முன் ஐந்து	124—125
ஒரு-இரு-திரிபு	125—129
மூன்று, நான்கு, ஐந்து-திரிபு	126—128
மூன்று மேலும் ஓர் திரிபு	128—129
ஆறின் திரிபு	129—130
ஒன்பதின் திரிபு	130—132
ஒன்றுமுதல் ஒன்பான்முன் நூறு	132—133
மூன்றின் திரிபு	-133
நான்கு ஐந்து—இயல்பு	-134
ஒன்பதின் திரிபு	135—140
ஒன்று இரண்டுமுன் ஆயிரம்	140—142
மேலும் ஓர் முடிபு	-143
மூன்றுமுன் ஆயிரம்	- 143
நான்குமுன் ஆயிரம்	-143
ஐந்துமுன் ஆயிரம்	144-
ஆறுமுன் ஆயிரம்	145—149
ஒன்பதுமுன் ஆயிரம்	149—151
ஒன்றுமுதல் ஒன்பதுமுன் நூறாயிரம்	151—153
நூறுமுன் ஒன்றுமுதல் ஒன்பது	154—156
நூறுமுன் ஒருபஃது முதலியன	156—157
நூறுமுன் அளவு நிறைப் பெயர்கள்	157—159
ஒருபஃது முதலியவற்றுமுன் ஒன்றுமுதல் ஒன்பது	159—160
அவற்றின் முன் ஆயிரம்	161—162
அவற்றுமுன் அளவு நிறைப் பெயர்கள்	162—163
ஒன்றுமுதல் எட்டுமுன் பொருட் பெயர்	164—166
அவற்றுமுன் உயிர்முதல் மொழியும் யகரமும்	166—168
இரண்டுமுதல் ஒன்பதுமுன் மா	168—170
6. அதிகாரப் புறனடை	
செய்யுள் முடிபு	170—173
புணர்க்கப்படாத சொற்கள்	-173

சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆ. மொ—ஆங்கில மொழிபெயர்ப்பு
இல—இலக்குவனார்
இல. வி. (இ. வி)—இலக்கண விளக்கம்
இ. ள்.—இதன் பொருள்
இளம்—இளம்பூரணர்.
உ—ம்—உதாரணம்
உயிர், உயிர்ம—உயிர் மயங்கியல்
உயிரீற்—உயிரீற்றுப் புணரியல்
உவம—உவமவியல்
எழு. எழுத்—எழுத்ததிகாரம்
எ—று—என்றவாறு
ஐங்—ஐங்குறுநூறு
க. சு—கமீல்சுவலபில்
கற்பு—கற்பியல்
கிளவி—கிளவியாக்கம்
குற், குற்றி—குற்றியலுகரப் புணரியல்
குறிஞ்—குறிஞ்சிப் பாட்டு
குறுந்—குறுந்தொகை
சிலப்—சிலப்பதிகாரம்
சிவ—சிவலிங்கனார்
சீவக—சீவகசிந்தாமணி
சுப்—சுப்பிரமணிய சாஸ்திரியார்
சு. வே—சுவடிவேறுபாடு
செய்—செய்யுளியல்
சொல்—சொல்லதிகாரம்
தொன்—தொன்னூல் விளக்கம்
நச்—நச்சினார்க்கினியர்
நற்—நற்றிணை

நன்—நன்னூல்
நாலடி—நாலடியார்
நான்மணி—நான்மணிக்கடிகை
நேமி—நேமிநாதம்
பக்—பக்கம்
பி. இ. நூ—பிற்கால இலக்கண நூல்கள்
பி.கு—பிற்குறிப்பு
புள்ளி—புள்ளி மயங்கியல்
புறத்—புறத்திணையியல்
புறம் புறநா—புறநானூறு
பொருள்—பொருளதிகாரம்
மரபு—மரபியல்
மலை—மலைபடுகடாம்
முத்து. பு.—முத்துவீரியம் புணரியல்
வீர—வீரசோழியம்
வெள்—வெள்ளைவாரணனார்
வேங்—வேங்கடாராசுலு ரெட்டியார்

System of Transliteration

இலக்குவனார்	கமீல் சுவலபில்
உயிரெழுத்துகள்—Vowels	
அ—a	a
ஆ—ā	ā
இ—i	i
ஈ—ī	ī
உ—u	u
ஊ—ū	ū
எ—e	e
ஏ—ē	ē
ஐ—ai	ai
ஒ—o	o
ஓ—ō	ō
ஔ—a	au
மெய்யெழுத்துக்கள்—Consonant	
வல்லினம்	
க்—k	k
ச்—s	c
ட்—t	ṭ
த்—th	t
ப்—p	p
ற்—r	ṛ
மெல்லினம்	
ங்—ṅ	ñ
ஞ்—ñ	ñ
ண்—ṇ	ṇ
ந்—n	n
ம்—m	m
ன்—n̲	n̲
இடையினம்	
ய்—y	y
ர்—r	r
ல்—l	l
வ்—v	v
ழ்—ḻ	ḻ
ள்—l̲	ḷ

குற்றியலுகரப் புணரியல்
—பொருட் சுருக்கம்

முன்னுரை

பேச்சு வழக்கில் இருந்த தமிழை ஏட்டு வழக்கில் கொண்டுவர நினைத்த தமிழன், தமிழ்ச் சொற்கள் யாவற்றையும் செவிப்புலன் துணை கொண்டு நுண்மையாக ஆராய்ந்து எழுத்துகளை உருவாக்கினான். அ முதல் ஔ வரை பன்னிரண்டு எழுத்துகளைக் கற்பித்து அவற்றுக்கு உயிர் எழுத்துகள் எனப் பெயரிட்டான் . க் முதல் ன் வரை பதினெட்டு எழுத்துகளைக் கற்பித்து அவற்றுக்கு மெய் எழுத்துகள் எனப் பெயரிட்டான். அவை மொழி முதல் இடை கடைகளில் எவ்வெவ்வாறு வருகின்றன என்பதையும் கண்டு விளக்கினான். உயிரானது மொழி முதலில் தனித்தும் இடையிலும் கடையிலும் மெய்யுடன் சேர்ந்தும் வருதலையும்; மெய்யானது மொழிமுதலில் உயிருடன் சேர்ந்தும். இடையிலும் கடையிலும் தனித்தும், உயிருடன் சேர்ந்தும் வருதலையும் கண்டு விளக்கினான். ஆனால் அவற்றுள் அடங்காமல் மூன்று ஒலியெழுத்துகள் இருப்பதையும் தமிழன் கண்டான். அவை மொழியிடையிலும் கடையிலும் வருவன. அவைஉயிரிலும் அடங்காமல் மெய்யிலும் அடங்காமல் இருப்பன. அவற்றுள் இரண்டு உயிரொலிக்கூறும், ஒன்று மெய்யொலிக் கூறும் உடையன. எனினும் முழுமையான ஒலிக்கூறு உடையன வல்ல. அவற்றை முறையே குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும் பெயரிட்டமைத்தான்.

குற்றியலிகரம் தனித்து மொழிமுதலில் வாராமையால் உயிரில் சேராது. மொழியிடையில் மெய்மேல் ஏறிவருதலின் (கேண்ம்+இ+யா→கேண்மியா) மெய்யிற் சேராது.

குற்றியலுகரம் தனித்து மொழிமுதலில் வாராமையானும், உயிர்ஏற மெய்போல் இடங் கொடுதலானும் உயிரிற் சேராது. மொழியிறுதியில் உயிரொலியுடையதாயிருத்தலின் மெய்யிற் சேராது.

ஆய்தம், இருசிறகு எழுப்பும் (பறவை) உடலதுபோல இரு பக்கமும் எழுத்துகளைக் கொண்டன்றி வாராமையின் உயிருமன்று மெய்யுமன்று.

அம்மூன்றும் தமக்கெனப் பற்றுக்கோடு கொண்டு மொழியைச் சார்ந்தே வருதலின் அவற்றைச் சார்ந்து வரல்மரபின் எழுத்து (சார்பெழுத்து) என்றான்.

இவ்வாறு எழுத்துகளைக்கண்டு அவை தொடர்ந்த சொற்களை ஆராய்ந்த தமிழன் என்றுமுளதென் தமிழாக இருத்தற்கேற்ற வகையில் இலக்கணம் அமைத்தான். அவன் அமைத்த இலக்கணம் வழிவழியாக வழங்கி வரலாயிற்று. அவ்வப் போது சிற்சில மாற்றங்கள் செய்து இலக்கணம் அமைத்தனர் வழிவழி வந்தோர்.

அவருள் இன்று காலத்தால் முற்பட்டவரான தொல் காப்பியர் தம் கால வழக்குக் கேற்பச் சில புதிய கருத்துகளையும் சேர்த்துத் தமிழ் இலக்கணம் அமைத்தார். அவ்விலக்கணம் கூறும் நூல் தொல்காப்பியம். அது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் முப்பிரிவுடையது. ஒவ்வொன்றும் ஒன்பது ஒன்பது பிரிவுகளுடையது. அவற்றுள் எழுத்ததிகாரத்தின் ஒன்பதாம் பிரிவாகிய குற்றியலுகரப் புணரியல் என்பதன் சுருக்கம் வருமாறு:

குற்றியலுகரம்

இது தனியெழுத்தன்று; மொழியிறுதியில் வருவது; வல்லின மெய்மீது ஏறிவருவது. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்து வாராது தனி நெட்டெழுத்தையோ, தொடர்ந்து இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளையோ சார்ந்து வருவது.

எந்த எழுத்தைச் சார்ந்து அதாவது எந்த எழுத்தால் தொடரப்பட்டு வல்லெழுத்தின் மேல்ஏறிய உகரம் வருகிறதோ அதன் பெயரால் இன்ன தொடர்க் குற்றியலுகரம் எனப் பெயர் கூறப்படுவது.

தனி நெடிலால் தொடரப்படுமானால் அந்நெடில் உயிர் நெடிலாகவாவது உயிர்மெய் நெடிலாகவாவது அமையலாம். அது, நெடில் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும். உ-ம்: ஆடு, காடு.

வல்லெழுத்தின் மேலேறிய உகரம், உயிர்மெய்யெழுத்தால் தொடரப்படுமானால் அல்வுயிர்மெய் (குறிலாயினும் நெடிலாயினும்) பிரிக்கப்பட்டு உயிரால் தொடரப்படுவதாகக் கொண்டு உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும். உ-ம்: வரகு, பலாசு.

அது, எம்மெய்யால் தொடரப்படுகிறதோ அம்மெய்யின் இனத் தொடராகக் கூறப்படும்.

பாட்டு—வன்தொடர்க் குற்றியலுகரம்.
பாங்கு—மென்றொடர்க் குற்றியலுகரம்.
மார்பு—இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

அது ஆய்தத்தால் தொடரப்படுமாயின் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும் உ-ம்: எஃகு.

இவ்வகையில் குற்றியலுகரம் ஆறுவகைப்படும்.

இனி இவ்வறு வகைக் குற்றியலுகரங்களும் நிலைமொழியாய் இருக்க வருமொழி முதலில் உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் ஆகிய நாற்கணமும் வரின் இருமொழியும் அல்வழியிலும் வேற்றுமையிலும் எவ்வாறு புணரும் என்பதைத் தொல்காப்பியர் கூறுமாறு காணலாம்.

நிலைமொழி இறுதிக் குற்றுகரம் வருமொழி முதலில் உயிர் வரின் அவ்வுயிர் ஏற இடங்கொடுக்கும் என்பதை ஆசிரியர், குற்றியலுகரமும் அற்றென மொழிப (புணரி-3) என்னும் சூத்திரத்தால் குறிப்பிட்டார்.

உ-ம்:	நாடு + அரிது → நாடரிது,	அல்வழி
	வரகு + அரிது—வரகரிது	
	கொக்கு + அரிது— கொக்கரிது	
	குரங்கு + அரிது—குரங்கரிது	
	மார்பு + அரிது—மார்பரிது	
	எஃகு + அரிது—எஃகரிது	
	நாடு + அருமை—நாடருமை	வேற்றுமை
	வரகு + அருமை—வரகருமை	
	கொக்கு + அருமை—கொக்கருமை	
	குரங்கு + அருமை—குரங்கருமை	
	மார்பு + அருமை—மார்பருமை	
	எஃகு + அருமை—எஃகருமை	

குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிதல்.

அறுவகைக் குற்றியலுகரங்களும், வருமொழி முதலில் யகரம் அமையின் தாம் முழுதும் தோன்றாது மறைய ஆங்கு ஓர் இகரம் வரும். (அவ்விகரம் அரைமாத்திரையதாகும்) (411)

உ-ம்: நாடு + யாது—நாடியாது
வரகு + யாது—வரகியாது
கொக்கு + யாது—கொக்கியாது
குரங்கு + யாது—குரங்கியாது
மார்பு + யாது—மார்பியாது
எஃகு + யாது—எஃகியாது.

இவை அல்வழிப் புணர்ச்சி. காடு + யானை—காட்டு + யானை காட்டியானை என வேற்றுமையிலும் வரும்.

(i) அல்வழிப் புணர்ச்சி

வன்றொடர்க் குற்றுகரந் தவிர மற்றைய ஐந்தும் அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லெழுத்துவரின் இயல்பாகவே புணரும். (20)

உ-ம்: நாகு + கடிது — நாகுகடிது
வரகு + கடிது—வரகுகடிது
குரங்கு + கடிது—குரங்குகடிது
தெள்கு + கடிது—தெள்குகடிது.
எஃகு + கடிது — எஃகுகடிது.

(ii) வேற்றுமைப் புணர்ச்சி

(1) நெடிற்றொடர்க் குற்றுகரப் புணர்ச்சி

நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ட், ற் ஒற்றீறாக அமையின் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் நாற்கணமும் வர அவ்வொற்றுகள் இரட்டும். அப்போது வன்கணமாயின் வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். மற்றைக் கணங்களாயின் இயல்பாம், (6)

ஆடு + கால்→ ஆட்டுக்கால் பாறு + கால் = பாற்றுக்கால்	வன்கணம், வல்லெழுத்து மிக்கது
ஆடு + ஞாற்சி = ஆட்டுஞாற்சி பாறு + ஞாற்சி = பாற்றுஞாற்சி	மென்கணம்—இயல்பு.
ஆடு + வலிமை = ஆட்டுவலிமை பாறு + வலிமை = பாற்றுவலிமை	இடைக்கணம்-இயல்பு.
ஆடு + அடைவு = ஆட்டடைவு பாறு + அடைவு→பாற்றடைவு	உயிர்க்கணம்-இயல்பு

க் ச் த் ப் ஆகியவற்றின் மீது ஏறிய நெடில் தொடர்க் குற்றுகரங்கள் வேற்றுமையில் நாற்கணமும் வரின் இரட்டுதலும் வன்கணம் மிகுதலும் இல்லை. (7)

உ-ம்: நாகு + கால்→ நாகுகால்

(பிறவற்றுக்கு உதாரணம் வந்தவழிக் காண்க)

ஆட்டின் கால், பாற்றின் கால், நாகின் கால் என இன் சாரியை பெற்று வருதலும் உண்டு.

சில நெடிற்றொடர்க் குற்றுகரங்கள் வன்கணம் வரின் அம் சாரியை பெறுதலும் உண்டு உம்: ஏறு + கோள்→ஏறு + அம் + கோள்→ ஏறங்கோள். (12)

யாது என்னும் நெடிற்றொடர்க் குற்றுகரம் அன் சாரியை பெறும். உ-ம்: யாது + கோடு→ யாது + அன் + கோடு→ யாதன் கோடு.

(2) உயிர்த்தொடர்க்குற்றுகரப் புணர்ச்சி

ட், ற் என்னும் மெய்மேலேறிய உயிர்த்தொடர்க்குற்றுகரம் வருமொழி முதலில் வல்லெழுத்துவரின் வேற்றுமையில் அவ்வல்லெழுத்து மிக்குப் புணர்வதோடு ட், ற் எழுத்துகள் இரட்டித்தும் புணரும். (6)

உ-ம்: பகடு + கால→ பகட்டுக்கால்
முயிறு + கால்→ முயிற்றுக்கால்.

மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் எழுத்துகள்வரின் மிகுதல் இல்லாமல் ட், ற் இரட்டுதலோடு புணரும்.

உ-ம்: பகடு + ஞாற்சி→ பகட்டுஞாற்சி
முயிறு + ஞாற்சி→ முயிற்று ஞாற்சி,
பகடு + வன்மை→ பகட்டு வன்மை.
முயிறு + வன்மை→ முயிற்றுவன்மை.
பகடு + அடைவு→ பகட்டடைவு.
முயிறு + அடைவு→ முயிற்றடைவு.

க், ச், த், ப் மெய்களின் ஏறிய உயிர்த்தொடர் மொழிகள் இரட்டுதல் இல்லை. வல்லெழுத்து மிகுதலும் இல்லை. (7)

உ-ம்: வரகு + கதிர்→ வரகுகதிர்
பலாசு + சுளை→ பலாசுசுளை
உருபு + தவிர்ச்சி→ உருபுதவிர்ச்சி.

பகட்டின்கால், பகட்டின் ஞாற்சி, முயிற்றின்கால், முயிற்றின் ஞாற்சி, வரகின் கதிர், பலாசின்சுளை, உருபின்தவிர்ச்சி என அவை இன்சாரியை பெறறு வருதலும் உண்டு.

அரசு + அக்கு + கன்னி→ அரசக்கன்னி என்பதுபோல அக்குச் சாரியை பெறும் உயிர்த்தொடர்க் குற்றுகர மொழிகளும் உள. (12)

(3) வன்றொடர்க் குற்றுகரப் புணர்ச்சி

வன்றொடர்க் குற்றியலுகரம் வருமொழி முதலில் வல்லெழுத்துவரின் அல்வழியிலும் (21) வேற்றுமையிலும் (9) அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: கொக்குக் கடிது—அல்வழி
கொக்குக் கடுமை—வேற்றுமை

மேல் உதாரணங்களில் குற்றியலுகரம் குற்றியலுகரமாக ஒலித்தலும் உண்டு; முற்றியலுகரமாக ஒலித்தலும் உண்டு எனக் கொள்வர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் அவ்வாறு கூறாமல் அவற்றில் உள்ள இறுதி உகரம் தன் அரைமாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாகவும் வரும் என்றார். (4)

மரப்பெயரையுணர்த்தும் வன்தொடர்க் குற்றியலுகரம் அம் சாரியை பெற்று வருமொழியுடன் புணர்தலும் உண்டு. உ-ம்: தேக்கு + கோடு → தேக்கு + அம் + கோடு → தேக்கங்கோடு. (10)

சில வன்றொடர்க் குற்றுகரவீறு அம்சாரியை பெற்று வருதல் உண்டு. உ-ம்: வட்டு + போர் → வட்டு + அம் + போர் → வட்டம் போர். (12)

இருட்டு + கொண்டான் என்பன அத்துச்சாரியை பெற்று இருட்டத்துக் கொண்டான் என வருவதும் உண்டு. (12)

மயிலாப்பு + சாத்தன் → மயிலாப்பிற்சாத்தன் என இன் சாரியை பெறுவதும் உண்டு (மயிலாப்பு—ஓர் ஊர்) (12).

குற்றுகர வீறுகளாகிய திசைப் பெயர்கள் நிலை வருமொழி களாக வந்து புணரின் இடையே ஏ என்னும் சாரியை வரும். உ-ம்: வடக்கே தெற்கு, கிழக்கே மேற்கு. (26)

இருதிசைகள் சேர்ந்து கோணத்திசையை உணர்த்தும் போது நிலைமொழித் திசைப்பெயர்கள் வடக்கும் தெற்குமாக அமையும். அவை இறுதி உகரமும் அஃது ஏறிய ககர மெய்யும் கெடும், பின்னர் வடக்கு என்பதின் ககரமெய் கெட்டும், தெற்கு என்பதின் றகரமெய் னகர மெய்யாகத் திரிந்தும் முடியும்.

உ-ம்: வடக்கு + கிழக்கு → வடகிழக்கு

தெற்கு + கிழக்கு → தென்கிழக்கு.

(4) **மென்றொடர்க் குற்றுகரப் புணர்ச்சி**

மென்றொடர்க் குற்றியலுகரம்வருமொழி வல்லெழுத்துடன் சேரும்போது அவ்வந்த வல்லெழுத்தே மிகச் சேரும். உ-ம்: குரங்கு + கால் → குரங்குக்கால். சிலவிடங்களில் மெல்லெழுத்து தன்இன வல்லெழுத்தாகத் திரிந்தும் அவ்வாறு வல்லெழுத்து மிக்குச் சேர்தலும் உண்டு. உ-ம்: குரங்கு + கால் → குரக்கு + கால் + குரக்குக் கால். எண்கு (கரடி) + குட்டி → எட்கு + குட்டி → எட்குக் குட்டி. (9)

மரப்பெயராக வரும் மென்றொடர்க் குற்றியலுகரம் அம் சாரியை பெற்று மெல்லெழுத்து இன வல்லெழுத்தாகத் திரிந்து வருதலும் உண்டு. உ-ம்: வேம்பு + காய் ← வேம்பு + + அம் + காய் → வேப்பு + அம் + காய் → வேப்பங்காய் (10)

சில மரப்பெயர் மென்றொடர்க் குற்றியலுகரங்களின் மெல்லெழுத்து இன மெல்லெழுத்தாகத் திரிதல் இல்லை. உ-ம் : குருந்து + கோடு→ குருந்து + அம் + கோடு—குருந்தங்கோடு.(11)

மெல்லெழுத்து வல்லெழுத்தாகாமல் அக்குச் சாரியை பெற்று வரும் மென்றொடர்க் குற்றியலுகரங்களும் உண்டு. உ-ம்: குன்று + கூகை→ குன்று + அக்கு + கூகை→ குன்று + அ + கூகை→ குன்றக்கூகை

சில அத்துப் பெறும். உ-ம் : கொங்கு + உழவு → கொங்கு + அத்து + உழவு→ கொங்கத்துழவு.

எண்ணுப் பெயர்களாக வரும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள் அன் சாரியை பெற்று முடியும். உ-ம் : ஒன்று + காயம் → ஒன்று + அன் + காயம்→ ஒன்றன் காயம். (இப்படியே பிற எண்களும் கொள்க)

வண்டு என்பதும் பெண்டு என்பதும் இன்சாரியைப் பெற்றுப் புணரும் வண்டு + கால் → வண்டு + இன் + கால் → வண்டின் கால். பெண்டு + இன் + கால்→ பெண்டின் கால். (15)

பெண்டு என்பது அன்சாரியைப் பெற்றுப் புணர்தலும் உண்டு. உ-ம் : பெண்டு + அன் + கை → பெண்டன் கை. (16

சுட்டு நீண்டுவரும் ஆங்கு ஈங்கு ஊங்கு என்பனவும் யாங்கு என்பதும் வருமொழி முதலில் வல்லெழுத்து வரின் வந்த வல்லெழுத்து மிக்குப் புணரும். உ-ம் : ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான் (22)

யாங்கு என்பது வல்லெழுத்து மிகாது புணர்தலும் உண்டு. உ-ம் : யாங்கு கொண்டான். (23)

மேற்கூறிய நான்கு சொற்களும் ஆக்கு, யாக்கு என்பன போல மெல்லெழுத்து வல்லெழுத்தாகத் திரிதல் இல்லை (24)

உண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகரம் வருமொழியில் பகர முதல் எழுத்தாயின் டு கெட, ணகர ஒற்று ளகர வொற்றாகத் திரிந்து உள்பொருள் என வருதலும், யாதோர் மாற்றமும் இன்றி உண்டு பொருள் எனவருதலும் ஆம். வருமொழி முதலில் க ச த வரின் உண்டு காணம், உண்டு சாப்பாடு, உண்டு தாமரை என இயல்பாகவே அமையும் (25)

(5) இடைத்தொடர்க் குற்றுகரப் புணர்ச்சி

இது வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்து வரின் இயல்பாகவே புணரும்.

உ-ம் : தெள்கு + கால் —தெள்குகால்,

(6) ஆய்தத் தொடர்க் குற்றுகரப் புணர்ச்சி.

ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் வருமொழி முதலில் வல்லெழுத்துவரின் இயல்பாகவே சேரும்.
உ-ம்: எஃகு + கால்→ எஃகுகால்

சுட்டுமுதல் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் அஃது, இஃது, உஃது என்பன. அவை வருமொழி முதலில் வல்லெழுத்துள்ள சொற்களோடு சேரும் போது அன்சாரியை சேர்ந்து ஆய்த எழுத்துக் கெட்டு முடியும். உ-ம்: அஃது + கோடு—அஃது + அன் + கோடு—அதன் கோடு (17)

ஆனால் அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் உயிர் வரின் ஆய்தம் கெடுதல் இல்லை. அஃது + அடை—அஃதடை. வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்துவரின் கெடும். உ-ம்: அதுகடிது, அது ஞான்றது, அது வலிது

(7) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி.

ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களில் ஏழ் என்பது தவிர மற்றையன யாவும் குற்றியலுகர வீற்றுப் பெயர்களே. அவை நிலை வருமொழிகளாக நின்று புணருமாறு பின் வருவன.

பத்து நிலைமொழி

பத்து என்பது நிலை மொழியாக நிற்க வருமொழிகளாக ஒன்று முதல் எட்டு வரையுள்ள எண்ணுப் பெயர்கள் வரின் பத்து என்பதன் இறுதி யுகரம் தான் ஏறிய தகர ஒற்றுடன் கெட்டு நிற்கும். பின்னர் இன் சாரியை யிடைவரப் புணரும். (28)

பத்து + இன் + ஒன்று—பத்→ இன் + ஒன்று—பதினொன்று.
,, ,, மூன்று ,, ,, மூன்று—பதின்மூன்று
,, , நான்கு ,, ,, நான்கு—பதினான்கு
ஐந்து ,, ,, ஐந்து —பதினைந்து
,, ,, ஆறு ,, ,, ஆறு —பதினாறு
,, ,, எட்டு ,, ,, எட்டு —பதினெட்டு.

இரண்டு என்பது வருமொழியாயின் பத்து + இரண்டு—பத் + இரண்டு பன் + இரண்டு—பனிரண்டு (அ) பன்னிரண்டு எனப் புணரும். (29)

ஆயிரம் என்பதுடன் சேரும் போது பத்து + ஆயிரம்→ பத் + ஆயிரம்—பத் + இன் + ஆயிரம்—பதினாயிரம் எனச் சேரும். (30)

பத்து என்பது ஒன்பது என்பதுடன் சேரும் போது துகரம் கெடாமல், பத்து + ஒன்பது—பத்தொன்பதுஎனக்குற்றியலுகரமும் அற்றென மொழிப என்னும் விதிப்படிப் புணரும். (புணரியல். 3)

*அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வருமொழியாகவரினும் ஒன்று முதலானவற்றொடு சேர்தற்குரிய விதியினையே பெற்றுப் புணரும்.

பத்து + கலம்—பத் + கலம்—பத் + இன் + கலம் — பதின்கலம். இப்படிகய பதின்சாடி, பதின் தூதை, பதின் பானை, பதின்நாழி, பதின் மண்டை, பதின்வட்டி, பதினகல், பதின் உழக்கு என்பன வற்றையும் கொள்க. (31)

இவ்வாறே பதின்திங்கள் என்பதற்கும், இன் சாரியை இற்று எனத் திரியப் பதிற்றகல் பதிற்றுழக்கு என்பனவற்றுக்கும் கொள்சு. (31)

ஒன்று ஒன்பது நிலைமொழி

ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்ணுப் பெயர்கள் பொருட்பெயர்ச் சொற்களுடன் சேரும் போது அன்சாரியை பெற்றுச் சேரும்.

உ-ம் ஒன்றன் காயம்—ஒன்பதன் காயம்.

ஒன்று முதல் எட்டு வரையுள்ள எண்கள் வருமொழியுடன் சேரும்போது அவையடையும் மாற்றங்கள்.

ஒன்று - ஒரு (ஒன்று-ஒன்-ஓர்-ஒரு.32,33)
இரண்டு - இரு (இரண்டு-இரண்-இரர்-இரு.32,33,34)-
மூன்று - முன் (மூன்று-மூன்-முன் 32,3?)
நான்கு - நால் (நான்கு-நான்-நால். 32,36)
ஐந்து – ஐந் (32)
ஆறு - அறு (35)
எட்டு -எண் (எட்டு-எண்.32,38)

மேல் திரிந்த எண்கள் பஃது, கலம் (முதலிய அளவுப் பெயர்கள்) கழஞ்சு (முதலிய நிறைப் பெயர்கள்) முதலியவற்றுடன் சேரும் போது அடையும் மாற்றங்கள்:

ஒரு + பஃது—ஒரு பஃது

ஒரு + கலம்—ஒருகலம், ஒரு + கழஞ்சு—ஒருகழஞ்சு, ஒரு—நாழி —ஒருநாழி.

இரு + பஃது—இருபஃது

இரு + கலம்—இருகலம்-இம்படியே பிறவும்.

முன் + பஃது—முப்பஃது
+ கலம்—முக்கலம் (41)
+ கழஞ்சு— முக்கழஞ்சு (41)
+ நாழி—முந்நாழி(45)-
+ வட்டி—முவ்வட்டி (46)

} னகரம் வந்த எழுத்தாகவே திரியும்

---

* அளவுப் பெயர்கள்: கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு
நிறைப் பெயர்கள்: கழஞ்சு, தொடி, பலம்

நான் + பஃது—நாற்பஃது (36)—ன். ற்.
+ கலம்—நாற்கலம் (36)—ன். ற்.
+ நாழி—நானாழி—ன் கெட்டது
+ வட்டி—நால்வட்டி. (47)
ஐந் + பஃது—ஐம்பஃது (37) —ந்.ம்
+ கலம்—ஐங்கலம் (42) —ந்.ங் } இனமெல்
+ கழஞ்சு—ஐங்கழஞ்சு (42)—ந்.ங் } லெழுத்து.
+ நாழி—ஐந்நாழி (45) —ந்.ந்
+ மண்டை—ஐம்மண்டை (45) —ந்.ம்.
+ வட்டி—ஐவட்டி (48) ந் கெட்டது.
அறு + பஃது—அறுபஃது (35) (கலம், கழஞ்சு, நாழி, வட்டி முதலியவற்றுக்கும் அறு என்பதே நிற்கும்)
எண் + பஃது—எண்பஃது (38) பிற வருமொழிகளுக்கும் எண் என்பதுவே திரியாது வரும்.

ஒரு முதல் எண் என்பதுவரையுள்ளன உயிர் முதல் மொழி வருமொழியாய்வரின் அடையும் மாற்றங்கள்:

ஒரு + அகல்—ஓர் அகல். (49)
இரு + அகல்—ஈரகல் (49)
மூன் + அகல்—முவ்வகல் (50) -ன்-வ் ஆதல்
+ உழக்கு—மூவுழக்கு (51) -மு-மூவாதல்
நான் + அகல்—நாலகல் (50) -ன்-ல் ஆதல்
ஐந் + அகல்—ஐயகல் (50) -ந்-கெடுதல்.
அறு + அகல்—ஆறுகல் (52) -அ-ஆ ஆதல்.
எண் + அகல்—எண்ணகல். (38)

நூறு வருமொழியாயின் வரும் மாற்றம் (நூறாயிரம் வருமொழியாயினும் ஆம்.) (65)

ஒரு + நூறு—ஒருநூறு, (ஒரு நூறாயிரம்)
இரு + நூறு—இருநூறு, (இரு நூறாயிரம்)
மூன் + நூறு—முந்நூறு (55) ன்-ந் ஆதல் (முந்நூறாயிரம்)
நான் + நூறு—நானூறு (56)-ன்-கெட்டு முடிதல். (நானூறாயிரம்)
ஐந் + நூறு—ஐந்நூறு (ஐந்நூறாயிரம்)
அறு + நூறு—அறு நூறு. (அறுநூறாயிரம்)
எண் + நூறு—எண்ணூறு. (எண்ணூறாயிரம்)

ஆயிரம் வருமொழியாயின் வரும் மாற்றம்.

ஒரு + ஆயிரம்—ஒராயிரம் (58) ஓராயிரம் (59)
இரு + ஆயிரம்—இராயிரம் (58) ஈராயிரம் (59)

முன் + ஆயிரம்—முவ்வாயிரம் (60) மூவாயிரம். (60 உரை)
நான் + ஆயிரம்—நாலாஇரம் (6) ன்-ல் ஆதல்.
ஐந் + ஆயிரம்—ஐயாயிரம் (62) ந்-ய் ஆதல்.
அறு + ஆயிரம்—அற் + ஆயிரம்—அறாயிரம் (63)
(ஆறாயிரம் எனவும் வரும்)
எண் + ஆயிரம்—எண்ணாயிரம்.

ஒன்பது புணமாறு:

ஒன்பது முன்னர் எப்பெயர்வரினும் இடையே இன்சகரியை பெற்று முடியும்.

ஒன்பது + கலம்—ஒன்பதின்கலம். இப்படியே ஒன்பதின் கழஞ்சு, ஒன்பதின் மண்டை, ஒன்பதின் வட்டி, ஒன்பதின் அகல் (இன் - இற்றுஎனத் திரிய ஒன்பதிற்றகல்) எனக் காண்க. (53) ஆயிரம் வரினும் இன்பெறும். ஒன்பதினாயிரம் (64)

*ஒன்பது + பத்து—தொண்ணூறு (39)
*ஒன்பது + நூறு—தொள்ளாயிரம் (57)

நூறு

நூறு தான் நிலைமொழியாக இருக்க ஒன்றுமுதல் ஒன்பது வருமொழியாகவரின்,

நூறு + ஒன்று→ நூற்றொன்று
நூறு + இரண்டு→ நூற்றிரண்டு
நூறு + மூன்று→ நூற்றுமூன்று

என நூறு என்பதன் றகர ஒற்று இரட்டித்து முடியும் (66) ஒரு பஃது, இருபஃது முதலியனவரினும் அவ்வாறேயாம். நூற்றொரு பஃது நூற்றொன்பது எனக் காண்க (67).

நூறு + கலம்—நூற்றுக்கலம்
நூறு + கழஞ்சு —நூற்றுக்கழஞ்சு } வந்தவல்லொற்று மிக்கது.
நூறு + நாழி—நூற்றுநாழி
நூறு + வட்டி—நூற்றுவட்டி
நூறு + அகல்—நூற்றகல்.

என அளவு நிறைப்பெயர்கள் வரினும் அவ்வாறேயாம் (68).

ஒருபஃது + ஒன்று—ஒருபத்தொன்று
எண்பஃது + ஒன்று—எண்பத்தொன்று.

இவற்றை நோக்கும்போது ஒருபஃது முதல் எண்பஃது வரையுள்ள பெயர்கள் நிலைமொழியாக இருக்க ஒன்றுமுதல் ஒன்பதுவரையுள்ள பெயர்கள் வருமொழியாகவரின் பஃது என்பதில் ஆய்தம் கெட து என்பதின் தகர ஒற்று இரட்டித்து முடியும் என்பது பெறப்படும். (69)

---

* இவைபற்றிய ஆராய்வுகளை அவ்வச்சூத்திர உரைகளிற் காண்க.

ஆனால் "ஆயிரம் வரின் ஒற்று(த்) இரட்டுதல் இல்லை. ஒரு பதினாயிரம், எண்பதினாயிரம் எனக் காணலாம் (30) அவ்வாறே கலம் முதலிய அளவுப் பெயர்களும் கழஞ்சு முதலிய நிறைப் பெயர்களும் வரினும் ஆம். ஒன்பதின்கலம், ஒருபதின்கழஞ்சு என வரும் (71) இவற்றுக்கு இன்சாரியை வந்தது.

பிற

ஒன்று என்பது மட்டில் எல்லா விடத்தும் ஒரு என்றே திரியும். உயிர்முதன் மொழியாயின் ஓர் எனத்திரியும். உ-ம்: ஒரு பொருள், ஓர் அகல் (72) யாமுதல் மொழிவரினும் அவ்வாறே யாம் ஓர்யானை. (73)

இரண்டு முதலியன திரியாமையும் திரியும் உடையன. இரண்டு பொருள், இருபொருள் எனவரும். இப்படியே பிறவும். (72)

மா என்னும் அளவுப் பெயர் வருமொழியாக வரினும் இரண்டு முதலியன இயல்பாகவும், திரிந்தும் வரும். இரண்டுமா, இருமா என ஒன்பது வரை கொள்க.

(8) எழுத்ததிகாரப் புறனடை

லகர னகர ஒற்றீறுகள் உம், கெழு என்னும் சாரியைகள் பெறும் என்பது புள்ளி மயங்கியலிற் கூறப்படவில்லை. இங்கே கொள்க.

உ-ம்:
வில் + திங்கள்—வில்லுந் திங்களும் } உம்
கிழவன் + போன்ம்—கிழவனும் போன்ம் }
கல் + கானவர் — கல்கெழுகானவர் } கெழு.
கான் + நாடு — கான்கெழு நாடு }

இவ்வாறு வருவது செய்யுளிலேயாம். இவை வேற்றுமை முடிபு. (75)

விண்விணைத்தது—குறிப்பு }
கார் கறுத்தது—பண்பு } உரிச் சொற்றொடர்
ஒல்லொலித்தது—இசை }
கருஞ்சான்றான்—பண்புத் தொகை
கொல்யானை — வினைத் தொகை
ஓரொன்று — தன்முன் தான் வந்த எண்

இவை யாவும் பிளவு படாத் தொகைச் சொற்கள்—இவற்றை நிலை வருமொழிகளாகப் பிரித்து நிறுத்திப் புணர்த்தல் இல்லை

நற + கண்ணி—நறவங்கண்ணி—அம்சாரியை பெற்றது
வெதிர் + இசை — வெதிரத்து இசை—அத்துச்சாரியை பெற்றது.
அகம் + செவி—அஞ்செவி—ககரம் கெட்டது.
அவ் + இடை—ஆயிடை. வகரம் கெட்டு சுட்டு நீண்டது

தட + திரை — தடவுத் திரை—உரிச்சொல் முடிபு.

அரு + மருந்து + அன்னான்—அருமருந்தான்.

உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியல்களில் கூறப்படாத புணர்ச்சி களையும் இங்கே கொள்க.

(9) ஒருமொழி, புணர்மொழிக் குற்றியலுகரங்கள்

சார்பெழுத்துகள் மூன்றும் ஒருமொழியிலும் புணர்மொழி யிலும் வரும்.

கேண்மியா என்பதில் உள்ள இகரம் ஒருமொழியில் வந்த குற்றியலிகரம் வரகியது (வரகு +யாது) என்பதில் உள்ள இகரம் புணர்மொழியிடை வந்த குற்றியலிகரம்.

எஃகு என்பதில் உள்ள ஆய்தம் ஒரு மொழியில் வந்த ஆய்தம். கஃறீது (கல் + தீது) என்பதில் உள்ள ஆய்தம் புணர் மொழியில் வந்த ஆய்தம்.

நாடு வரகு முதலியவற்றில் உள்ள இறுதி உகரகம் ஒரு மொழியில் வந்த குற்றியலுகரம். நாடு கடந்தான என்பதில் உள்ள உகரம் புணர்மொழியில் உள்ள குற்றியலுகரம்.

வன்றொடர்க் குற்றியலுகரம் புணர்மொழியில் வரும் போது, வருமொழியில் வல்லெழுத்திருப்பின் குற்றியலுகர மாகுமா என்ற ஐயம் எழுகிறது 'கொக்குக் கடிது' என்பதில் உள்ள உகரம் குறுகுதலும் குறுகாமையும் ஆகிய இருநிலையும் உடையது என்பது இளம்பூரணர் கருத்து. அதனால் அவர்

வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே

என்பதில் 'தொல்லையியற்கை என்பது குற்றியலுகரப் புணரியலில் முதற்சூத்திரத்திற்கூறிய குறுகும்என்ற இயற்கையை என்றார்.

நச்சினார்க்கினியர் 'கொக்குக் கடிது' என்பதில் உள்ள குற்றியலுகரம் தன் அரை மாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாகக் குறுகும் எனக் கொண்டார். அதனால் அவர் அச்சூத்திரத்தில் 'தொல்லையியற்கை' என்பதற்கு மொழி மரபில் உள்ள,

புணர்மொழி நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்

என்னும் சூத்திரத்தில் கூறிய இயற்கை—அதாவது கால் னும் மாத்திரை பெறும் என்னும்இயற்கை என்று கூறினார்.

இவர் கருத்தும் ஒலி நுட்பம் உணர்வார்க்கே புலனாம். இருவரும் கொக்கு நீண்டது, கொக்கு வலிது என வரும் தொடர் மொழிக் குற்றியலுகரங்கள் பற்றி ஒத்த கருத்தினராயினர். வருமொழி முதலில் வல்லெழுத்து வந்து அவ்வல்லெழுத்து மிக்கு முடியுமிடத்திலேயே இருவரும் மாறுபட்டனர்: அதனால் இருவரும் 'கொக்குக் கடிது' போலும் தொடர்களை ஒலித்துக் கண்ட ஒலி நுட்பத்தில் வேறுபாடுடையவராயினர், அதனால் மாறுபட்டனர் அவ்வளவே.

(10) ஈரொற்றுத் தொடர்மொழி

ஈர்க்கு, மொய்ம்பு என்பன ஈரொற்றுகள் இடையே யிருத்தலின் முதல் ஒற்று நோக்கி இடைத்தொடர் என்னலாமா என்னும் ஐயத்தைப் போக்க அவை இடைத் தொடராகா; வன்றொடரோமென்றொடரோ ஆம் என்றார் தொல்காப்பியர். இது பற்றிய தடைவிடைகளை,

ஈரொற்றுத் தொடர்மொழி இடைத் தொடர் ஆகா (2)

என்னும் சூத்திரத்திற் காண்க.

(11) பத்தா—பஃதா?

ஆசிரியர் ஓரிடத்துப் பத்து என்பதை இயற்சொல்லாகவும் பஃது என்பதைத் திரி சொல்வாகவும்,ஓரிடத்துப் பஃது என்பதை இயற்சொல்லாகவும் பத்து என்பதைத் திரிசொல்லாகவும் வைத்துப் புணர்ச்சிவிதி கூறியுள்ளார். இரண்டில் எது இயற் சொல்?

''ஒன்று முதலாக எட்டன் இறுதி'' (28) என்னும் சூத்திரத்தில் 'பத்து, என்பதை இயற்சொல்லாகக் கொண்டு அதன் இறுதி எழுத்து(து)க் கெடும் என்று கூறி, அடுத்து அது இரண்டு என்னும் வருமொழி உயிருடன் புணரும்போது தகர ஒற்று னகர் ஒற்றாகும் எனக் கூறியுள்ளார் (34) இதனால் 'பத்து' என்பதே இயற்சொல் என்பது புலப்படும், இதற்கு மேலும் ஒரு சான்று,

> ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர்
> நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்
> வந்து இடை நிலையும் இயற்கைத்து என்ப (32)

என்னும் சூத்திரத்தில் பத்து என்பதன் தகர ஒற்றுக்கெட இடையே ஆய்தம் வந்து நிலையும்;அதாவது 'பஃது' ஆகும் என்று கூறியதாகும்

தொண்ணூறு என்பதைப் பிரித்துப் புணர்க்க வந்த சூத்திரத்தில் ஒன்பது+பஃது எனப்பிரித்துப் பஃது என்பதை இயற் சொல்லாக வைத்துப்'பஃதென்கிளவி ஆய்த பகரம்கெடும்'

என்று ஆசிரியர் கூறியதால் (39) பஃது என்பதே இயற் சொல் லாகுமோ என எண்ணலாம்.

ஆசிரியர் 'பஃது' என்பதை வைத்துக் கூறியதற்குக் காரணம் முன்னர் (32) 'பத்து' என்பது 'பஃது எனவரும் என்று கூறிவிட்ட மையால் அப்'பஃது' என்னும் சொல்லையே அதிகாரத்தால் ஆண்டு அதற்கு விதி கூறினார். 'பஃது அதிகாரத் தொடர்பாக,

ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றுஇடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் (69)

என்னும் சூத்திரங்காறும் தொடர்ந்தது.

ஆசிரியர் ஓர் இயற்சொல்லை ஒரு காரணம் பற்றித் திரி சொல்லாக்கித் தொடர்ந்து கூறிவந்து பின்னர் ஒரு காரணத்தால் அத்திரி சொல்லைத் திரித்து இயற்சொல்லாக ஆள்வதும் உண்டு. ஆறு என்னும் இயற்சொல்லை ஆறு நெடுமுதல் குறுகும் (35) எனக்கூறி அறு என்றாக்கி, அதனைத் தொடர்ந்து கூறிவந்து, பின்னர் ஓரிடத்து அறு என்பது முதல் நீண்டு 'ஆறு எனவரும்' என்றார் (52) அவ்வாறே பத்து என்னும் இயற்சொல்லைப் பஃது எனத்திரித்து அதனையே இயற்சொல் போல ஆண்டார் எனக் கொள்ளலாம்

ஏழ் என்பது எழு என ஆகிப் 'பத்து' என்பதுடன் சேரும் போது,அப்பத்து என்பதன் தகரஒற்றுக்கெட அவ்விடத்து ஆய்தப் புள்ளி நிற்றல் வேண்டும் என்றுகூறி 'எழுபஃது' எனப்புணர்க்கும் ஆசிரியர்

பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி (புள்ளி மயங்கியல் 35)

எனச் சூத்திரம் செய்தார், இதிலும் பத்து என்பதே இயற்சொல் லாகக் கொண்டமை காணலாம். எனவே பத்து இயற்சொல் லாகவும் பஃது திரிசொல்லாகவும் ஆம் என்க,

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

(உரைவளம்)

குற்றியலுகரப் புணரியல்

இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், குற்றியலுகர வீறு வருமொழியோடு புணரும் இயல்பு உணர்த்தினமையின் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது.

நச்சினார்க்கினியர்

இவ்வோத்துக் குற்றியலுகரம் என்று கூறப்பட்ட எழுத்துப் பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர் முதலியவற்றோடும் புணரும் முறைமை உணர்த்தினமையிற் குற்றியலுகரப் புணரியல் என்னும் பெயர்த்தாயிற்று. இது 'மெய்யே யுயிரென்றாயீ ரியல' (எழு. 103) என்பனவற்றுள் உயிரினது விகாரமாய் நின்ற குற்றுகரத்தை [1]இருமொழிக்கண்ணும் புணர்க்கின்றமையின் மேலை ஓத்தினோடு இயைபுடைத்தாயிற்று.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

உயிர், மெய் ஆகிய முதல் எழுத்துகளுக்கு எழுத்து எனக் குறியிட்டதின் பின்னர், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்பனவற்றிற்கும் அக்குறியிட்டதுபோல, உயிர் மயங்கியல் புள்ளிமயங்கியல் இவற்றிற்குப்பின் குற்றியலுகரப் புணரியலைக் கூறினர் ஆசிரியர். குற்றியலுகரம் நிலைமொழியீறாயிருக்கப் புணர்ச்சியில் நிகழும் மாறுதல்களைக் குற்றியலுகரப் புணரியல் கூறும்.

சுவடிவேறுபாடு. 1 இருவழிக்கண்ணும்

வெள்ளை வாரணனார்

குற்றியலுகர ஈறு நின்று, பொருட்பெயர், எண்ணுப்பெயர் ஆகிய வருமொழிகளோடு புணருமாறு கூறலின் இது குற்றிய லுகரப் புணரியல் என்னும் பெயர்த்தாயிற்று. ஈரெழுத்தொரு மொழியாய்த் தனிநெட்டெழுத்தின் பின்னும், இரண்டிற்கு மேற் பட மூன்று முதலிய எழுத்துக்களாலாகிய தொடர்மொழிகளின் ஈற்றிலும் வல்லின மெய்யை ஊர்ந்து குற்றியலுகரம் வரும் என மொழி மரபிற் கூறினார். இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழியீற்றுக் குற்றுகரங்களை அவற்றின் அயலில் தொடர்ந் துள்ள எழுத்து வகையால், உயிர்த் தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர் என ஐந்து தொடராகப் பகுத்து அவற்றுடன் தனிநெடிற் பின்வரும் குற்று கரத்தையும் கூட்டி அறுவகையாக்கி, அவை உயிர், வலி, மெலி, இடை ஆகிய நாற்கணத்தோடும் புணரும் இயல்பினை இவ்விய லில் விளக்குகின்றார்.

1. குற்றியலுகரத்தின் இயல்பு

குற்றியலுகரத்தின் பெயர், முறை, தொகை

*** 407. ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன். (1)

ஆங்கில மொழிபெயர்ப்பு

இலக்குவனார்;

The 'two letter word', 'vowel word', 'medial
word', Āytha word', 'hard' and 'nasal words'
Those are the six where 'u' shortens.

---

* சூத்திரத்தின் முன்உள்ள எண் எழுத்ததிகாரச் சூத்திரத் தொடர் எண். பின் உள்ள எண் குற்றியலுகரப் புணரி யல் சூத்திரத் தொடர் எண்.

தமிழ் சுவலபில்:

There are only twice three (kinds of words) where 'u' shortens
The īreluttorumoli or the 'two-letter words',
the uyirttoṭar (moḷi) or the 'vowel-sequence words',
the iṭaittoṭar (moḷi) or the 'semivowel-sequence words',
the āytattoṭarmoḷi or the 'āytam-sequence words',
the vaṉṟoṭar (moḻi) or the 'voiceless stop-sequence words,
(and) the meṉṟoṭar (moḷi) or the 'nasal-sequence words.

பிற்கால இலக்கண நூல்கள்

வீரசோழியம்: 2 ......வன்மைமேல் உகரம்
உறுவது நையும் தொடர்மொழிப் பின்னும்
நெடிற் பின்னுமே.

நேமிநாதம்: 4 தொடர்நெடில் கீழ் வன்மை யுகரம்...குன்றும்.

நன்னூல்: 94. நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.

இலக்கண விளக்கம்: 16 நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம்
அஃகும் என்மனார் ஆயுங் காலே.

தொன்னூல் விளக்கம்: 15 தனிக்குறில் அல்லவற் றிறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப.

முத்துவீரியம்: புணரியல் 227. ஈரெழுத் தொருமொழி யிடைத்தொடர்
உயிர்த்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்
றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்.

இளம்.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இக் குற்றிய லுகரம் [1]வரும் இடத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

சுவடிவேறுபாடு. 1. வருமிடத்துப்

இதன் பொருள்:— ஈர் எழுத்து ஒரு மொழி—இரண்டு எழுத்தாலாகிய ஒரு மொழியும், உயிர்த் தொடர்—உயிர்த் தொடர் மொழியும், இடைத் தொடர்—இடைத் தொடர் மொழியும், ஆய்தத் தொடர்—ஆய்தத் தொடர் மொழியும், வன்தொடர்—வன்தொடர் மொழியும், மென்தொடர்—மென்தொடர் மொழியும், ஆ இரு மூன்று (ஆகிய)— அவ் ஆறு (என்று சொல்லப்படும்), உகரம் குறுகு இடன்—[2] உகரம் குறுகிவரும் இடன்.

உதாரணம்: *நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, [3]குரங்கு எனவரும்.

நச்.

என்பது சூத்திரம். இத்தலைச் சூத்திரம் மொழி மரபினகத்து [1]இருவழிய என்ற குற்றுகரம் இதனகத்து இனைத்து மொழியிறுதி வரும் என்று அவையிற்றுக்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது. அப்பெயர் பெயர்; அம்முறை முறை; அத்தொகைதொகை. 'தொடர் மொழியீற்று' (எழு. 36) வரும் என்று ஆண்டுக் கூறியவதனை ஈண்டு ஐந்துவகைப் படுத்தி அதனோடு 'நெட்டெழுத்திம்பரும்' (எழு. 36) என்றது ஒன்றேயாகலின் அதனையுங் கூட்டி 'அறுவகை'த் தென்றார்.

இ-ள்:— இரண்டெழுத்தானாகிய ஒருமொழியும், உயிர் மேல் வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், இடையொற்று மேல்வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், ஆய்தமாகிய எழுத்து மேல் வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், வல்லொற்று மேல் வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், மெல்லொற்று மேல் வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், ஆகிய அவ்வாறு சொல்லுமே, குற்றியலுகரம் குறுகிவரும் இடம்; என்றவாறு.

சு.வே:

2. உகரம் குறுகுமிடன்
3. குரங்கு, தங்கு, நுங்கு எனவரும்.

* நாகு = எருமை தெள்கு = ஒரு வகைப் பூச்சி எஃகு = கூர்மை, இரும்பு.

சு. வே: 1. இருவகைத்து என்ற இருவழிய—இருவகைத்து = ஒரு மொழிக் குற்றியலுகரம், புணர்மொழிக் குற்றியலுகரம். (மொழிமரபு சூ 3, 4)

உ-ம்: நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு என வரும். இதனை ஏழென்று கொள்வார்க்குப் பிண்ணாக்கு, சுண் ணாம்பு, ஆமணக்கு முதலியன முடியாமை யுணர்க.

சூப்.

பொருள்: குற்றியலுகரம் குறுகுமிடன் ஈரெழுத்தொரு மொழி, உயிர்த்தொடர்மொழி, இடைத்தொடர்மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்றொடர்மொழி, மென்றொடர் மொழி ஆகிய ஆறாகும்

ஈரெழுத்தொருமொழி எனப் பொதுவாகக் கூறினாரேனும் நெட்டெழுத்திம்பரும் (எழு. 36) எனக் கூறியிருக்கின்றமையின் நெட்டெழுத்தினைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியையே ஈண்டு ஆசிரியர் கருதினர் என்றும், வல்லாறூர்ந்தே (எழு. 36) என்றமையால் அவ்வுகரம் வன்மையூர்ந்தே வரவேண்டும் என்றனர் என்றும் கொள்ள வேண்டும்.

'இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே'' (எழு. 37) என்ற விடத்துக் கூறப்பட்ட இடன் இத்துணை வகைப்படும் என்பது ஈண்டுக் கூறப்பட்டது. உகரம் என்பது குற்றியலுகரத் தைக் குறிக்கும். நச்சினார்க்கினியர் அவ்வாறே கொண்டனர். அவர் கொள்கைக்கே 'வல்லொற்றுத் தொடர்மொழி' (எழு. 410) என்ற விடத்து, 'தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே' என்ற தொடர் பொருந்தும். இளம்பூரணர் இவ்வாறு கொள்ளாதது ஆராய்தற்பாலது.

நச்சினார்க்கினியர் வரகு என்றதை இச்சூத்திரவுரையிலும், 'நெட்டெழுத் திம்பரும்' (எழு. 36) என்ற சூத்திரத்தின் உரையிலும் உயிர்த் தொடர்மொழியாகவும், 'ஓரெழுத்தொரு மொழி' (எழு. 45)என்ற சூத்திரத்தின் உரையில் ஈரெழுத்தொரு மொழியாகவும் கூறியிருத்தல் பொருந்தாததாகும்.

''இதனை ஏழ் என்று கொள்வார்க்குப் பிண்ணாக்கு, சுண்ணாம்பு, ஆமணக்கு முதலியன முடியாமை உணர்க'' என நச்சினார்க்கினியத்தில் உளது. இதனைப் பற்றிப் பின்வருமாறு யாப்பருங்கல விருத்தியில் உளது. ''எழுவகையிடத்துங் குற்றிய லுகரம், வழுவின்றி வருஉம் வல்லா றூர்ந்தே'' என்றார் பல்காயனார் ஆகலின், எழுவகையிடமாவன:—நெடிற்கீழும், நெடிலொற்றுக்கீழும், குறிலிணைக்கீழும், குறிலிணையொற்றின் கீழும், குறில்நெடிற்கீழும், குறில்நெடில் ஒற்றின்கீழும்,

குற்றொற்றின்கீழும் என இவை. என்னை? "நெடிலே குறிலிணை குறில்நெடில் என்றிவை, யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதி யென்றே ஏழ் குற்றுகரக் கிடனென மொழிப" என்றா ராகலின். அவை வருமாறு:— நாகு... கற்று எனக் குற்றொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

வேங்கடராசுலு ரெட்டியார்

குற்றியலுகரங்கள் மெய்யெழுத்துகளின் விகாரம் ஆதலானும் புள்ளிபெறும் ஒப்புமையானும் புள்ளிமயங்கியலோடு இவ்வியல் இயைபுடைத்தாயிற்று.

நச்சினார்க்கினியர், "உயிரினது விகாரமாய் நின்ற குற்று கரத்தை இருமொழிக்கண்ணும் புணர்க்கின்றமையின் மேலை ஓத்தினோடு இயைபுடைத்தாயிற்று" என்றார். இது பொருந்து மாறில்லை. குற்றியலுகரம் மெய்யெழுத்தின் விகாரம் என்பது 'குற்றியலுகரம்' என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளேன். மேல் மொழிமரபில்,

> நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
> குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே (எழு. 36)

என்ற சூத்திரத்துத் தொகுத்துக் கூறியவற்றை யீண்டு வகுத்துக் கூறியுள்ளார். அச்சூத்திரத்து 'நெட்டெழுத்திம்பர்' என்றதனை ஈண்டு 'ஈரெழுத்தொருமொழி' என்றார். 'தொடர்மொழி யீற்றும்' என்றவற்றை உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர் என்று ஐந்து வகையாக்கிக் கூறினார். ஆகவே இவ்வாறிடத்தும் உகரம் குறுகும் என்பதாம்.

ஈண்டு, நெடிற்றொடரை 'ஈரெழுத்தொருமொழி' என்றும், மற்றவற்றைத் தொடர்மொழி என்றும் ஆசிரியர் கூறியதனான், அவர், ஒற்றினையும் குற்றியலுகரத்தையும் எழுத்தாக எண்ணினமை தெளிவாகும். குற்றியலுகரத்தை எழுத்தாக எண்ணாவிடின், நெடிற்றொடர்க் குற்றுகரம் ஈரெழுத்தொரு மொழி ஆமாறில்லை. 'ஒற்றுக்களை எண்ணாவிடின், மார்பு, தெள்கு முதலிய இடைத்தொடரும், சுக்கு, கட்டு, பத்து என்றற் றொடக்கத்து வன்றொடரும், பந்து, அம்பு, கன்று என்றற் றொடக்கத்து மென்றொடரும் தொடர்மொழியாதல் இல்லை,

என்னையெனின், ஆசிரியர், இரண்டெழுத்திறந்தவற்றையே தொடர்மொழி என்று கூறினார் ஆகலின். இவற்றால் நச்சினார்க்கினியர் மொழிமரபு 12 ஆம் சூத்திரத்தில், ஒற்றும் குற்றுகரமும் எண்ணுதலாகாது என்று கூறியவுரை ஆசிரியர் கருத்திற்கு அமைவதன்று என்பது நன்கு வலியுறும்.

வல்லெழுத்துகரம் குறுகும் இடம் ஆறு. ஆகவே, குறுகாத இடம் ஒன்றே என்பது போதரும். அது, தனிக்குறிலைச் சார்ந்து வரும் இடன் ஒன்றே.

நடு, படு, அது, பொறு என்பனபோலத் தனிக்குறிலையடுத்து வரும் வல்லெழுத்துகரங்கள் குறுகாதன. இவையும் வல்லெழுத்து மெய்யீற்றுச் சொற்களோ, அல்லவோ? வல்லெழுத்தீற்றுச் சொற்களாயின், இவற்றின் மேல் நின்ற உகரம் அரை மாத்திரையளவு ஒலித்தலின்றி ஒரு மாத்திரையளவு ஒலித்தற்குக் காரணம் யாது? எனின், இவையும் மெய்யீற்றுச் சொற்களே. இவை தனிக் குற்றெழுத்துக்களைச் சார்ந்தவையாகலின் இவற்றை ஒலிக்க வந்த உயிரின் ஒலி நன்கு கேட்கின்றது; ஏனையிடத்து வல்லொற்றுக்குள் நெட்டெழுத்தினையடுத்து வருதலானும், இரண்டு மூன்று எழுத்துக்களின்பின் வருதலானும் ஆண்டு அவற்றினை ஒலிக்க வந்த உகரவுயிரின் ஒலிக்கு முயற்சி குறைதலின், அது நன்கு கேட்கப்படுதலில்லை. அதனானே குற்றியலுகரம் எனப்பட்டது. நடு, படு, அது, பொறு என்பவை போன்ற சொற்களில் உகரவொலி நன்கு கேட்கப்படுதலின், ஆண்டு அவ்வுகரம் முற்றியலுகரம் எனப்பட்டது.

இவ்வாசிரியர் குற்றியலுகரத்தை ஓரெழுத்தாக எண்ணி, ஈண்டு அது வரும் இடம் ஆறு என்றார். பிற்காலத்தவர் இவ்வாறு கொள்ளாமல் வெவ்வேறு வகையாகக் கொண்டு எண்ணுவாராயினர்.

எழுவகை யிடத்தும் குற்றிய லுகரம்
வழுவின்றி வருஉம் வல்லா றூர்ந்தே

என்பதும்,

நெடிலே குறிலிணை குறில்நெடில் என்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்று
ஏழ்குற் றுகரக்கு இடன்என மொழிப

என்பதுங் காட்டி, குற்றுகரம் எழுவகையான் வரும் என்று நாற்பத்திரண்டு கொண்டார் யாப்பருங்கல விருத்தியாசிரியர்.

நன்னூலார், தொல்காப்பியனார் கூறியாங்கு ஆறு இடமே கொண்டாராயினும் குற்றுகரம் முப்பத்தாறு என்று தொகை கூறினார். குற்றியலுகரங்களை எழு வகையாகக் கொள்வாருக்கு, 'போவது, வருவது, ஒன்பது முதலியன அமைதியாகா'வென்று நன்னூல் விருத்திக்காரர் கூறியிருப்பது அறியத்தக்கது. இலக்கண விளக்க நூலார், குற்றியலுகரத்தை ஓரெழுத்தாகவே கொண்டு, உயிர்மெய் யொழித்து ஏனைய வெல்லாம் இட வேற்றுமையா னன்றி எழுத்து வேற்றுமையான் அங்ஙனம் பல்காமையின் சார்பெழுத்து முந்நூற்றுப் பத்தொன்பதாம் என்றல் நிரம்பாது எனவும் மறுக்க. இன்னும் இடையொற்றுக்கள் டகர றகரங் களோடு தொடராமைக்கு அவர் மெய்ம்மயக்கங் கூறிய சூத்திரங் களே கரியாகலின், குற்றிகரக் குற்றுகரங்கட்கு அவ்விட வேற்றுமையும் சாலாமையறிக'' என்று நன்னூலார் கொள் கையை மறுத்துக் கூறினார். இவற்றால் குற்றுகரங்கள் நாற்பத்திரண்டு என்றும் முப்பத்தாறு என்றும் கூறுவார் கொள்கை அமைவின்மை அறியப்படும் ஆதலின் குற்றியலுகரம் இடன் நோக்கி ஆறாகும் என்றல் அமைதியாகும்.

வெள்.

இதன்கண், மேல் 'நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழி யீற்றும் வரும்' எனக்கூறிய குற்றியலுகரத்தை ஈரெழுத்தொரு மொழி என ஒன்றாகவும், தொடர்மொழி யீற்றில் வரும் குற்றுகரத்தை உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத் தொடர், வன்றொடர், மென்றொடர் என ஐந்து வகையாகவும் பகுத்துக் குற்றியலுகரம் வருமிடம் ஆறு என வகைபெறக் கூறி யுள்ளமை காணலாம்.

சிவலிங்கனார்

இச்சூத்திரம் உகரம் குறுகுமிடம் ஆறு என்றதன்றி இவ்வா றிடத்தும் உகரம் குறுகியே வரும் என்றதில்லை. அதனால் இவ்வாறிடத்தும் உகரம் குறுகியும் குறுகாதும் வரும் என்னும் கொள்கையினர் இளம்பூரணர் எனக் கொள்வதற்கு 'வல் லொற்றுத் தொடர் மொழி' (410) என்னுஞ் சூத்திரத்தில் ''இது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது'' என்று அவர் எழுதியது சான்றாம். அங்கு ஒருமருங்கு மறுக்கப்பட்டதாவது இச்சூத்திரத் தில் ஆறிடங்களிலும் உகரம் குறுகியும் குறுகாதும் வரும் என்ற இருமருங்கில் குறுகாதும் வரும் எனப் பெறப்பட்ட ஒருமருங்கு

என்பதைக் கொள்ளவேண்டும். உகரம் என்பதற்கு உகரம் என்றே இளம்பூரணர் கொண்டார்; நச்சினார்க்கினியர் உகரம் என்பதற்குக் குற்றியலுகரம் எனக் கொண்டார். குறுகும் என்பதற்கு இளம்பூரணர் மாத்திரையிற் குறுகும் எனக் கொண்டார்; நச்சினார்க்கினியர் குறுகும் என்பதற்கு அடையும், சேரும் எனக் கொண்டார்.

ஈரொற்றுத் தொடர்கள்

408 அவற்றுள்
ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா (2)

ஆ. மொ: இல.

Of those
A word, having two consonants joined in
the middle, shall not be medial word.

க. சு.

Among those,
the iroṟṟuttoṭarmoḻi will be regarded
as semi vowel-sequence words.

பி. இ. நூ:

முத்து. புண. 229

அவற்றுள்
ஈரெழுத் தொருமொழி இடைத்தொடர் ஆகா.

இளம்.

இது அவ் ஆறனுள் ஓர் ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: அவற்றுள் ஈர் ஒற்றுத் தொடர்மொழி—அவற்றுள் ஈர் ஒற்றுத் தொடர்மொழி, இடைத்தொடர் ஆகா—இடைத் தொடர் ஆகா (வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் ஆம்).

உ-ம்: ஈர்க்கு; மொய்ம்பு எனவரும்.

நச்.

இஃது அவ்வாறனுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள்: அவ்வாறனுள், இரண்டொற்று இடைக்கண் தொடர்ந்து நிற்கும் சொல்லிற்கு இடையின ஒற்று முதல் நின்றால், மேல் இடையினந் தொடர்ந்து நில்லா, வல்லினமும் மெல்லினமும் தொடர்ந்து நிற்கும்; எ—று.

உ-ம்: ஆர்க்கு, ஈர்க்கு, $நொய்ம்பு, மொய்ம்பு எனவரும்.

சுப்.

பொருள்: முற்கூறியவற்றுள் ஈரொற்றுத் தொடர்மொழி இடைத் தொடராகக் கருதப்படா. அவை 'இடையொற்றுத் தொடரும்' (414) போன்ற சூத்திரங்களில் கூறப்பட்ட இடைத் தொடரின் செய்கையைப் பெறா என்க.

உ—ம்: ஈர்க்கு......

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு "அவ்வாறனுள் இரண்டொற்று...மெல்லினமும் தொடர்ந்து நிற்கும்" எனப் பொருள் கூறினர். இப்பொருள் "யரழவென்னும் மூன்று முன் ஒற்றக் க ச த ப ங ஞ ந ம ஈரொற்றாகும்" (எழு. 48) என்ற சூத்திரத்தான் உணர்த்தப் பட்டமையான், இவ்வாறு அவர் கூறுதல் பொருந்தாது.

ஈர்க்கு போன்றன இடைத் தொடராகக் கருதப்படுமா வன்றொடராகக் கருதப்படுமா என்ற ஐயமும், மொய்ம்பு போன்றன இடைத்தொடராகக் கருதப்படுமா மென்றொடராகக் கருதப்படுமா என்ற ஐயமும் நிகழ்தலின், அவ்வையத்தைப் போக்க இச்சூத்திரம் கூறினர் என்க.

கு. சுந்தரமூர்த்தி

தொடர்மொழிக் குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்து வருங்கால் அவற்றுள் முன்னையது இடையெழுத்தாக இருப்பின் அது கொண்டே இடைத்தொடர்க் குற்றுகரம் என்றல் கூடாது; அதன்பின்வரும் வல்லெழுத்துக்களையோ அன்றி மெல்லெழுத்துக்களையோ கொண்டுதான் வன்றொடர்க்

$ நொய்ம்பு—மென்மை மொய்ம்பு—வலிமை

குற்றுகரம் என்றும் மென்றொடர்க் குற்றுகரம் என்றும் பெயர் பெறும் என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

தொடர்மொழிக் குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்துவரின், அவற்றுள் முதல் ஒற்று இடையின ஒற்றாக இருப்பின், அதற்குப் பின்வரும் ஒற்று இடையினமாக இராது; வல்லினமாகவோ அல்லது மெல்லினமாகவோதான் இருக்கும் என்பது இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் கூறும் கருத்தாகும்.

ஆர்க்கு ஈர்க்கு என்பனவற்றில், இடையில் வந்த ஈரொற்றுக்களில் முன்னையன இடையினமாக இருக்கப் பின்னையன வல்லினமாதலையும், நொய்ம்பு, மொய்ம்பு என்பன வற்றில், இடையில் வந்த ஈரொற்றுக்களில் முன்னையன இடையினமாக இருக்கப் பின்னையன மெல்லினமாக மாறுதலையும் காண்க.

ஆயினும் இக்கருத்து ''யரழ என்னும் மூன்றும் முன் ஒற்றக் கச த ப ங ஞ ந ம ஈரொற்றாகும்'' என்னும் நூற்பாவிலேயே பெறப்படுதலின் இது பொருந்தாது. ஆதலின் இளம்பூரணர் கருத்தே இந்நூற்பாவிற்குப் பொருத்தம் உடைத்தாகும்.

சிவ.

இடையெழுத்துகளுள் ய், ர், ழ் என்பனவே மேலும் ஒற்றுகள் பெற்றுத் தொடர் மொழிகளாக வருவன மொய்ம்பு, ஈர்க்கு, காழ்ப்பு எனக் காண்க. வகரஒற்று வருவதில்லை. லகர, ளகர ஒற்றுகள் வருவதில்லை; வருவதாயின் தொடரும் வல்லெழுத்துக் கேற்ப றகர, டகர எழுத்துகளாகத் திரிந்து விடும்.

இனி இச்சூத்திரம் தேவைதானா என்பது கருதத்தக்கது. இறுதி வல்லெழுத்துகரம் தனக்கு முன் நிற்கும் எழுத்தைத் தொடர்தலின் அதன் பெயரால் இன்ன தொடர்க்குற்றுகரம் எனக் கூறப்படுமாதலின் ஈர்க்கு என்றதை இடைத்தொடர்க் குற்றுகரமாகச் சொள்ளலாமா என்ற ஐயமே எழத் தேவை யில்லை. ஆதலின் இச்சூத்திரமும் தேவையற்றதே. அங்ஙன மாயின் ஆசிரியர் கூறுவானேன்?

முன் சூத்திரத்தில் ஈரெழுத்து, உயிர், ஆய்தத்தொடர் மொழிகள் தவிர வன்தொடர், மென்தொடர், இடைத்தொடர், என்று கூறப்பட்டன, மொழியிடையில் ஒரு வல்லெழுத்து, ஒரு

மெல்லெழுத்து, ஓர் இடையெழுத்தே இருக்கத் தொடரும் தொடர்களேயாம். கொக்கு, வண்டு, சால்பு எனக்காணலாம் ஆனால் ஈர்க்கு, மொய்ம்பு முதலியன இடையில் இரண்டொற்று கள் இருத்தலின் குற்றியலுகரம் எவ்வெழுத்தைத் தொடர்ந் துள்ளது என்பதை அறிவிற் சிறியாற்கு அறிவித்தல் வேண்டுவ தாகலின் இக்சூத்திரம் தேவைப்பட்டதென்க. இவ்வாறன்றி வேறு அமைதி கூறற்கில்லை.

சுவடியியற் பேராசிரியர் பூ. சுப்பிரமணியம் பின்வருமாறு கூறுவர்:*

''வாய்ப்பு, ஈர்க்கு, காழ்ப்பு முதலிய ஈரொற்றுத் தொடர் மொழிகள் வாய், ஈர், காழ் முதலிய பகுதிகளிலிருந்து உருப் பெற்றனவாதலின், வாய்+பு, ஈர்+கு, காழ்+பு எனச்சேர்க்கு மிடத்து வாய்பு, ஈர்கு, காழ்பு என வருமாயின் இடைத்தொட ராகக் கூறப்படும். எனவே நிலைமொழிப்பகுதியீற்று இடையின மெய், விகுதி (முதலிய) வல்லினமெய் மீது ஏறிய உகரத்துடன் தொடரும்போது, இடையே அவ்வல்லெழுத்து மிகுதலினால் 'வாய்ப்பு' முதலியவற்றைப் பகுதியீறு நோக்கி இடைத்தொடர்க் குற்றுகரம் என்பதா விகுதியுடன் புணரும் போது மிகுந்து வரும் ஒற்றெழுத்து நோக்கி அவ்வொற்றின் பெயரால் வல்லொற்றுத் தொடர் அல்லது மெல்லொற்றுத் தொடர்க்குற்றுகரம் என்பதா என்னும் ஐயம் வரின், அவற்றை இடைத்தொடர்க்குற்றுகரம் என்னாது வன்றொடர்க்குற்றுகரமாகவோ மென்றொடர்க் குற்றுகரமாகவோ கூறுதல் வேண்டும். அவை இடைத்தொடர்க் குற்றுகரம் ஆகா''.

இவ்வாறு கூறுவது ஓரளவில் பொருந்துமாயினும் 'மொய்ம்பு' என்பதை மொய்+பு எனப் பிரித்தற்கில்லையாதலினாலும், 'வெறுப்பு' போலும் சொற்கள் வெறு+பு என்பது போலப் பிரிக்கப்படுதலின் வெறு என்பதன் ஈற்று உயிர் பு என்னும் வல்லினமெய் மீதேறிய உகரத்துடன் தொடர்வதால் உயிர்த் தொடர்க்குற்றுகரம் என்பதா என்னும் ஐயம் வாராமை யினாலும் அவர் கூற்றும் முழுமையான அமைதியாகாது.

---

* இக்கருத்து நேரில் உரையாடியபோது கூறப்பட்டது.

இருவழியிலும் குற்றுகரம் வரும்.

409. **அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
எல்லா இறுதியும் உகரம் *நிறையும். **(3)**

ஆ. மொ. இல.

Whether it is non-case relation or
Case relation in all the ending, 'u'
stands (being shortened)

க. சு.

Both in non-case relationship and in Case relationship, in all (the above-mentioned six kinds of words) (the shortened) 'u' stands finally.

பி. இ. நா.

முத்து. புண. 230.

இருவழி மருங்கினும் குற்றிய லுகரம்
எல்லாங் குறுகா தென்மனார் புலவர்.

இளம்.

இது எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்: அல்லது கிளப்பினும்—அல்வழியைச் சொல்லுமிடத்தும், வேற்றுமைக்கண்ணும் [1]வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும், எல்லா இறுதி உகரமும் நிறையும்—ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்.

உ-ம்: நாகு கடிது, நாகு கடுமை; வரகுகடிது, வரகு கடுமை எனவரும்.

நச்.

இஃது 'இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே' (எழு. 37) என்றதனாற் புணர்மொழிக்கண் அரைமாத்திரையினும் குறுகும்

---

* நிலையும்-நச். பாடம். இதற்கு எழுவாய் உகரம்; நிறையும் என்பதற்கு எழுவாய் மாத்திரை.

சு. வே: 1 வேற்றுமைப் புணர்ச்சிக் கண்ணும்.

என எய்தியதனை விலக்கி 'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' (எழு. 12) என்ற விதியே பெறும் என்கின்றது.

இ-ள்: அல்வழியைச் சொல்லுமிடத்தும், வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணும், ஆறு ஈற்றின் கண்ணும் உகரம் தன் அரை மாத்திரையைப் பெற்று நிற்கும்; எ-று.

வருமொழியானல்லது அல்வழியும் வேற்றுமையும் விளங்காமையின் 'அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்' எனவே இருமொழிப்புணர்ச்சி என்பது பெற்றாம். இவ்விரு மொழிக்கட் பழைய அரை மாத்திரை பெற்றே நிற்கும் என்றார். அன்றி இருமொழிப் புணர்ச்சிக்கண் ஒரு மாத்திரை பெறும் *என்றார்க்குப் பன்மொழிப் புணர்ச்சியாகிய செய்யுள் இலக்கணங் குற்றுகரத்தான் நேர்பசை நிரைபசை கோடலும், அவற்றான் அறுபது வஞ்சிச்சீர்கோடலும் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொரு தொடை கோடலும் இன்றாம். முற்றிய லுகரமாகவே கொள்ள வேண்டுதலின் மாறு கொளக் கூறல் என்னும் குற்றந்தங்கும் என்றுணர்க.

உ-ம்: நாகு கடிது, வரகு கடிது, நாகு கடுமை, வரகு கடுமை என வரும். இவை தம் அரை மாத்திரை பெற்றன: ஏனையவற்றோடும் ஒட்டுக.

இனி, இது 'மால்யாறு போந்து கால்கரந்து பாய்ந்து' எனத் தொடர் மொழிக்கண்ணும் அரைமாத்திரை பெற்றது என்னாக் கால் வஞ்சிச்சீர் இன்றாமாறுணர்க.

சுப்.†

பொருள்: அல்வழி வேற்றுமைவழி யிரண்டினும் அறுவகைப் பட்ட இறுதிக்கண்ணும் குற்றியலுகரங் குறுகாது இயல்பாகிய அரை மாத்திரை பெற்று நிறைந்து நிற்கும்.

இச் சூத்திரவுரையில் 'உகரம்' என்றதைக் குற்றியலுகரமாகவும் 'ஈரெழுத்தொரு மொழி' (407) என்ற சூத்திரத்தில் அதனை முற்றியலுகரமாகவும் இளம்பூரணர் கருதியது பொருத்தமின்று. அன்றியும் முற்றியலுகரமும் குற்றியலுகரமும் மாத்திரையின் மாத்திரம் வேறுபட்டன வல்ல; பிறப்பிடத்திலும் வேறு

* என்றார் இளம் பூரணர்.

† இவர் நச்சினார்க்கினியர் கருத்தினர்.

பட்டன என்பதைப் பிறப்பியற் சூத்திரங்களில் ஆசிரியர் உணர்த்தியது நோக்கத்தக்கது.

இச்சூத்திரம் எற்றுக்கு எனின், 'இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே, கடப்பா டறிந்த புணரியலான' (எழு. 37) என்ற விடத்துப் புணர்ச்சியின்கண் குறுகும் என்றும், அவ் விடங்கள் ஆறு என 'ஈரெழுத்தொருமொழி' (40) என்ற சூத்திரத்தின் கண்ணும் கூறியிருக்கின்றமையான், எல்லா விடங்களிலும் குற்றியலுகரம் குறுகுமோ என்ற ஐயம் வர, எல்லாவழியும் நிறையும் என ஈண்டுப் பொதுவாகக் கூறிப் பின்னர்க் குறுகுமிடங்களை யுணர்த்தற்கு என்க

வேங்.

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் 'எல்லா இறுதியும் உகரம் நிலையும்' என்று பாடங்கொண்டு இருமொழிக்கட் பழைய அரை மாத்திரை பெற்றே நிற்கும்' என்றார். அவர், இருமொழிப் புணர்ச்சிக்கண் ஒரு மாத்திரை பெறும் என்றார்க்கு... பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொரு தொடை கோடலும் இன்றாய்'' என்று, உரையாசிரியர் உரையை மறுத்துக் கூறினார். ஆசிரியர்,

> இருவகை உகரமோடு இயைந்தவை வரினே
> நேர்பும் நிரைபும் ஆகும் என்ப (செய். 4)

என்று கூறியிருத்தலின். முற்றியலுகரத்தானும் நேர்பசை நிரைபசை நேருமன்றே? அதனான், வஞ்சியுரிச்சீர் அறுபதும் அமைவுறுமே ஆகலின், அவர் மறுத்து கூறியது பொருந்துதல் இல்லை. இனி, தொடை பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்று என்றது பொருந்துவதன்று. இளம்பூரணர் 13699 என்றார்; யாப்பருங்கல விருத்திகாரரும் அவ்வாறு எண்ணினார். பேராசிரியர் 13708 என்று கணக்கிட்டார்.

> மெய்பெறு மரபிற் றொடை வகை தாமே
> ஐயீ ராயிரத் தாறைந் நூற்றொடு
> தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூறு
> ஒன்றும் என்ப உணர்ந்திசி னோரே (செய். 101)

என்னும் சூத்திரத்தைப் பாடவேறுபாடு கொண்டு ஒவ்வொரு வரும் தத்தமக்குத்தோன்றியவாறே உரைகூறினர். ஐயீராயிரத்து ஆறு ஐந்நூறு— (13000) பதின்மூவாயிரம்; தொண்டு தலையிட்ட

பத்துக்குறை எழுநூறு — தொண்டு = ஒன்பது. ஒன்பதை முன்னிட்ட பத்து—பத்தொன்பது. பத்தொன்பது குறைந்த எழுநூறு; அது (681) அறுநூற்றெண்பத்தொன்று. ஆகவே பதின்மூவாயிரத்தறுநூற் றெண்பத் தொன்று (13681) எனவரும். 'மூன்று தலையிட்ட முப்பத்திற்றெழுத்தின், இரண்டு தலையிட்ட முதலாகிருபஃது' என்னுமிடத்து, முப்பத்து மூன்றும், இருபத்திரண்டுமேயாதல் அறியத்தக்கது. இளம்பூரணர், 'ஒன்றும்' என்பதனை வினைமுற்றாகவே கொண்டாராயினும், 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூறு—தொண்டு தலையிட்ட எழுநூறு—என்றுகொண்டு அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்று கணக்கிட்டார். ஆசிரியர்க்கு அதுவே கருத்தாயின் 'ஒன்று குறைந்த எழுநூறு' என்று எளிதாகக் கூறியிருப்பர்; அவ்வாறு கூறாமையின் அவர்க்கு அது கருத்தன்றென்பது போதரும். தொண்டு தலையிட்ட பத்து(19)க் குறை(ந்த) எழுநூறு என்று கோடலே நேர்மையாகும்.

இனி, பேராசிரியர், 'ஒன்றும்' என்னுஞ்சொல்லை, 'ஒன்பஃது என்று பாடம் கொண்டு, பத்துக் குறை எழு நூற்றொன்பஃது— அறு நூற்றுத் தொண்ணூற்றொன்பஃது (699); அதனோடு தொண்டு தலையிட்ட எண்—(708) எழுநூற்றெட்டு என்று கூறினார். ஆசிரியர் கருதியது இத்தொகையே யாயின், 'எட்டுத் தலையிட்ட எழுநூறு' என்று எளிதின் விளங்கச் சூத்திரஞ் செய்வாரே யன்றி இவ்வாறு செய்யார். இவ்விருவர் (இளம் பூரணர், பேராசிரியர்) உரையிலும், 'தொண்டு தலையிட்ட என்னுந்தொடரை, பத்தினோடு இயையாது, முறையே' பத்துக் குறைந்த எழுநூற்றோடும், பத்துக் குறைந்த எழுநூற்றொன்பதோடுமே இயைத்திருத்தல் அமைதியாதல் இன்று.

இனி, நச்சினார்க்கினியர், 'எழுநூற்றொன்பஃது' என்பதுவே பாடமாகக் கொண்டு பத்துக் குறை எழுநூற்றொன்பது—அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது; அதனோடு ஒன்பது தலையிடுதலாவது—அதனை ஒன்பதனாற் பெருக்குதல்; அவ்வாறு பெருக்க (699 × 9 = 6291) ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்று; இதனைப் பதின் மூவாயிரத்தோடு கூட்ட (19291) பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்று என்று கணக்கிட்டார். இன்னும் செய்யுளியலில் உள்ள இச்சூத்திரப் பொருளையே தடைவிடைகளாற் கூறின் விரியுமாகலின் ஈண்டு இவ்வளவில் நிறுத்துகின்றேன். இவற்றால், நச்சினார்க்கினியர்

கூறிய தொடைவிகற்பமும் பொருந்தாது என்பது தெளியப்படும். தெளியவே, அவர் இளம்பூரணர் உரையை மறுத்துக் கூறியதும் நிலைபெறுதல் இன்று. 'அல்லது கிளப்பினும்' என்னுஞ் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையின்படி, உகரம் அரைமாத்திரையாகவே நிற்கும் எனின், முன்வரும் சூத்திரத்தின் பொருள் அமைதல் இல்லை. அதனைக்குறித்து முன்னர்க் கூறுவேன்.

இனி, அவர் தாமே 'உகரம் நிறையும்' என்று பாடம் ஓதி அதற்கு, ''உகரம் அரைமாத்திரையிற் சிறிது மிக்கு நிற்கும் என்று பொருள் ...... கூறுவாருமுளர்'' என்று எழுதி, அதனைக் குறித்து ஒன்றுமே கூறாது சென்றதனான், அரைமாத்திரையின் மிக்கு நிற்கும் என்று கூறுதல் அவர்க்கும் கருத்தாதல் பெறுதும். ஆகலின் இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறிய பொருளே மெய்ப் பொருள் ஆகும்.

இன்னும் நச்சினார்க்கினியர், ''மால்யாறு போந்து கால் சுரந்து பாய்ந்து' எனத் தொடர்மொழிக் கண்ணும் அரை மாத்திரை பெற்றது என்னாக்கால், வஞ்சிச்சீர் இன்றாமாறு உணர்க'' என்றார். இதில் உள்ள உகரங்கள் ஒரு மாத்திரை பெற்றன எனினும், அவை நேர்பு நிரைபு அசைகளேயாகும் ஆதலின், வஞ்சிச்சீர் ஆதற்குத் தடையென்?

*வெள்.

இஃது 'இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே' (எழு. 37) என்பதனாற் புணர்மொழிக்கண் குற்றியலுகரம் அரைமாத்திரையினும் குறுகும் என முன் மொழிமரபிற் கூறியதனை விலக்கி 'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' என்ற விதிப்படி அரைமாத்திரை பெற்று நிற்றலே எல்லாக் குற்றுகரங்கட்கும் உரிய பொதுவியல்பாகும் என அறிவுறுத்துகின்றது.

இ—ள்: அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணும் ஆறீற்றின் கண்ணும் குற்றியலுகரம் தன் அரைமாத்திரையைப் பெற்று நிற்கும்; எ—று.

இனி 'எல்லா இறுதியும் உகரம் நிறையும்' எனப் பாடங் கொண்டு, ''அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப்

---

* இவர் நச்சினார்க்கினியர் கருத்தினர்.

பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஆறீற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்'' எனப் பொருள் கொள்வர் இளம்பூரணர்.

எனவே இரு மொழிப்புணர்ச்சிக்கண் வரும் குற்றியலுகரம் எல்லாவிடத்தும் ஒரு மாத்திரை பெற்று நிற்கும் என்பது இவ்வுரையாசிரியர் கருத்தெனத் தெரிகிறது. இக்கருத்துப் பொருந்துவதன்று என்பது மொழிமரபில் 'இடைப்படிற்குறுகும்' என்னும் சூத்திரவுரையில் விளக்கப்பட்டது.

கணேசய்யர்

தமது நச்சினார்க்கினியப் பதிப்பில் இச்சூத்திரவுரைக்கீழ்க் குறிப்பிடுவது வருமாறு:

இச் சூத்திரத்தில் 'நிலையும்' என்பதை 'நிறையும்' என்று பாடங்கொள்பவர் இளம்பூரணர். பேராசிரியரும் அங்ஙனமே பாடங் கொள்வர். பேராசிரியர் செய்யுளியலுள் ஞாயிறு முதலியன முற்றியலுகரம் போலக் கொள்ளப்படுமன்றிக் குற்றியலுகரம் முற்றியலுகரம் ஆகாதென்றும், அங்ஙனம் கொள்ளின் குற்றியலுகரப் புணரியலில் நிறையும் என்று ஆசிரியர் பாடங் கொண்டதற்கு ஒரு பயனின்றாம் என்றும் (செய். 4—5—12) கூறியதை நோக்கும் பொழுது ஈண்டுப் பேராசிரியர்க்கு நிறைவதுபோல வைத்துப் புணர்க்கப்படும் என்பதே கருத்தாதல் பெறப்படும். ஏன் எனின் குற்றியலுகரம் மாத்திரை குறைந்தமை பற்றி மெய்யாக வைத்துப் புணர்க்கப்படுமோ உயிராக வைத்துப் புணர்க்கப் படுமோ என மாணாக்கருக்கு ஓர் ஐயம் வரும். அவ்வையத்தை நீக்க உயிர் போல நிறைவதாக வைத்துப் புணர்க்கப் படும் என்பது பொருத்தமாதலின்.

சிவ.

இச்சூத்திரத்தில் 'உகரம் நிறையும்' என்பதற்கு இளம்பூரணர் ''ஆறுஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்'' என்று உரையெழுதினார். 'நிறைந்தே நிற்கும்' என்பதற்குக் குற்றியலுகரமாக இன்றி முற்றியலுகரமாக (அதாவது அரை மாத்திரையளவின்றி ஒரு மாத்திரையாக) நிறைவுற்று நிற்கும் என இளம்பூரணர் கருதியதாக யாவரும் கொண்டனர். அவ்வாறின்றி ''ஆறீற்றுக் குற்றியலுகரமும் குற்றியலுகரமாகவே நிறைந்து நிற்கும்'' என்பதே அவர் கருதியதாகக் கொள்ளல் வேண்டும்.

இச்சூத்திரம், எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று என்றார் இளம்பூரணர். இவர் கூற்றிலிருந்து, குற்றியலுகரத் தொடர்பாக முன்சூத்திரத்தில் இருமருங்கு (இருகருத்து) எய்தியிருந்ததாகவும் இச்சூத்திரத்தால் ஒருமருங்கு (ஒருகருத்து) மறுக்கப்பட்டதாகவும் நாம் கொள்ளலாம். அப்படியாயின் முன் சூத்திரத்தில் எய்திய இருமருங்கு யாவை ?

ஈரெழுத்தொருமொழி'' என்னும் முதற்சூத்திரத்தில் உகரம் குறுகிடன் ஆறே என்பது கூறப்பட்டது. அதில் ஆறிடத்தும் வரும் உகரம் குறுகியே வரும் என்பது கூறப்படாமல், ஆறிடத்தும் உகரம் குறுகும் என்பது கூறப்பட்டது. அதனால் அவ்வாறிடத்தும் உகரம் குறுகியும் குறுகாதும் வரும் என்பது பெறப்பட்டது. அதாவது உகரம் அவ்வாறிடத்தும் குறுகிவரும் என்பதொரு கருத்தும், குறுகாதும் வரும் என்பதொரு கருத்துமாக இருமருங்கு (கருத்து) அச்சூத்திரத்தில் பெறப்பட்டன.

இனித் தனிமொழியிலன்றிப் புணர்மொழியில் வரும் போதும் குறுகுதலும் குறுகாமையும் உண்டா எனின், அல்வழி வேற்றுமைப் புணர்ச்சியில் உகரம் குறுகியே நிற்கும் ; குறுகாமை என்பதில்லை. புணர்மொழியிடத்து உகரம் முன்சூத்திரத்திற் பெற்ற இரண்டு கருத்துகளுள் குறுகாமை என்பதை இச் சூத்திரம் மறுத்துக் குறுகும் என்றலின் ஒருமருங்கு (ஒரு கருத்தை) மறுத்ததாம்.

காது என்னும் சொல்லைப் பெயராகக் கொள்ளின் உகரம் குறுகுதலையும், ஏவல்வினையாகக் கொள்ளின் உகரம் குறுகாது ஓரளவாக வாதலையும் காண்க.

சிதம்பரம்பிள்ளை பதிப்பில் இச்சூத்திரத்தின் கீழ் 'நிலையும் என்ற பாடங் கொண்டு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் ஒற்றுக்கள் இரண்டு தொடர்ந்து வரும் இடைத் தொடர் மொழிகள் அல்லாத அறுவகை மொழிகளின் இறுதிக் கண்ணும் குற்றியலுகரம் நிற்கும் என்று உரைத்தலே பொருத்தம் உடைத்து'' என்னும் குறிப்பு காணப்படுகின்றது. 'எல்லா இறுதியும்' எனச் சூத்திரத்தில் காணப்படுதலின் ஒற்றுக்கள் இரண்டு தொடர்ந்துவரும் இடைத்தொடர் மொழியை விலக்க வேண்டுவதில்லை. நாகுகடிது என்பது போல ஈர்க்குகடிது, மொய்ம்புகடிது என வருவது காண்க. ஒருகால் கொக்குக்கடிது என்பதற்கு அடுத்து வரும் சூத்திரம்

இலக்கணம் கூறலின், ஈர்க்குக்கடிது என வருமொழி வல்லெழுத்து மிக்குவரும் ஈரொற்றுத் தொடர் மொழிக்கும் அச்சூத்திரம் பொருந்தும் எனக் கொண்டு அவ்வாறு குறிப்பு எழுதினர் என்னலாம் ஆயினும் 'மொய்ம்புகடிது' எனும் ஈரொற்றுத் தொடர்மொழிக்கு ஏலாமையின் அது பொருந்தாதென்க.

410. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே. (4)

ஆ. மொ: இல.

Hardword when followed by hard consonant as initial of a word, The nature already enjoined may continue to stand.

க.சு.

The original nature of the 'voiceless stop sequence word' may remain as such if the coming word begins with a voiceless stop.

பி.இ.நா.

நன். 181

வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி.

இ. வி. 100

ஷை ஷை

இளம்.

இது எய்தியது 'ஒருமருங்கு' மறுக்கின்றது.

இ-ள் : வல்லொற்றுத் தொடர்மொழி—[2] அவ்வீற்றுள்ளும் வல்லொற்றுத் தொடர்மொழி, வல்லெழுத்து வருவழி – வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வரும் இடத்து, தொல்லை இயற்கை நிலையலும் உரித்து—[3] முன்கூறிய இயற்கை நிற்றலும் உரித்து.

சு. வே.

1. ஒருவழி
2. அவ்வீறுள்ளும்
3. முன்கூறுகின்ற

உ-ம் : கொக்குக்கடிது ; கொக்குக்கடுமை என வரும்.

நச்.

இது முன்னின்ற சூத்திரத்தான் அரை மாத்திரை பெறும் என்றதனை விலக்கி 'இடைப்படிற் குறுகும் இடனும்' (எழு. 37) என்றதனான் அரை மாத்திரையினும் குறுகும் என்று ஆண்டு விதித்தது ஈண்டு வல்லொற்றுத் தொடர்மொழிக்கண்ணே வரும் என்கின்றது.

இ-ள்: வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம், வல்லெழுத்து முதல்மொழி வருமொழியாய் வருமிடத்து, 'இடைப்படிற்குறுகும்' என்பதனால் கூறிய அரை மாத்திரை யினும் குறுகி நிற்கும் என்ற இயல்பிலே நிற்றலும் உரித்து; எ-று.

உம்மை எதிர்மறை.

உ-ம்: கொக்குக்கடிது, கொக்குக் கடுமை என அரை மாத் திரையிற் குறைந்தவாறு குரங்குகடிது என்பது முதலிய வற்றோடு படுத்துச் செவி கருவியாக உணர்க.

முன்னின்ற சூத்திரத்து [1]உகரம் நிறையும் என்று பாடம் ஓதி அதற்கு 'உகரம் அரைமாத்திரையிற் சிறிதுமிக்கு நிற்கும்' என்று பொருள் கூறி இச்சூத்திரத்திற்குப் பழைய அரைமாத்திரை பெற்று நிற்கும் என்று கூறுவாரும் உளர்*.

சுப்.

பொருள்: வல்லொற்றுத் தொடர்மொழியின் இறுதிக்குற் றியலுகரம் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து இயல்பின்கண் நிற்றலும் உரித்து.

அவ்வியற்கை 'இடைப்படிற்குறுகும் இடனுமாருண்டே கடப்பாடறிந்த புணரிய லான' என்ற விடத்துக் கூறப்பட்டதே யாகும்.

உ-ம்: கொக்கு + கடிது = கொக்குக்கடிது; கொக்குக்கடுமை. ஈண்டுக் குகரத்திற்குக் கால் மாத்திரை எனக் கொள்ளல் வேண்டும்.

---

* கூறுவார் இளம் பூரணர் என்பர்.

சு. வே; 1. உகரம் நிறையும் என்றற்கு

இளம்பூரணர் இச்சூத்திரத்துக்குப் பொருள் இவ்வாறு கொள்ளாது 'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' (எழு.1)என்ற சூத்திரத்திற் கூறப்பட்ட அரை மாத்திரை பெறும் குற்றியலு கரம் எனப் பொருள் கொண்டனர். அவ்வாறு கொண்டதற்குக் காரணம் முற்சூத்திரத்தில் 'உகரம் நிறையும்' என்றதற்குக் குற்றியலுகரம் முற்றுகரமாகும் எனப் பொருள் கொண்டதே யாம். இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கொண்ட பொருளே சிறக்கும்.

நிலையலும் என்ற உம்மையால் குற்றியலுகரம் கால் மாத்திரை பெறுதல் சிறுபான்மையென்க.

நச்சினார்க்கினியத்தில் "முன்னின்ற சூத்திரத்து.. ...அரை மாத்திரை பெற்று நிற்கும் என்று கூறுவாரும் உளர்" என்ற தொடர் உளது. இவ்வாறு கூறுபவர் யார் என விளங்கவில்லை. அவ்வாறு கொள்ளின் குற்றியலுகரம் அரை மாத்திரை பெற்று நிற்றல் சிறுபான்மையாகும்; அது பொருந்தாதென்க.

வேங்.

இச்சூத்திரத்திற்கு வல்லொற்றுத் தொடர் மொழி யுகரம் வல்லெழுத்து வரும் வழி, கால்மாத்திரையாக ஒலிக்கும் என்றும், 'இடைப்படிற்குறுகும் இடனுமாருண்டே' என்றதனான், இது போதரும் என்றும் நச்சினார்க்கினியர் உரைத்தார். 'இடைப்படிற் குறுகும்' என்னுஞ் சூத்திரம், வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழிக் கால்மாத்திரையாக ஒலிக்கும் என்று கூறுவதன்று என்பது ஆண்டே கூறப்பட்டது. இச்சூத்திரத்தில் 'தொல்லையியற்கை' என்பதற்கு, 'இடைப்படிற்குறுகும்' என்பதனாற் கூறிய அரை மாத்திரையினுங் குறுகிநிற்கும் என்ற இயல்பிலே' என்று பொருள் கூறினார்; 'தொல்லையியற்கை' என்பதற்கு 'மேற் கூறிய இயல்பு' என்று பொருள் வருதல் எப்படி? மேற்கூறிய இயல்பு என்பதுவே ஆசிரியர் கருத்தாயின், 'மேற்கிளந்தன்ன' என்றாவது 'முற்கிளந்தன்ன' என்றாவது கூறுவாரேயன்றி 'தொல்லையியற்கை' என்பாரல்லர். அன்றியும், 'தொல்லை' என்பது 'பழமை' என்னும் பொருள்தருமேயன்றி, 'மேற்கூறிய' என்னும் பொருளைத்தராது. இவற்றால் 'தொல்லை இயற்கை' என்பது 'பழைய தன்மை' என்று பொருள் தந்து, வன்றொடர்க்குற்றுகரம் வல்லெழுத்து முதன்மொழி வரும்வழி அரை மாத்திரையாய் நிற்கும் இயல்பினையே

உணர்த்திற்று என்பது தெளியப்படும். உம்மையான், மேலைச் சூத்திரத்தின்படி ஒரு மாத்திரையாதலும் உண்டு.

மேல் மொழி மரபில்,

இடைப்படிற் குறுகும் மொழியுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான

என்று கூறியது இச்சூத்திரப் பொருளைக் குறித்ததே. இவ்வா றன்றி, நச்சினார்க்கினியர் கூறியவாறு ஆறுவகை யுகரங்களும் புணர்மொழிக்கண் குறுகும் என்பதுவே ஆசிரியர்க்குக் கருத் தாயின் 'இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே' எனச் சூத்திரஞ் செய்யார்; 'இடனுமாருண்டே' என்பது ஒரோவழி எனவே பொருள் தருமாகலின். இதனானும் 'எல்லா விறுதியும் உகரம் நிறையும்' என்று இளம்பூரணர் கொண்ட பாடமே ஆசிரியர் கருத்திற்கு ஒத்த பாடம் என்பது தெளிவுறும்.

சிவ.

இச்சூத்திரம் பற்றி இளம்பூரணர் 'இது எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது' என்றார்.

'அல்லது கிளப்பினும்' என்ற மூன் சூத்திரத்தால் எல்லா இறுதியிலும் உகரம் குறுகியே வரும் என்பது கூறப்பட்டது. ஆனால் வல்லொற்றுத் தொடர் மொழியீற்று உகரம் மட்டும் வல்லெழுத்து முதன் மொழி வருமொழியாய் வருமிடத்துத் தன் பழைய நிலையில் குறுகி வருதலும் உரித்தாம்; உம்மையால் குறுகாது வருதலும் உரித்தாம். ஆதலின், வல்லொற்றுத்தொடர் மொழியில் மட்டும் இரண்டு நிலையும் இருத்தலின்— 'அல்லது கிளப்பினும்' என்பதனோடு மாறுபடுதலின்—எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று என்பதாகும். எய்தியது என்பது முன்சூத்திரத்தில் எல்லா இறுதியும் உகரம் நிறையும் என்பது. ஒரு மருங்கு மறுத்தலாவது வல்லொற்றுத் தொடர் மொழி யாகிய ஓரிடத்து மட்டும் உகரம் நிறைதலும் நிறையாமையும் ஆம் என்பதனால் மறுத்தல்.

'கொக்குக் கடிது' என்பதில் 'கொக்கு' என்பதின் இறுதி உகரம் குற்றியலுகர நிலையிலும் முற்றியலுகர நிலையிலும் ஒலிக்கப்பட்டிருத்தல் வேண்டும் இளம்பூரணர் காலத்தில். எழுத் தின் ஒலி காலத்துக்குக் காலம் மாறுபடுதல் உண்டு. வன்றொடர்க் குற்றுகரங்கள் வல்லெழுத்து முதல் மொழி வரும்போது முற்று

கரங்களாகப் பெரும்பான்மையிலும் குற்றுகரங்களாகச் சிறுபான்மையிலும் மக்களிடையே ஒலிக்கப்பட்டிருக்கலாம். அதனால்தான் இளம்பூரணர் 'வல்லொற்றுத் தொடர்மொழி' என்பதற்கு அவ்வாறு பொருள் கொண்டார். நச்சினார்க்கினியர் தாம் ஒலித்துக் கொண்ட முறைக்கேற்பக் 'கொக்குக்கடிது' என்பதில் 'கொக்கு' என்பதற்குக் கால் மாத்திரையிருப்பதாகக் கண்டமையால் தம் போக்கில் புணர்மொழியிடத்துச் சிறுபான்மை குற்றியலுகரம் தன் அரை மாத்திரையை விட்டுக் கால் மாத்திரை பெறும் என்றார்.

2. குற்றிய லிகரம்

குற்றியலிகரம் வருமாறு.

411. யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது. (5)

ஆ. மொ:
இல:
When followed by 'y', 'i', having appeared, shortens, and shortened 'u' disappears completely.

க. சு.
When followed by the sound 'y', 'i' is shortened, and the (shortened) 'u' disappears completely.

பி. இ. நூ.
வீர. 3.
இகரம் குறுகிவரும் குற்றுகரம்பின் யவரினே.

நேமி. 4
தொடர்நெடிற்கீழ் வன்மைமேல் உகரம் யப்பின்பு
அடைய வரும் இகரம்......குன்றும்

நன். 93
யகரம்வரக் குறள் உத்திரியிகரமும்......குறிய

இ. வி. 15
யகரம் வரக்குறள் உத்தப வருஉம்
இகரமும்......குறிய

தொன் 14
யம்முதல் இய்யாம் இருகுறள் உக்கெடில் அஃகும்

மூத்து 34, 391

யகரம் வருவழி யிகரங் குறுகும்.

இளம்.

இது, [1]குற்றிய லிகரம் புணர்மொழியுள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: யகரம் வருவழி உகரக்கிளவி துவரத் தோன்றாது—[2]யகர முதன்மொழி வருமிடத்து நிலைமொழி உகரம் முற்றத் தோன்றாது; இகரம் குறுகும் — ஆண்டு ஓர் இகரம் வந்து குறுகும்.

உ-ம்: நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது என வரும்.

*இதனானே ஆகாரவீறு அகரம் பெற்றாற்போல (உயிர் மயங். 24) ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் இகரம் பெற்று யகர முதல் மொழியோடு புணருமாறு கூறிற்றாயிற்று.

நச்.

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்துவருமாறு கூறுகின்றது

இ—ள்: யகர முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து நிலைமொழிக் குற்றுகரவெழுத்து முற்றத் தோன்றாது; ஆண்டு ஓர் இகரம் வந்து அரை மாத்திரை பெற்று நிற்கும்; எ-று.

உ-ம்: நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது கொக்கியாது, குரங்கியாது எனவரும். 'துவர' என்றார், ஆறு ஈற்றின்கண்ணும் உகரம் கெடும் என்றற்கு.

சு. வே:

1. குற்றியலுகரம் (இது தவறு).
2. யகர முதன்மொழி வரும்வழி உகரமாகிய வெழுத்து.

* இத்தொடர் அடிகளாசிரியர் கைவசம் உள்ள ஒரு சுவடியில் இல்லையாம். பலா என்பது அகரம் பெற்றுப் 'பலாஅ' என்றாவது போல 'வரகு' என்பது 'யாது' என்பதோடு புணரும்போது குற்றுகரம் கெடாமல் நின்று இகரம் பெற்றுப் புணருமாறு கூறிற்றாயிற்று. (வரகு + யாது → வரகு + இ + யாது → வரகியாது) 'பலாஅ' என்பதில் ஆகாரக்கூறும் அகரக்கூறும் பிளவுபடாமல் சேர்ந்து ஒலித்தல் போல 'வரகியாது' என்பதில் உகரக்கூறும் இகரக்கூறும் சேர்ந்து குறுகி ஒலிக்கும் என்க,

சுப்.

பொருள்: வருமொழி முதல் யகரமாயிருக்க, நிலைமொழி இறுதியாகிய உகரம் முற்றிலும் கெட, அவ்விடத்திற் குற்றிய லிகரம் வந்து குறுகும்.

உ-ம்: நாகு + யாது = நாகியாது.

இச்சூத்திரத்தில் 'இகரம் குறுகும்' என்பதற்கு "ஓர் இகரம் வந்து குறுகும்" என இளம்பூரணரும், "ஆண்டு ஓர் இகரம் வந்து அரைமாத்திரை பெற்று நிற்கும்" என நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர். 'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே" (எழு. 35) என்றவிடத்து அக்குற்றியலிகரம்... குறுகுதலும் உரித்து' எனக்கூறிய நச்சினார்க்கினியர் ஈண்டு ஓர் இகரம் வந்து அரைமாத்திரை பெற்று நிற்கும் எனக் கூறுதல் பொருந்தா தெனத் தோன்றுகின்றது. அச்சூத்திரத்துள்ள 'குறுகலும் உரித்து' என்றதையும் இச்சூத்திரத்துள்ள 'குறுகும்' என்றதையும் நோக்கின், குற்றியலிகரஞ் சிறுபான்மை கால்மாத்திரை பெறும் என நச்சினார்க்கினியர் கூறியிருப்பின் நலம்

இச்சூத்திரம் எற்றுக்கு எனின், 'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே, உணரக்கூறின் முன்னர்த் தோன்றும்(எழு.35) என்றவிடத்துக் கூறப்பட்ட இடம் யாது என்ற ஐயத்தைப் போக்க என்க.

இச்சூத்திரம் குற்றியலுகரம் குற்றியலிகரமாய் மாறித் தன் மாத்திரையிற் குறுகும் என்பதைக் கூறுகின்றது; ஆகலின் "இது குற்றியலிகரம் புணர்மொழியுள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று" என்பதை மாத்திரம் உரைகாரர்கள் கூறுதலும் "இது குற்றியலுகரம் குற்றியலிகரமாம் இடம் உணர்த்துதல் நுதலிற்று" என்று கூறுதல் மிகப்பொருத்தம் உடைத்து என்பதை மாத்திரம் சிதம்பரம்பிள்ளை கூறுதலும் இச்சூத்திரத் தின் கருத்தை முற்றிலும் உணர்த்தவில்லை என்க.

வேங்

'நாகு யாது' என்னுந் தொடர் மொழியில் 'கு' ஆண்டு நிறைந்தொலித்து முற்றியலுகரமாதலின், அஃது, இகரம் வரு வழிக்கெடும் எனல் வேண்டிற்று. என்னை? நாகு என்பது குற்றிய லுகரமன்றோ? எனின், நாகு என்பது தனிமொழியாய் நிற்கு

மிடத்துக் குற்றுகரமேயாயினும், புணர்மொழிக்கண் முற்றுகர மாகும் என்பது மேல் 'அல்லதுகிளப்பினும்' என்னுஞ் சூத்திரத் தாற் கூறப்பட்டதனால் அஃது ஈண்டு முற்றியலுகரமே. 'அல்லது கிளப்பினும்' என்னுஞ் சூத்திரத்தான், அறுவகைக் குற்றுகர மொழிகளின் கண்ணும் வல்லுகரம் ஒரு மாத்திரை பெற்று முற் றுகரமாதல் போந்ததனான் அவற்றுள் வன்றொடர் மொழிக்கண் உள்ள முற்றுகரம் வல்லெழுத்து முதன்மொழி வருமிடத்துக் குறுகும் என்று மேற் சூத்திரத்தான் விதித்து, அவ்வறுவகை மொழிக்கண் உள்ள முற்றுகரங்களும் இகரம் வந்தவிடத்து முழுதுங்கெடுதலை இச்சூத்திரத்தான் விதித்தார். அற்றன்று, நாகு என்னும் குற்றியலுகர மொழியை நிறுத்தி, அதன்முன் யகர முதன் மொழியைத் தந்து புணர்க்குமிடத்து இடையே இகரவொலி தோன்றுதலின், அவ்விகரத்தின் பொருட்டுக் குற்றியலுகரம் கெட்டது என்று கொள்ளுதும் எனின், ஆசிரியர் குற்றுகரமொழிக்கு முன் உயிர் முதன்மொழி வரின் அக் குற்றுகரம் கெடும் என்று கூறாராய் அக்குற்றுகர மொழியோடு உயிர் முதன்மொழி சேர்ந்து வரும் என்றே கூறு கின்றார் ஆகலானும், முற்றுகர மொழிமுன் உயிர் முதன்மொழி வருமிடத்தெல்லாம் அம்முற்றுகரம் கெடும்என்று விதிக்கின்றாரா கலானும், ஈண்டும், புணர்மொழிக்கண் குற்றுகரம் முற்றுகரமாய் ஒலிக்கும் என்று பொதுவிதி கூறி, அவற்றிற்குச் சிறப்பு விதி கூறி வருகின்றார் ஆகலானும், அவர். (நாகு என்னும்) குற்றுகரமொழி யைத் தனியே நிறுத்தி அதனொடு யகர முதன்மொழியைப் புணர்த்துக் கூறுகின்றாரல்லர் என்பதும், மேல், 'அல்லது கிளப் பினும்' என்ற சூத்திரத்தான் புணர்மொழிக்கண் ஒரு மாத்திரை யொலித்த உகரம் இவ்விடத்துக்கெடும் என்றே இச்சூத்திரத்தாற் கூறினார் என்பதும் அறியலாகும். இச்சூத்திரத்தை 'அல்லது கிளப்பினும்' என்னுஞ் சூத்திரத்திற்குமேல் நிறுத்திக் கூறியிருப்ப ராயின், குற்றியலுகரம் உயிர் வருவழிக்கெடும் என்னும் உரை பொருந்தலாம்; அவ்வாறு வைக்காததனான் அது பொருந்தாது. இதனானும் 'அல்லது கிளப்பினும்'' என்னுஞ் சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறியவாறு பொருள்கொள்ளுதலே அமைதியாதல் வலியுறும், இனி,

'ஆறன் மருங்கிற் குற்றியலுகரம் கெடுதல் வேண்டும்' என்று குற்றுகரம் கெடுதற்கு ஆசிரியர் விதி கூறியுள்ளாரால் எனின், ஆண்டுக்கூறியது குற்றியலுகரம் அன்று எனவும், முற்றியலுகரமே எனவும் அச்சூத்திரவாராய்ச்சியில் அறியலாகும்.

அடிகாளசிரியர்

"இதனானே ஆகாரவீறு அகரம் பெற்றாற்போல ஆறீற்றுக் குற்றியலுகரமும் இகரம் பெற்று" (இளம்) என்ற தொடர் மொழியைக் கருதினால் குற்றியலுகரம் முற்றத் தோன்றாது; சிறிது தோன்றும் என்னும் கருத்தினராவர் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர் "துவர" என்றார், ஆறு ஈற்றின் கண்ணும் உகரம் கெடும் என்றற்கு" என்று கூறுவதால் இவர் குற்றியலுகரம் கெடும் என்ற கருத்தினராவர்.

யாப்பருங்கல விருத்தியுரையில்,

'யகர முதல்வரின் உகரம் ஒழிய
இகரமும் குறுகும் என்மனார் புலவர்"

என்ற நூற்பா ஒன்று காணப்படுகின்றது.

வீரசோழியம் "இகரங் குறுகி வருங்குற் றுகரம்பின் யவ்வரினே" (சந்தி. 3) என்று கூறுகின்றது.

நேமிநாதம் 'அக்குற்றுகரத்தின் பின் யகரம் வந்துழி அக் குற்றுகரம் அழிந்து இகரமாய்க் குறுகும்' (எழுத். 4) என்று கூறுகிறது.

நன்னூலாசிரியர் "யகர முதன்மொழிவரின் குற்றியலுகரமே இகரமாகத் திரியும்" என்றனர்.

ஆனால், குற்றியலுகரம் கெடும், திரியும் என்ற கருத்துத் தொல்காப்பியர்க்கு இருப்பதாகத் தெரியவில்லை.

சிவ.

மொழியிறுதிக் குற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர் எழுத்துவரின் தான் கெடாது நின்று அவ்வுயிருடன் சேர்ந்து ஒலிக்கும் என்பதும், தான்கெட்டு அவ்வுயிர் ஏறஇடங்கொடுக்கும் என்பதும் ஆகிய இருவேறு கருத்துகள் இலக்கண நூலாரிடையும், உரையாளரிடையும் நிலவி வருகின்றன. தொல்காப்பியர் யாண்டும் உகரம் கெடும் என்று கூறவில்லை. 'குற்றியலுகரமும் அற்றெனமொழிப' என்னும் சூத்திரத்தும், 'குற்றியலுகரம் உயர் ஏற இடம் கொடுக்கும் அவ்வியல்புடையது' என்ற கருத்தைக் கூறுகிறது. மெய் உயிர் ஏற இடம் கொடுக்கும் என்றால் மெய் ஒலி கெடுவதின்றி—தான் கெடுவதின்றி — உயிர்ஏற இடம் கொடுத்தல் போலவே குற்றியலுகரமும் உயிர்வரின் தான் கெடுத லின்றித் தன் ஒலியுடன் உயிர் ஏற இடம் கொடுத்து அவ்வுயிரின்

ஒலியும் சேர ஒலிக்கப்படும். நாகு + அரிது→ நாகரிது என்பதில் 'க' என்னும் எழுத்து வரிவடிவில் காணப்பட்டாலும் கு, அ சேர்ந்த ஒலியாகவே அது அமையும் என்பர் முதற் கருத்தினர்.

இரண்டாமவர், 'நாகரிது' என்பதில் வரிவடிவில் உகரக்கூறு காணப்படாமைபோலவே ஒலிவடிவினும் அ (க) கர ஒலியன்றி உகர அகர இணையொலியில்லை என்பர். இவ்விருவேறு திறத்தாரும் 'நாகரிது' என்பதை ஒலித்துக் காண்பதில் வேறு படுகின்றனர். இக்காலத்தில் இரண்டாமவர் கருத்தே பெரிதும் ஏற்கப் படுவதாயிற்று. அதனால் முன்னவர் கருத்து தள்ளப் படுதற்கும் இல்லை.

நாகு + யாது = நாகியாது என்பதில் உகரம்கெட்டு இகரம் வந்து குறுகி முடிந்தது என்பர் இரண்டாமவர். முதலாமவர் உகர ஒலியும் இகர ஒலியும் இணைந்து ஒலிக்கப்படுகின்றன என்பர். அதற்கு அவர் கூறும் சான்று: தொல்காப்பியர்,

> "மகரக் கிளவி வேற்றுமை யாயின்
> துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே" (புள்ளி. 15)

என்றாற் போல,

> யகரம் வருவழி இகரம் குறுகும்
> உகரக் கிளவி துவரக் கெடுமே

என்னாமல் 'துவரத் தோன்றாது' என்று கூறியதைக் காட்டுவர். துவரத் தோன்றாது என்பதனால் சிறிது தோன்றும் என்ற கருத்தை மேற்கொள்வர் அவர். இளம்பூரணர் முதற்கருத்தினர். அவரைச் சார்ந்தோர் வேங்கடராசுலு ரெட்டியார் போல்வார். நச்சினார்க்கினியர் இரண்டாம் கருத்தினர்; அவரைச் சார்ந்தோர் சுப்பிரமணிய சாஸ்திரியார்; வெள்ளை வாரணனார் போல்வார்.

*தேவி பட்டினம் பக்கிரிசாமி என்பார், குற்றியலிகரம் பற்றிப் பின்வருமாறு கூறுவர்:

"நாடு + யாது → நாடு + இ+ யாது→ நாடு+ இயாது→ நாடியாது எனவரும் யகரம், இகர ஒட்டுடன் வரும். அதனால் வருமொழி 'இயாது' என்பதாகக் கொள்ளலாம். குற்றியலிகரத்துக்கு

---

* என்னிடம் நேரில் கொடுத்த குற்றியலிகரம் என்னும் கட்டுரையில் கண்ட கருத்து.

வருமொழியாக 'யா' என்பதைக் கொள்ள வேண்டுவதில்லை. மண் + யாது → மண்ணியாது என வருவது காணின் தெளிவுபடும். "எங்கும் யாவரும்" எனக்கூறி, புணர்மொழிக் குற்றியலிகரத்தின் யா என்பது இகர ஒட்டுச் சேர்ந்து வந்ததேயன்றிக் குற்றுகரம் இகரமாகத் திரிந்ததன்று என்றார் இதனால் தொல்காப்பியத் துக்கு மாறுபாடு நேராது இகரம் குறுகும் என்பது அவர்களுக்கும் ஏற்றதே".

3. குற்றுகரப் பொதுப் புணர்ச்சி.

நெடில் தொடர், உயிர்த்தொடர்

412 ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி (6)

ஆ. மொ:

இல.

'Two letter words'and 'Vowel words' When they are in case relation have the consonants doubled in the middle and the related hard consonant must occur, when followed by the word having hard consonant as initial.

If the 'two letter words' and the 'Vowel sequence words' are in case relationship, a related voiceless plosive in inserted (after shortened 'u') and the voiceless plosive in the middle (that precedes the 'u') is doubled (when followed by a word with an initial voiceless plosive).

நன். 183.

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரகங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

இ. வி. 102.

ஷ ஷ

முத்து. புண. 232.

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமைப் பொருட்கே.

சு வே:

ஆறீற்றினுள்ளும்

இது மேற்கூறிய 'ஆறினுள்ளும்' முன்நின்ற இரண்டிற்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

இ—ள்; [1]ஈர் எழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும் ஈரெழுத்தொரு மொழிக் குற்றியலுகர ஈறும் உயிர்த்தொடர் மொழிக் குற்றியலுகர ஈறும், வேற்றுமையாயின்—வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், இன ஒற்று இடைமிக வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும்—இனமாகிய ஒற்று இடையிலே மிக வல்லெழுத்து மிகுதி தோற்றி முடிதல் வேண்டும்.

உ—ம்: யாட்டுக்கால், செவி, தலை, புறம் எனவும்; *முயிற்றுக் கால், சினை, தலை, புறம் எனவரும்.

தோற்றம் என்றதனால், இவ்விரண்டிற்கும் ஏனைக் கணத்து இயல்பு கணத்து முடிபு கொள்க.

யாட்டு ஞாற்சி, முயிற்று ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம் எனவரும்.

நச்.

இது முற்கூறிய ஆறனுள் முன்னர் நின்ற இரண்டற்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

இ—ள்: ஈரெழுத்தொரு மொழிக் குற்றுகர ஈற்றிற்கும், உயிர்த் தொடர்மொழிக் குற்றுகர ஈற்றிற்கும், வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், இனமாகிய ஒற்று இடையிலே மிக வல்லெழுத்து மிகுதி தோன்றி முடிதலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

உ—ம்; யாட்டுக்கால், செவி, தலை, புறம் எனவும்; முயிற்றுக் கால், சினை, தலை, புறம் எனவும் வரும். கயிற்றுப்புறம், வயிற்றுத்தீ என்பனவும் ஆம்

தோற்றம் என்றதனான் ஏனைக் கணத்தும் இம்முடிபு கொள்க. யாட்டு ஞாற்சி, நிணம், மணி, வால், அதள் எனவும்; முயிற்றுஞாற்சி, நிணம், முட்டை, வலிமை, அடை, ஆட்டம் எனவும் வரும்.

சு. வே. 1. ஈரெழுத்தொரு மொழி

* முயிறு—ஒரு வகை வண்டு

சுப்.

பொருள்; ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும் நிலைமொழியாய் இருக்க, வேற்றுமைக்கண், அவற்றின் இறுதிக் குற்றியலுகரத்தின் பற்றுக்கோட்டின் இனவொற்று இடையில்மிக நிலைமொழியின் பின்னர் வல்லெழுத்து மிகுதியைத் தோற்றத் தின்கண் வேண்டும் (ஆசிரியன்).

உ-ம்: ஆறு + இடை → ஆற்றிடை (கற்பியல் 29)
ஆறு + கவலை—ஆற்றுக் கவலை (புறநா. 219)
களிறு + கோடு → களிற்றுக்கோடு (புறநா. 171)

வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும்' என்றதற்கு "வல்லெழுத்து மிகுதி தோற்றி முடிதல் வேண்டும்" எனப் பொருள் கூறினர் உரைகாரரர்கள். தோற்றம் என்றதை "இருதிணை மருங்கின்' (சொல். 10) என்றவிடத்திற் போல ஏழாம் வேற்றுமையாகவும், 'வல்லெழுத்து மிகுதி' என்றதை இரண்டாம் வேற்றுமையாகவும் கொள்ளல் கூடும்.

'தோற்றம் என்றதனால் இவ்விரண்டற்கும் ஏனைக் கணத்தும் இம்முடிபு கொள்க' என்றனர் நச்சினார்க்கினியர். இவற்றைச் 'சோற்று நிலை' (புறத். 8) முதலிய ஆசிரியர் வழக் கான் கொள்ளல் தகும்.

யாட்டின் கால் என்ற விடத்து இடையில் இனவொற்று மிகுதி எவ்வாறெனின், 'இன்' என்ற ஐந்தாம் வேற்றுமையுருபு 'யாடு' என்றதன் பின்னர் வரும்போது 'நெட்டெழுத்திம்பர்..." (எழு. 197) என்ற சூத்திரத்தான் வரும் இனவொற்று மிகுதியைப் பார்த்து, 'இன்' என்றது ஆறாம் வேற்றுமையுருபின் முன்னர் வந்த சாரியையாயிருக்கும் போதும் அம்மிகுதி வந்ததென்க. ஆங்கு வல்லெழுந்து மிகுதி வாராமையை வருஞ் சூத்திரத்தி லுள்ள'அத்திறம்'என்றதனாற்கொள்ளுகின்றனர் உரைகாரரர்கள். யாட்டின் கண்ணே (மரபு. 47) ஊடலிற்றணித்தல் (கற்பு. 27) முதலிய ஆசிரியர் வழக்காற் கொள்ளல் தகும்.

413. [1]ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே (7)

சு. வே;

1. ஒற்றிடைமிகா.

ஆ: மொ.

இல.

There are words in which the consonant will not double in the middle. Then the hard consonant does not appear.

க. சு.

There are indeed words in which the consonant will not double in the middle; nor does the voiceless plosive appear in those cases.

பி. இ. நா.

முத்து. புண. 234.

ஒற்றிடை மிகாக்குற் றுகரமும் உளவே
வல்லின மிகலத் திறத்தினுள் இலவே.

இளம்:

இது எய்தியது *ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்: இன ஒற்று இடைமிகா மொழியுமார் உள — இன ஒற்று இடையில் மிக்கு முடியாத மொழிகளும் உள;—[2]வல்லெழுத்து மிகல் அ திறத்து இல்லை—வல்லெழுத்து மிக்கு முடிதல் அக்கூற்றுள் இல்லை.

உ-ம்: நாகு கால், சினை, தலை, புறம் எனவும்; வரகுகதிர், சினை, தலை, புறம் எனவும் வரும்.

'அத்திறம்' என்றதனால், உருபிற்கு எய்திய சாரியை எய்தியவழி இயையு வல்லெழுத்து வீழ்க்க.

$யாட்டின் கால், முயற்றின் கால், நாகின் கால், வரகின் கால் என வரும்.

நச்.

இஃது எயதியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

---

2. முன்வல்லெழுத்து.

* ஒரு மருங்கு என்றது ஈண்டு க ச த பக் களை.

$ யாடு + கால்→ யாட்டுக்கால் என வருவது இன்சாரியை பெற்ற வழி

யாடு + கால்→ யாடு + க் + கால்→ யாடு + இன் + க் + கால் → யாடு + இன் + கால் + யாட்டின்கால் என வருவதில் 'க்' வீழ்ந்தது காண்க.

இ-ள்; முற்கூறிய இரண்டனுள் இனவொற்று இடைமிக்கு முடியாத மொழிகளும் உள, வல்லொற்று மிக்கு முடிதல் [1]அக் கூற்றுள் இல்லை; எ-று.

உ-ம்: நாகு கால், செவி, தலை, புறம் எனவும்; வரகு கதிர், சினை, தாள், பதர் எனவும் வரும்.

அத்திறம் என்றதனான் உருபிற்கு எய்தியசாரியை [2]பொருட்கட் சென்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க; யாட்டின் கால், முயிற்றின் கால், நாகின்கால், வரகின்கதிர் எனவரும்.

அத்திறம் என்றதனான் ஏனைக் கணத்தும் ஒற்றிடை மிகாமை கொள்க. நாகு ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை என ஒட்டுக.

வேங்.

'அத்திறம் என்றதனான், யாட்டின்கால், முயிற்றின் கால் என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் வரும் என்றனர் உரையாசிரியர்கள். ஆசிரியர் மேல் உருபியலில், 'குற்றியலுகரத் திறுதி' (23) என்னுஞ் சூத்திரத்தான் குற்றுகரவீறுகளுக்கு முன் உருபு வருமிடத்து இன் சாரியை வரும் என்று விதித்து,

நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்

அப்பான் மொழிகள் அல்வழி யான (உருபியல் 24.)

என்று இடையே ஒற்றுமிகும் ஈரெழுத்துக் குற்றுகர மொழியை விலக்கினாராகலின், யாடு என்பது போன்ற சொற்களுக்கு முன் உருபு வரினும் இன் சாரியை வாராது; ஆதலின் யாட்டின் கால் என்று வருதற்கு விதியின்று'

இடைத் தொடர், ஆய்தத் தொடர்

414. இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடைஆ யியல என்மனார் புலவர் (8)

ஆ.மொ:
இல.

The 'medial word' and 'āytha word' follow the above rules.

சு. வே:

1. அக்கூற்றில்
2. பொருட்கண் எய்திய வழி

உரைகாரர்கள் தம் கால வழக்கு நோக்கிக் கூறினர் எனக் கொள்ளலாம்

க.சு.

Scholars maintain that the 'semi vowel-sequence words' and the 'āytam sequence words' follow the rule maintained above

பி.இ நூ.

நன். 182

இடைத்தொடர் ஆய்தத் தொடர்ஒற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை

இ. வி. 101 ஷை ஷை

முத்து புண. 236

இடைத்தொடர் ஆய்தத் தொடர்இயல் பாகும்

இளம்.

இது, இடைநின்ற [1]இரண்டிற்கும் முடிபு கூறுகின்றது.

இ—ள்: இடை ஒற்றுத்தொடரும் ஆய்தத்தொடரும் நடை—இடை ஒற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் நடக்கும் இடத்து,ஆ இயல என்மனார் புலவர்—மேற்கூறிய இயல்பு முடிபினை உடைய என்று சொல்லுவர் புலவர்.

உ-ம்: தெள்குகால்; சிறை, தலை, புறம் எனவும், எஃகுகால், சிறை, தலை, புறம் எனவும் வரும்.

நச்.

இஃது இடைநின்ற இரண்டற்கும் முடிபு கூறுகின்றது.

இ—ள்: இடையொற்றுத் தொடர்மொழிக் குற்றுகர ஈறும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றுகர ஈறும், நடைபெற நடக்குமிடத்து முற்கூறிய இவ்வியல்பு முடிபினையுடைய என்று கூறுவர் புலவர்; எ—று.

உ-ம்: தெள்குகால், சிறை, தலை, புறம் எனவும்; எஃகு கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

சு.வே: 1. இரண்டிற்றிற்கும், இரண்டற்கும்.

வன்றொடர், மென்றொடர்.

415. **வன்றொடா மொழியும் மென்றொடர் மொழியும்**
வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி [1]கிளையொற் றாகும். (9)

ஆ. மொ:

இல.

'Hard word' and 'nasal word' have the] hard consonant doubled.
The nasal consonants of the nasal words will become either the final or the related hard consonant.

க. சு.

The 'Voiceless stop-sequence words' and the'nasal-sequence words' have the voiceless stop doubled.
The nasal consonants of the 'nasal-sequenee words' will either become final, or the related voiceless stop.

பி. இ. நூ.

நன். 184.

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொடர் ஆகா மன்னே.

இ. வி. 103. ௸ ௸

இளம்.

இது, பின் நின்ற [2]இரண்டிற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் வன்றொடர் மொழிக் குற்றியலுகர ஈறும் மென்றொடர் மொழிக் குற்றியலுகர ஈறும், வந்த வல் எழுத்து ஒற்று இடை மிகும்—வருமொழியாய் வந்த வல்லொற்று இடையிலே மிக்கு முடியும்; மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்று எல்லாம்—[3]அவ்விரண்டு ஈற்றினுள் மெல்லொற்றுத் தொடர்

1. கிளையெழுத்தாகும்.
2. இரண்டற்றிற்கும்
3. அவ்விரண்டற்றிலும்

மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம், இறுதி வல்லொற்று கிளை ஒற்று ஆகும்—$இறுதி வல்லொற்றும் கிளைவல்லொற்றும் ஆய் முடியும்.

உ—ம் : கொக்குக் கால், சிறகு, தலை, புறம் எனவும், குரங்குக்கால், குரக்குக்கால்; செவி, தலை, புறம் எனவும்; எட்குக்குட்டி, செவி, தலை, புறம் எனவும் வரும்.

வந்த என்றதனால், [1]'இவ்விரண்டிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கு எய்திய வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கொக்கின் கால், குரங்கின் கால் என வரும்.

எல்லாம் என்றதனால், பறம்பிற்பாரி என்றாற் [2]போல்வன மெல்லொற்றுத் திரியாமையும் கொள்க.

ஒற்று என்ற மிகுதியான், இயல்பு கணத்துக் கண்ணும் குரக்கு ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு. வலிமை, அடைவு, ஆட்டம் என மெல்லொற்றுத் திரிதலும் கொள்க.*

நச்-

இது பின்னின்ற இரண்டற்கும் முடிபு கூறுகின்றது.

இ-ள்: வன்றொடர் மொழிக் குற்றுகர ஈறும் மென்றொடர் மொழிக் குற்றுகர ஈறும், வருமொழியாய் வந்த வல்லெழுத்தினது ஒற்று இடையிலே மிக்கு முடியும். அவ்விரண்டனுள்

$ இறுதி வல்லொற்று—இறுதியில் உள்ள உகரம் ஊர்ந்த வல்லொற்று. அந்த வல்லொற்றாக இடையில் உள்ள மெல்லொற்று திரியும்- 'குரங்கு' என்பதில் உகரம் ஏறிய இறுதி வல்லொற்று 'க்' ஆகும். அந்த 'க்' என்ற வல்லொற்றாகவே 'ங்' என்ற மெல்லொற்று திரியும்—அதாவது குரக்கு எனத்திரியும்.

கிளை வல்லொற்று—மெல்லொற்றுக்கினமாகிய வல்லொற்று. 'எண்கு' என்பதில் இடையில் உள்ள ணகர மெல்லொற்று தனக்கினமாகிய டகர வல்லொற்றாகத் திரியும்; எட்கு எனவரும்.

சு. வே:

1. இவ்விரண்டற்றிற்கும்
2. போல

* இதன் பின்னர் 'சிலப்பதிகாரமும் அது' என்பது அடிகளாசிரியர் பதிப்பில் காணப்படுகிறது. (சிலம்பு+அதிகாரம்→சிலப்பதிகாரம்) இது நச்சினார்க்கினியத்தில் காணப்படுதலின் படித்தோர் அதில் எழுதிவைத்த குறிப்பாகலாம்,

மெல்லொற்றுத் தொடர் மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம், இறுதிக்கண் நின்ற வல்லொற்றும், கிளையாகிய வல்லொற்றுமாய் முடியும்; எ—று.

இறுதி வல்லொற்று வருதலாவது குற்றுகரம் ஏறி நின்ற வல்லொற்றுத்தானே முன்னர் வந்து நிற்றலாம். கிளை வல்லொற்று வருதலாவது ணகாரத்திற்கு டகாரமும், னகாரத்திற்கு றகாரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாம் ஆதலின் அவை முன்னர் வந்து நிற்றலாம்.

உ-ம்: கொக்குக் கால், சிறகு, தலை, புறம்; குரங்குக்கால் செவி, தலை, புறம்; குரக்குக்கால், செவி, தலை, புறம்; $எட்குக் குட்டி, செவி, தலை, புறம்; எற்புக்காடு, கரம், தலை, புறம் என வரும். அற்புத் தளை என்பது அன்பினாற் செய்த தளை என வேற்றுமையும், அன்பாகிய தளை என அல்வழியும் ஆம்.

வந்த என்றதனான் இவ்விரண்டிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

கொக்கின் கால், குரங்கின் கால் என வரும்.

எல்லாம் என்றதனாற்* பறம்பிற்பாரி, குறும்பிற் சான்றார் என மெல்லொற்றுத் திரியாமையும் கொள்க.

ஒற்றென்ற மிகுதியான் இயல்பு கணத்துக் கண்ணும் குரக்கு ஞாற்சி, நிணம், முகம், விரல், உகிர் என மெல்லொற்றுத் திரிந்து வருமாறு கொள்க. சிலப்பதிகாரம் என்பதும் அது.

வன்றொடர் மொழி இயல்பு கணத்துக்கண் வருதல் 'ஞ ந ம ய வ' (எழு. 144) என்பதனான் முடியும்.

சுப்.

பொருள்: குற்றியலுகர விறுதியாகிய வன்தொடர் மொழிக் கண்ணும் மென்றொடர் மொழிக்கண்ணும், பின்னர் வல்லெழுத்து வர அவ்வல்லெழுத்தொற்று இடையில் மிகும். மென்றொடர் மொழி வல்லொற்றை இறுதியிற் கொண்ட கிளைப் பெயராயின், அவற்றின் மெல்லொற்றெல்லாம் கிளை வல்லொற்றாகும்.

$ எண்கு—கரடி.

உ-ம்: கொக்கு + கால் → கொக்குக்கால்
குரங்கு + கால் → குரங்குக்கால்
எண்கு + குட்டி → எட்குக்குட்டி.

கிளை என்றது இரட்டிக்கப்பட ஒன்றற்குச் 'சினை' பொருளாகவும், மற்றதற்கு 'இனம்' பொருளாகவும் கொள்ளப்பட்டது.

ஈண்டு 'கிளை' என்றதற்குக் 'கிளைப் பெயர்' எனக் கொண்டதற்குக் காரணம் 'ஒற்று நிலை திரியாது' (எழு. 419) என்ற சூத்திரத்தில் 'அக்கிளை மொழியும்' என்ற தொடராகும். 'கிளைப் பெயர்' என்ற சொல்லைக் 'கிளைப் பெயரெல்லாம்' (எழு. 308), 'கிளைப் பெயரெல்லாம் கிளைப் பெயரியல' (எழு. 339) என்ற சூத்திரங்களில் ஆசிரியர் வழங்கியதைக் காணலாம்.

'கிளை யொற்று' என்ற விடத்து 'கிளை வல்லொற்று' எனக் கூறல் வேண்டாவோ எனின், வேண்டா: வல்லொற்றைத் தவிர்த்து வேறொன்றும் மெல்லொற்றுக்கு இனம் ஆகாமையின். 'எல்லாம் என்றதனால் பறம்பிற்பாரி என்றாற் போல்வன மெல்லொற்றுத் திரியாமையும் கொள்க' என்றனர் இளம்பூரணர். அவரோடு உடன்பட்டனர் நச்சினார்க்கினியர். இச்சூத்திரம் வருமொழிமுதலில் வல்லெழுத்து வந்து, இடையிற் சாரியை வாராத விடத்தே மெல்லொற்றின் திரிபைக் கூறுகின்றமை யானும், பறம்பிற்பாரி போன்ற இடங்களில் இன்சாரியை வந்திருத்தலானும் அவர்தங் கொள்கை ஆராய்தற் பாலது.

'ஒற்று என்ற மிகுதியான் இயல்பு கணத்துக் கண்ணும் குரக்குஞாற்சி...... என மெல்லொற்றுத் திரிதலும் கொள்க' என்றனர் உரைகாரர்கள். இவற்றை ஆசிரியர் வழக்கானும் 'மெல்லொற்றுத் தொடர் மொழி மெல்லொற்றெல்லாம், வல்லொற்றிறுதி கிளையொற்றாகும்' என்ற பகுதியைத் தனிச் சூத்திரமாகக் கொள்ளுதலானும் பெறுதல் கூடும்.

வேங்.

'வல்லொற்றிறுதி கிளையொற்றாகும்' என்பதற்கு 'இறுதி வல்லொற்றும் கிளைவல்லொற்றும் ஆய் முடியும்' என்று இரண்டாகப் பொருள் கூறினர் உரையாளர்; மெல்லொற்று இறுதி வல்லொற்றாதற்கு—குரக்குக்கால் என்பதனையும், மெல்லொற்றுக்கிளை வல்லொற்றாதற்கு—எட்குக்குட்டி என்பதனையும்

---

* பறம்பு—ஒரு மலை, குறும்பு—சிற்றூர்.

உதாரணமாகக் காட்டினர். 'ணகாரத்திற்கு டகாரமும், னகாரத்திற்கு றகாரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாம்' என்று விளக்கமும் எழுதினார் நச்சினார்க்கினியர்.

உரையாளர் இறுதி வல்லொற்று என்றும் கிளைவல்லொற்று என்றும் இரண்டாகக் கொண்டு பொருள் கூறுதல் வேண்டுதல் இல்லை; கிளையெற்றாகும் என்றலே சாலுமன்றே? சூத்திரத்தில் 'வல்லொற்றிறுதி' என்றது மிகையாகுமே? இனி, இவ்வாசிரியர் க ச ட த பறக்களுக்கு ஙஞண நமனக்களை இனவெழுத்தென்று யாண்டும் கூறிற்றிலர்; அவ்வல்லெழுத்து மிகுதலையே 'இனவொற்று மிகும்' என்று கூறியுள்ளார்.

> நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
> ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே. (குற்றி.67)

என்ற விடத்தில், 'இனவொற்று' என்றது அவ்வல்லொற்றினையே (ற்) ஆதல் நன்கு அறியப்படும். இனி,

> 'ஆயிரு தொடைக்குங் கிளையெழுத்துரிய' (செய்.63)

என்னுஞ் சூத்திரத்தில், கிளையெழுத்து என்றதற்கு இளம்பூரண அடிகள் வருக்க எழுத்தென்று உரையெழுதி,

> பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
> பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
> பின்னுப் பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
> பீர்ங்கம் பெய்து தேம்படத் திருகி
> ....

என்னுந் தொடக்கத்து அடிகளை மோனைத் தொடைக்கும்,

> 'ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
> தேறுநீர் சடைக்கரந்து திரிபுரமும் தீ மடுத்துக்
> கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி,
> மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி

என்னுந் தொடக்கத்து அடிகளை எதுகைத் தொடைக்கும் உதாரணம் காட்டியுள்ளார்.

இவற்றால் கிளையொற்று என்பது அவ்வருக்க எழுத்தாதல் அறியப்படும்.

'மெல்லொற்றுக் கிளையொற்றாகும்' என்பதற்கு, மெல்லொற்றுத் தொடர்மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம்

இறுதியில் நிற்கும் வல்லொற்றின் இனவொற்று ஆகும் என்பது பொருள். ஆஃதாவது, இறுதியில் நிற்கும் வல்லொற்றாய்த் திரியும் என்பதாம்.

குரங்கு + கால் = குரக்குக்கால் — மெல்லொற்று ஈற்று வல்லொற்றாய்த் திரிந்தது.

நஞ்சு + பொய்கை = நச்சுப் பொய்கை ,,
ஓர்யாண்டு + குழவி = ஓர்யாட்டைக்குழவி ,,
மருந்து + பை = மருத்துப்பை ,,
அம்பு + நுனை = அப்பு நுனை ,,
கன்று + திரள் = கற்றுத் திரள் ,,

என்பன போன்றவை உதாரணமாகும்.

இவற்றால் எட்குக்குட்டி, எற்புக்காடு என்பன போல்பவை இச்சூத்திரத்தால் அமையாமை தெளிவாகும். என்னையெனின், எட்கு என்பதில் டகாரம் ஈற்று வல்லெழுத்து (ககரம்) அன்று. எற்பு என்பதில் றகாரம் ஈற்று வல்லெழுத்து (பகரம்) அன்று. இச்சூத்திரத்தின் நேர் பொருளால், எட்குக்குட்டி போல்வன அமையாமையானே, உரையாளர், 'வல்லொற்று இறுதி கிளை யொற்றாகும்' என்பதற்கு, மேற்காட்டியவாறு பொருள் கூறுவாராயினர். இச்சூத்திரத்திற்கு அப்பொருள் நேரிதாகாமையின், எட்குக்குட்டி முதலியன தொல்காப்பியனார் கூறிய இலக்கணத்திற் பிறழ்ந்தனவாகும்.

யாண்டு, கன்று என்பன போல்பவற்றிலுள்ள ணகர னகரங்கள் முறையே டகர றகரங்களாய்த் திரிந்தமை கண்டு, அவை (ணகர னகரங்கள்) பிற வல்லெழுத்துக்களோடு கூடி நின்ற வழியும் அவ்வாறு திரியும் என்று கருதி எட்குக்குட்டி, எற்புக்காடு என்று பிற்காலத்தில் வழங்கினராவர். அவற்றை இந்நூலில் இச்சூத்திரத்தால் உரையாசிரியர்கள் அமைத்துள்ளனர்.

இனி, உரையாசிரியர்கள், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கும் வரும் என்று கூறி கொக்கின்கால், குரங்கின்கால் என்பவற்றைக் காட்டினர். இப்பொருட் புணர்ச்சிக்கண் இன் சாரியை வருதல் ஆசிரியர்க்குக் கருத்தாயின், "எண்ணுப் பெயர்க் கிளவி யுருபியல் நிலையும்" (குற்றி-14) என்று எண்ணுப் பெயர் களுக்குச் சாரியைப் பேறு மாட்டெறிந்தாற்போல ஏனைப் பெயர் களுக்கும் உருபியலோடு மாட்டெறிவர்; அவ்வாறு மாட்டெறி யாமையானும், "வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்"

(குற்றி.15) என்று, இன்சாரியை பெறுவன இரண்டு சொற்களை மட்டுமே கிளந்தோதினார் ஆகலானும், இன்சாரியைவரின்' 'அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும், எல்லா இறுதியும் உகரம் நிறையும்' (குற்.3) என்றும், "வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழி, தொல்லையியற்கை நிலையலும் உரித்தே'' என்றும், "தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி', (குற்றி.6) என்றும் கூறிய சூத்திரங்களின் விதி அமையாதாக லானும் அவர்கள் உரைத்தது அமைதியின்று.

கொக்குக்கால், குரக்குக்கால் என்றே வரும்.

வெள்.

இங்ஙனம் வேற்றுமைக்கண் மென்றொடர் மொழிக் குற்று கரத்தின் மெல்லொற்று இறுதி வல்லொற்றாகவும், கிளை வல்லொற்றாகவும் திரிந்து முடியும் எனப் பொதுப் படக் கூறி "மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே" (416) என்ப தனால் மென்றொடர்மொழி மரப்பெயருள் அங்ஙனம் திரியாத னவும் சிலவுளவென விதந்தார். நன்னூலார் பிற்கால வழக்கு நோக்கி "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையிற், றம்மின வன்றொட ராகா மன்னே" (நன். 184) என்பதனால் மென்றொடர் மொழிக் குற்றுகர வீறுகளுள் சில வேற்றுமைக் கண் தமக்கு இனமான வன்றொடராதலையொழிந்தன பெரும் பாலன என விதி கூறினார்.

கு. சுந்தரமூர்த்தி

இங்ஙனம் சில மென்றொடர்க் குற்றுகர வீற்றுச் சொற்கள் வல்லினம் வரக் கிளையொற்றாகத் திரியினும் எல்லாச் சொற் களும் இங்ஙனம் திரியவேண்டும் என்னும் நியதியில்லை. திரியாதன வருமாறு:

வண்டு + கால் = வண்டுக்கால், பந்து + திரட்சி = பந்துத் திரட்சி என்பன. இவற்றை நோக்கியே நன்னூலாரும் 'மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையிற், றம்மின் வன்றொடர் ஆகாமன்னே (184) என்றனர்.

சிவ.

வேங்கடராசுலு ரெட்டியார் 'வல்லொற்றிறுதிக் கிளை யொற்றாகும்' என்பதற்கு 'இறுதி வல்லொற்றின் இன

ஒற்றாகும்' எனக்கொண்டு குரங்கு + கால் = குரக்குக்கால் என்னும் உதாரணம் காட்டுவர்.

உரையாளர்கள் கொண்ட எட்குக்குட்டி, எற்புடம்பு என்பன காட்டுதல் பொருந்தாது என்றும் கூறினார். அதற்கு அவர் கூறும் காரணங்கள் இரண்டு.

1. கிளை என்பது இனம் என்னும் பொருளது. இனம் என்பது 'அதற்கு இனம்' என்ற பொருள் கொள்ளாமல், 'அதே இனம்' என்னும் பொருளே கொள்ளல் வேண்டும். ஏன் எனில் ஆசிரியர் யாண்டும் கசடதபறக்களுக்கு ஙஞணநமன இனவெழுத்துகள் எனக் கூறவில்லை. அதனால் இனம் என்பது அதே இனம் எனும் பொருளது.

2. இளம்பூரணர் கிளை என்பதற்கு வருக்கம் எனப்பொருள் கொண்டு, 'ஆயிரு தொடைக்கும் கிளை எழுத்துரிய' என்னும் சூத்திரத்தில் உள்ள 'கிளை எழுத்து' என்பதற்கு வருக்க எழுத்து என்றே கொண்டு மோனை எதுகைகளுக்கு உதாரணம் காட்டியுள்ளார்.

ஆசிரியர் இனம் என்பதற்கு 'அதேஇனம்' என்னும் பொருளில் "நூறென் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு, ஈறு சினை யொழிய இனவொற்று மிகுமே" என்னும் சூத்திரத்தில் 'இனஒற்று' என்று கூறியுள்ளார். நூறு + ஒன்று → நூற் + ஒன்று → நூற்ற் + ஒன்று → நூற்றொன்று என வருவதில் இன ஒற்று என றகர ஒற்றைக் குறித்தல் காண்க.

'அதற்கு இனம்' என்ற பொருளில், "இனச்சுட்டில்லாப் பண்பு" (கிளவி. 18) என்ற இடத்தில் ஆண்டுள்ளார் ஆசிரியர். செந்தாமரை என்றால் செம்மை வெண்டாமரையின் வெண்மைக்கு இனம். எனவே இனம் என்பதை ஆசிரியர் அதே இனம், அதற்கு இனம் என்னும் இரண்டு பொருளிலும் ஆண்டுள்ளமையின் 'இனம்' என்பதன் வேறு சொல்லாகிய 'கிளை' என்பதை இச்சூத்திரத்தில் 'அதே இனம்' என்னும் பொருளை விட்டு 'அதற்கு இனம்' என்னும் பொருளில் ஆண்டுள்ளார் எனக் கொள்வதில் தவறு இல்லை. உரைகாரர்கள் அவ்வாறு கொண்டமையால்தான் 'எட்குக் குட்டி' போல்வனவற்றிற்கு இச்சூத்திரத்தின் பின்னிரண்டடிகளை இலக்கணமாகக் கொண்டனர். கசடதபறக்களுக்கு இனம் ஙஞண நமன என

ஆசிரியர் கூறாமையால் இச்சூத்திரத்தில் மெல்லொற்றுக் கினமான வல்லொற்று எனக் கொள்ளக் கூடாது என்பது என்ன முறை?

இனி, ஆசிரியர் 'வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்' என மென்றொடர்க் குற்றுகரம் இன்சாரியை பெறுதற்கு இரண்டு பொருட் பெயர்களை மட்டுமே எடுத்தோதினமையின், கொக்கின்கால், குரங்கின்கால் எனப் பிற பொருட்பெயர்க்கு இன்சாரியை வருதல் ஆசிரியர் கருத்தன்று எனக் கூறுவதும் பொருந்தாது. 'வேம்பின் பைங்காய்' எனச் சான்றோர் செய்யுளில் இன்சாரியை யாட்சி உண்மை காண்க. ஆசிரியரே "குரங்கின் ஏற்றினை" (மரபியல் 69) எனப் பொருட் பெயர்க்கும் "தவலருஞ் சிறப்பின் அத்தன்மை" (உவம். 25) "துகட்டபு சிறப்பின் சான்றோர்" (புறத். 21) எனப் பண்புப் பெயர்க்கும் ஆண்டுள்ளார். எனவே பொருட்புணர்ச்சியில் குற்றியலுகரம் இன்சாரியை பெறும் எனும் கருத்தினர் ஆசிரியர் என்னலாம். வண்டும் பெண்டும் ஆகிய இரண்டும் வண்டுக்கால் பெண்டுக்கால் என வருவதினும் வண்டின் கால் பெண்டின்கால் என வருவதே சிறக்கும் என்பதற்காக அவ்விரண்டைக் கூறினார். குரங்கின்கால் என வரல் கூடாது என்னும் கருத்தினர் அல்லர் எனக் கொள்க.

மரப்பெயர்

416. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை (10)

ஆ. மொ. இல.

The name of the tree too which ends in shortened 'u' has the increment 'am'.

ஆ. சு.

words denoting trees have the empty-morph 'am'.

பி. இ. நூ.

முத்து. புண. 238.

மரப்பெயர்க் கிளவி யம்மொடு சிவணும்.

இளம்.

இது [1]அவ்வீற்று இரண்டிற்கும் *எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

---

1. அவ்விரண்டற்றிற்கும்

* எய்தியது—வன்றொடர் மென்றொடர்க்குற்றுகரங்கட்கு வல்லெழுத்துவரின் அவ்வல்லெழுத்துமிகும் என முன் சூத்திரத்தில் எய்தியது.

இ-ள் : மரப்பெயர்க்கிளவிக்கு சாரியை அம்—வன்றொடரின்கண்ணும் மென்றொடரின் கண்ணும் மரப் பெயராகிய சொல்லிற்குவரும் சாரியை அம்முச்சாரியை.

உ-ம் : [2]தேக்கங்கோடு, செதிள், தோல், பூ எனவும்; வேப்பங்கோடு, செதிள், தோல், பூ எனவும் வரும்.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது, அம்மு வகுத்தலின்.

இ-ள் : குற்றியலுகர வீற்று மரப்பெயர்க்கு வரும் சாரியை அம்முச்சாரியை ; எ-று.

உ-ம் ; தேக்கங்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

கமுகங்காய் $தெங்கங்காய் சீழ்கம்புல் $பயற்றங்காய் என்றாற்போலும் புல்லினையும் மரம் என அடக்கி மாறுகொளக் கூறல் எனத் தழீஇக் கொண்ட சிதைவென்பதாம் இச்சூத்திரம் என்றும் உணர்க.

பிற குறிப்புகள்

மாறு கொளக் கூறல் எனத் தழீஇக் கொண்ட சிதைவு (நச்) ; விளக்கம்.

பேராசிரியர் கூற்று

"வசையற நாடின் (மரபியல் 110) என்றதனால் இங்ஙனம் குற்றம் என்று வரையப்பட்டனவற்றைக் கொண்டு புகுந்து மற்றொரு பொருள் கொள்ளின் அவை வசையற்றனவாம் என்பது. அவை கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில மொழிதல், மயங்கக் கூறல் என்னும் ஐந்துமாயின.

"மாறு கொளக் கூறல்" :- "மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை" என்ற வழிப் புல்லினையும் மரம் என அடக்குதல். இக்கருத்து நோக்கியே போலும் ஆண்டு, 'ஒன்றென முடித்தல்

சு. வே.

2. குருந்தங்கோடு

$ இவற்றை "ஈரெழுத்து மொழியும்" (418) என்னும் சூத்திரத்தில் 'உள' என்பதனாற் கொள்வர் இளம் பூரணர். (தெங்கு, சீழ்கு, பயறு நிலைமொழிகள்)

தன்னின முடித்தல்' என்பதனால் புல்லினையும் மரம் என்று தழீஇயின அக்கருத்தென்பது'' (மரபியல் 110 உரை).

அதற்கு மேலும் ஓர் முடிபு

417. மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே (11)

ஆ.மொ.

இல.

There are names of trees which do not have the nasals hardened.

க. சு.

There are names of trees which do not have the nasals converted into the plosive.

பி. இ. நூ:

முத்து. புண. 239

மெல்லொற்று வலியா மரப்பெயர் உளவே.

இளம்.

இது மென்தொடர் மொழிக்கு எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

இ—ள்: மெல் ஒற்று வலியா மரப் பெயரும் உள—[1]மெல் ஒற்று வல்லொற்றாய்த் திரியாது முடியும் மரப் பெயரும் உள.

உ—ம்: குருந்தங்கோடு, செதிள், தோல், பூ எனவும்; புன்கங்கோடு, செதிள், தோல், பூ எனவும் வரும்.

மற்று, இது நிலை மொழித்தொழிலை[2]நிலை மொழி விலக்குமாகலின், சாரியை வகுப்பவே முடியும் பிறவெனின், இது நிலைமொழியின் உள் தொழிலாகலின் அவ்வாறு விலக்குண்ணாது என்பது கருத்து.

நச்.

இது மென்றொடர் மொழிக்கு எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ—ள்: மெல்லொற்று வல்லொற்றாகத் திரியாது மெல் ஒற்றாகவே முடியும் மரப் பெயரும் உள; எ-று.

சு. வே. 1. மெல்லொற்று வல்லொற்றாய் முடியா முடிபு.
2. நிலைமொழித் தொழில் விலக்குமாகலின்

உ—ம்: புன்கங்கோடு, செதிள், தோல், பூ எனவும்; குருந்தங்கோடு, செதிள், தோல், பூ எனவும் வரும்.

வலியா மரப்பெயரும் உள எனவே வலிக்கும் மரப்பெயரும் உளவென்று கொள்க. வேப்பங்கோடு, கடப்பங்காய், ஈச்சங்குலை என வரும்.

பி.கு.

எய்தியது ஒருமருங்கு மறுத்தலாவது:- 'வன்றொடர் மொழியும்' (415) என்னும் சூத்திரத்தில் மென்றொடர் மொழியானது வருமொழி வல்லெழுத்துவரின் தன் மெல்லெழுத்து, இறுதி வல்லெழுத்தாகவோ கிளைவல்லெழுத்தாகவோ திரியும் எனக் கூறப்பட்ட இருமருங்கில் இறுதி வல்லெழுத்தாகத் திரியாது என ஒன்றை மட்டும் விலக்குதல்.

*நிலை மொழித் தொழிலை நிலைமொழி (த்தொழில்) விலக்குதல் என்பது, முன்னர்க் கூறப்பட்ட நிலை மொழிபற்றிய விதியினைப் பின்னர்க் கூறப்படும் நிலை மொழி பற்றிய விதி விலக்குவதாம். மென்தொடர் மொழிக்குற்றியலுகரம் வன்தொடர் மொழிக்குற்றியலுகரமாகத் திரியும் என்பது ''வன்தொடர் மொழியும்'' என்னும் சூத்திரத்தில், ''மெல்லொற்றுத் தொடர் மொழி மெல்லொற்றெல்லாம் வல்லொற்றிறுதி ஆகும்'' (415) என்று கூறப்பட்டது. இதற்கு உதாரணம் குரங்கு + கால் = குரக்குக் கால் என்பது. மரப் பெயர் உதாரணம் வேம்பு + காய் = வேப்பங் காய் என்பதாம். இதனால் மரப்பெயர் மென்தொடர் மொழிக்கு மெல்லெழுத்து வல்லெழுத்தாகும் என்பது முன்னதாகக் கூறப்பட்ட நிலை மொழிவிதி—நிலை மொழித் தொழில் என்பதாம். அடுத்து 'மரப்பெயர்க்கிளவிக்கு அம்மேசாரியை' என்று மென்றொடர் மரப் பெயர்க்கு ஒரு விதி கூறப்பட்டது. 'முதலில் கூறப்பட்ட விதியை அடுத்துக் கூறப்படும் விதி விலக்கி விடும்' என்றதன்படி, மரப்பெயர்க்கிளவி அம்சாரியை பெறும் என்ற விதி, மெல்லெழுத்து வல்லெழுத்தாகும் என்ற விதியை நீக்கி விடும்; அதாவது மென்றொடர்மொழி வன்றொடர் மொழியாகாது என்ற கருத்தைத் தெரிவித்து விடும். அப்படியிருக்க 'மென்தொடர் வலியா மரப்பெயரும் உள' என்னும் இச்சூத்திரம் ஏன் எனின், நிலைமொழியின் தொழிலை நிலை மொழித்

* உயிர் மயங்கியல் சூத்திரம் 26-இல் உரைவளத்தில் விளக்கம் காண்க.

தொழில் விலக்குதல் என்பது, நிலைமொழியின் ஈற்றில் புறத் தொழிலை விலக்குதல் என்பதாகும்; வேம்பு வேப்பு→ என நிலை மொழியின் புறம்பேயின்றி அகத்தே திரிபு முதலில் கூறப்பட்ட மையின் அதாவது உள்தொழிலாகக் கூறப்பட்டமையின் புறத் தொழிலை விலக்கும் விதி இங்கு செல்லாது; ஆதலின் தனித்துக் கூறப்பட்டது என்க.—சிவ.

"இச்சூத்திரத்தில் வலியா மரப்பெயரும் உள எனவே...... ஈச்சங்குலை என வரும், என்றனர் நச்சினார்க்கினியர். 'மரப் பெயர்க்கிளவிக் கம்மேசாரியை' என்ற சூத்திரமும் அதற்கு முன் உள்ள சூத்திரமும் ஒன்றுக்கொன்று மாறாகாமையின் இவ்வுதார ணங்களையும் அச்சூத்திரத்தின் கண்ணே இளம் பூரணரைப் போற் கூறியிருத்தல்வேண்டும்"—சுப்பிரமணிய சாஸ்திரியார்.

நெடிற்றொடர், வன்றொடர்

418. **ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்**
அம்மிடை வரற்கும் உரியவை உளவே
அம்மர பொழுகு மொழிவயி னான **(12)**

ஆ.மொ:

இல.

The 'two letter word' and the 'hard word' may have 'am' joined in the Conjunction of words, which join traditionally.

சு. க.

(There are some) 'two letter words' and 'voiecless stop-sequence words'
Which may legitimately take 'am' after them; such cases have to be ascertained from traditional usage.

பி. இ. நூ.

முத்து. 400

நெடிற்றொடர் வன்றொட ரிற்சில அம்மிடை
வரற்கும் உரியன வாகும் என்ப.

இளம்.

இது ஈரெழுத்து ஒரு மொழிக்கும் வன்தொடர் மொழிக்கும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: ஈர்எழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்— ஈரெழுத்து ஒரு மொழிக் குற்றியலுகரமும் வன்றொடர் மொழிக்

குற்றியலுகரமும், அம்இடை வரற்கும் உரியவை உள—முன் முடித்துப்போந்த முடிபுகளன்றி அம்முச் சாரியை இடை வந்து முடிதற்கு உரியனவும் உள; யாண்டெனின், அம்மரபு ஒழுகும் மொழிவயின் ஆன—அவ் இலக்கணம் நடக்கும் மொழியிடத்து.

உ-ம்: *ஏறங்கோள், வட்டம்போர் என வரும்.

உள என்றதனால் தெங்கங்காய், பயற்றங்காய் என வன்றொடர் அல்லனவற்றிற்கு அம்முப்பேறு கொள்க.

அம்மர பொழுகும் என்றதனால், அரசக்கன்னி, முரசக் கடிப்பு என [1]அக்குப் பேறும் கொள்க.

இன்னும் அதனானே, *இருட்டத்துக் கொண்டான் என்னும் அத்துப் பேறும் கொள்க.

இன்னும் அதனானே மயிலாப்பிற் கொற்றன், பறம்பிற் பாரி என இன்பேறும் கொள்க.

நச்.

இஃது ஈரெழுத்து ஒரு மொழிக்கும் வன்றொடர் மொழிக்கும் எய்தாதது எய்துவித்தது, முன்னர் எய்தியதனை விலக்கி அம்மு வகுத்தலின்.

சு. வே: 1 அக்குப் பெறுவன கொள்க.

* ஏறு + கோள் → ஏறு + அம் + கோள் → ஏறங்கோள். ஏறு = காளை. காளையாற் கொள்ளப்படுதல்.

வட்டு + போர் → வட்டு + அம் + போர் → வட்டம் போர். வட்டு—சூதாடு காய்; சூதாடுகாயால் புரியும் போர்—ஆட்டம்.

அரசு + கன்னி → அரசு + அக்கு + கன்னி → அரசு + அ + கன்னி → அரசக்கன்னி. அரசை மேற்கொள்ளும் கன்னி.

முரசு + கடிப்பு → முரசு + அக்கு + கடிப்பு → முரசு + அ + கடிப்பு → முரசக்கடிப்பு. முரசை அடிக்கும் குறுந்தடி.

இருட்டு + அத்து + கொண்டான் → இருட்டத்துக் கொண்டான் = இருளிற் கொண்டான்.

மயிலாப்பு + இன் + கொண்டான் → மயிலாப்பிற் கொண்டான் = மயிலாப்பு என்னும் இடத்திற் கொண்டான்.

இ-ள்: ஈரெழுத்து ஒரு மொழிக் குற்றியலுகரமும் வன்றொடர் மொழிக் குற்றியலுகரமும், முன் முடித்துப் போந்த முடிபுகளன்றி அம்முச சாரியை இடையே வந்து முடிதற்கு உரியனவும் உள யாண்டெனின், அவ்விலக்கணம் நடக்கும் மொழியிடத்து; எ—று.

உ-ம்: ஏறங்கோள், சூதம்போர், வட்டம் போர், †புற்றம் பழஞ்சோறு என வரும்.

உம்மை எதிர்மறையாகலின், அம்முப் பெறாதன நாகு கால் கொக்குக்கால் என முன்னர்க் காட்டினவேயாம்.

அம்மரபொழுகும் என்றதனான் அரசக்கன்னி, முரசக்கடிப்பு என அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும், அரச வாழ்க்கை, முரச வாழ்க்கை என அக்குக் கொடுத்தும் முடிக்க.

இன்னும் அதனானே இருட்டத்துக் கொண்டான், விளக்கத்துக் கொண்டான் என அத்தும் வல்லெழுத்தும் கொடுத்தும், மயிலாப்பிற் கொற்றன், பறம்பிற்பாரி என இன்கொடுத்தும், கரியதன்கோடு, நெடியதன்கோடு என அன் கொடுத்தும் முடிக்க.

சிலமென்றொடர் மொழிகள்

419. **ஒற்றுநிலை திரியாது அக்கொடு வருஉம்**
அக்கிளை மொழியும் உளவென மொழிப. (13)

ஆ. மொ.
இல.

Ther are words denoting relationship which join 'akku' without having the consonants changed.

புற்று + பழஞ்சோறு→ புற்று + அம் + பழஞ்சோறு→ புற்றம்பழஞ்சோறு. இக்காலத்தில் புற்றாஞ்சோறு என வழங்குகிறது.

பறம்பு + பாரி → பறம்பு + இன் + பாரி→ பறம்பிற்பாரி = பறம்பு மலையையுடைய பாரி.

கரியது + கோடு→ கரியது + அன் + கோடு→ கரியதன் கோடு

நெடியது + கோடு→ நெடியது + அன் + கோடு→ நெடியதன்கோடு.

க.சு.

It is said that there are words of that group which do not have the consonant (nasal) changed (into voiceless stop) to take the (empty morph) 'akku'.

பி. இ. நூ:
முத்து. 401

அக்கொடு வரூஉம் மொழியு மாருளவே

இளம்.

இது, மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதலும் எய்தியதன்மேற் [1]சிறப்பு விதியுங் கூறுகின்றது.

இ—ள்: ஒற்று நிலை திரியாது அக்கொடு வரும் அகிளை மொழியும் உள என மொழிப—ஒற்று முன் நின்ற நிலை திரியாது அக்குச் சாரியையோடும் பிற சாரியையோடும் வரும் அக்கிளையெழுத்து மொழியும் உள என்று சொல்லுவர் ஆசிரியர்.

உ—ம் †குன்றக் கூகை, மன்றப் பெண்ணை எனவரும்.

உம்மையால் *கொங்கத்துழவு, வங்கத்து வாணிகம் என அத்துப் பெற்றன.

நிலை என்றதனால், ஒற்று நிலை திரியா அதிகாரத்துக்கண் இயைபு வல்லெழுத்து விலக்குக.

அக்கிளை மொழி என்றதனால், ‡பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி என அன்னும் அக்கும் வந்தன கொள்க.

சு. வே. 1. சிறப்பும்

குன்று + அக்கு + கூகை → குன்று + அ + கூகை → குன்றக் கூகை = குன்றத்துக்கண் கூகை மன்று + அக்கு + பெண்ணை → மன்று + அ + பெண்ணை = மன்றப் பெண்ணை = மன்றில் உள்ள பனைமரம்.

கொங்கு + அத்து + உழவு = கொங்கத்துழவு. வங்கு + அத்து + வாணிகம் → வங்கத்து வாணிகம்.

பார்ப்பு + அன் + அக்கு + கன்னி → பார்ப்பு + அன் + அ + கன்னி = பார்ப்பனக் கன்னி. பார்ப்பு + அன் + அக்கு + சேரி → பார்ப்பு + அன் + அ + சேரி → பார்ப்பனச்சேரி. பார்ப்பு என்பது பார்ப்பனன் ஆகிப் பிராமணன்

நச்.

இது மென்றொடர்மொழியுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ—ள்: ஒற்று முன் நின்ற நிலை திரியாது அக்குச்சாரியை யோடும் பிற சாரியையோடும் வரும், அக்கிளையான சொற்களும் உள என்று சொல்லுவர் ஆசிரியர்; எ-று.

இதற்கு உம்மையை முன்னர் மாறுக.

உ—ம்: குன்றக் கூகை, மன்றப் பெண்ணை என வரும். உம்மையாற் கொங்கத்துழவு வங்கத்து வாணிகம் என அத்தும் பெற்றன.

நிலை என்றதனால், ஒற்று நிலை திரியா அதிகாரத்துக்கண் வருஞ்சாரியைக்கு இயைபு வல்லெழுத்து வீழ்க்க. அக்கிளை என்றார், இரண்டு சாரியை தொடர்ந்து முடிவனவும் உள என்றற்கு. பார்ப்பனக்குழவி, சேரி, தோட்டம், பிள்ளை என அன்னும் அக்கும் வந்தன. †இவற்றிற்கு உடைமை விரிக்க. பார்ப்

ஆயிற்று. ஒற்று நிலைதிரியா அதிகாரம் மென் தொடர்க்குற்றுகர மொழியின் இடையில் உள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதல் இல்லை என்னும் கருத்துத் தொடர்ந்து வரும் பகுதி. அது தொடர்ந்து வருவது 'எண்ணுப்பெயர்க்கிளவி', (420) 'வண்டும் பெண்டும்' (421) பெண்டென்கிளவி' (422) என்னும் சூத்திரம் வரையிலும் காண்க. அவற்றிடைக் காணும் உதாரணங்களில் ''வன்தொடர் மொழியும்', (415) என்னும் சூத்திரத்தின் படி மிகவேண்டிய வல்லெழுத்தை விலக்கியமை காண்க. உ—ம்: ஒன்று +காயம்→ஒன்றுக்காயம் எனவும், வண்டு+கால்→ வண்டுக்கால் எனவும் வருவன அன்சாரியையும் இன்சாரியையும் பெற்ற வழி ஒன்றன் காயம், வண்டின் கால் என வல்லொற்று விலக்கியவாறு காண்க.

† உடைமை விரித்தலாவது பார்ப்பனரதுகுழவி, பார்ப்பனரது சேரி எனக் கிழமைப் பொருள் விரித்தல். பார்ப்பனர்க்குரிய சேரி எனவும் விரிக்கலாம். பார்ப்பினுள் குழவி=பார்ப்பனச்சாதியுள் உள்ள குழந்தை. ''ஈரெழுத்து மொழியும்'' (412) என்னும் சூத்திரம் தொடங்கி வேற்றுமை முடிபு கூறி வருதலின் இங்கு பார்ப்பானாகிய குழவி எனப் பண்புத்தொகை (அல்வழி) முடிபு பொருந்தாது.

பினுட்குழவி என்றுமாம். பார்ப்பானாகிய குழவி என்றால் ஈண்டுமுடியாதென்றுணர்க. பார்ப்பன மகன், பார்ப்பன வனிதை என்பன பார்ப்பான் சாதியை உணர்த்தின.

சுப்.

கிளைமொழி என்றதற்குக் 'கிளையெழுத்து மொழி' என இளம்பூரணரும், 'கிளையான சொற்கள்' என நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர். 'கிளைப் பெயர்' என ஆசிரியர் முன்னர் வழங்கினமையான், ஈண்டுக் கிளை என்பதற்குக் 'கிளைப் பெயர்' என்றே பொருள் கொள்ள வேண்டும். கிளைப் பெயர் என்பதற்கு 'ஓரினத்தை உணர நின்ற பெயர்' என உரைகாரர்கள் பொருள் கூறியதைக் காண்க.

''அக்கிளை மொழி என்றதனால்......பார்ப்பனச்சேரி என அன்னும் அக்கும் வந்தன கொள்க'' என்றனர் உரைகாரர்கள். ''உம்மையால் கொங்கத்துழவு......என அத்துப் பெற்றன'' என்றனர் இளம்பூரணர். இவற்றை அதிகாரப் புறனடையாற் கொள்ளுதல் பொருந்தும்.

''இதற்கு உம்மையை முன்னர் மாறுக'' எனக் கூறி, 'அக்கொடு' என்றற்கு, ''அக்குச் சாரியையோடும் பிறசாரியை யோடும்'' எனப் பொருள் கூறினர் நச்சினார்க்கினியர்' அப்பொருளையே கூறினர் இளம்பூரணரும். 'அம்முச்சாரியை பெறாது அக்குச் சாரியை பெறும் அக்கிளை மொழிகளும் உள' எனக் கொள்ளுதல் நேரிதாயிருக்க, அவர்கள் அவ்வாறு கொண்டது பொருந்தாதென்க.

''வருமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்துக் கண்ணுங் கொள்க'' என்றனர் நச்சினார்க்கினியர். ''ஏழனுருபிற்கு'' (எழு. 202), ''ஏழனிறுதி'' (எழு 195), ''இரண்டன் மருங்கின்'' (சொல்.93) முதலிய ஆசிரியர் வழக்கால் அவற்றைக் கொள்ளலாம்.

வேங்.

ஈண்டு 'கிளை மொழி' என்றவற்றிற்கு உரையாளர் குன்று, மன்று என்னுஞ்சொற்களைக் காட்டினது பொருந்துவதன்று. என்னெனின், அவை கிளைமொழிகள் அல்லவாகலின். மேல் ணகர வீற்றுக் கிளைப் பெயர்க்கு 'உமண்' என்னுஞ் சொல் லையும், னகர வீற்றுக் கிளைப் பெயர்க்கு 'எயின்' என்னுஞ்

சொல்லையும் காட்டினார்களாகவின், ஈண்டும் அத்தகைய கிளைப் பெயரையே உதாரணங் காட்டுதல் அமையும்*

இளம் பூரணர் 'கிளை மொழி' என்பதற்கு, 'கிளையெழுத்து மொழி' என்று கூறினதும் பொருந்துவதன்று. குடிப்பெயராயிருக்கும் குற்றியலுகர வீற்றுச் சொற்களே ஈண்டைக்கு உதாரணம் ஆகும்.

'அக்கிளை மொழியும் உளவென மொழிப' என்றதனான், அவையும் சிறுவரவினவாதல் அறியப்படும். அவை இன்னவை எனத் தெரியவில்லை.

எண்ணுப் பெயர்

420. எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும் (14)

ஆ. மொ.

இல.

The words of numeral nouns follow the rules of case sign.

க.சு.

Noun words denoting number follow the rules of case-suffixes.

இளம்.

இது குற்றுகர வீற்று எண்ணுப் பெயரோடு பொருட்பெயர் முடிக்கின்றது.

இ—ள்: எண்ணுப் பெயர்க் கிளவி உருபு இயல் நிலையும்— எண்ணுப் பெயராகிய சொற்கள் உருபு புணர்ச்சியின் இயல்பின் கண்ணே நின்று அன்பெற்று முடியும்.

உ—ம்: ஒன்றன் காயம், இரண்டன் காயம், சுக்கு, தோரை, பயறு என வரும்.

நச்.

இது குற்றியலுகர வீற்று எண்ணுப் பெயரோடு பொருட்பெயர் முடிக்கின்றது.

---

* கிளை என்பதற்கு இனம் எனும் பொருள் உண்மையின் உரையாளர் அவ்வாறெழுதினர். குற்றுகர வீற்றுக்குடிப் பெயர்ச் சொல் இன்மையும் காரணமாகும்.

இ—ள்: எண்ணுப் பெயராகிய சொற்கள் பொருட் பெயரோடு புணருமிடத்து, உருபுப் புணர்ச்சியின் இயல்பின் கண்ணே நின்று அன் பெற்றுப் புணரும்; எ—று.

உ—ம்: ஒன்றன் காயம், இரண்டன் காயம், சுக்கு, தோரை, பயறு என ஒட்டுக. ஒன்றனாற் கொண்ட காயம் என விரியும். வருமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்துக் கண்ணும் கொள்க ஒன்றன் ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை என வரும். மேலைச் சூத்திரத்து 'நிலை' (எழு. 419) என்றதனால் இயைபு வல்லெழுத்து வீழ்க்க

4. குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி.

வண்டு, பெண்டு.

421. வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும் (15)

ஆ. மொ:

இல.

'Vandu' and 'Pendu' join with 'in'.

க.சு

(The words) 'Vanṭu' and 'Penṭu' join with (the empty morph) 'in'.

பி.இ.நூ.

முத்து. 403

வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்.

இளம்.

இது மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்குப் பிற முடிபு கூறுகின்றது.

இ—ள்: வண்டும் பெண்டும் இன் ஒடு சிவணும்—வண்டு என்னும் சொல்லும் பெண்டு என்னும் சொல்லும் இன்சாரியை யோடு பொருந்தி முடியும்.

உ—ம்: வண்டின்கால், *பெண்டின்கால் எனவரும்.

---

* பெண்டு—பெண். உயர்திணையாயினும் சொல்நிலையில் அஃறிணை.

நச்.

இது, மென்றொடர் மொழியுட் சிலவற்றிற்குப் பிற முடிபு கூறுகின்றது.

இ—ள்: வண்டு என்னும் சொல்லும் பெண்டு என்னும் சொல்லும் இன்சாரியையோடு பொருந்தி முடியும்; எ—று.

உ—ம்: வண்டின்கால், பெண்டின்கால் எனவரும். இதற்கு முற்கூறிய ‡இலேசினான் வல்லெழுத்து வீழ்க்க.

422. **பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார்** **(16)**

ஆ. மொ:

இல:

'An' is not forbidden to the word 'Pendu'

க. சு.

No one prevents the word 'pentu' taking 'an' too.

பி. இ .நூ.

முத்து. 104

அவற்றுள்
பெண்டுஅன் னொடு வருஉம் பெற்றித் தாகும்.

இளம்.

இது மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பெண்டு என் கிளவிக்கு அன்னும் வரையார்—பெண்டு என்னும் சொல்லிற்கு இன்னேயன்றி அன்சாரியையும் வரையார்.

உ-ம்: பெண்டன்கை என வரும்.

நச்-

இது மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன் மேற்சிறப்பு விதி கூறுகின்றது.

இ-ள்: பெண்டு என்னும் சொற்கு இன்னேயன்றி அன்சாரியை வருதலையும் நீக்கார் ஆசிரியர்; எ—று.

உ-ம்: பெண்டன்கை, செவி, தலை, புறம் என வரும்.

---

‡ "ஒற்று நிலை திரியாது" (419) என்னும் சூத்திரத்தின் உள்ள 'நிலை' என்னும் இலேசு.

வினா, சுட்டுப்பெயர்

423. யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் *உருபியல் நிலையும். (17)

ஆ. மொ:
இல.

The endings 'yāthu' and the demonstratives having 'āytham' stand in having the rules applied to case signs.

க.சு.

The endings 'yātu' and the endings of the demonstratives containing 'āytam' perist in (having the rules applied to) casesigns.

பி. இ. நூ.
நன். 251.

சுட்டின்முன் ஆய்தம் அன்வரிற் கெடுமே.

இ. வி. 156.

யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த விறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயி னான.

முத்து. 405.

யாதும் ஆய்தச் சுட்டும் அன்பெறும்
ஆவயின் ஆய்தம் அழியும் சுட்டே.

இளம்.

இது, ஈரெழுத்து ஒரு மொழியுள் ஒன்றற்கும் சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழிக்கும் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: யாது என் இறுதியும் சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும்—யாது என்னும் ஈறும் சுட்டு முதலாகிய ஆய்தத்தொடர் மொழிக் குற்றியலுகர வீறும், உருபு இயல் நிலையும்—உருபு

---

* உருபியற் சூத்திரம். 28:
யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயி னான.

புணர்ச்சியின் இயல்பின் கண்ணே நின்று †அன்பெற்று சுட்டு முதல் மொழிகள் ஆய்தம் கெட்டு முடியும்.

உ-ம்: யாதன்கோடு, அதன்கோடு, இதன்கோடு, உதன் கோடு என வரும்.

நச்.

இஃது ஈரெழுத் தொருமொழிக் குற்றியலுகரத்துள் ஒன்றற்கும் சுட்டு முதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றிய லுகரத்துக்கும் வேறு முடிபு கூறுகின்றது.

இ-ள் : யாது என்னும் ஈறும் சுட்டெழுத்து முதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரஈறும், உருபு புணர்ச்சியின் இயல்பின்கண்ணே நின்று அன்பெற்றுச் சுட்டு முதல் இறுதி ஆய்தம் கெட்டு முடியும்; எ—று.

உ—ம்: யாதன் கோடு, அதன் கோடு, இதன்கோடு, உதன் கோடு, செவி, தலை, புறம் எனவரும். *ஆய்தங் கெடா முன்னே' அன்னின் அகரத்தைக் குற்றுகரத்தின் மேல் ஏற்றுக; ஆய்தம் கெட்டால் அது முற்றுகரமாய் நிற்றலின்.

அல்வழியில் சுட்டுப் பெயர்.

424. **முன் உயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி**
மன்னல் வேண்டும் அல்வழி யான. (18)

ஆ. மொ:

இல.

When followed by vowels, 'dot-shaped āytham' must stand in the middle of the demonstratives in non-case relation.

க சு.

When followed by vowels, the 'āytam dots' must remain in the middle (of the demonstratives) in non case relation.

சு. வே:

† சுட்டு முதல் மொழிகள் அன்பெற்றும் ஆய்தம் கெட்டும் முடியும்.

* அதன்கோடு' அஃது + கோடு—அஃது + அன் + கோடு— அஃத் + அன் + கோடு —அஃதன் + கோடு—அதன் + கோடு —அதன் கோடு எனப் புணர்க்க வேண்டும்.

பி. இ. நூ.

முத்து. 406.

ஆவிவரின் நிலையும் ஆய்தப் புள்ளி.

இளம்.

இது, மேற்கூறிய ஈற்றுள் சுட்டுமுதல் ஈற்று உகரத்திற்கு ஒரு வழி அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்: முன் உயிர் வரும் இடத்து—அவற்றுள் சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழி உகர ஈறு தன்முன்னே உயிர்வருமிடத்து, ஆய்தப் புள்ளி மன்னல் வேண்டும்—ஆய்தப்புள்ளி முன்பு போலக் கெடாது நிலை பெற்று முடிதல் வேண்டும், அல்வழியான—அல் வழிக்கண்.

உ-ம்: அஃதடை, இஃதடை, உஃதடை, ஆடை, இலை என ஒட்டுக.

முன் என்றதனான், வேற்றுமைக் கண்ணும் உயிர் முதன் மொழி வந்த இடத்து அஃதடைபு, அஃதாட்டம் என ஆய்தம் கெடாமை கொள்க.

நச்.

இது முற்கூறியவற்றுள் சுட்டுமுதல் உகரத்திற்கு ஒருவழி அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்: சுட்டு முதலாகிய ஆய்தத் தொடர் மொழிக் குற்றுகர ஈற்றின் முன்னே உயிர் முதன் மொழி வருமிடத்து, ஆய்த ஒற்று முன் போலக் கெடாது நிலை பெற்று முடிதலை விரும்பும் ஆசிரியன் அல்வழிக்கண்; எ—று

உ-ம்: அஃது இஃது உஃது என நிறுத்தி, அடை ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு ஏணி ஐயம் ஒடுக்கும் ஓக்கம் ஔவியம் என ஒட்டுக.

'முன்' என்றதனான் வேற்றுமைக் கண்ணும் இவ்விதி கொள்க. *அஃதடைவு, அஃதொட்டம் என ஒட்டுக. இவற்றிற்கு இரண்டாம் உருபு விரிக்க. இன்னும் இதனானே ஏனை இலக்கணம் முடியுமாறு அறிந்து முடிக்க.

---

* இதனைப் பிற்கால வழக்கு என்பர் சாஸ்திரியார். அஃதடைவு—அதனை அடைதல், அஃதொட்டம்—அதனை ஒட்டுதல் (சார்தல், சேர்தல்)

மேலும் ஓர் முடிபு.

425. ஏனைமுன் வரினே தானிலை யின்றே. (19)

ஆ. மொ:

இல.

When followed by others, 'āytham' disapp ears.

க. சு.

If followed by other (sounds), it (—i. e. the 'āytam') disappears.

பி. இ. நூ:

முத்து. 407,

ஏனைய கணம்வரின் இலவா கும்மே.

இளம்.

இது, மேலனவற்றிற்குப் பிறகணத்தோடு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஏனை முன்வரின் தான்நிலை இன்று—அச்சுட்டு முதல் உகர ஈறு உயிர்க் கணம் ஒழிந்த பிற கணங்கள் முன்வரின் அவ் ஆய்தம் நிலையின்றி முடியும்.

உ-ம்: அது கடிது, இது கடிது, உது கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என வரும்.

நச்.

இது மேலவற்றிற்குப் பிறகணத்தோடு அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்: முற்கூறிய ஈறுகளின் முன்னர் உயிர்க்கணம் அல்லன வருமாயின், அவ்வாய்தம் கெட்டு முடியும்; எ-று.

உ-ம்: அது கடிது, இது கடிது, உது கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என ஒட்டுக.

அல்வழியில் குற்றுகரவீறுகள்

426. அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும். (20)

ஆ. மொ.

இல.

In non case relation, all the words (Which end in shortened 'u')
end according to rules already enjoined.

க. சு.

In non case relation, all the words (ending in over short 'u') will follow the rules mentioned before.

பி. இ. நூ:

நன். 180

வன்றொடரல்லன முன்மிகா அல்வழி.

முத்து. 409

அல்வழிக் கண்ணெலாம் மிகாதியல் பாகுமே.

இளம்

இது ஆறு ஈற்றுக் குற்றியலுகரத்திற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்லது கிளப்பின்—அல்வழியைச் சொல்லுமிடத்து, எல்லா மொழியும்—ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும், சொல்லிய பண்பின் இயற்கை ஆகும்—மேற்சொல்லிய பண்பினையுடைய இயல்பாய் முடியும்.

உ—ம்: §நாகு கடிது, வரகுகடிது, தெள்கு கடிது, எஃகுகடிது குரங்குகடிது, சிறிது தீது பெரிது எனவரும்.

எல்லா மொழியும் என்றதனான், வினைச்சொல்லும் [2]வினைக் குறிப்புச் சொல்லும் இயல்பாய் முடிந்தன கொள்க. கிடந்தது குதிரை, கரிது குதிரை எனவரும்.

சு. வே:

1. குற்றியலுகரத்திற்கும்.
2. வினைக்குறிப்பும்.

§ அடுத்த சூத்திரத்தில் வன்தொடர் மிகும் என்றலின் இங்கு ஐந்தற்கே உதாரணம் காட்டப்பட்டது. எல்லாம் என்றதனால் உரையில் ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் என்றனர் உரைகாரர்கள்.

சொல்லிய என்றதனான், இருபெயரொட்டுப் பண்புத் தொகை முடிபு கொள்க. *காட்டுக்காணம், குருட்டெருது என வரும்.

பண்பின் என்றதனான், ஐ என்னுஞ் சாரியை பெற்றுவரும் அல்வழி முடிபும் கொள்க. அன்றைக்கூத்தன், பண்டைச் சான்றார், [3]ஓர்யாட்டை யானை; மற்றையானை எனவரும்.

நச்.

இஃது ஆறு ஈற்றுக் குற்றுகரத்திற்கும் அல்வழி முடிபு கூறு கின்றது.

இ—ள்: அல்வழியைச் சொல்லுமிடத்து, ஆறு ஈற்றுக் குற்றுகரமும், மேல் ஆசிரியன் கூறிய குணத்தையுடைய இயல்பாய் முடியும்; எ—று.

உ—ம்: நாகு கடிது, வரகுகடிது, தெள்குகடிது எஃகுகடிது குரங்கு கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். 'ஏனைக்கணத்துக் கண் நின்ற சொல்முன் இயல்பா கும்மே' (எழு. 144) என்ற தனாற் கொள்க

எல்லாமொழியும் என்றதனான் வினைச் சொல்லும் வினைக் குறிப்புச் சொல்லும் இயல்பாய் முடிதல் கொள்க. கிடந்தது குதிரை, கரிது குதிரை எனவரும்.

சொல்லிய என்றதனான் இருபெயரொட்டுப் பண்புத் தொகை வன்கணத்துக்கண் இனவொற்று மிக்கு வல்லெழுத்துப் பெற்று முடிதலும் கொள்க. காட்டுக்காணம், ‡குருட்டுக்கோழி, திருட்டுப் புலையன், களிற்றுப்பன்றி, வெளிற்றுப்பனை, எயிற்றுப் பல் எனவும், வரட்டாடு, குருட்டெருது எனவும் வரும்.

பண்பின் என்றதனால் மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரம் பெற்று முடிவனவும் மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்று முடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாகாது ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்று முடிவன வும் கொள்க. ஓர்யாட்டையானை, ஐயாட்டையெருது எனவும்;

---

3. ஓர்யாட்டையர்

* காடு + காணம் → காட்டுக்காணம் = காடாகிய காணம்.
குருடு + எருது → குருட்டெருது = குருடாகிய எருது

‡ கரடு—மலை: காட்டுக்காணம்—மலைப் பகுதியில் விளைந்த காணப்பயறு.

அற்றைக் கூத்தர், இற்றைக்கூத்தர் எனவும்; மன்றைத்தூதை; மன்றைப் பானை, பண்டைச் சான்றோர் எனவும் வரும்.

பி. சு.

"எல்லா மொழியும் என்றதனால்...கரிதுகுதிரை எனவரும். என்றனர் உரைகாரர்கள். "ஈரெழுத்தொரு மொழி" என்ற சூத்திரத்தில் பெயர்வினை இரண்டனையும் கொள்ளுதல் பொருந்தும் ஆகலின் இவ்வாறு அவர்கள் தனியாகக் கூற வேண்டு வதின்று" என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

குற்றியலுகரப் புணரியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல் களைப்போலவே நிலைமொழி பெயராக இருப்பனவற்றுக்கே இலக்கணம் கூற வந்தது. அவ்விரண்டியல்களிலும் வினை இடைச்சொற்களுக்குத் தனியே விதந்து விதி கூறியிருத்தலினால் அவை பெயர்களுக்கே விதி கூறின என்பது தெளியப்படும். அவ்வாறே இவ்வியலிலும் பெயர்க்கே விதி கூறப்படுதலின் உரை காரர்கள் வினைச் சொல்லும் வினைக்குறிப்புச் சொல்லும் இயல்பாய் முடிந்தன கொள்க என்று கூறிக் கிடந்தது குதிரை, கரிது குதிரை என்பன காட்டியது அமைவதே என்னலாம்.

"சொல்லிய என்றதனால் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை முடிபு கொள்க என்றனர் உரைகாரர்கள். இஃது "உயிரும் புள்ளியும்" (எழு 482) என்ற சூத்திரத்து 'ஐம் பாலறியும் பண்பு தொகு மொழியும்' என்றதனாற் பெறப் படுதலின், ஈண்டு அதனை அவர்கள் கொள்ளவேண்டுவதின்று" என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

"உயிரும் புள்ளியும்" என்னும் சூத்திரத்தில் பிரித்துப் புணர்க்கப்படாச் சொற்களாகச் சில கூறியவிடத்தில் பண்புத் தொகைச் சொல்லும் அடங்கும். 'கருங்குதிரை என்பதைப் பொருள்காணுமிடத்துக் 'கரிதுகுதிரை' எனக் காணினும் அதைக் கரிது + குதிரை எனப் பிரித்துக் கருங்குதிரை என வந்தமைக்கு விதி காணுதல் கூடாது என்பதே அச்சூத்திரத்தில் கூறப்பட்டது. கரியது குதிரை என்பது நிலை வருமொழிகளாக உள்ள ஒரு தொடர். ஆதலின் கரியது என்னும் நிலைமொழி குதிரை என்னும் வருமொழியுடன் புணரும் போதுக் கரியதுக்குதிரை எனப் புணருமா என்னும் ஐயம் எழுமாகலின் கரியதுகுதிரை என இயல்பாகவே புணரும் என்பது சொல்லப்பட வேண்டும். எனவே சாஸ்திரியார் கூறியது ஏற்புடைத்தன்று.

வன்றொடர்

427. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே (12)

ஆ. மொ:

இல.

'Hard 'u' word has the appearance of hard consonant (when the initial of the coming word happens to be hard consonant).

க. சு.

(when) the 'valloṟṟut toṭarmoḻi' (is followed by) a plosive, (the letter) is doubled.

பி. இ. நூ.

நன். 180

வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி.

முத்து. 409

வல்லெழுத்தியையின் வன்றொடர் மிகுமே.

இளம்.

இது, அவ்வாறீற்றின் ஒன்றற்கு* எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: வல்லொற்றுத் தொடர்மொழி—வல்லொற்றுத் தொடர் மொழிக் குற்றியலுகரம், வல்லெழுத்து மிகும்— வல்லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: கொக்குக்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

நச்.

இஃது அவ்வாறு ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள்: வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரவீறு வல் லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்கு முடியும்; எ-று.

உ-ம்: கொக்குக் கடிது, பாக்குக் கடிது, பட்டுக்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

---

* எய்தியது: முன்சூத்திரத்தில் எல்லா மொழியும் இயல்பாகும் என்றதனால் வன்றொடர்மொழியும் இயல்பாகவே புணரும் என்பதாக எய்தியதாம்.

ஆங்கு, யாங்கு

428. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை. (22)

ஆ. மொ.

இல.

'The nasal 'n' word' harding lengthened its part of demonstrative and the 'nasal 'n' word' having interrogative 'yā' as initial do not deviate from the rules of having hardconsonant appeared.

க சு.

Such meṉṟoṭarmoḻi which begin with the lengthened form of demonstrative roots, or such interrogative 'meṉṟoṭar moḻi' (which begin) with 'yā' do not deviate from the rules of the plosive (being doubled.)

பி. இ. நூ.

முத்து. 410

சுட்டுமுதல் நீடிய மென்றொடர் மொழியும்
யாகார வினாமுதல் மென்றொடர் மொழியும்
அவ்வியல் நிலைபெறும் ஆயுங் காலே.

இளம்.

இதுவும் அவ்வீற்றின் ஒன்றன்கண் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்குமுடிபு கூறுகின்றது.

இ-ள்: சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்—சுட்டாகிய சினையெழுத்து நீண்ட மென்தொடர் மொழிக் குற்றியலுகர ஈறும், யாவினா முதலிய மென்றொடர் மொழியும்—யா என்னும் வினா முதலாகிய மென்றொடர் மொழிக் குற்றியலுகர ஈறும், வல்லெழுத்து இயற்கை அ இயல் திரியா—மேற்கூறிய வல்லெழுத்தியற்கையாகிய அவ்வியலின் [1]திரியாது முடியும்.

உ-ம்: ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

சு. வே.

1. திரியாதே முடியும்.

இயற்கை யென்றதனால் அக்குற்றுகர வீற்றுவினை யெச்ச முடிபு கொள்க. செத்துக் கிடந்தான், இருந்து கொண்டான் என வரும்.

நச்.

இதுவும் அவ்வாறு ஈற்றுள் ஒன்றன்கண் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்: சுட்டாகிய சினையெழுத்து நீண்ட [1]மென்றொடர்க் குற்றுகர ஈறும், யா வென்னும் வினா முதலாகிய மென்றொடர் மொழிக் குற்றுகர ஈறும், வல்லெழுத்துப் பெற்று முடியுந்தன்மை யாகிய அவ்வியல்பிற் றிரியாது முடியும்; எ—று.

உ-ம்: ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான்[2] எனவரும்.

இயற்கை யென்றதனான் மென்றொடர் மொழிக் குற்றிய லுகர ஈற்று வினையெச்சம் இயல்பாயும் வன்றொடர் மொழிக் குற்றியலுகர ஈற்று வினையெச்சம்[3]மிக்கும் முடிவன கொள்க. இருந்து கொண்டான், ஆண்டு சென்றான், தந்து தீர்ந்தான். வந்து போயினான் எனவும்; செத்துக் கிடந்தான், செற்றுச் செய்தான், உய்த்துக் கொண்டான், நட்டுப் போனான் எனவும் வரும்.

யாங்கு இயல்பாதல்.

429. யாவினா மொழியே இயல்புமாகும்.

ஆ. மொ:

இல:

The 'yā-interrogative-word' stands natural also.

க. சு.

The interrogative-word (beginning with) 'yā' may also remain without change.

பி. இ. நூ.

முத்து. 411

அவற்றுள்
யாகார வினாவியல் பாகலும் உளவே.

சு. வே:

1 ஆகார முதன்மொழி மென்றொடர்க்
2 என வல்லெழுத்துக் கொடுக்க.
3 மிக்கு முடிவனவும்

இளம்.

இது, மேலவற்றுள் ஒன்றன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: யாவினா மொழி இயல்பும் ஆகும்—அவற்றுள் யாவினா மொழி மேற்கூறிய விகாரமேயன்றி இயல்பாயும் முடியும்.

உ-ம்: யாங்கு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

நச்.

இது மேலனவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது. வல்லெழுத்து விலக்கி இயல்பாம் என்றலின்.

இ-ள்: [1]அவற்றுள் யாவென்னும் வினாவையுடைய சொல் முற்கூறியவாறன்றி இயல்பாயும் முடியும்; எ—று.

உ-ம்: யாங்கு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும். இஃது எப்படி என்னும் வினாப் பொருளை உணர்த்திற்று. உம்மையான் மிக்கு முடிதலே வலியுடைத்து. ஏகாரம் பிரிநிலை.

அவற்றின் நிலை மொழிச் செய்கை.

430 அந்நான் மொழியும் தந்நிலை திரியா (24)

ஆ. மொ.

இல:

Those four words do not change in their nature.

க. சு.

The four words do not change their natnre.

பி. இ. நூ.

முத்து 412

அந்நான்கு மொழியும் தந்நிலை திரியா.

இளம்.

இது மேலவற்றிற்கு நிலை மொழிச் செய்கை கூறுகின்றது.

சு. வே:

1 முற்கூறியவற்றுள்.

இ-ள்: அ நால் மொழியும்—சுட்டு முதல் மூன்றும் யா முதல் மொழியுமாகிய அந்நான்கு மொழியும், தம் நிலை திரியா—தம் மெல்லொற்று நிலை திரிந்து வல்லொற்று ஆகாது முடியும்.

*தந்நிலை என்றதனால், மெல்லொற்றுத் திரியாது மிக்கு முடிவன பிறவும் கொள்க.

உ-ம்: அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

†'யாமொழி' என்னாது 'வினா' என்றதனான், பிற இயல் பாய் முடிவனவும் கொள்க. **முந்து கொண்டான், பண்டு கொண்டான், இன்று கொண்டான், அன்று கொண்டான் என வரும்.

நச்.

இது மேலனவற்றிற்கு நிலை மொழிச் செய்கை கூறுகின்றது.

இ-ள்: சுட்டு முதல் மூன்றும் யாமுதல் மொழியுமாகிய அந் நான்கு மொழியும், தம்மெல்லொற்றாய தன்மை திரிந்து வல் ஒற்றாகாது முடியும், எ-று.

உ-ம்: முற்காட்டியவே. தந்நிலை என்றதனான் மெல் ஒற்றுத் திரியாது வல்லெழுத்து மிக்கு முடிவன பிறவும் கொள்க. அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக் கொண்டான், சென்றான். தந்தான், போயினான் எனவரும்.

இனி முன்னர், 'யாமொழி' என்னாது 'வினா' என்றதனான் ஏழாவதன் இடப்பொருட்டாகிய பிறவும் இயல்பாய்[1] முடிதல் கொள்க. முந்து கொண்டான், பண்டு கொண்டான், இன்று கொண்டான், அன்று கொண்டான், என்று கொண்டான் என வரும்.

சுப்.

பொருள்: ஆங்கு ஈங்கு ஊங்கு யாங்கு என்ற நான்கு மொழி களும் தந்நிலையினின்றும் திரியா, வல்லெழுத்து வருவழி, அதாவது மெல்லொற்று வல்லொற்றாகா.

---

*† இவற்றை அதிகாரப்புறனடையாற் கொள்ளலாம் என்பர் சாஸ்திரியார்.

** முந்து = முற்காலத்தில்

சு. வே: 1. முடிவனவும் கொள்க.

"மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம், வல்லொற்றிறுதி கிளையொற்றாகும்"(எழு.415)என்ற சூத்திரத் தாற் கூறப்பட்ட மெல்லொற்றுத் திரிதலை இச்சூத்திரம் விலக் கிற்று.

அந்நான் மொழியும் என்றதற்குச் 'சுட்டுமுதல் மூன்றும் யாமுதன் மொழியுமாகிய அந்நான்கு மொழியும்' என உரை காரர்கள் பொருள் கூறினும், 'சுட்டுமுதல் மூன்று என்றதனால் சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழி மூன்றும் என்றே பொருள் கொண்டனர் என்பது அவர் பின் கூறும் உரையினால் விளங்கும்.

உண்டு

431. உண்டு என் கிளவி உண்மை செப்பின்
முந்தை யிறுதி மெய்யொடும் கெடுதலும்
மேனிலை ஒற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து வருஉங் காலை யான (25)

ஆ: மொ:
இல.

If the word 'uṇdu' denotes the quality of being, the disappearance of preceding final (vowel) with its consonant and the changing in to 'ḷ' of the preceeding consonant these two changes may occur when the hard consonant happens to come as initial of the coming word.

ச. சு.

If the word 'uṇṭu' denotes existence, the disappearance of the preceeding final (vowel) with (its) consonant, and the change into the sound 'ḷ' of preceeding consonant-these two alterations may occur when a plosive occurs as initial of the following word.

பி. இ. நூ.
முத்து. 413

உண்டென் பெயரே உண்மை செப்பின்
இயல்பா தலும்ஈறு அழிதலும் ணகாரம்
ளகார மாதலும் உரியன வாகும்.

இளம்.

இது மென்றொடர் மொழியுள் ஒரு வினைக்குறிப்பு மொழிக்கு வேறு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்: உண்டு என் கிளவி உண்மை செப்பின்—உண்டு என்னும் சொல் உண்டு என்னும் தொழில் ஒழிய உண்மை என்னும் பண்பு நிற்குமிடத்து, முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும் மேல் நிலை ஒற்று ளகாரம் ஆதலும்—முற்பட்ட ஈற்றுக் குற்றியலுகரம் தான் ஏறி நின்ற மெய்யோடும் கெடுதலும் அதற்குமேல் நின்ற ணகார ஒற்று ளகாரம் ஆதலும் ஆகிய,ஆ முறை இரண்டும் உரிமையும் உடைத்து—அம்முறைமை உடைய இரண்டினையும் உரித்தாதலும் உடைத்து, வல்லெழுத்து வருஉங் காலை—வல்லெழுத்து முதன் மொழி வருங்காலத்து.

வல்லெழுத்ததிகாரம் வாரா நிற்ப 'வல்லெழுத்து வருஉங் காலை' என்றதனான் இவ்விரு முடிபும் உள்ளது பகர முதன் மொழி வந்தால். *மற்றை மூன்று எழுத்தின் கண்ணும் ஈறு கெடாதே நின்று முடியும் என்று கொள்க.

இன்னும் அதனானே இயல்பு கணத்து இறுதி கெடாதே முடிதல் கொள்க.

உ-ம்: உள்பொருள், உண்டு பொருள் எனவும்: உண்டு காணம், உண்டு சாக்காடு, உண்டு தாமரை எனவும்; உண்டு ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும்.

$உள்பொருள் என்பது பண்புத் தொகை முடிபு அன்றோ எனின், அஃது ஓசை ஒற்றுமைப் படச் சொல்லும் வழியது; இஃது ஓசையிடையறவுபடச் சொல்லும் வழியது போலும்.

---

* மற்றை மூன்றெழுத்து: க், ச், த்.

$ உள்பொருள் என்பது பண்புத் தொகையாயின் அது ''உயிரும் புள்ளியும்'' (483) என்னும் புறனடைச் சூத்திரத்தின்படிப் புணர்க்கப்படாது அதாவது உள்+ பொருள் எனப் பிரித்துப் புணர்க்கப்படாது. ஏன் எனின் உள்பொருள் என்பதை ஓசை இடைவெளியில்லாமல் சேர்த்தே ஒலிக்க வேண்டும். இச்சூத்திரத்தில் உண்டு+ பொருள் எனப்பிரித்து உண்டு பொருள் எனக் கூறுவது போலவே உள் பொருள் என ஓசை இடையிட்டுக் கூறப் படுவதற்கு விதி கூறப்பட்டது.

நச்.

இது மென்றொடர் மொழியுள் வினைக் குறிப்பாய் நின்ற தொரு சொற் பண்பை உணர்த்துங்கால் வேறு முடிபு பெறுதல் கூறுகின்றது.

இ-ள்: உண்டு என்னுஞ் சொல் வினைக் குறிப்பையுணர்த்தாது ஒரு பொருள் தோன்றுங்கால் தோன்றி அது கெடுந்துணையும் உண்டாய் நிற்கின்ற தன்மையாகிய பண்பை உணர்த்தி நிற்குமாயின், முன்னர் நின்ற குற்றுகரம் தான் ஏறி நின்ற மெய்யோடுங் கெடுதலும், அதற்கு மேல் நின்றணகார ஒற்று ளகாரஒற்றாதலும் ஆகிய, அம்முறைமையினையுடைய இரண்டு நிலையும் உரித்து; அஃதுரித்தன்றி முன்னர் நின்ற நிலையிலே கேடுந் திரிபும் இன்றி நிற்றலும் உடைத்து, வல்லெழுத்து முதன்மொழியாய் வருங் காலத்து; எ—று.

வல்லெழுத்து அதிகாரத்தான் வாராநிற்பவும் 'வல்லெழுத்து வருஉங்காலை' என்றதனான் அவ்விரு முடிபும் உளவாவது பண்பையுணர்த்தும் பகரம் வரும் மொழிக்கண்ணேயென்பதூஉம், ஏனைக் க ச த க்களிலும் இயல்புகணத்தும் உண்டு என நின்று வினைக் குறிப்பாயும் சிறுபான்மை பண்பாயும் நிற்கும் என்ப தூஉம் கொள்க.

உ—ம்: உள்பொருள், உண்டு பொருள் என வரும். இது பொருண்மை சுட்டாது உண்மைத் தன்மைப் பண்பை ஈண்டு உணர்த்திற்று. இனி உண்டு காணம், உண்டு சாக்காடு, உண்டு தாமரை, உண்டு ஞானம், நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை என வருவனவெல்லாம் கேடுந் திரிபும் இன்றி வினைக் குறிப்பாயுஞ் சிறுபான்மை பண்பாயும் நின்றன. இவற்றுள் வேறுபாடு வினையியலுள் வினைக் குறிப்பு ஓதும் வழி உணர்க.

உள் பொருள் என்பது பண்புத்தொகை முடிபன்றோ வெனின், அஃது ஓசை ஒற்றுமைப்படச் சொல்லும் வழியது போலும். இஃது ஓசை இடையறவு படச் சொல்லும் வழியது என்க.

சுப்.

"வல்லெழுத்ததிகாரம் வாரா நிற்ப......ஈறு கெடாதே நின்று முடியும் என்பது" என்றனர் உரைகாரர்கள். அஃது ஆசிரியர்க்கு

உடன்பாடாயின் வல்லெழுத்து என்பதற்குப் பிரதியாகப் 'பகரம் என அவர் கூறியிராரா என்பது ஆராய்தற்குரியது.*

உள்பொருள் என்பது பண்புத்தொகை முடிபன்றோ...இடையறவுபடச் சொல்லும் வழியது போலும்'' என உரைகளில் உள்ளது. 'உரிமையும்' என்ற விடத்துள்ள உம்மையால் இத்திரிபு சிறுபான்மையெனக்கொண்டு'உண்மையைக் கூறும்''உண்டு'என்ற சொல்லோடு வல்லெழுத்தினை முதலிற் கொண்ட சொல் தொகையாம் போது, உண்டு என்றது'உள'என மாறாது'உண்டு' என்றும் இருத்தல் கூடும் என இச்சூத்திரம் உணர்த்திற்று எனக் கொள்ளலாம் எனத் தோற்றுகின்றது.

வேங்.

ஆசிரியர் உள்பொருள் என்பது போல வருதலைக்கண்டு அதற்கு அமைதி கூறினார் ஆவர். உண்மையை நோக்கின், 'உள்' என்பதனினின்றே உண்டு என்பது தோன்றியது என்பது புலனாகும். 'உள்' என்னும் பண்படியோடு 'அது' என்பது சேர்ந்து 'உள்ளது' என்னும் பெயரும், உளது என்னும் வினையும் அமைந்தன போல, 'உள்' என்பதனோடு 'து' மட்டும் சேர்ந்து 'உண்டு' என்றாகி யிருக்கின்றது. அன்று என்பதும் இத்தகையதே.

உள்பொருள் என்பது உள் என்னும் பண்படி தொக்கதனால் (சேர்ந்ததனால்) பண்புத்தொகை.

திசைப்பெயர்

432. இருதிசை புணரின் ஏ இடை வருமே. (26)

ஆ. மொ:

இல:

When two names, denoting directions (south, north, east west) are joined 'ē' is to be added to the final of the standing word.

---

* உள்பொருள் என்பது போல உள்காணம், உள்தாமரை என்பன காணப் படாமையின் உரைகாரர்கள் அவ்வாறு கூறினர் என்னலாம். ஆசிரியர் காலத்து அவ்வழக்கிருந்தனவோ என அறியக்கூடவில்லை.

க. சு.

If (words denoting) two (different) directions are combined 'ē' is inserted between them.

பி- இ· நூ·

முத்து. 414.

இருதிசை புணரின் ஏஇடை வருமே.

இளம்.

இது குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்க்கு அல்வழிக்கண் வேறு முடிபு கூறுகின்றது.

இ-ள்: இருதிசை புணரின் ஏ இடை வரும் — இரண்டு பெருந்திசைகள் தம்மிற் புணரின் ஏயென்னும் சாரியை இடை வந்து [1]புணரும்.

உ-ம்: * வடக்கே தெற்கு, கிழக்கே மேற்கு என வரும்.

நச்.

இது குற்றுகரவீற்றுத் திசைப் பெயர்க்கு அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்: இரண்டு பெருந்திசை தம்மிற் புணரின், ஏ என்னுஞ் சாரியை இடை நின்று புணரும்; எ-று.

உ-ம்: தெற்கே வடக்கு, கிழக்கே மேற்கு. இவை உம்மைத் தொகை.

திசைப்பெயர் முன் திசைப்பெயர்

433. திரிபு வேறு கிளப்பின் ஒற்றும் $இறுதியும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணரும் காலை யான (27)

ஆ. மொ:

இல:

To denote the corner direction, the consonant and the 'u' must disappear–so say the poets, and the consonant change' into 'n' when joining with 'Theṛku'.

சு. வே:

1 புணர்க.

* வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்கும்.

$ உகரமும் - நச். பாடம்.

க. சு.

Learned men say that, to denote the angular directions, the consonant and the final (-u) must disappear; and when combining with 'teṛku' the consonant (ṛ) is also changed to the sound 'ṉ'.

பி. இ நூ:

நன். 186

திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
நகரம் னவ்வாத் திரிதலு மாம்பிற.

இ. வி. 105

ஷை ஷை

முத்து. 415

ஷை ஷை

இளம்.

இது பெருந்திசைகளோடு கோணத்திசைகளைப் புணர்த்த லின் எய்தாதது எய்துவித்தது.

இ-ள்: திரிபு வேறு கிளப்பின் — [1]அப்பெருந்திசைகளோடு கோணத்திசைகளை [2]வேறாகப் புணர்க்குமிடத்து, ஒற்றும் இறுதியும் கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்—அவ்வுகரம் ஏறி நின்ற ஒற்றும் அவ்விற்று உகரமும் கெட்டு முடிதல் வேண்டும் என்று சொல்லுவர் புலவர், தெற்கொடு புணரும் காலை-தெற்கு என்னும் திசையோடு புணரும் காலத்து, ஒற்று மெய்திரிந்து னகாரம் ஆகும்—அதன் கண் நின்ற றகார ஒற்றுத் தன் வடிவு திரிந்து னகாரமாய் முடியும்.

'திரிந்து' என்றதனான், வடக்கு என்பதன்கண் இடை நின்ற ககர ஒற்றுக் கெடுக்க.

உ-ம் : வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு தென்மேற்கு என வரும்.

சு. வே.

1. அப்பெருந்திசையோடு
2. வேறு புணர்க்குமிடத்து

'வேறு' என்றதனால், திசைப் பெயரோடு பொருட் பெயர்க்கும் இவ்விதி கொள்க. வடகடல், வடவரை என வரும்.

'மெய்' என்றதனான், அத்திசைப் பெயரோடு பொருட் பெயர் புணருமிடத்து [1]இறுதியும் முதலும் திரிந்து முடிவன வெல்லாம் கொள்க. கீழ்கூரை, மேல்கூரை என வரும்.

நச்.

இது பெருந்திசைகளோடு கோணத் திசைகளைப் புணர்த் தலின் எய்தாததெய்துவித்தது.

இ-ள் : அப்பெருந்திசைகளோடு கோணத்திசைகளை வேறாகப் புணர்க்குமிடத்து, அவ்வுகரம் ஏறிநின்ற ஒற்றும் அவ்வீற்று உகரமும் கெட்டு முடிதல் வேண்டும் என்று சொல்லுவர் புலவர், அது தெற்கென்னும் திசையொடு புணருங் காலத்து , அத்திசைக்குப் பொருந்தி நின்ற றகார ஒற்றுத் தன் வடிவு திரிந்து னகார ஒற்றாய் நிற்கும் ; எ-று.

உ-ம் : வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என வரும்.

வேறு என்றதனால் திசைப் பெயரோடு பொருட்பெயர் வரினும் இம்முடிபு கொள்க. வடகடல், வடசுரம், வடவேங்கடம்; தென்குமரி, தென்சுரம், தென்னிலங்கை என வரும்.

மெய் என்றதனான், உயிர்கெட்டுந் திரிந்தும் மெய் கெட்டும் முடிவனவும் உள, திசைப்பெயர் முன்னர்ப் பொருட் பெயர் வந்துழியென்று உணர்க. கிழக்கு என்பது கரை, கூரை என்பவற்றோடு புணருமிடத்துக் கீழ்கரை, கீழ்கூரை என நிலை மொழியிறுதி உகரம் மெய்யொடுங் கெட்டு அதன் மேல் நின்ற ககர ஒற்றும் ழகரத்தில் அகரமும் கெட்டு முதல் எழுத்து நீண்டு முடிந்தன. மேற்கு என்பது கரை, கூரை, என்பவற்றொடு புணருமிடத்து மீகரை, மீகூரை என நிலை மொழியீற்று உகரம் மெய்யொடுங் கெட்டு அதன் மேல் நின்ற றகர ஒற்றுங்கெட்டு ஏகாரம் ஈகாரமாகி முடிந்தன. இன்னும் இதனானே மேன்மாடு, மேல்பால், மேலைச்சேரி என்றாற் போல்வனவுஞ் செய்கை யறிந்து முடிக்க.

சு. வே.

1. ஈறு.

சுப்.

'திரிந்து என்றதனால் வடக்கு என்பதன்கண் இடைநின்ற ககர ஒற்றுக் கெடுக்க' என்றனர் உரைகாரர்கள். முற்சூத்திரத்திலிருந்து 'மெய்யொடும்' என்பதை அதிகரித்துக் கொள்ளின் இவ்வாறு கூறல் வேண்டா.

''ஒற்றுமெய்......புணருங்காலை'' என்ற ஈற்றடிகளைத் தனிச் சூத்திரமாகக் கொள்ளின் நலம்.

வேறு என்ற சொல் வேண்டாம் எனக் கருதி 'வேறு என்றதனால் திசைப்பெயரோடு பொருட் பெயர்க்கும் இவ்விதி கொள்க; வடகடல் வடவரை என வரும்' என்றனர் உரைகாரர்கள். வேறு என்ற சொல் இல்லையாயின் அச்சொற்கள் கோணத்திசையைக் குறிக்கும் எனக் கொள்ள இயலாது. அவ்வாறாயின் வடகடல் முதலியவற்றை எதனாற் கொள்ளல் வேண்டும் எனின், அதிகாரப் புறனடையான் என்க. அவ்வாறே கீழ்கூரை முதலியவற்றை 'மெய்' என்றதனாற் கொள்ளாது அதிகாரப் புறவடையாற் கொள்ளுதல் நலம்.

வேங்.

ஆசிரியர், வடக்கு என்னும் சொல்லில், ககர மெய் கெடுதற்கு விதி கூறினாரல்லர். அதனால், அவர்காலத்தில், 'வடகு' என்றே எழுதுவர் எனத் தோன்றுகிறது. பாகு→ பாக்கு, பிறகு→பிறக்கு, காபு→காப்பு என்னுஞ் சொற்களை நோக்கின், வடகு, வடக்கு என்னும் இரண்டு வடிவமும் அமையுமன்றே ? இவ்விரண்டனுள், ககாரம் இரட்டித்தது பிற்கால வழக்கென்றும், மற்றையது முற்கால வழக்கு என்றும் உய்த்துணர்தல் கூடும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திலேயே வடக்கு எனக் ககரவொற்று மிக்கு வந்தது என்று கொண்டதனால், 'திரிந்து என்றதனான் வடக்கு என்பதன்கண் இடைநின்ற ககரவொற்றுக் கெடுக்க' என்று உரையாளர் கூறினர்.

சிவ.

'திரிபு வேறு கிளப்பின் என்பதற்குப் ''பெருந்திசைகளோடு கோணத்திசைகளை வேறாகப் புணர்க்குமிடத்து'' என எழுதியது பொருந்துமா ?

பெருந்திசைகள் வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்கு என்பன. கோணத்திசைகள் வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென் மேற்கு என்பன. பெருந்திசையோடு கோணத்திசை புணர்ப்பது என்றால், வடக்கு + வடகிழக்கு எனப் புணர்ப்பது என்பது தானே பொருளாகும்? 'வடகிழக்கு' என்றது ஒரு கோணத் திசையை உணர்த்தும். அதைப் பிரிப்பதாயின் வடக்கு + கிழக்கு எனப் பிரித்தல் வேண்டும். வடக்கும் கிழக்கும் சேரும் பகுதி வட கிழக்காகும். அதனால் 'வடகிழக்கு' என்பது இரு பெருந்திசை கள் புணர்ந்த கோணத்திசையினை யுணர்த்தும் ஒரு சொல் என்னலாம். அப்படியாயின் உரையாசிரியர் வடகிழக்கு என்பதில் நிலைமொழி வடக்கு பெருந்திசையாகவும், வருமொழி கிழக்கு கோணத்திசையாகவும் கூறியது பொருந்துமா?

'திசையோடு திசையும் பிறவும் சேரின்' என்ற நன்னூல் நூற்பாவிற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பெருந்திசை கோணத் திசையென்னாமல், ''திசைப் பெயர்களோடு திசைப் பெயர்களும் பிற பெயர்களும் சேரின்'' என்றே உரையெழுதினர். ஆனால் ஆறுமுக நாவலர் தாம் எழுதிய காண்டிகையுரையில், ''பிற என்ற மிகையால் நிலைமொழி பெருந்திசையெனவும், வருமொழி கோணத்திசையெனவும் கொள்க'' என்றனர். இவர் தொல் காப்பிய உரையாசிரியரைப் பின்பற்றி எழுதினர் என்னலாம்.

இரண்டு பெருந்திசைகள் கூடி அவற்றின் மாறுதலால் அமைந்த கோணத்திசையைத் 'திரிபு' என்ற சொல்லால் குறித்தனர் தொல்காப்பியர். அதற்கேற்பத் 'திரிபு' வேறு கிளப்பின்' என்பதற்குக் 'கோணத்திசையை வேறாகப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறின்' எனப் பொருள் கூறலாம். ''வடகிழக்கு என்ற திரிபை வடக்கு + கிழக்கு என வேறாகப்பிரித்து வடகிழக்கு எனப் புணர்த்துமிடத்து'' என விளக்கம் கொள்ளலாம்.

கோணத்திசைகள் பற்றிய நிலைமொழிகள் வடக்கும் தெற்குமே; வருமொழிகள் கிழக்கும் மேற்குமே. ஆட்சி மரபே அவ்வாறமையக் காரணம் ஆகலாம்.* (கோணத்திசை ஓர் ஐயம் செந்தமிழ், தொகுதி 54 பகுதி 2 மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு (1958)

---

* நிலத்தின் துருவங்களை வடதுருவம்; தென்துருவம் என்பதும் காணல் வேண்டும்.

5. குற்றுகர எண்ணுப் புணர்ச்சி.

பத்தொடு எண்ணுப் பெயர்.

434. ஒன்றுமுத லாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே
முற்ற இன்வரூஉம் இரண்டலங் கடையே (28)

ஆ. மொ:

இல.

If all the numbers from 'Onru' (one) to 'Ettu' (eight) succeed 'patthu' (ten) the shortened 'u' disappears with its consonant. The increment 'in' comes between excepting in the ease of number two

க. சு.

If all the words denoting numbers from onru 'one' to Eṭṭu eight succeed pattu 'ten' the overshort 'u' disappears with its consonant the empty morph in is inserted; this (rule) does not apply to (the numeral) iraṇṭu two

பி.இ.நூ.

நன். 197.

ஒன்றுமுதல்......வரின் பத்தின்
ஈற்றுயிர்மெய் கெடுத்து இன்னும்...
...ஏற்கும்

இ. வி. 115

ஷை ஷை

முத்து. 416.

இரண்டொழித் தேனைய இருநான் கெண்களும்
பத்தின் முன்வருங் காலை யான
குற்றிய லுகரம் முற்றக் கெடுமே
ஒன்பான் ஒழியஇன் னொடுவரும் என்ப

இளம்.

இது [1] இவ்வீற்று எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயருக்கு முடிபு கூறுகின்றது.

இ—ள்: ஒன்று முதலாக எட்டு என் இறுதி எல்லா எண்ணும் —ஒன்று என்னும் சொல் முதலாக எட்டு என்னும் சொல் இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப் பெயரும், பத்தன் முன்வரின்— பத்து என்னும் எண்ணுப் [2] பெயர் முன்வரின், குற்றியலுகரம் மெய்யொடும் கெடுமே—அப்பத்து என்னும் சொல்லிற் குற்றிய லுகரம் தான் ஏறி நின்ற மெய்யொடும் கெட்டு முடியும், இரண்டு அலம் கடை முற்ற இன்வரும்—[3] இரண்டாம் எண்ணுப் பெயர் அல்லாத எண்ணுப் பெயரிடத்து முடிய இன் வந்து புணரும்,

உ—ம்: பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு எனவரும்

நிலைமொழி முற்கூறாததனான், பிறமொழியும் அவ் இன் பேறு கொள்க. ஒன்பதின்பால், ஒன்பதின் கூறு எனவரும்.

[4] முற்ற என்றதனான், மேல்எடுத்தோத்தானும் இலேசானும் இன்பெற்ற வழி பின், பதிற்றொன்று, பதிற்றிரண்டு என்றாற் போல முடிபுகள் வேறுபட வருவனவெல்லாம் கொள்க.

நச்.

நிறுத்த முறையானே ஆறு ஈற்றுக் குற்றுகரமும் புணருமாறு உணர்த்தி இனி, அவ்வீற்று எண்ணுப் பெயர் முடிக்கின்றார்; இஃது அவற்றுட் பத்து என்னும் எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயர் வந்து புணருமாறு கூறுகின்றது.

இ—ள்: ஒன்றென்னும் எண் முதலாக எட்டென்னும் எண் ஈறாய் உள்ள எல்லா எண்ணுப் பெயர்களும், பத்து என்னும் எண்ணுப் பெயரின் முன் வரின், அப்பத்தென்னும் சொல்லிற் குற்றுகரந் தான் ஏறி நின்ற மெய்யோடும் கெடும், ஆண்டு இரண்

சு. வே:

1. அவ்வீற்று.
2. பெயர்க்கு
3. இரண்டல்லாத எண்ணுப், இரண்டாகிய எண்ணுப்
4. இப்பகுதி அடிகளாசிரியரிடம் உள்ள சுவடிகளில் இல்லையாம்.

டல்லாத எண்ணுப் பெயர்களிடத்து முடிய இன்சாரியை இடை வந்து புணரும். எ-று.

உ—ம்: பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து பதினாறு, பதினேழு, பதினெட்டு எனவரும்.

நிலை மொழி முற்கூறாததனால் பிறவெண்ணின் முன்னர்ப் பிறபெயர் வந்துழியும் இன்பெறுதல் கொள்க. ஒன்பதின் கூறு, ஒன்பதின்பால் என வரும்.

*முற்ற என்பதனால் பதினான்கென்புழி வந்த இன்னின் னகரம் வருமொழிக்கட் கருவி செய்து கெடுத்து முடிக்க.

சுப்.

உரைகாரர்கள் பதினேழு என உதாரணம் கூறினர். ஏழ் என்றது ழகரவீறாகப் புள்ளி மயங்கியலில் ஆசிரியர் கூறியிருக்கின்றமையான், 'பதினேழ்' எனக் காட்ட வேணும்.

''நிலை மொழி முற்கூறாததனான்...ஒன்பதின் கூறு என வரும்'' ''முற்ற என்றதனான்...வேறுபட வருவன எல்லாம் கொள்க'' என்றனர் உரைகாரர்கள். அவை பிற்காலத்து வழக்கெனக் கூறுதல் சாலும். பண்டை வழக்காயின் அவற்றை அதிகாரப் புறனடையாற் கொள்க.

வேங்.

பத்து என்பதனோடு ஒன்பதுஎன்னும் எண்சேர்ந்து, சாரியை பெறாமல், பத்தொன்பது என வரும் என்று ஆசிரியர்விதித்திலர், பத்து என்பது புள்ளியீறாகலானும், புள்ளியீற்று முன் உயிர் தனித்தியலாது என்று மேலே கூறினாராகலானும்.

குற்றுகரவீற்றோடு உயிர் சேர்ந்து வருதல் இதனானும் அறியப்படும்.

---

* பதினான்கு; பத்து+இன்+நான்கு. இச்சூத்திர விதிப் படிப் பத்து என்பதன் இறுதிக் குற்றுகரம் தகரமெய் யுடன் கெட்டது. (பத்+இன்+நான்கு) இன்னின் இகரம முன்னின்ற தகர மெய்யுடன் சேர்ந்தது. (பதின்+நான்கு) நான்கு என்பதன் நகரம் 'லன வென வரூஉம் புள்ளி முன்னர்த் தநவென வரிற் றன வாகும்மே' (தொகை. 7) என்னும் விதிப்படி 'னான்கு' என்றாயிற்று. (பதின்+னான்கு) அதன் பின்னர் பதின்என்பதன் னகர ஒற்று கெடுக்கப் பதினான்கு (பதி+னான்கு→பதி னான்கு) என்றாயிற்று. வருமொழிக்கட் கருவி செய்தல் என்பது வருமொழி நகரத்தை னகரமாகத் திரித்தல்.

பத்தின் முன் இரண்டு.

435. பத்தன்ஒற் றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டுவரு காலை. (29)

ஆ. மொ:

இல:

When 'irandu' (two) comes the disappearing of the consonant in 'paththu' and the doubling of 'n' are appropriate-say the learned.

க.சு.

It is said: if iranṭu 'two' occurs, -'ttu' in 'pattu' disappears and n̲n̲ is inserted.

பி. இ. நூ.

நன். 198.

இரண்டு முன்வரின் பத்தின்ஈற் றுயிர்மெய்
கரந்திட ஒற்று னவ்வாகும் என்ப.

இ. வி. 116.

ஷை ஷை

முத்து. 417.

ஷை ஷை

இளம்.

இது மேல் இன்பெறாதென்று விலக்கிய அதற்குப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: பத்தன் ஒற்று கெட னகாரம் இரட்டல்—பத்து என்னும் சொல்லின் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்று வந்து இரட்டுதல், ஒத்தது என்ப—பொருந்திற்று என்று சொல்லுப புலவர், இரண்டு வருகாலை—இரண்டு என்னும் எண் வரும் காலத்து.

உ-ம்: பன்னிரண்டு என வரும்.

நச்.

இது மேல் இன்பெறாதென்று விலக்கிய இரண்டற்குப் பிறிது விதி கூறுகின்றது.

இ-ள்: பத்து என்னுஞ் சொல்லில் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்று இரட்டித்து வருதல், இரண்டு என்னும் எண் வருங் காலத்திற் பொருந்திற்றென்பர் ஆசிரியர்; எ—று.

உ-ம்: பன்னிரண்டு என வரும்.

$குற்றியலுகரம் மெய்யொடும் கெடும் (எழு. 432) என்ற விதி இதற்கும் மேலனவற்றிற்கும் கொள்க.

வேங்.

பன்னிரண்டு என்னும் எண்ணுப் பெயரைக் கண்டு, அது, பத்தும் இரண்டும் சேர்ந்ததனாலாகிய வடிவம் என்று கருதி, விதி கூறினாரராவர். இதன் உண்மைத் தன்மையை நோக்குறும்.

'பத்து' என்பதன்முன் 'இரண்டு' என்பது வருமாயின் சாரியை பெற்றுப் 'பதினிரண்டு' என்று வரும். அவ்வாறன்றி, குற்றியலுகரமும் அஃதூர்ந்து நின்ற தகர மெய்யும் அதன் மேல் நின்ற தகர மெய்யும் கெட, இரண்டு னகார மெய் வருவதற்கு இயைபு யாதும் இல்லை. இனி, தகரம் நகாரமாகத் திரியும் என்றாலாவது ஒரு கால் சிறிது அமையலாம், உரிய மெல்லெழுத்தாகலின். அஃதன்றி, தகாரம் னகாரமாதற்குக் காரணம் யாது? இவற்றால், இரண்டு என்னும் சொல் பத்து என்னும் சொல்லோடு சேரவில்லை என்றும், நிலைமொழி வேறேயொரு சொல்லாதல் வேண்டும் என்றும் கருதுதல் தகும். 'பத்து' என்னும் பொருளில் 'பான்' என்னும் சொல் ஒன்று வழங்குகின்றது. அஃது இருபான், முப்பான் எனவும் வரும். ஆகலின், பான் என்னும் சொல்லோடு இரண்டு என்பது சேர்ந்து 'பன்னிரண்டு' என்றாயிற்று என்று கொள்ளுதல் அமைதியாகும். நிலைமொழி முதலிலுள்ள நெடில் குறுகுதல் பிறாண்டுங் காணலாகும். இவ்வாறே 'பான்' என்னுஞ் சொல்லோடு ஒன்று முதலிய எண்ணுப் பெயர்கள் சேர்ந்து, *பன்னொன்று, பன்னான்கு, பன்னாறு என்று வருதல் ஈண்டு அறியத்தக்கது. இவற்றால், 'பான்' என்னும் சொல்லோடு ஒன்று முதலிய எண்ணுப் பெயர்

$ இத்தொடர் மிகை என்பது சாஸ்திரியார் கருத்து. ஏற்புடையதே, அதிகாரத் தொடர்ச்சியுண்மையான்.

* பன்னொன்று என்பது கன்னட மொழியில் வழங்குதல் அறியத்தக்கது.

கள் சேர்ந்து வழங்கின எனவும், பிற்காலத்தே அவை அருக லாயின எனவும் கொள்ளலாம்.

பத்தின் முன் ஆயிரம்.

436. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது. (30)

ஆ. மொ.

இல.

Even if 'Āyiram' (thousand) comes, the above mentioned rule will not change.

க. சு.

But if āyiram 'thousand' occurs, the above-mentioned rule (i e that of 434) will not change

பி. இ. நூ.

நன். 197.

... ஆயிரம்...வரின்...இன்னும்...ஏற்கும்.

இ. வி. 115.

ஷை ஷை

முத்து. 417.

ஆயிரம் வரினும் இன்னொடு நிலையும்.

இளம்.

இதுவும் எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஆயிரம் வரினும்— மேற்கூறிய பத்து என்னும் எண்ணுப் பெயர் முன்னர் ஒன்று முதலாகிய எண்ணுப் பெயரே யன்றி ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வந்தாலும், ஆ இயல் திரியாது—மேல் ஈறு கெட்டு இன்பெற்ற இயல்பில் திரியாதே முடியும்.

உ—ம்: பதினாயிரம் எனவரும்.

நச்.

இஃது ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வரின் வரும் முடிபு கூறுகின்றது.

இ—ள்: முற்கூறிய பத்தன் முன்னர் மூன்று முதலியனவே யன்றி ஆயிரம் என்னும் எண் வந்தாலும் ஈறு கெட்டு இன்பெற்று முடியும் இயல்பில் திரியாது; எ—று.

உ—ம்: பதினாயிரம் என வரும். உம்மை இறந்தது தழீஇ யிற்று.

சிவ.

இச்சூத்திரம் முன்னின்ற சூத்திரத்தைத் தழுவாது அதன் முன்னின்ற சூத்திரத்தைத் தழுவுதலின் தவளைப் பாய்த்தாகும். பத்து+ஆயிரம்=பத்தாயிரம் எனக் குற்றியலுகரம் உயிரேற இடங் கொடுத்து முடிதலும் உண்டு.

பத்தின் முன் நிறை அளவுப் பெயர்கள்

437. **நிறையும் அளவும் வருஉங் காலையும்**
குறையா தாகும் இன்னென் சாரியை. (31)

ஆ. மொ.

இல.

Even if the words denoting weight and measure come, the increment, 'in' will not disappear.

க சு.

And when (words denoting) weight and measure occur, the empty morph 'in' will indeed not disappear.

பி. இ. நூ:

நன். 197.

...நிறை அளவும் பிறவரின் இன்னும்
...ஏற்கும்.

இ. வி, 115

ஷை ஷை

முத்து. 419.

நிறையும் அளவும் நேருங் காலைக்
குறையா தாகும் இன்னென் சாரியை.

இளம்.

இது எண்ணுப் பெயரோடு [1]நிறைப்பெயரும் அளவுப் பெயரும் புணர்க்கின்றது.

இ—ள்: நிறையும் அளவும் வருஉங் காலையும்—மேல் நின்ற பத்து என்பதன் முன் [2]நிறைப்பெயரும் அளவுப் பெயரும் வரும் காலத்தும், இன் என் சாரியை குறையாது ஆகும்—அவ் இன் என்னும் சாரியை குறையாது வந்து முடியும்.

உ—ம்: [3]பதின் கழஞ்சு, தொடி, பலம் எனவும்; பதின்கலம், சாடி, தூதை, பானை நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் வரும்.

'குறையாதாகும்' என்றதனால், பத்து என்பதன் முன்னர்ப் பொருட் பெயர்க்கு வரும் முடிபும் கொள்க. பதின்றிங் கள் பதிற்றுமுழம், பதிற்று வேலி, பதிற்றிதழ் என வரும்*

நச்.

இஃது எண்ணுப் பெயரோடு நிறைப் பெயரும் அளவுப் பெயரும் புணர்கின்ற புணர்ச்சி கூறுகின்றது.

இ-ள்: முற்கூறிய பத்து என்பதன் முன்னர் நிறைப் பெயரும் அளவுப் பெயரும் வருங்காலத்தும், அவ்வின்னென்னுஞ் சாரியை குறையாது வந்து முடியும்; எ-று.

உ-ம்: பதின் கழஞ்சு, தொடி, பலம் எனவும்; பதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி எனவும்; பதிற்றகல், பதிற்றுழக்கு எனவும் வரும்.

'குறையாதாகும்' என்றதனாற் [4]பொருட் பெயரும் எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் வந்துழியும் இன்கொடுத்து

சு. வே:

1,2. அளவுப் பெயரும் நிறைப் பெயரும்
3. அடிகளாசிரியரிடம் உள்ள சுவடிகளில் பதின்கலம் முதலிய அளவுப் பெயர் முதலாகவும், பதின் கழஞ்சு முதலிய நிறைப் பெயர்கள் இரண்டாவதாகவுமே உதாரணம் காட்டப் பட்டுள்ளனவாக அவர் கூறுவர். இது சூத்திரப் போக்குக்கு மாறுபட்ட தாகும்.
* இவை பண்டை வழக்காயின் அதிகாரப் புறனடையாற் கொள்க என்பர் சாஸ்திரியார்.
4. பத்தின் முன்னர்ப் பொருட்பெயரும்.

வேண்டுஞ் செய்கை செய்து முடிக்க. பதிற்று வேலி, யாண்டு, அடுக்கு, முழம் எனவும்;[2]பதின்றிங்கள் எனவும்; பதிற்றுத் தொடி எனவும் வரும்.[3]பதிற்றொன்று என்பது போல இரண்டு முதற் பத்தளவும் ஒட்டுக.

இவ்வீற்றின் னகரம், றகரமாதல் 'அளவாகு மொழி முதல்' (எழு.122) என்பதனுள் 'நிலை இய' என்றதனால் முடிக்க. இவற்றிற்கு ஒற்றிரட்டுதலும் உகரம் வருதலும் வல்லெழுத்துப் பெறுதலும் 'ஒன்று முதலாக' (எழு. 434) என்பதனுள் 'முற்ற' என்றதனாற் கொள்க.

ஒன்று முதல் ஒன்பான் முன் பத்து

438. ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்
ஆறன் இறுதி அல்வழி யான. **(32)**

ஆ. மொ:
இல:

Before the final of the numbers from 'Onṛu' to 'Onbathu' the consonant of the standing 'Paththu' having disappeared and,

The coming of 'āytham' instead is said to be natural;
The nature of the shortened 'u' is already enjoined,
execpt with the final of 'Āru' (Six).

க. சு.

It is said that if (the words denoting) onṛu 'one' to Oṉpatu 'nine' (are followed, by pattu 'ten'), the consonant of the standing 'pattu following the 'a' is replaced by āytām, and the final overshort 'u' with its Preceding Consonants is dropped, execpt with the ending of āṛu 'six'.

---

2. பதின்றிங்கள்ளனவும் வரும்
3. பற்றொன்று...பதிற்றுத் தொடி எனவும் ஒட்டுக

பி. இ. நூ.

நன். 195.

முதலிரு நான்காம் எண்முனர்ப் பத்தின்
இடையொற் றேகல் ஆய்தம் ஆகல்
எனவிரு விதியும் ஏற்கும் என்ப.

இ. வி. 113.

ஒன்றுமுதல் எட்டீற்று எண்முனர்ப் பத்தின்
இடையொற் றேகல் ஆய்தம் ஆகல்
எனவிரு விதியும் ஏற்கும் என்ப.

முத்து, 440.

ஒன்று முதல்ஒன் பான்முற் பத்திடை
மெய்கெட வாய்தம் ஆறல்லா வழியே.

இளம்.

இது எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

இ-ள் : ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர் நின்ற பத்தன் ஒற்றுக் கெட ஆய்தம் வந்து இடை நிலையும் இயற்கைத்து என்ப —ஒன்று முதலாக ஒன்பது ஈறாகச் சொல்லப்படுகின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர் வருமொழியாய் வந்து நின்ற பத்து என்னும் சொல்லினது தகர ஒற்றுக் கெட ஆய்தமானது வந்து[1] இடையில் நிலை பெறும் இயல்புடைத்தென்று சொல்லுவர் புலவர், ஆறன் இறுதி அல்வழி குற்றியலுகரம் கூறிய இயற்கை— அவற்றுள் ஆறு என்னும் ஈறு அல்லாத இடத்துக் குற்றியலுகரம் மேற்கூறிய இயற்கையாய் மெய்யோடும் கெட்டு முடியும்.

உ-ம் : ஒருபஃது, இருபஃது என ஒட்டுக.

வந்து என்றதனால், ஆய்தமாய்த் திரியாது கெட்டு ஒருபது என்றுமாம்.

நச்.

இஃது [2] எண்ணுப் பெயரோடு பத்து என்னும் எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

சு. வே.

1. இடைநிலை பெறும்
2. எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயர்க்கு

இ—ள் : ஒன்று முதல் ஒன்பது ஈறாகக் கூறுகின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர், வருமொழியாக வந்து நின்ற பத்து என்னும் சொல்லினது தகர ஒற்றுக் கெட, ஆய்தமானது வந்து இடையே நிலை பெறும் இயல்பையுடைத் தென்று கூறுவர் ஆசிரியர், அவற்றுள் ஆறு என்னும் ஈறல்லாத விடத்து, குற்றிய லுகரம் முற்கூறிய இயற்கையாய் மெய்யொடுங் கெட்டு முடியும்; எ-று.

இங்ஙனம் வருமாறு மேற்சூத்திரங்களுட் காட்டுதும்.

வந்ததென்றதனால் ஆய்தமாகத் திரியாது தகர ஒற்றுக் கெட்டு ஒருபது என்று நிற்றலும் கொள்க.

வேங்.

பத்து என்னும் எண்ணுப் பெயரில் ஈற்றயலிலுள்ள தகர மெய் கெடும் என்றும், அதற்கு ஈடாக அவ்விடத்தே ஆய்த வெழுத்து வந்து நிற்கும் என்றும் ஆசிரியர் கூறியுள்ளார். பஃது என்பதுவே இயல்பான சொல் என்றும், அதிலுள்ள ஆய்தம் தன் முன் நின்ற தகரவொலி போன்று ஒலிக்குமாகலின், அப்பஃது என்னும் சொல்லே 'பத்து' எனத் திரிந்தது என்றும் கொள்ளுதல் அமைதியாகும். ஆயின், 'ஒருபஃது' முதலியவற்றில் 'பஃது' இயல்பான சொல்லே.

ஒன்று இரண்டு-திரிபு

439. முதலீர் எண்ணின் ஒற்று ரகரம் ஆகும்.
உகரம் வருதல் ஆவயி னான. (33)

ஆ. மொ:
இல:

The consonant of the first two numbers (onṟu and iraṇḍu) changes into 'ṟ'. Then 'u' joins it there.

க. சு.

The consonant of the first two numbers changes into 'ṟ' and the sound 'u' joins (it) that place.

நன். 189.

ஒன்றன் புள்ளி ரகர மாக.
இரண்டன் ஒற்று உயிர்ஏக உவ்வருமே.

இ. வி. 107.

ஷை ஷை

முத்து. 422

ஒன்றன் ஒற்றே ரகாரம் ஆகும்
இரண்டன் ஒற்றுயிர் ஏகவும் வருமே.

இளம்.

இது மேற்கூறிய முடிபிற்கு உரியதொன்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: முதல் ஈர் எண்ணின் ஒற்று ரகரம் ஆகும்—அவற்றுள் முதற்கண் நின்ற இரண்டு எண்ணின் ஒற்று ரகார [1]ஒற்றாய், ஆவயின் உகரம் வருதல்—அவ்விடத்து உகரம் வருக.

உ-ம்: ஒரு பஃது என வரும்.

நச்.

இது [2]மேற்கூறியவற்றிற் சிலவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

இ-ள்: அவற்றின் முதற்கண் நின்ற இரண்டெண்ணினுடைய னகர ஒற்றும் ணகர ஒற்றும் ரகர ஒற்றாகத் திரிந்து நிற்கும், அவ்விடத்து உகரம் வரும்; எ—று.

உ-ம்: ஒரு பஃது எனவரும். ஒன்றென்பதன் ஈற்றுக் குற்றுகரம் மெய்யொடுங் கெடுத்து னகர ஒற்றினை ரகர ஒற்றாக்கி உகரமேற்றி ஒருவென நிறுத்தி, நின்ற பத்தென்பதன் தகரவொற்றுக் கெடுத்து ஆய்தமாக்கிப் பஃதென வருவித்து ஒரு பஃதென் முடிக்க. மேல் வருவனவற்றிற்குஞ் சூத்திரங்களாற் கூறும் சிறப்பு விதி ஒழிந்தவற்றிற்கு இதுவே முடிபாகக் கொள்க.

சுப்.

"மேல் வருவனவற்றிற்குஞ்...இதுவே முடிபாகக் கொள்க" என்ற தொடர் நச்சினார்க்கினியத்தில் உளது. மேல் வருஞ் சூத்திரங்கள் ஒவ்வொரு எண்ணிற்குமுள்ள சிறப்பு விதியைக் கூறுகின்றமையானும், 'ஒன்று முதல்' (எழு 438) என்ற சூத்திரம் அவற்றின் பொது விதியைக் கூறுகின்றமையானும், இச்சூத்திரம் ஒன்று இரண்டு இவ்விரண்டனைப் பற்றி மாத்திரம் கூறுகின்றமையானும் இத்தொடர் இடைச் செருகல் எனத் தோற்றுகின்றது.

சு. வே:

1 ஒற்றாம்.
2 மேற்கூறியவற்றிற்கு

இரண்டு—மேலும் ஓர் முடிபு

440. இடைநிலை ரகரம் இரண்டென் †எண்ணிற்கும்
நடைமருங் கின்றே பொருள்வயி னான. (34)

ஆ.மொ:

இல.

The middle 'ra' of the number two will not stand there when joining.

க. சு.

The middle sound 'ra' in the number iraṇtu 'two' will not remain there in combination.

பி. இ. நூ.

நன். 189.

இரண்டன் ஒற்று ஏக

இ. வி.. 167

ஷை ஷை

முத்து. 422

ஷை ஷை

இளம்.

இதுவும் அது.

இ-ள்: இரண்டு என் எண்ணிற்கும் இடைநிலை ரகரம் பொருள் வயின் நடை மருங்கு இன்று — அவ் இரண்டு என்னும் எண்ணிற்கும் இடை நின்ற ரகாரம் அம்மொழி பொருளாமிடத்து நடக்கும் இடம் இன்றிக் கெடும்.

உ-ம்: இருபஃது என வரும்.

நச்.

இதுவு அது.

இ-ள்: $இரண்டென்னும் எண்ணிற்கு இடை நின்ற ரகரம், அம்மொழி பொருள் பெறுமிடத்து, நடக்கும் இடம் இன்றிக் கெடும். எ-று.

---

†*$. நச்சினார்க்கினியர் பாடம் எண்ணிற்கு. இச்சூத்திரம் இரு + பஃது → இருபஃது என ஆதற்கு விதி கூறுகின்றது. இதன் முதல் சூத்திரங்கள் ஒன்று, இரண்டு என்பன இறுதியில் உள்ள றுகரமும் டுகரமும் கெட்டு னகர ஒற்றும் ணகர ஒற்றும் ரு எனத் திரிந்து நிற்கும் எனக் கூறின. அவற்றின்படி இரண்டு என்பது இரரு என்றிருக்கும். ஒன்று என்பது ஒரு என இருக்கும். இச்சூத்திரத்தில்

உ-ம்: இருபஃது என வரும். இதற்கு ரகர உயிர்மெய் இதனாற் கெடுத்து ஏனைய கூறியவாறே கூட்டி முடிக்க.

பொருளெனவே எண்ணலல்லாப் பெயரும் கொள்க. இரு கடல் இருவினை இருபிறப்பு என வரும்.

மூன்று ஆறு திரிபு

441. **மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்**
மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும் (35)

ஆ; மொ:

இல.

The long inilial of 'Mūnṛu (three) and
Āṟu will be shorteneb.

க. சு.

The consonant of 'Mūnṟu with change into 'P'
The long (vowele) of the first (syllables) of mūnṟu
'three and āru 'six' will be replaceb by P

பி. இ. நூ.

நன். 188

......மூன்று ஆறு...குறுகும்

190 மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்

இ. வி. 108

ஷை ஷை

முத்து. 423

மூன்றன் மெய்யே பகாரம் ஆகும்.

இளம்.

இதுவுமது.

இ—ள்; மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்—மூன்று எண்ணும் ஆறு எண்ணும் நெடுமுதல் குறுகி முடியும், மூன்றன் ஒற்று பகாரம் ஆகும்—மூன்று என்னும் எண்ணின் கண் நின்ற னகர ஒற்றுப் பகர ஒற்றாய் முடியும்.

இரரு என்பதில் ரகரம் நடைபெறாது கெடும் என்பது சொல்லப்படுகிறது, எனவே இரண்டு என் எண்ணிற்கு என்ற நச்சினயர்க்கினியர் பாடமே நன்று. எண்ணிற்கும் என்ற உம்மை நின்று வற்றுதலின் இளம்பூரணர் பாடம் தவறுடையதே.

உ—ம் முப்பஃது, $அறுபஃது எனவரும்.

நச்.

*இதுவுமது,

இ-ள்: மூன்று என்னும் எண்ணும் ஆறு என்னும் எண்ணும் நெடுமுதல் குறுகி முடியும் எ-று.

உ—ம் 'அறு' எனக் குறுக்கிப் பஃது என வருவித்து அறுபஃது என முடிக்க.

இதுவுமது
இ-ள் மூன்றென்னும் எண்ணின் கண் நின்ற னகர ஒற்று பகர ஒற்றாய் முடியும் எ—று.
உ-ம் முப்பஃது எனவரும்

நான்கன் திரிபு

442 நான்கன் ஒற்றே றகாரம் ஆகும் (36)

ஆ·மொ:

இல.

The consonant of 'Nānku' (four) shal be become 'r'

க சு.

The consonant of nānku 'four' will be repleced
by the sound 'r'

பி·இ· நூ·

நன். 191

நான்கன் மெய்யே...றவாகும்மே

இ. வி. 109

ஷை ஷை

முத்து. 525

நான்கன் மெய்யே றகார மாகும்.

$ அறுபஃது என்னும் உதாரணம் அவரிடம் உள்ள சுவடிகளில் இல்லை என்பர்.

* இதனை இரண்டு சூத்திரமாக்கினார் நச்சினார்க்கினியர். அடிகளாசிரியரிடம் உள்ள சுவடியில் இச்சூத்திரம் தனித் தனி சூத்திரங்களாகவே (இளம்பூரணத்தில்) காணப் படுவதாகக் கூறுவர்.

இளம்

இதுவுமது.

இ—ள் : நான்கன் ஒற்று றகாரம் ஆகும்—நான்கு என்னும் எண்ணின்கண் நின்ற னகாரஒற்று றகரஒற்றாய் முடியும்.

உ—ம் : நாற்பஃது எனவரும்.

நச்.

இதுவும் அது.

இ-ள்: நான்கென்னும் எண்ணின்கண் நின்ற னகரஒற்று றகர ஒற்றாய் முடியும் எ-று.

உ-ம்: நாற்பஃது எனவரும்.

ஐந்தன் திரிபு

443. ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும் (37)

ஆ. மொ.

இல,

The consonant of 'Aindhu' (five) shall beeome 'm'

க. சு.

The consonant of aintu 'five' will be replaeed by the sound 'm'

பி. இ. நூ.

முத்து. 425.

ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்.

இளம்.

இதுவும் அது.

இ—ள்; ஐந்தன் ஒற்று மகாரம் ஆகும்—ஐந்து என்னும் எண்ணின் கண் நின்ற நகார ஒற்று மகார ஒற்றாய் முடியும்.

உ-ம்: ஐம்பஃது என வரும்.

ஆறன் நெடுமுதல் குறுகியவாறே நின்று அறுபஃது என வரும். *ஏழு குற்றுகர வீறு[1] அன்றாம்.

நச்.

இதுவுமது.

இ-ள்: ஐந்து என்னும் எண்ணின் கண் நின்ற நகர ஒற்று மகர ஒற்றாய் முடியும்; எ-று.

உ-ம்: ஐம்பஃது என வரும்.

*ஏழு குற்றியலுகர ஈறு அன்மை உருபியலுட் காண்க.

---

* * இவ்விரண்டு தொடர்களையும் இடைச் செருகலாயிருக்கலாம் என்பர் சாஸ்திரியார்; ஏற்புடையதே.

சு. வே: 1. அன்று.

எட்டின் திரிபு.

444. எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும். (38)

ஆ. மொ.

இல:

The consonant of Ettu shall become 'ṇ'

க. சு.

The consonant of Ettu 'eight' will be replaced by the sound 'ṇ'

பி. இ நூ.

முத்து. 426.

எட்டன் உடம்பே ணவ்வாகும் என்ப.

இளம்.

இதுவுமது.

இ-ள்: எட்டன் ஒற்று ணகாரம் ஆகும்—எட்டு என்னும் எண்ணின் கண் நின்ற டகார ஒற்று ணகார ஒற்றாய் முடியும்.

உ-ம்: எண்பஃது எனவரும்.

நச்.

இதுவுமது.

இ-ள்: எட்டென்னும் எண்ணின்கண் நின்ற டகர ஒற்று ணகர ஒற்றாய் முடியும்; எ-று.

உ-ம்: எண்பஃது என வரும்.

ஒன்பதின் திரிபு

445. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
***பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட**
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகாரம் ஆகும். (39)

---

* *இராஜம் வெளியீட்டில் பத்தென் கிளவி என்ற பாடம் உள்ளது தவறு. ஆய்த பகரம் கெட என வருதலின் பஃதென் கிளவி என்பதே நன்று.*

ஆ.மொ.
இல.

'Th' will join 'o' of 'onbān'
The consonant succeeding 'o' becomes 'ṇ' being doubled.
The 'Āytham' and 'p' of the word
'pa∴dhu' having disappeared;
'U' appears and the consonant 'th' becomes 'ṛ'

க.சு.

The sound t will combine with the sound o
of onpān, the consonant succeeding (o)
will become double ṇṇ, the ū-sound must be inserted, (and)
the consonant t will be replaced by ṛ.

பி. இ. நூ.

நேமி. 21,

ஒன்பானொடு பத்து...ஓதுங் காலை
முன்பாந் தகரம் ண...முன் பிரட்டும்—பின்பான
எல்லாங் கெட்டு ஆறு...ஆவியின் பின் வல்லுகரம்
...ஈறாய் நாட்டு.

நன். 194.

ஒன்பானொடு பத்து...ஒன்றில்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு
தகரம் நிறீஇப் பஃதகற்றி னவ்வை
...ண...வாகத் திரிப்பது நெறியே.

முத்து. 444.

ஷை ஷை

இ வி. 112.

ஒன்பானொடு பத்து...ஒன்றின்
ஒன்றிய...ஊறும்...
என்று திரிய இறுதிய கெடுவழி
நின்ற னகரம்...ண...ஆய்
இரட்ட ஒகர மிசைத் தகரம் ஒற்றும்.

இளம்-

இதுவும் அது.

இ—ள்: ஒன்பான் ஒகரமிசை தகரம் ஒற்றும்—நிலை மொழி யாகிய ஒன்பது என்னும் சொல்லின் ஒகரத்திற்கு மேலாகத் தகரம் ஒற்றாய் மிக்கு வரும், முந்தை ஒற்று ணகாரம் இரட்டும்—முன் சொன்ன ஒகரத்தின் முன்னர் னகர ஒற்று இரண்டு ணகர ஒற்றாய் மிக்கு வரும், பத்து என் கிளவி பகர ஆய்தம் கெட ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும்—வருமொழியாகிய [1]பத்து என்னும் சொல் தன் கண் பகரமும் ஆய்தமும் கெட நிலை மொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர் ஊகாரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும்; ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்—வருமொழி யாகிய பத்து என்பதன் ஈற்றதன் மேல் ஏறிய உகரம் கெடாது [2]பிரிந்து நிற்ப ஒற்றாய் நின்ற தகரம் றகார ஒற்றாகும்;

இஃது, ஒன்பதும் பத்தும் என நின்றால் [3]முடியற்பால இன்ன என்பது. பகர ஆய்தம் என்னாத முறையன்றிய கூற்றினான். நிலை மொழிக்கண் பகரக்கேடும் கொள்க. குற்றியலுகரமும் அஃது ஏறிய மெய்யும் முன்னர் மாட்டேற்றாற் கெட்டன.

உ-ம்: தொண்ணூறு என வரும்.

நச்.

இஃது எய்தாதது எய்து வித்தது.

இ—ள்: ஒன்பது என நிறுத்திப் பஃது என வருவித்து முடிக்குங்கால் நிலைமொழியாகிய ஒன்பது என்னும் எண்ணினது ஒகரத்திற்கு முன்னாக ஒரு தகர ஒற்றுத் தோன்றி நிற்கும்; முன் சொன்ன ஒகரத்திற்கு முன்னர் நின்ற னகர ஒற்று ணகர ஒற்றாய் இரட்டித்து நிற்கும்; வருமொழியாகிய பஃது என்னும்சொல் தன் கண் ஆய்தமும் பகரமும் கெட்டுப்போக, நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர் ஊகாரமாகிய எழுத்து வந்து நிற்றலை ஆசிரியன் விரும்பும்; வருமொழியாகிய பத்து என்பதன் ஈற்றின்மேல் ஏறிய உகரங்கெடாது பிரிந்து நிற்ப ஒன்றாய் நின்ற தகரம் றகர ஒற்றாய் நிற்கும்; எ—று.

உ—ம்: தொண்ணூறு என வரும்.

இதனை ஒற்றாய் வந்து நின்ற தகர ஒற்றின்மேல் நிலை மொழி ஒகரத்தை ஏற்றித் தொவ்வாக்கி, ணகர ஒற்று இரட்டி,

---

சு. வே:

1. பஃது
2. பிரித்து ஒற்றாயதகரம் றகரஒற்றாம்.
3. முடியற்பாலவாறு, என்றவாறு.

அதன்மேல் வருமொழிக்கட் பகரமும் ஆய்தமும் கெட வந்த ஊகாரம் ஏற்றித் தொண்ணூறாக்கிப் 'பகர' ஆய்தம் என்னாத முறையன்றுக் கூற்றினான் நிலைமொழிக்கட் பகரமும் ஆய்தமும் கெடுத்துக் குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுத்து வருமொழி இறுதித் தகர ஒற்றுத் திரிந்து நின்ற றகர ஒற்றின்மேலே நின்ற உகரம் ஏற்றித் தொண்ணூறு எனமுடிக்க.

சுப்.

"ஒன்றுமுதலாகப் பத்தூர்ந்து வரூஉம் (எழு. 200) என்ற சூத்திரத்தானும், 'ஒன்பதிற்றெழுத்தே' (எழு. 171) என்ற ஆசிரியர் வழக்கானும் இச்சூத்திரத்தாற் கூறப்பட்ட நிலைமொழி ஒன்பஃது' என அறிக.

ஆகலின் 'ஒன்று குறைந்த பத்து' ஒன்பது ஆகும் என்பது அவரது கொள்கையெனத் தெரிகிறது.

'பகர ஆய்தம் என்னாத முறையன்றிய கூற்றினான் நிலைமொழிக்கண் பகரக் கேடும் கொள்க" என இளம்பூரணரும், "பகர வாய்தம் என்னாத முறையன்றிக் கூற்றினான் நிலைமொழிக் கண் பகரமும் ஆய்தமும் கெடுத்து" என நச்சினார்க்கினியரும் கூறினர். ஆசிரியர் குறைவுபடச் சூத்திரித்தனர் எனக் கொள்வதைக் காட்டிலும் 'பத்தென் கிளவி' என்பது ஒன்பஃது, பஃது இரண்டிலும் இருப்பதைக் குறிக்கின்றது எனக் கொள்ளலாம்.

வேங்.

நிலைமொழியாகிய 'ஒன்பஃது' என்னும் எண்ணிலுள்ள 'து' என்பது, மேல், 'ஒன்றுமுதல் ஒன்பான்' என்ற சூத்திரத்தாற் கெட்டது. ஆசிரியர் 'பஃதென் கிளவி ஆய்த பகரம் கெட' என்றதற்கு உரைகாரர் 'பஃது என்னுஞ் சொற்களிரண்டினும் உள்ள ஆய்தமும் பகரமும் கெட' என்று உரை கூறாராய், அது வருமொழியிலுள்ள ஆய்தத்தையும் பகரத்தையும் குறித்ததாகக் கொண்டு உரை கூறினமையின், 'பகர ஆய்தம் என்னாத முறையன்றிக் கூற்றினான் நிலைமொழிக்கட் பகரமும் ஆய்தமும் கெடுத்து'...முடிக்க' எனல் வேண்டுவதாயிற்று.

இச்சூத்திரம் 'தொண்ணூறு' என்பது ஒன்பஃது + பஃது என்னும் சொற்களாலாயது என்று கருதி, அவை அவ்வாறு தொண்ணூறு என்றாதற்கு வேண்டியவாறு விதி கூறியதேயன்றி, அச்சொல்லின் உண்மைத் தன்மையை உணர்த்தியதன்று. என் எனின், ஒருமொழியோடு பிறிதொரு மொழி கூடுமிடத்து, அவ்

விருமொழிகளும் அறவே கெட்டுப் பிறிதொன்றாதல் இன்று. ஒன்பஃது, பஃது என்னும் இருமொழிகளிலும் உள்ள எழுத்துக்களுள் ஒகரம் ஒன்றுதவிர, வேறே ஒரெழுத்தேனும் தொண்ணூறு என்பதில் இல்லையன்றே? இளம்பூரண அடிகள், 'இஃது ஒன்பஃதும் பஃதும் என நின்றால் முடியற்பால என்பது' என்றே எழுதினார். இவற்றால் இச்சொல்லின் உண்மைத் தன்மை இஃதன்று என்பது துணிபு.

இனி நன்னூலார்,

ஒன்பா னொடுபத்தும் நூறும் ஒன்றின்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு
தகரம் நிறீஇப் ப·.தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே

என்று கூறியுள்ளார். அவர் கூறிய விதிப்படி வருமாறு :

ஒன்ப·.து + ப·.து

1 ஒன்ப·.து + நூறு
2 தொன்பது + நூறு
3 தொன் + நூறு
4 தொண் + நூறு→ தொண்ணூறு

என வரும. ஈண்டு வருமொழியாகிய பத்தனை நூறு ஆக மாற்றியதன் காரணம் யாது? நிலைமொழியின் முதலில் தகர மெய் வருதல் ஏன்? நிலைமொழியிலுள்ள பஃது என்பது முழுவதும் கெடுதல் ஏன்? இவற்றால் இதுவும் பொருந்தாததே யாதல் தெளிவாகும். இதனையறிந்த இலக்கண விளக்க நூலார்,

ஒன்பா னொடு பத்தும் நூறும் ஒன்றின்
ஒன்றிய இரண்டும் ஊறும் ஆயிரமும்
என்று திரிய இறுதிய கெடுவழி
நின்ற னகரம் நிரலே ணளவாய்
இரட்ட ஒகரமிசைத் தகரம் ஒற்றும். (உயிரீற். 60)

என்று கூறினார். அவர் கூறியதன்படி வருமாறு:

ஒன்பஃது + பஃது

1 ஒன்பஃது + ஊறு
2 ஒன் + ஊறு
3 ஒன்ன் + ஊறு
4 தொண்ண் + ஊறு→ தொண்ணூறு.

எனவரும். நன்னூலார் பத்தனை நூறாகத்திரிக்க என்றார். அவர் கூறியது வழு என்று வேறு விதிகூறிய இலக்கண விளக்கத்தார், 'பஃது' என்னும் வருமொழி 'ஊறு' என்று திரியும் என்று கூறியது வழுவாகாதவாறு என்? இஃது அதனினும் வழுவன்றோ?

நேமிநாத நூலர்,

ஒன்பா னொடுபத்து நூறுதனை யோதுங்கால்
முன்பாந் தகரணள முன்பிரட்டும்—பின்பான
எல்லாங்கெட் டாறிரண் டாவியின்பின் வல்லுகரம்
நல் ஆயிரம் ஈறாய் நாட்டு (எழுத்து. 21)

என்று விதித்தார். அவர் கூறியபடி வருமாறு.

ஒன்பஃது + பத்து
1 தொன்ப.·.து + பத்து
2 தொண்ண்ப∴து + பத்து
3 தொண்ண் + ஊ
4 தொண்ணூ + று → தொண்ணூறு.

என வரும். ஈண்டு, நிலை மொழியிலுள்ள ப.·.து என்பதும் வருமொழி முழுவதும் கெட்டதன் காரணம் யாது? னகரமெய் ணகர மெய்யாகத் திரிந்து இரட்டுதல் ஏன்? முதலின் தகர மெய்யும், பின்னர் ஊகார உயிரும், அதன்பின், றுகரமும் தனித் தனியே வருதற்கு நியாயம் என்?

இக்கூறியவாற்றால் தொல்காப்பியனார் முதலிய இலக்கண நூலார் அனைவரும் கூறியது அமைவுடையதாகத் தோன்றவில்லை என்பது எளிதின் விளங்கும்.

தொண்டு என்பது ஒன்பதனைக் குறித்து வருஞ் சொல்லாகலின், அதனோடு நூறு என்பது சேர்ந்து தொண்ணூறு ஆயிற்று என்று அமைக்கலாம் என்று 'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூல் கூறுகின்றது. அவ்வாறாயின், 'தொண்ணூறு' என்பது ஒன்பது நூற்றைக் குறிக்க வேண்டும். அ.·.து ஒன்பது பத்தனைக் குறிக்கலாகாது. இதனால் அது கூறுதலும் பொருந்தாதாகும். இனி, வேறு சிலர், தொண்ணூறு என்பது குறைந்தநூறு; அ.·.தாவது நூற்றிற் குறைந்தது என்கின்றனர். தொள் என்பதற்குக் குறை என்னும் பொருள் நேர் பொருளாய் இல்லை.

தொண்ணூறு என்பது முன் உள்ள நூறு (தொள்+நூறு); அஃதாவது நூற்றுக்கு முன் இருப்பது என்று கேரள பாணினீய

ஆசிரியர் கூறுகின்றார். இவ்வாறாயின், தொன்னூறு, தொல்லாயிரம் என்று வருமேயன்றி, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்று வாராதன்றே? அவர், ஒன்பது என்னுஞ் சொல் 'தொன்பது' என்பதன் சிதைவு என்று கொண்டார், தெலுங்கில் 'தொம்மிதி' என்று வழங்குதலானும், 'தொன்பது' என்பதற்கு 'பத்தற்கு முன் இருப்பது' என்னும் பொருள் ஓராற்றால் தருதலானும் அதுவே அமைதியான சொல்லாகும் என்பது அவர் கருத்து.

இனி 'விடு' என்னும் சொல்லிற்கு 'விள்' என்பதுவும், 'நடு' என்னும் சொல்லிற்கு 'நள்' என்பதுவும் முதல் நிலையாய் இருத்தலின், 'தொடு' என்னுஞ் சொல்லிற்குத் 'தொள்' என்பது முதல் நிலையாகும். ஆகலின், தொண்ணூறு என்பது நூற்றைத் தொடுவது என்னும் பொருளதாகலாம். இதுவும் சிறப்பதா இல்லை; பொருந்துமேற் கொள்க.

வெள்.

"பஃதென்கிளவி ஆய்தபகரம் கெட" என்பதற்கு, 'நிலைமொழிக் கண்நின்ற பஃது என்னும் சொல்லும் வருமொழியிற் பகரமும் ஆய்தமும் கெட்டுப் போக" எனப் பொருள் கொள்ளாது, வருமொழியாகிய பஃது என்னுஞ் சொல் தன் கண் ஆய்தமும் பகரமும் கெட்டுப்போக எனப் பொருள் கூறி, நிலைமொழிக்கண் பஃதென்னுஞ் சொற் கெடுதலைப் 'பகர வாய்தம்' என்னாத முறையன்றிக் கூற்றினாற் கொள்வர் உரையாசிரியர். ஆசிரியர் 'ஒன்பஃது' என நிறுத்திப் 'பஃது' என்பதனை வருவித்து வேண்டுஞ் செய்கை செய்து இச்சூத்திரத்தின் முடிக்கின்றார் ஆகலின் ஒன்பஃதென்பதிற் பஃதென்னுஞ் சொற் கெடுதலைப் பகர வாய்தம் என்னாத முறையன்றிக் கூற்றினாற் கொள்ள வைத்தார் என்றல் பொருந்தாது.

சிதம்பர இராமலிங்க சுவாமிகள்

"வியாகரணம்—தொல்காப்பியம்—பாணிநீயம் முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில்:—தொண்ணூறு, தொள்ளாயிரம் என்கின்ற கணிதத்தின் உண்மை *நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று, இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்

* சொல்லிய இடம் வகை முதலியன அறியக் கூடவில்லை,

களுக்கு உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல் + நூறு = தொண்ணூறு என்றும், தொல் + ஆயிரம் = தொள்ளாயிரம் என்றும் வழங்கு கின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொககியது. தொன்மை—தொல்லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளா யிரம், தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரம் என்றும், ஒன்று குறைந்த பத்து என்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னது போல் சொன்னால் சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும். (உபதேசம்.)‡

வை. தங்கமணி

* முதற்கண் தொல்காப்பியர் நூற்பாவினை நோக்குங்கால் ஒன்பது + பஃது என்று இளம்பூரணர் பிரித்திருப்பதை விட, நச்சினார்க்கினியர் பிரித்திருப்பதுபோல ஒன்பஃது + பஃது எனப் பிரிப்பதே சிறப்புப்போலத் தோன்றுகிறது. ஆகையால், ஒன்ப்ஃது + ப்ஃது எனப் பிரித்து,

> 'ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்' என்பதால் த் + ஒ = தொ என்றாக்கி, தொன்பஃது + பஃது என்றாக்கி, 'முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும் என்பதால் 'தொ' என்ற எழுத்தையடுத்து நிற்கும் னகர வொற்று ணகர வொற்றாக இரட்டிக்க, 'தொண்ணபஃது + பஃது என்றாக்கி, 'பஃதென்

‡ திருவருட்பா—ஐந்து திருமுறைகள். பக். 75. வள்ளலார் பதிப்பகம், 53/54, பெரம்பூர் பாரக்ஸ்ரோடு, சென்னை-7 (1964).

இன்றைய ஆய்வாளர்க்கு முன்னமே முன்னோடியாக இராமலிங்க சுவாமிகள் விளங்கியிருந்தமை இதனால் புலப்படும்.

* வை. தங்கமணி தொண்ணூறு என்னும் கட்டுரையில் எழுதியுள்ள உரையிது. அக்கட்டுரை கையெழுத்துப் படியாக டாக்டர் ஏ. என். பெருமாள் மூலம் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஒன்பஃது + பஃது என நன்னூலார் பிரித்து 'ஒன்பா னொடு பத்தும் நூறும் ஒன்றின்' (நன். 194) என்னும் சூத்திரம் இயற்றினார்.

கிளவி ஆய்த பகரங் கெட' என்னுந் தொடரை உம்மைத் தொகையாக்கி—(பஃதென் கிளவியும் ஆய்த பகரமும் கெட) நிலைமொழியில் நிற்கும் பஃது என்னும் கிளவியும், வரு மொழியில் நிற்கும் பகரமும் ஆய்தமும் கெடுத்து, தொண்ண் + து என்றாக்கி, 'நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி' என்பதால் தொண்ண் + ஊ + து என்றாக்கி, 'ஒன்றிய தகரம் றகரமாகும்' என்பதால் இறுதியில் நிற்கும் தகர ஒற்றினை றகர ஒற்றாக மாற்றி, தொண்ண் + ஊ + ற் + உ என்றாக்க வேண்டும். ஆக்க ணகர வொற்றில் ஊகார உயிர் ஏற, றகர வொற்றில் உகர உயிர் ஏறத் தொண்ணூறு என் றாகும்'

இவ்வாறு பிரித்துப் புணர்ப்பதால் எந்தவித குழப்பமும் நேராது.

தேவநேயப் பாவாணர்.

இந்நூற்பா ஒன்பது + பஃது = தொண்ணூறு என முடிக் கின்றது. இம்முடிபு எவ்வகையினும் பொருந்தாத தொன்றாம். ஒன்பது என்னும் எண்ணுக்குப் பழம்பெயர் 'தொண்டு' என்பது, 'தொண்டு தலையிட்ட' (தொல். 1358) என்று ஆசிரியரும், 'தொண்டுபடுதிவவு' (மலைபடு. 21) என்று பெருங்குன்றூர்ப் பெருங் கவுசிகனாரும் கூறுதல் காண்க. தொண்டு என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது. அவர் காலத்திற்கு முன் தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன முறையே 9, 90, 900, 9000 என்னும் எண்களைக் குறிக்கும் பெயர்களாய் இருந்தன. 'தொண்டு' என்னும் ஒன்றாம் இடப்பெயர் வழக்கறவே, 'தொண்பது' என்னும் பத்தாம் இடப்பெயர் ஒன்றாம் இடத்திற்கும், தொண்ணூறு என்னும் நூறாம் இடப்பெயர் பத்தாமிடத்திற் கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரத்தாமிடப்பெயர் நூறாம் இடத்திற்குமாக வழங்கத் தலைப்பட்டன. தொண்பது என்னும் பெயர் முறையே தொன்பது ஒன்பது என மருவிற்று. ஆயிரத்தா மிடப்பெயர் நூறாமிடத்திற்கு வழங்கவே 9000 என்னும் எண்ணைக் குறிக்க 'ஒன்பது' என்னும் பெயருடன் 'ஆயிரம்' என்னும் பெயரைச் சேர்க்க வேண்டியதாயிற்று. முதற்பத்து எண்ணுப் பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர, மற்றவை யெல்லாம் ஒரு சொல்லாய் இருப்பதையும், 'ஒன்பது' என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும்,

'தொண்ணூறு' என்பது 'நூறு' என்றும், 'தொள்ளாயிரம்' என்பது ஆயிரம் என்றும் முடிவதையும் நோக்குக. 'தொண்பது' என்பதின் திரிபான 'ஒன்பது' என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறைபற்றி 'ஒன்று குறைந்த பத்து' என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றிற்கும் அப்பொருள் ஏற்க வேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலியுரை என மறுக்க.

ஆகவே, தொண்டு + பத்து = தொண்பது, தொண்டு + நூறு தொண்ணூறு, தொண்டு + ஆயிரம் தொள்ளாயிரம் என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப் பெயர் வழக்கற்றதினால் அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோரிடமாய்த் தாழ்ந்து வந்து வழங்கின என்றும் அறிந்து கொள்க.

சுந்தர-சண்முகனார்

சுந்தர—சண்முகனார் *'தொண்ணூறும் தொள்ளாயிரமும்' என்னும் தமது ஆய்வு நூலில் கூறியிருப்பதன் கருத்துச் சுருக்கம் வருமாறு.

ஒன்பது: ஒன்று குறைந்த பத்தின் சுருக்கமே ஒன்பதாகும்' பேரெண்ணின் குறைந்த அடுத்த எண்ணைக் குறிக்கும்போது உலக வழக்கில் 'ஒன்றுகுறையப் பத்து' என ஒன்பதையும், 'பத்துக் குறைய நூறு' எனத் தொண்ணூற்றையும் குறிப்பிடுவர். (இப்படியே பிறவற்றையும்) இலக்கிய (இலக்கண) வழக்கிலும் காணலாம், 'ஒன்றொழி முந்நூற்றெழுபான்' என நன்னூலாரும் கூறினர். எனவே ஒன்று குறையப் பத்து என்பதற்கு ஆளப் பட்ட சொல்லே 'ஒன்பது' ஆகும்.

ஒன்று, இரண்டு மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து என எண்களுக்குத் தனித் தனிச் சொற்கள் அமைந்தவை போலவே 'ஒன்பது' என்பதற்கும் 'தொண்டு' என்னும் தனிச் சொல் இருந்தது. 'ஒன்று குறையப் பத்து என்னும் கருத்துடைய 'ஒன்பது' என்பது வந்தபோது தொண்டு என்பது உலகவழக்கில் மறையலாயிற்று. காரணம் தொண்டு என்பதற்கு வழக்கிலும் செய்யுளிலும் ஆட்சியிலிருந்த பொருள்களேயாம். அது அடிமைத்

---

* தொண்ணூறும் தொள்ளாயிரமும்—சுந்தர-சண்முகனார் புதுவைப் பைந்தமிழ் பதிப்பக வெளியீடு (1971)

தன்மை, பணி, தொழுவம். கடவுள்வழிபாடு முதலிய பல பொருள்களுடன் 'ஒழுக்கங் கெட்டவன் (ள்)' என்னும் இழிபொருளிலும் வழங்குவதாயிற்று. அதனால் மக்களாட்சியிலிருந்து 9 என்னும் எண்ணைக் குறிக்கத் 'தொண்டு' இருந்த இடத்தில் 'ஒன்பது' என்பது ஆட்சி பெறுவதாயிற்று.

இலத்தீன் மொழியில் ஒன்றுகுறைந்த பத்து என்னும் வழக்கு உண்டு. X இது பத்தைக் குறிக்கும். IX இப்படி பத்துக்கு முன் ஒன்றை இட்டால் ஒன்பதைக் குறிக்கும். இதுபோல ஒன்பதைக் கொள்ளலாம். (பத்து—ஒன்று = ஒன்பது)

தொண்ணூறு: இச்சொல் குறைந்த நூறு என்னும் பொருள் தரும். 'தொள்' என்பதற்குக் குறைக்கப்பட்டது என்பது பொருள் (தொஸ்—துளைத்தல், குறைத்தல்). பத்தில் ஒன்று குறைந்தது ஒன்பது ஆனாற்போல, நூறில் ஒரு பகுதி (10X10 = 100—10 = 90) குறைந்தது தொண்ணூறு எனவும், ஆயிரத்தில் ஒரு பகுதி (10X100 = 1000—100 = 900) குறைந்தது தொள்ளாயிரம் எனவும் ஆயின. எனவே தொல்காப்பியர் கூறிய விதிகளுக்கு மாறாகத் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பனவற்றைத் தொள் + நூறு→ தொண்ணூறு என்றும், தொள் + ஆயிரம்→ தொள்ளாயிரம் என்றும் எளிதில் பிரித்துப் புணர்க்கலாம்

மறுப்பு: (1) சிலர், பழங்காலத்தில் ஒன்று முதல் ஒன்பது வரையுமே எண்கள் இருந்தன என்பதைத்தான் பத்து என்ற சொல்லால் குறித்தனர். எட்டு, பத்து என்றே எண்ணினர். பத்து என்பது 9—ஐயும் பத்துப் பத்து நூறு எனப் பெருக்கும்போது (9X9 = 81) நூறு என்பது எண்பத்தொன்றையும், ஆயிரம் என்பது (81X9 = 729)எழுநூற்றிருபத்தொன்பதையும் குறித்தன என்பார். புதியதாக 9 என்னும் எண் முளைத்த பின்னர் இன்றுள்ள எண் முறைகள் 1, 5, 3, 4, 5, 6 7, 8, 9, 10 எனக் குறிக்கப்பட்டன; முதலில் பத்து எனக் குறிக்கப்பட்ட 9 என்பது தொல்பத்து எனப் பட்டது. அதுவே தொன்பதாகி ஒன்பதாயது என்று கூறுவர் அவர். தொல் + நூறு→ தொண்ணூறு தொல் + ஆயிரம் = தொள் ளாயிரம் என ஆயின என்பர். இதைச் சுந்தர—சண்முகனார் பின் வருமாறு மறுப்பர்.

தொல் பத்து என்பது தொன்பது என்று மாறலாம். ஒன்பது என்று மாறமுடியாது. தொல் (தொன்மை) நூறு→ தொன்னூறு எனவும். தொல் + ஆயிரம்→ தொல்லாயிரம் எனவும் மாற முடியுமே தவிர தொண்ணூறு, தொள்ளாயிரம் என்று மாற

முடியாது. அக்காலத்து மக்கள் (இன்றுகூட) எண்ணும்போது கை விரல்களை மடக்கி, நிமிர்த்தி எண்ணும் வழக்கம் உடையர். பத்து விரல்களையுடையவர்கள் எட்டு விரல் மடக்கிப் பின்னர் ஒன்பதாவது விரலை மடக்கியதும் எண் அத்துடன் முடிவதானால் பத்தாவது விரலை என்னென்று மடக்குவர்? பத்து விரல்கள் அமைந்த நிலையே எண் பத்து என்பதை முடிவாகக் கொண்டது தான் என உணரலாம் ஆதலின் அவர் கூற்றுப் பொருந்தாது.

(2) தொண்டு (9) தொண்பது (90) தொண்ணூறு (900) தொள்ளாயிரம் (9000) என இருந்த வரிசை தொன்பது (90) என்பது ஒன்பதுக்கு (9) ஆகிவிட்டமையின் மேலுள்ள எண்கள் படிப்படியாக இறங்கி விட்டன எனப்பாவணர் கூறுவர்.

"தொண்டு + ஆயிரம் → தொண்ணாயிரம் என்றல்லவா ஆக வேண்டும்? தொண்டு என்னும் சொல் வழக்கற்றுப் போனால். தொண்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள், அப்படியே இல்லாமல் ஒவ்வொருபடி ஏன் குறைந்து வர வேண்டும்? இஃது இயற்கைக்குப் பொருத்தமாகத் தெரியவில்லையே"

இரா. அரங்கசாமி

பத்தும் ஒன்றும் கூடிப் பதினொன்று ஆவது போலப் பத்தில் ஒன்று குறைதலைஒன்பது எனல் ஒருவாறு பொருந்தும்... தொண்ணூறு, தொள்ளாயிரம் தொம்மிதி (தெலுங்கு) என்னும் சொற்களை ஆராயுங்கால் தொன்மை என்னும் பொருளில் 'மை' விகுதி கெட்ட 'தொல்' என்பதே இவ்வெண்ணுப் பெயர்க்கு நிலை மொழியாக இருக்க வேண்டும் எனக் கொள்ள நேரிடுகிறது. ......இதற்குப் பொருள் காணுங்கால் பத்து என்பதற்குப் பழமையானதே எனக் கொள்ளலாம். தொல் + மிதி → தொம்மிதி என்று தெலுங்கு மொழியில் வழங்குவதும் ஈண்டுத் தக்க சான்றாக அமையும். இந்தத் தொல் என்னும் நிலைமொழி 'டு' என்ற விகுதி பெற்றுத் 'தொண்டு' எனப் பழைய இலக்கியங்களில் காணப்படுகின்றது. தெலுங்கில் 'தொலிவாரமு' என்பதற்கு வாரத்தில் முதல்நாள் என்றும் 'தொலிநாடு' என்பதற்கு முந்திய நாள் என்றும் 'தொலிபிட்டா' என்பதற்கு 'முதற் பிள்ளை' என்றும்பொருள் உள்ளதை அறிக. தமிழில் 'பத்துக்கு முந்தியது' என்பதே 'ஒன்பது' என அமைவது பொருளடிப்படையில் மிகச் சிறப்பான நிலையைக் காட்டும் என்பது மொழிநூல் தெளிபு.....

'தொண்டு' என்ற சொல் 'ஒன்பது' என்ற மதிப்பைக் குறிக்கும் சொல்லாக வழங்குவதால் 'தொள்' என்ற அடிச்சொல்

'து' என்ற விகுதி பெற்றுத் 'தொண்டு' என ஆயிற்றோ என்று எண்ண வேண்டியுளது. ஈண்டுத் 'தொள்' என்பதற்கு 'ஒன்பது' எனப் பொருள் கொண்டால் தான் தொண்ணூறு, தொள்ளாயிரம் போன்ற எண்களை உருவாக்க முடியும். (தமிழ்மொழி வரலாறும் ஒப்பிலக்கணமும் பக். 301—305)

மு. வை. அரவிந்தன்

எண்	உரிய இடம்	உள்ள இடம்
9	தொண்டு	ஒன்பது
90	தொன்பது	தொண்ணூறு
900	தொண்ணூறு	தொள்ளாயிரம்
9000	தொள்ளாயிரம்	ஒன்பதினாயிரம்

இவற்றை நோக்கினால் பின் வரும் உண்மைகள்புலப்படுகின்றன.

1. தொண்டு (9) என்னும் சொல் மறைந்து விட்டது.
2. தொண்பது (90) வழக்கில் இல்லை.
3. தொண்ணூறு (900) என்னும் சொல்லிற்குரிய இடத்தை இன்று தொள்ளாயிரம் பற்றிக் கொண்டுள்ளது.
4. தொள்ளாயிரம் (9000) என்னும் சொல்லுக்குரிய இடத்தில் ஒன்பதாயிரம் என்னும் சொற்றொடர் உள்ளது.

இந்த முடிவுகளை நோக்கும் போது 'தொண்டு' என்னும் சொல் மறைந்து விட்டதால் அதன் இடத்தைத் தொண்பது என்று கருத வேண்டியுளது. காலப்போக்கில் தொன்பது என்னும் சொல் ஒன்பது என்று திரிந்தது; ஏனைய திராவிட மொழிகளில், 9 என்னும் எண்ணைக் குறிக்க வழங்குகின்ற சொற்களை நோக்குதல் வேண்டும்

இப்போதுள்ள குழப்பத்தை மாற்றி மீண்டும்அந்த எண்ணுப் பெயர்களை முன்னைய நிலைக்குக் கொண்டு சென்றால் பின் வருமாறு அவை அமையும்.

9—தொண்டு
99—தொண்பத்தொண்டு
999—தொண்ணூற்றுத் தொண்பத் தொண்டு
9999—தொள்ளாயிரத்துத்தொண்ணூற்றுத் தொண்பத்தொண்டு

இத்தகைய வழக்கை இனிமேல் கொண்டு வந்து வாழச் செய்ய இயலாது. (மொழியியல் சிந்தனைகள் பக். 63—66)

இரா மதிவாணன்

ஒன்பது, ஒன்று குறை பத்து என்பது பொருந்தாது ஆயின் ஒல்+பத்து—ஒன்பத்து—ஒன்பது. (ஒல்—சுருங்கு). சுருங்கிய பத்து —பத்தின் குறை எண் என்று பொருள் கொண்டால் ஒருகால் பொருந்தும்........

வரிசை முறைப்படி (எட்டுக்கு அடுத்த எண்ணாகத்) தொண்டும், பத்துக்குக் குறைந்த நிலைமை கருதி ஒன்பதும் தோன்றியிருத்தல் வேண்டும். ஏழேழ், எண்ணெண் என்று இரட்டித்துக் கூறுவது போல,

தொண்டுத் தொண்டு, தொண் தொண், தொத்தொண்டு எனக் கூற முடியாமையாலோ அல்லது அத்தகைய வழக்கு வீழ்ந்துபட்டமையாலோ 9 X 9 என இரட்டித்துக் கூறவேண்டிய விடத்து, ஒன்பதிற்றொன்பது எனுஞ் சொல்லாட்சி நமக்குக் கிடைக்காததால், தொண்டு, ஒன்பது தோன்றுவதற்கு முன்பிருந்த சொல் என்று தெரிகிறது.

தொண்டு எனும் சொல்லுக்குரிய பல பொருள்களில் அடுத்து நிற்றல், முழு எண்ணிலிருந்து சற்று விலகி நிற்றல், பெரிய எண்ணைத் தொட்டு நிற்றல் ஆகிய பொருள்கள் மட்டும் இங்குக் கொள்ளத் தக்கனவாய் உள்ளன

தொள் (விலகு, பெரிதாகு) தொடு (நெருங்கு; சிறிதாகு) இவ்விரு சொற்களின் பொருளையும் (நெருங்கியும் விலகியும் இருத்தல்) தன்னுட் கொண்டு பத்திலிருந்து விலகியும் நெருங்கியும் இருக்கும் தொண்டு என்னும் எண்ணுப் பெயரைத் தமிழ் மக்கள் மிக அழகாகத் தெரிந்தெடுத்து ஒன்பதுக்கு இட்டிருக்கிறார்கள்.

ஒரே எண்ணுக்கு இருபெயர்கள்:

9	90	900	9000
தொண்டு ஒன்பது	தொண்பத்து (தொண்டு+ பத்து = தொண் ணூறு	தொண்மன் நூறு (தொண்டு +மன்+நூறு தொள்ளாயிரம்.	தொண்டாயிரம் ஒன்பதாயிரம்

ஒரே வேர்ச் சொல்லின் இரண்டு சொற்கள் ஒரு பொருளைக் குறித்து நிற்கும் போது ஒன்று நின்று மற்றையது வழக்கிழந்து போவது இயல்பானதே.

தொண்ணூறு எனும் சொல் நூற்றை விட்டு விலகியும் நெருங்கியும் இருக்கும் எண் என்னும் குறிப்பால் பத்துப் பத்தாக

எண்ணிக் கொண்டு வரும் போது, ஒன்பது பத்தாகிய தொண்ணூறு நூற்றிலிருந்து ஒருபத்தால் விலகியும், ஒன்பது பத்துகளாகி நூற்றை நெருங்கியும் இருத்தல் வெளிப்படை.

தொள்ளாயிரமும் இவ்வாறே ஆயிரத்தை விட்டு விலகியும் நெருங்கியும் இருக்கும் எண் என்னும் குறிப்பால் ஆயிரம் ஆயிரமாக எண்ணிக் கொண்டு வரும் போது ஒன்பது நூறுகளாகி (தொள்ளாயிரம்) ஆயிரத்திலிருந்து ஒரு நூறால் விலகியும் ஒன்பது நூறுகளாகி ஆயிரத்தை நெருங்கியும் இருத்தல் வெளிப்படை.

தமிழில் தொள் எனும் சொல்லையே நிலை மொழியாக நிறுத்தி,

தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் (ஆயிரத்திலிருந்து விலகியும் நெருங்கியும் உள்ள எண்)

தொள் + நூறு = தொண்ணூறு (நூற்றிலிருந்து விலகியும் நெருங்கியும் உள்ள எண்)

ஒல் + பது—ஒன்பது (சுருங்கிய பத்து—பத்தின் குறைவு) ஒன்பதுக்கு 'ஒல்' என்பதையும் தொண்ணூறு தொள்ளாயிரம் ஆகியவற்றுக்குத் 'தொள்' என்பதையும் நிலை மொழிகளாக நிறுத்தி வருமொழிகளோடு புணர்த்து இலக்கணம் கற்பித்தால் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் எண்ணுப் பெயர்ப் புணர்ப்பு உள நிறைவையும் தெளிவையும் நல்கும். (சொல்லாய்வுக் கட்டுரைகள் பக். 57—66.)

சிவ.

மொழியியலார் ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகியவற்றைக் கூறியவற்றிலிருந்து தெரிய வருவன பின்வருவன:

1. 9-ஐக்குறிக்கத் தொண்டு என்னும் சொல் பழங்காலத்தில் வழங்கியது. தொள் + டு→ தொண்டு என வந்தது.

2. 9-ஐக்குறிக்க ஒன்பது என்னும் சொல் வந்த பின்னர்த் தொண்டு என்னும் சொல் இலக்கிய ஆட்சியோடு நின்று வழக்கில் மறைந்தது.

3. (அ) ஒன்பது என்பது ஒன்று குறைந்த பத்து என்னும் பொருளுடையது. அதனால் அது ஒன்று + பத்து எனப் பிரிக்கப்பட்டு ஒன்பது எனப் புணர்க்கப்படும்

(ஆ) தொண்டு + பத்து→ தொண்பது→ தொன்பது→ ஒன்பது என வந்தது.

(இ) தொல்+பத்து→தொன்பது→ஒன்பது என வந்தது.
(ஈ) ஒல்+பது→ஒன்பது என வந்தது.

4. (அ) தொள்+நூறு→தொண்ணூறு.
(ஆ) தொல்+நூறு→தொண்ணூறு எனவும்,

5. (அ) தொள்+ஆயிரம்→தொள்ளாயிரம்.
(அ) தொல்+ஆயிரம்→தொள்ளாயிரம் எனவும் வந்தன.

மேலே காட்டப்பட்டனவற்றை நன்கு ஆய்ந்து சுந்தர—சண்முக னார் தெளிவாக விளக்கியுள்ளார். எனினும் இன்னும் தெளிவு தேவைப்படுகிறது.

ஆசிரியர்,
''தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
ஒன்பஃது'' (செய்யுளியல் 100)

என்னும் நூற்பாவில் ஒன்பதைக் குறிக்கத் தொண்டு, ஒன்பது என்னும் சொற்களைக் கையாண்டுள்ளார். இதைப் பார்க்கும் போது, அவர் காலத்திலேயே 'தொண்டு' என்பது வழக்கிறந்து செய்யுளுக்கே யுரியதாயிற்று என எண்ணல் தகும். அன்றியும் பேரெண்ணின் கீழ் எண்ணைக் குறிக்க 'இத்துணை குறைந்த இவ்வெண்' என்பது அவர் காலத்தும் இருந்துளது என்பதை, 'பத்துக்குறை எழுநூற்றொன்பஃது' என்னும் தொடர் குறித் தலையும் காணலாம். அதனால் ஒன்று குறைந்த பத்து 'ஒன்பது' என்பார் கருத்தும் ஏற்புடையதேயாம். எனினும் ஆசிரியர்க்கு அக்கருத்து உண்டா எனின் இல்லை என்றே கூறலாம்.

வேணவா என்பதை வேட்கை+அவா எனப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறிய ஆசிரியர் ஒன்று+பது→ஒன்பது எனப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறாததை நோக்கின் அது புலப்படும். ''உயிரும் புள்ளியும் இறுதியாகி'; (483) என்னும் புறனடைச் சூத்திரத்தில் 'தம்மியல் கிளப்பின் தம்முன்தாம் வரூஉம் எண்ணின் தொகுதி' (ஒரொன்று,மும்மூன்று முதலியன) புணர்ச்சி விதிகொண்டு பிரித்துப் புணர்க்கப்படா என்றதனால் அதிலேயே ஒன்பது என்பதற்கும் (ஒன்+பத்து எனப்) பிரித்துப் புணர்த்தல் தக்கதன்று என அவர்விட்டாரோ என்பதும் எண்ணத் தோன்று கிறது. அப்படியாயின் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ப வற்றையும் பிரித்துப் புணர்க்கப்படா என ஆசிரியர் விட்டிருக்க வேண்டும்; அவ்வாறு விடாமல் புணர்ச்சியிலக்கணம் கூறியுள் ளமையால் அது கருத்தன்றாம்.

வேணவா என்பதை 'வேள்' அல்லது 'வேண்' என்பதை நிலை மொழியாக (அடிச்சொல்லாக) வைத்துப் புணர்க்காமல் 'வேட்கை' என்னும் முழுச் சொல்லையே நிலை மொழியாக வைத்துப் புணர்த்தது போலவே, 'தொண்ணூறு', 'தொள்ளாயிரம்' என்பவற்றையும் 'தொல்' அல்லது 'தொள்' என்பதை நிலைமொழியாக வையாமல் 'ஒன்பது' என்னும் முழுச் சொல்லையே நிலைமொழியாக வைத்துப் புணர்த்தினார் ஆசிரியர் என்க.

அடிச்சொல்லைக் கருதாமல் முழுச் சொல் நிலையில் நிலை வருமொழிகளைப் புணர்க்கும் ஆசிரியர் செய்கைக்கு நாம், **செ வை. சண்முகம்** கூறும் அமைதியையே கொள்ளல்தகும்.

> "சொல்லின் மாற்றுவடிவங்களை ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றுருபு, சொல்கட்டுப்பாடுடைய மாற்றுருபு என்று இரண்டாக மொழியியலார் பிரிப்பார்கள்......
>
> தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் கூறிய எல்லா மாற்று வடிவங்களையும், அவை முழுவதும் மாறி வரும் மாற்று வடிவங்களாக (Suppletive form) இருந்தால்கூட, அவைகளையும் எழுத்து மாற்றம் அடைவதாகவே விளக்கியுள்ளார். உதாரணமாக ஒன்பது என்ற பெயர் பத்து என்ற வருமொழியோடு சேர்ந்தால் நிலை மொழி 'தொண்' என்றும் வருமொழி 'ஊறு' என்றும் மாறுவதை ஒலி மாற்றமாகவே விளக்குகின்றார்." (எழுத்திலக்கணக்கோட்பாடு: பக். 205-207)

இவர் கூற்றுப்படி ஒன்பது என்பது 'தொண்' எனவும் 'பத்து' என்பது 'நூறு' எனவும் எழுத்தொலி மாற்றத்தால் ஆயின எனக் கொள்ளலாம். இப்படியே ஒன்பது + நூறு → தொள்ளாயிரம் ஆனதற்கும் கொள்ளலாம். (ஒன்பது—தொள், நூறு—ஆயிரம்)

ஒன்று முதல் ஒன்பான்முன் அளவு நிறைப் பெயர்கள்.

446 அளந்தறி கிளவியும் *நிறையென் கிளவியும்
கிளந்த வியல தோன்றுங் காலை. (40)

---

* நிறையின் கிளவியும். நச். பாடம். இப்பாடமே நன்று. கழஞ்சு தொடிமுதலிய நிறுத்தலளவுப் பெயர்கள் இங்கே குறிக்கப்படுவன. அவற்றை நிறைப் பெயர்கள் என்னலாமே தவிர 'நிறை என்னும் பெயர்ச்சொல் என்றல் பொருந்தாது. ஆதலின் நிறையையுணர்த்தும் பெயர்ச் சொற்கள் என்ற பொருளில் நச்சினார்க்கினியர் கொண்ட 'நிறையின் கிளவி' என்ற பாடமே நன்று.

ஆ. மொ:
இல.

When the words denoting measure and weight appear, the rules already enjoined apply to them,

க. சு.

When the words denoting measure and the words of weight occur, the (rules) already stated apply (to them).

பி. இ .நூ.
முத்து. 428

அளவும் நிறையும் வரின்இயல் பாகும்.

இளம்.

இது மேற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களோடு அளவுப் பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள்: அளந்து அறி கிளவியும் நிறை என் கிளவியும் தோன்றும் காலை—மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களின் முன்னர் அளந்து அறியப்படும் அளவுப் பெயர்ச்சொல்லும் நிறை என்னும் பெயர்ச் சொல்லும் தோன்றுங் காலத்து, கிளந்த இயல —அவ் ஒன்று முதல் ஒன்பான்கள் மேல் பத்து என்பதனோடு புணரும்வழிக் கிளந்த இயல் பினவாய் முடியும்.

உ—ம்: ஒருகலம், இருகலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி எனவும்; ஒருகழஞ்சு இருகழஞ்சு, தொடி, பலம், எனவும் வரும்.

'தோன்றுங்காலை' என்றதனான், அவ்வெண்களின் முன் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்ற எண்ணுப் பெயரையெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்து முடித்துக் கொள்க.

ஒரொன்று, ஈரிரண்டு, ஈரொன்று, ஈரிரண்டு, ஒருமுந்திரிகை, இருமுந்திரிகை, ஓரரைக்கால், ஈரரைக்கால்; ஒருகால், இருகால்; ஓரரை, ஈரரை; ஒருமுக்கால் இருமுக்கால் என ஒட்டிக் கொள்க.

நச்.

இது மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள்: முற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களின் முன்னர் அளந்தறியப்படும் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் வந்து

தோன்றுங்காலத்து, ஆறன் ஈறு அல்வழிக் குற்றுகரம் மெய்யொடுங் கெட்டு முதல் ஈர் எண்ணின் ஒற்று ரகரமாய் உகரம் வந்து இடைநிலை ரகரங்கெட்டு மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகி நான்கன் ஒற்று வன்கணத்து றகரமாய் எட்டனொற்று ணகரமாய் முடியும்; எ—று.

உ—ம்: ஒருகலம், இருகலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, எனவும்; ஒரு கழஞ்சு, இருகழஞ்சு; க.·.சு, தொடி பலம் எனவும் வரும். அகல், உழக்கு என்பன முன்னர் முடித்தும். இவை முதலீர் எண்ணின் செய்கை.

தோன்றுங்காலை யென்றதனான் இவ்வெண்ணின் முன்னர் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்ற எண்ணுப் பெயர்கள் எல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்து முடித்துக் கொள்க. ஒரு மூன்று ஒரு நான்கு, இருமூன்று இரு நான்கு, ஒருகால் இருகால், ஒரு முந்திரிகை இருமுந்திரிகை, ஒரு முக்கால் இரு முக்கால் என்பன பிறவும் கொணர்ந்து ஒட்டுக. இனிப் பிறவிதி எய்துவன ஓரொன்று ஓரிரண்டு ஓரைந்து ஓராறு ஓரேழு ஓரெட்டு ஓரொன்பது எனவும், ஈரொன்று ஈரிரண்டு ஈரைந்து ஈராறு ஈரேழு ஈரெட்டு ஈரொன்பது எனவும், மூவொன்று மூவிரண்டு மூவைந்து மூவாறு மூவேழு மூவெட்டு மூவொன்பது எனவும், 'முதலீர் எண்ணின் முன் உயிர்' (எழு. 456) என்னுஞ் சூத்திரத்தான் உயிர்க்கு எய்திய பிறவிதியும் 'மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்து' (எழு. 458) என்ற பிற விதியும் பெற்றுப் பிற செய்கைகளும் பெற்று முடிந்தன. நாலொன்று நாலிரண்டு, நாலைந்து, நாலாறு, நாலேழு, நாலெட்டு நாலொன்பது என்பன 'நான்கன் ஒற்றே லகாரமாகும்' (எழு. 454) என்ற விதி பெற்று முடிந்தன. பிறவும் இவ்வாறே அளவும் நிறையுமன்றி வருவனவெல்லாம் இவ்விலேசான் முடிக்க.

மூன்றன் திரிபு.

447. மூன்றன் ஒற்றே வந்தது ஒக்கும் (41)

ஆ. மொ:

இல.

The consonant of 'Mūnṛu' changes into the consonant of the coming word.

க. சு.

The consonant of mūṉṟu 'three' is replaced by the voiceless consonant of the coming word.

பி- இ· நூ·
நன். 190.

மூன்றன் உறுப்பு...வந்தது மாகும்.

இல. வி. 108.

ஷெ ஷெ

முத்து. 429.

மூன்றன் புள்ளி வந்தது மாகும்.

இளம்.

இது [1]*மாட்டேறு எய்தாதற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: மூன்றன் ஒற்று வந்தது ஒக்கும்—மூன்றாம் எண்ணின் கண் நின்ற னகார ஒற்று வருமொழியாய் வந்த அளவுப் பெயர் நிறைப் பெயரின் முதலில் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்.

உ—ம்: முக்கலம், சாடி, தூதை, பானை எனவும்; முக்கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

$மாட்டேற்றானே நாற்கலம், சாடி, தூதை, பானை எனவும்; நாற்கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

நச்-

இது மேல் மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறு முடிபு கூறுகின்றது.

இ-ள்: மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று வருமொழியாய் வந்த அளவுப்பெயர் நிறைப்பெயர்களின் முன்னர் வந்த வல்லொற்றோடு ஒத்த ஒற்றாய்த் திரிந்து முடியும்; எ-று.

சு. வே:

1. மேல் மாட்டேற்றோ டொவ்வாததற்கு
* மேல் 'கிளந்த இயல்' (446) என்ற மாட்டேறு.
$ இப்பகுதி 'அளந்தறி கிளவியும்' என்னும் சூத்திரத்தாற் கிடைக்கும் என்பர் சாஸ்திரியார்.

உ-ம்: முக்கலம், சாடி, தூதை, பானை எனவும்; முக்கழஞ்சு, கஃசு, தொடி, பலம் எனவும் வரும்.

†நான்கன் ஒற்றே றகாரம், ஆகும் (443) என்ற முன்னை மாட்டேறு நிற்றலின் நாற்கலம், சாடி, தூதை, பானை எனவும்; நாற்கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

ஐந்தன் திரிபு

448. ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும். (42)

ஆ. மொ:

இல.

The consonant of 'Aindhu' becomes the nasal of the respective hard consonant.

க. சு.

The consonant of aintu 'five' is replaced by the nasal

பி. இ. நூ:

நன் 192

ஐந்தன் ஒற்று......இனமும்......

இ. வி. 110

ஷை ஷை

முத்து. 430.

ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும்

இளம்.

இதுவுமது.

இ—ள்: ஐந்தன் ஒற்று மெல் எழுத்து ஆகும் —ஐந்தாவதன் கண் நின்ற நகர ஒற்று மேல் வருகின்ற வருமொழி முதல் வல்லெழுத்திற்கு ஏற்ற மெல்லெழுத்தாய் முடியும்.

உ-ம்: ஐங்கலம், சாடி, தூதை, பானை எனவும்: ஐங்கழஞ்சு தொடி, பலம் எனவும் வரும்.

நச்.

இதுவுமது.

---

† இப்பகுதி அளந்தறி கிளவியும் என்னும் சூத்திரத்தாற் பெறப்படும் என்பர் சாஸ்திரியார்.

இ-ள்: ஐந்தாவதன்கண் நின்ற நகர ஒற்று வருமொழி வல்லெழுத்துக்கு ஏற்ற மெல்லெழுத்தாகத் திரிந்து முடியும்; எ—று.

உ-ம்: ஐங்கலம், சாடி, தூதை, பானை எனவும்; கழஞ்சு தொடி, பலம் எனவும் வரும் ஏகாரம் ஈற்றசை.

449. க ச த ப முதன்மொழி வருஉங் காலை (43)

ஆ. மொ.

இல.

When the words having 'k' 'c' 'th' and 'P' as initials of the coming words join (the above rules apply)

க. சு

(The above rules apply also) when words follow which begin with K C T P

பி. இ. நூ:

முத்து. 431.

வல்லெழுத்து வருஉங் காலை யான

இளம்.

இது, மேற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரையறுக்கின்றது.

இ-ள்: க ச த ப முதல்மொழி வருங்காலை—மூன்றன் ஒற்று வந்தது ஒப்பதூஉம் ஐந்தன் ஒற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வளவுப் பெயர் நிறைப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய க ச த ப முதல்மொழிகள் வந்த இடத்து.

உ-ம்: மேன்மாட்டேற்றானே, அறுகலம். சாடி, தூதை, பானை எனவும்; அறுகழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும் .

[1]ஏழு குற்றுகர ஈறு அன்மையின், மாட்டேறு ஏலாதாயிற்று.

நச்.

இது முற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரையறுக்கின்றது.

சு. வே:

1. ஏழ். (அடிகளாசிரியர் பதிப்பில் காணப்படும் இப்பாடம் தவறு; உகர ஈறே அன்மையின்) இத்தொடரை இடைச் செருவலாகலாம் என்பர் சாஸ்திரியார்,

இ-ள்: மூன்றன் ஒற்று வந்தது ஒப்பதூஉம் ஐந்தன் ஒற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வளவுப் பெயர் நிறைப்பெயர் ஒன்பதினும் வன் கணமாகிய க ச த பக்கள் முதன்மொழியாய் வந்த இடத்து; எ—று.

*அது முன்னர்க் காட்டினாம். ஆறு நெடுமுதல் குறுகும் (441) என்ற மாட்டேற்றானே ஆறு நெடு முதல் குறுகி நின்றது.

உ-ம்: அறுகலம் சாடி, தூதை, பானை, * நாழி, மண்டை, வட்டி எனவும்; அறுகழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும். அகல் உழக்கு என்பன மேற்காட்டினாம். ‡ஏழு குற்றுகர ஈறு அன்மையின் மாட்டேறு ஏலாதாயிற்று.

பி. கு.

'மூன்றன் ஒற்றே', 'ஐந்தன் ஒற்றே' என்னும் சூத்திரங்களுடன் இச்சூத்திரமும் சேர்ந்து ஒரே சூத்திரமாய் இருந்திருத்தல் வேண்டும் என்பர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. இ·து ஏற்புடையதே.

எட்டின் திரிபு

450. ந ம வ என்னும் மூன்றொடு சிவணி
அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே. (44)

ஆ. மொ:

இல.

Even if 'ṉ' 'm', 'v' and 'a' join 'Ettu' there is no change in the rules already enjoined.

க. சு.

There is no change (in the rules mentioned) concerning eṭṭu 'eisht' when the three (sounds) n, m (and) a combine (with ettu).

---

* கசதப வருங்காலை நிகழும் மாற்றங்களை ஒருகலம், முக்கலம், ஐங்கலம் எனக் காட்டியதைக் குறித்தார். ஆறு பற்றிய உதாரணம் காட்டாமையின் இங்குக் காட்டினார். இளம்பூரணர் காட்டியதும் காண்க.

* நாழி, மண்டை, வட்டி என்பன காட்டு வேண்டுவதன்று.

‡ இத்தொடர் இடைச்செருகல் என்பர் சாஸ்திரியார்; பொருந்துவதே.

இளம்.

இது வேண்டா கூறி வேண்டியது முடித்தல் நுதலிற்று.

இ-ள்: நமவ என்னும் மூன்றொடு சிவணி அகரம் வரினும்—அளவுப் பெயர் நிறைப் பெயர்களில் மென்கணத் திரண்டும் இடைக்கணத் தொன்றுமாகிய ந ம வ என்னும் மூன்றனோடும் பொருந்தி உயிர்க்கணத்து அகர முதன் மொழி வரினும் உம்மையால் அவ்வுயிர்க்கணத்து ஒழிந்த உகரமும் கூறாத வல்லெழுத்துக்களும் வரினும். எட்டன் முன் இயல்பு—எட்டு என்பதன் முன் மேற்கூறி நின்ற விகாரமே விகாரமாக வேறோர் விகாரம் இன்றி இயல்பாய் முடியும்.

உ-ம்: எண் கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை வட்டி, அகல், உழக்கு எனவும்; எண் கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

இவ்வேண்டா கூறலான் எண்ணகல் எனத் தொடர் மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்ளப்பட்டது.

நச்.

இது வேண்டாது கூறி வேண்டியது முடிக்கின்றது, ஞநமயவ (எழு 145) என்னுஞ் சூத்திரத்துட் கூறியவற்றைக் கூறுதலின்.

இ-ள்: எட்டு என்பதன் முன்னர், அளவுப் பெயர்களின் முன்னர் மென்கணத்து இரண்டும் இடைக்கணத்து ஒன்றுமாகிய நமவ என்னும் மூன்றனோடு பொருந்தி உயிர்க் கணத்து அகரம் வரினும் உம்மையான் உயிர்க்கணத்து உகரம்வரினும் கூறாத வல்லெழுத்துகள் வரினும், முற்கூறியவாறே டகாரம் ணகாரமாய் வேறொருவிகாரம் இன்றி இயல்பாய் முடியும்; எ-று:

ந ம வ என்னும் மூன்றும் வந்தாற் போல அகரம் வரினும் என்பது பொருள்.

உ-ம்: எண்ணாழி, மண்டை, வட்டி எனவும்; எண்ண கல் எண்ணுழக்கு எனவும்; எண்கலம், சாடி, தூதை, பானை எனவும் வரும்.

ஒன்றென முடித்தலான் வன்கணத்து நிறைப் பெயரும் கொள்க. எண்கழஞ்சு, தொடி, பலம் எனவரும்.

இவ்வேண்டா கூறலான் எண்ணகல் எனக் குற்றுகர வீறாய்க் கெடுந் திரிவும் பெற்று உயிர் வருமொழியான தொடர் மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க.

கப்.

'எட்டன் முன் இயல்பே' என்ற விடத்து 'முன்' என்ற சொல்லை இருமுறை கொண்டு, 'எட்டன் முன்' 'முன்னியல்பே' என உரைத்தல் வேண்டும். அவ்வாறு கொள்ளாது 'இயல்பே' எனக் கொண்டு 'இது வேண்டாதுகூறி வேண்டியது முடிக்கின்றது ஞ ந ம வ ய என்னுஞ் சூத்திரத்துட் கூறியவற்றைக் கூறலின்'' என நசசினார்க்கினியர் கூறினர்

இச்சூத்திரத்திற் கூறப்பட்டது 'அளந்தறி கிளவியும்' (446) என்ற சூத்திரத்தாற் பெறப்படுதலின், இச்சூத்திரம் எற்றுக்கு எனின், அச்சூத்திரத்திலும் 'க ச த ப முதன் மொழி வரூஉங் காலை' என்றதை ஆசிரியர் கொண்டு இச்சூத்திரத்தில் ந ம வ அ இவை வருமொழி முதலாயிருக்கும்போது நேரும் மாறுதல்களைக் கூறினர் எனக் கொள்ளல் தகும்.

ஆகலின், 'இவ்வேண்டா கூறலான் எண்ணகல் எனத்தொடர் மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்ளப்பட்டது' என்ற இளபூரணர் கூற்றும் ஒவ்வாது. அவ்வாறாயின் ஒற்றிரட்டுதல் எதனாற் பெறப்படும் எனின், ''குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்'' (எழு, 161) என்ற சூத்திரத்தான் என்க.

''ஒன்றென முடித்தலான் வன்கணத்து நிறைப்பெயரும்'' என நச்சினார்க்கினியர் கூறினர். இது ''அளந்தறி கிளவியும் நிறை யென் கிளவியும்'' (446) என்றதனாற் பெறப்படும் என்க, உம்மை யான் 'அவ்வுயிர்க் கணத்து ஒழிந்த உகரமும்'' என உரைகாரர்கள் கூறினர். 'அகரம்' எனக் கூறிய ஆசிரியர் உகரத்தைக் கூறாது விடுத்தமையானும், உகரம் அதிகரித்து வருதற்கு இடன் இன்மை யானும், அதனை அதிகாரம் புறனடையாற் கொள்ளுதல் சாலும்

சிவ.

வேண்டா கூறி வேண்டியது முடித்தலாவது—

இச்சூத்திரத்தின் முன் உள்ள சூத்திரங்கள் ஒன்றுமுதல் ஒன்பான்களோடு அளவுப் பெயரும் நிறைப்பெயரும் ஒருகலம் ஒரு கழஞ்சு என்றாற்போல இயல்பாய் முடியும் என்றும் (446), அவற்றுள் மூன்று என்பதன் னகர ஒற்று க ச த ப வருங்காலை வந்த ஒற்றாகும் என்றும் (447), ஐந்தன் ஒற்று அவை வருங்காலை மெல்லெழுத்தாகும் என்றும் (448) கூறுதலின், எட்டு (எண்) என்தறன்முன் ந ம வ வரின் இயல்பாகும் என்பது கூறப்பட

வேண்டாதுதானே பெறப்படும். ஆதலின் இச்சூத்திரம் வேண்டா கூறியதாம்.

இச்சூத்திரம் இல்லையென்றால் எட்டு (எண்) என்பதன் முன் உகரமுதன் மொழியும் க ச த ப முதன் மொழியும் வருங் காலை மூன்றும் ஐந்தும் போலத் திரியுமோ அன்றி இயல்பாகுமோ என்ற ஐயம் எழும். அதனால் அவை வருங்கால் இயல்பாகும் என்பதும். அதுவேயன்றி உகரம் வரினும் இயல்பாகும் என்பதும், கூறவேண்டுவதாம்.

எனவே இச்சூத்திரம் வேண்டாதாயினும் இதில் 'அகரம் வரினும்' என்றதால் (உம்மையால்) 'உகரமும் வல்லெழுத்தும் வரினும்' எனக் கொள்ளவைத்தமையின் வேண்டியது முடித்ததா யிற்று.

நச்சினார்க்கினியர், எட்டு என்பதன் முன் ஞ ந ம அ வரின் இயல்பாம் என இச்சூத்திரத்துட் கூறியது, தொகைமரபினுள் 'ஞநமயவ' என்னுஞ் சூத்திரத்துட் கூறப்பட்டதாதலின் இச் சூத்திரம் வேண்டாதது என்றும், வேண்டியது முடித்ததாவது, ந ம வ அ வரின் எட்டு என்பதன் திரிபாகிய 'எண்' என்பது மூன்று ஐந்து என்பன போலத் திரிதல் இன்றி இயல்பாகவே இருக்கும் என்பது கூறப்பட்டதாம் என்றும் கொண்டார். அது பொருந்தாது. "ஞநமயவ" என்னும் தொகைமரபுச் சூத்திரம் வருமொழி யியல்பு பற்றியது; இச்சூத்திரம் நிலை மொழியியல்பு பற்றியது. ஆதலின் தொகைமரபுச் சூத்தித்தை நோக்க இச்சூத்திரம் வேண்டாதது என்று கூறுவது பொருந்தாது. அவர் எழுதியவுரை யும் எண் என்பது திரிதல் இன்றி இயல்பாகும் என்பதையே கூறு கிறது.

எண்ணகல் என்பது எட்டு + அகல் எனப் பிரிக்கப்படும். எட்டு குற்றுகரவீறதாகும். இரண்டெழுத்துக்கு மேற்றொடரும் மொழி தொடர்மொழி எனப்படும். அதனால் எண் + அகல் → எண்ணகல் என வந்ததைக் 'குறியதன் முன்னர்த் தன் உருபிரட்டல்' என்ப தனாற் கொள்ளலாகாது. ஏனெனின் எண் என்பது ஈரெழுத்து மொழியன்று; மூவெழுத்தானியன்ற தொடர் மொழியின் திரிபு ஆகலின்.

ஐந்து, மூன்று—திரிபு

451. ஐந்தும் மூன்றும் நமவருங் காலை
வந்தது ஒக்கும் ஒற்றியல் நிலையே (45)

ஆ. மொ.

இல.

When 'n' and 'm' comes as initials of, the coming words 'Aindhu' and 'mūnṛu have the consonants changed according to the coming consonants.

க.சு.

When n and m occur as initials of the coming words, aintu 'five' and mūnṛu 'three' have the consonants (n and n) according to the initials (of the coming words).

பி. இ. நூ:

நன். 190

மூன்றன் உறுப்பு...... வந்தது மாகும்.

இல. வி. 108

ஷை ஷை

முத்து. 432

ஐந்தும் மூன்றும் நமவரு காலை
ஒற்றியல் நிலைகெட வந்தது மாகும்.

இளம்.

இதுவும் மேல் மாட்டேற்றோடு ஒவ்வா வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஐந்தும் மூன்றும் நம வருங்காலை—ஐந்து என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் நகர முதல்மொழியும் மகர முதல்மொழியும் வருங்காலத்து, ஒற்று இயல் நிலை வந்தது ஒக்கும்—தங்கண் நின்ற ஒற்று நடக்கும் நிலைமை சொல்லின் அவ் வருமொழிமுதலில் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்.

உ—ம்: முந்நாழி, மும்மண்டை; ஐந்நாழி, ஐம்மண்டை என வரும்.

மூன்றும் ஐந்தும் என்னாத முறையன்றிய கூற்றினான் நானாழி என்னும் முடிபின்கண் விகாரமாகிய னகரத்தின் முன்னர் வருமொழி நகரத்திரிபும், அதுகாரணமாக நிலைமொழி னகரக் கேடும் கொள்ளப்பட்டன.

நச்.

இதுவும் மேல் மாட்டேற்றோடு ஒவ்வா முடிபு கூறுகின்றது.

இ—ள்: ஐந்து என்னும் எண்ணும் மூன்று என்னும்

என்னும் நகர முதன்மொழியும் மகர முதன்மொழியும் வருமொழியாய் வருங்காலத்து, நிலைமொழிக்கண் நின்ற ஒற்று நடக்கும் நிலைமை கூறின், மேற்கூறியவாறே மகரமும் பகரமும் ஆகாது வருமொழி முதல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்; எ—று.

உ—ம்: ஐந்நாழி, ஐம்மண்டை; முந்நாழி, மும்மண்டை என வரும்.

மூன்றும் ஐந்தும் என்னாத முறையன்றிக் கூற்றினான் நானாழி நான்மண்டை என்புழி நிலைமொழி னகரம் றகரமாகாது நின்றவாறே நின்று முடிதலும். வருமொழி முன்னின்ற நகரம் னகரமாய்த்திரிய நிலைமொழி நகரம் கெடுதலும் கொள்க.

சூப்.

''மூன்றும் ஐந்தும் என்னாத......னகரக்கேடும் கொள்ளப் பட்டன' என இளம்பூரணர் கூறினர். நானாழியோடு நான் மண்டையும் சேர்த்துக் கூறினர் நச்சினார்க்கினியர். நான்கு+ நாழி என்னுமிடத்து 'அளந்தறி கிளவியும்' (446) என்ற சூத்திரத் தால் குகரக்கேடும் னகரவொற்று றகர வொற்றாய்த் திரிதலையும் கொள்ளல் வேண்டும். ஆனால் றகர வொற்றின் பின்னர் கசபற இவை நான்கே வரும் என்று நூன்மரபிற் கூறப் பட்டமையான், ஈண்டு குகரக்கேட்டை மாத்திரம் கொள்ளல் வேண்டும். அப்போது நான்+நாழி என்றிருக்க, வருமொழி நாகாரம் ''லன வென வரூஉம் புள்ளி முன்னர்'' (எழு. 150) என்ற சூத்திரத்தால் ணாகாரமாய்த் திரிய, 'நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்' (எழு. 161) என்றதனால் நிலைமொழி னகரவீறு கெட, நானாழி என உருவம் பெறப்படும். இவ்வாறு கொள்ளுதல் நேரிதாய் இருக்க 'முறையன்றிக் கூற்றினான்' அதனை உரைகாரர்கள் கொள்ளுதல் வேண்டா. குகரக்கேட்டின் பின்னர், றகரத்தின் பின்னர் மகரம் வருதற்கின்மையான், 'நான் மண்டை' என்ற உருவமும் பெறப்படும்.

பி.சு

நான்கன் ஒற்றே றகராம் ஆகும் (442) என ஆசிரியர் நான்கு என்பதன் னகரத்தை றகரமாகத் திரித்து விட்டமையின் அந்த நாற் என்பதையே நிலைமொழியாகக் கொண்ட உரைகாரர்கள் இச் சூத்திரத்தில் நானாழி என்பதை முடிக்க வேண்டி 'ஐந்தும் மூன்றும' என்ற முறையன்றிய கூற்றினைத் துணையாகக் கொண்டனர். இன்றேல் சாஸ்திரியார் கூறுவது அமையும்.

வகர முதல் மொழிமுன் மூன்று

452. மூன்றன் ஒற்றே *வகாரம் வரும்வழித்
தோன்றிய வகாரத் துருவா கும்மே (46)

ஆ. மொ:

இல:

When 'v' comes, the consonant of 'Mūnṛu' Changes in to the form of 'v'

க. சு.

The consonant of mūṉṛu 'three' is replaced by the form (with) v when the coming word begins with v.

பி. இ. நூ.

முத்து. 433

மூன்றன் ஒற்றே வகாரம் வரும்வழித்
தோன்றிய வகாரத் துருவா கும்மே.

இளம்.

இதுவுமது,

இ-ள்: மூன்றன் ஒற்று வகாரம் வரும்வழி—மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று வகர வருமொழி வரும் இடத்து, தோன்றிய வகாரத்து உருவு ஆகும்—[1]வருமொழியாய வகரத்து உருவாய் முடியும்.

உ-ம்: முவ்வட்டி என வரும்.

'தோன்றிய' என்றதனால், முதல் நீண்டு வகர ஒற்றின்றி மூவட்டி என்றுமாம்.

இன்னும் அதானானே, முதல் நீளாது ஒற்றின்றி 'முவட்டி' என்றுமாம்.

நச்.

இதுவுமது.

இ-ள்: மூன்றாம் எண்ணின் கண் நின்ற னகர ஒற்று, வகர முதன்மொழி வருமிடத்து, அவ்வருமொழியாய்த் தோன்றிய வகரத்தின் வடிவாய் முடியும்; எ-று.

---

* வகரம் நச்-பாடம்.

சு.வே: 1. வருமொழியாய்த் தோன்றிய வகரத் துருபாய் முடியும்.

உ-ம்: முவ்வட்டி என வரும்.

'தோன்றிய' என்றதனானே முதல் நீண்டு வகர ஒற்றின்றி 'மூவட்டி' என்றுமாம்.

சுப்.

"தோன்றிய என்றதனால் முதல் நீண்டு வகர ஒற்றின்றி மூவட்டி என்றுமாம்" என்றனர் உரைகாரர்கள். இதனை மூவகைக் காலமும் (புறத்.237) முதலிய ஆசிரியர் வழக்காற் கொள்ளல்தகும்.

இளம்பூரணத்தில் 'இன்னுமதனானே முதல் நீளாது ஒற்றின்றி முவட்டி என்றுமாம்' என்ற தொடர் உள்ளது இது நச்சினார்க்கினியத்தில் இல்லை. ஆகலின் ஈண்டு இடைச் செருகலோ என ஐய முண்டாகின்றது.†

அதன்முன் நான்கு

453. நான்கன் ஒற்றே லகாரம் ஆகும் (47)

ஆ: மொ:

இல.

The consonant of nanku becomes 'l'

க. சு.

The consonant of na̲nku 'four' is repleced by l.

பி. இ. நூ.

நன். 191.

நான்கன் மெய்யே ல...வாகும்மே

இ. வி. 109

ஷை ஷை

முத்து. 434.

நான்கன் மெய்யே லகாரம் ஆகும்,

இளம்.

இதுவுமது.

---

† இளம் பூரணர் காலத்தில் முவட்டி என்னும் வழக்கிருந்து நச்சினார்க்கினியர் காலத்தில் வீழ்ந்திருக்கலாம். 'முவ்வட்டி' என்பதன் குறையே 'முவட்டி'.

இ-ள்: நான்கன் ஒற்று லகாரம் ஆகும்—நான்காம் எண்ணின் கண் நின்ற னகார ஒற்று வகாரம் வந்தால் லகார ஒற்றாய்த் திரிந்து முடியும்.

உ-ம்: நால்வட்டி எனவரும்.

நச்.

இதுவுமது.

இ-ள்: நான்காம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று வகர முதன்மொழி வந்தால் லகர ஒற்றாகத் திரிந்து முடியும்; எ—று.

உ-ம்: நால்வட்டி எனவரும்.

அதன் முன் ஐந்து

454. ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே (48)

ஆ.மொ:

இல:

The consonant of 'Aindhu' disappears (when 'v' comes)

க. சு.

The consonant of aintu 'five' disappears (as in)
the prceeding case

பி.இ. நூ.

நன். 192

ஐந்தன் ஒற்று...கேடும் (ஆகும்)

இ. வி. 110

ஷை ஷை

முத்து 435.

ஐந்தன் ஒற்றே யடியொடு கெடுமே

இளம்.

இதுவுமது.

இ—ள்: ஐந்தன் ஒற்று முந்தையது கெடும்—ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று வகரம் வந்தால் முன் நின்ற வடிவு கெட்டு முடியும்

உ-ம்: ஐவட்டி எனவரும்.

'முந்தை என்றதனால், நகர ஒற்றுக்கெடாது அவ்வகரமாய்த் திரிந்து 'ஐவ்வட்டி' என்றுமாய்,

நச்.

இதுவுமது.

இ-ள்: ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று, வகர முதன்மொழி வந்தால் முன்நின்ற வடிவு கெட்டு முடியும்; எ—று:

உ-ம்: ஐவட்டி எனவரும்

'முந்தை' என்றதனால் நகர ஒற்றுக் கெடாது வகர ஒற்றாகத் திரிந்து ஐவ்வட்டி யெனவும் சிறுபான்மை வரும்.

சுப்.

வகரம் வருவழி, அப் *பின்னருள்ள வகரத்தின்கண் ஐந்து என்றதன் நகர ஒற்றுக் கெடும்,

உ-ம்: ஐவட்டி.

இது (ஐவ்வட்டி) முவ்வட்டியை நோக்கி ஒற்றுமைப் போலி யான் வந்தது எனக் கொள்ளுதல் சாலும்.

உயிர் முதல் மொழிவர ஒரு, இரு-திரிபு.

455. ***முதலீர் [1]எண்ணின் முன் உயிர் வரு காலைத்**
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான. (49)

ஆ. மொ:

இல.

When vowel appears before the first two numbers, They (the linguists) say that 'u' disappears and the initials lengthen there.

க. சு.

It is stated that when a vowel appears befoɹe the first two numbers the sound u (of their modified forms) disappears, and the initial (vowels) (occurring) there are lengthened,

---

* முந்தையது என்பதற்குப் பின்னருள்ள வகரம் எனக் கொண்டு வருமொழி வகரத்தின்கண் ஐந்து என்பதன் நகர ஒற்றுக் கெடும் என்றார் சாஸ்திரியார்.

* ஒரு இரு என்பன நிலை மொழிகளாக வைத்துப் புணர்க்கப்பட்டன.

சு. வே:

1. எண்முன்

பி.இ.நூ.

நன்.

எண்ணிறை யளவும் பிறவும் எய்தின்
முதல்ஈர் எண்முதல் நீளும்.

இ. வி. 106.
ஷை ஷை

முத்து. 421.
ஷை ஷை

436 ஒன்றும் இரண்டும் உயிர்வரு காலை
உகரம் கெடுதல் ஆவயி னான.

இளம்.

இதுவுமது.

இ-ள்: முதல் ஈர் எண்ணின் முன் உயிர்வருகாலை—முற்பட்ட இரண்டு எண்ணின் முன் உயிர் முதன்மொழி வருங்காலத்து உகரக்கிளவி தவல் என மொழிப—உகரமாகிய எழுத்துக் [2]கெடும் என்று சொல்லுவர் புலவர், முதல்நிலை ஆவயின் நீடல்—அவ்வெண்ணின் முதற்கண் நின்ற எழுத்துகள் அவ்விடத்து நீண்டு [3]முடியும்.

உ-ம்: ஓரகல், ஈரகல்; ஓருழக்கு, ஈருழக்கு எனவரும்.

நச்.

இது மாட்டேற்றான் எய்திய உகரத்திற்குக் கேடுகூறி முதல் நீள்க என்றலின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள்: ஒரு இரு என முடிந்து நின்ற இரண்டெண்ணின் முன்னர் உயிர் முதன்மொழி வருமொழியாய் வருங்காலத்து, நிலைமொழியுகரமாகிய எழுத்துக் கெடுதலாம் என்று சொல்லுவர் புலவர், அவ்விரண்டெண்ணின் கண் நின்ற முதல் எழுத்துகள் நீண்டு முடியும்; எ-று.

உ-ம் ஓரகல், ஈரகல், ஓருழக்கு, ஈருழக்கு எனவரும்.

அதன் முன் மூன்று, நான்கு, ஐந்து—திரிபு

456. மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரத் தியற்கை யாகும். (50)

2. கெடுக
3. முடிக.

ஆ. மொ.
இல.

The words 'Mūnṛu', 'Nānku,' and 'Aindhu' stand in the nature already enjoined (when 'v' comes as initial)

க. சு.

And in the words mūṉṛu 'three' nāṅku 'four' and aintu 'five' (the change) will be (of the same) nature as when (the coming words) appear with the sound v.

பி. இ. நா.
நன் .197.

மூன்றன் உறுப்பு......வந்தது மாகும்.

இ. வி. 108
ஷ ஷ

நன். 191

நான்கன் மெய்யே ல...வாகும்மே.

இ. வி. 109
ஷ ஷ

நன். 192.

ஐந்தன் ஒற்று......கேடும்.

இ. வி. 110.
ஷ ஷ

முத்து. 437.

மூன்றும் நான்கும் ஐந்தும் தோன்றிய
வகரத் துருவாய் வழங்கும் என்ப.

இளம்.

இதுவும் அது.

இ-ள்: மூன்றும் நான்கும் ஐந்து என் கிளவியும்—மூன்று என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணுச் சொல்லும், தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்—மேல் தோன்றி முடிந்த வகரத்து இயற்கையாய் மூன்றன்கண் வகர ஒற்றாயும் நான்கன் கண் லகர ஒற்றாயும் ஐந்தன்கண் ஒற்றுக் கெட்டும் முடியும்.

உ-ம்: முவ்வகல், முவ்வுழக்கு எனவும்; நாலகல், நாலுழக்கு எனவும்; ஐயகல், ஐயுழக்கு எனவும் வரும்.

தோன்றிய என்றதனான் மேல் (457) மூன்று என்பது முதல் நீண்டவிடத்து நிலைமொழி னகர ஒற்றுக் கெடுத்துக் கொள்க.

நச்.

இதுவும் அது.

இ—ள்: மூன்றென்னும் எண்ணும் நான்கென்னும் எண்ணும் ஐந்தென்னும் எண்ணும் முன்னர்த் தோன்றி நின்ற வகரம் வருமொழிக்குக் கூறிய இயல்பாக மூன்றின்கண் வகர ஒற்றாயும் நான்கின்கண் லகர ஒற்றாயும் ஐந்தின்கண் ஒற்றுக் கெட்டும் முடியும்; எ—று.

உ-ம்: முவ்வகல், முவ்வுழக்கு என வரும். இதற்குத் தோன்றிய என்றதனால் ஒற்றிரட்டுதல் கொள்க. நாலகல் நாலுழக்கு என வரும்.

தோன்றிய என்றதனால் மேல் மூன்று என்பது முதல் நீண்டவிடத்து நிலைமொழி னகரவொற்றுக் கெடுத்துக்கொள்க. *இயற்கை என்றதனால் தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க. மூன்றனொற்றே' முதலிய மூன்று சூத்திரமும் கொணர்ந்து முடிக்க.

மூன்று—மேலும் ஓர் திரிபு.

457. மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான. (51)

ஆ. மொ:

இல:

The initial of Mūnṟu' may lengthen itself
when the word 'ulakku' appears in the usage.

க.சு.

Usage allows the lengthening of the initial (syllable) of mūṉṟu 'three' (when followed by) the word ulakku 'a measure'.

பி. இ. நூ.

முத்து. 438

உழக்கு வரின்முதல் நீளுமூன் றெண்ணே

வாலிழந்த நரியும் நரியேயாதலின் 'முவ்' என்பதும் 'மூவே'. அப்போது, ஒற்றிரட்டுதலை, 'குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டல் (எழு.160) என்றதனாற் கொள்ளல்தகும்—சாஸ்திரியார்.

இளம்.

இதுவுமது.

இ—ள்: மூன்றன் முதல் நிலை உழக்கு என்கிளவி வழக்கத் தான்—மூன்று என்னும் எண்ணின்கண் முதலில் நின்ற எழுத்து உழக்கு என்னும் கிளவியது வழக்கிடத்து, நீடலும் உரித்து—குறுகாது நீண்டு முடிதலும் உரித்து.

உ—ம்: மூவுழக்கு என வரும்.

வழக்கத்தான என்றதனான், அகல் என்பதன்கண்ணும் இச் செய்கை கொள்க. மூவகல் என வரும்.

நச்.

இது முன்னர்க் குறுகும் என்றதனை நீண்டு முடிக என்றலின் எய்தியது விலக்கிற்று.

இ—ள் : மூன்று என்னும் எண்ணின் முதல் நின்ற எழுத்து நீண்டு முடிதலும் உரித்து, அஃது யாண்டெனின், உழக்கு என்னும் சொல் முடியும் வழக்கிடத்து; எ—று.

உ—ம்: மூவுழக்கு என வரும்.

வழக்கத்தான என்பதனான் அகலென் கிளவிக்கு முதனிலை நீடலும் கொள்க. மூவகல் என வரும். இன்னும் அதனானே நிலைமொழி னகர ஒற்றுக்கெடுக்க.

மூழக்கு, மூழாக்கென்னும் மருமுடிபு இவ்வோத்தின் புறனடையான் முடிக்க.

ஆறின் திரிபு

458. ஆறென் கிளவி முதல்நீ டும்மே. (52)

ஆ. மொ.

இல:

The word 'Āṟu' may lengthen its initial which is required to stand shortened.

க. சு.

The first (syllable) of the word 'āru 'six' will be lenthened (before vowels)

பி. இ .நூ.

முத்து. 439.

ஆறுமவ் வியல்பிற் றாகும்.

இளம்.

இதுவுமது.

இ—ள் : ஆறு என் கிளவி முதல் நீடும்—ஆறு என்னும் சொல் உயிர் முதல் மொழி வந்தால் முன் குறுகி நின்ற முதலெழுத்து நீண்டு முடியும்.

உ—ம் : ஆறகல் ஆறுழக்கு என வரும்.

நச்.

இதுவுமது.

இ—ள் : ஆறு என்னும் எண்ணுப் பெயர் அகல் உழக்கு என்பனவரின், முன்னர்க் குறுகி நின்ற முதலெழுத்து நீண்டு முடியும்; எ—று.

* அறுவென்னாது ஆறென்றார், திரிந்ததன் திரிபது என்னும் நயத்தால்.

உ—ம்: ஆறகல், ஆறுழக்கு என வரும்.

ஒன்பதின் முடிபு

459. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே (53)

முன்னர் "மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" (441) என்றதன் படி ஆறு அறு ஆயிற்று. அந்த அறு என்பது உயிர் முதன் மொழிகளாகிய அகல், உழக்கு முதலியன வரும் போது ஆறு என முதல் எழுத்து நீளும். இதுவே இச்சூத்திரத்தின் கருத்து. எனவே இச்சூத்திரம் அமைய வேண்டியது 'அறுவென் கிளவி முதல் நீடும்மே' என்பதாகும். ஆனால் 'ஆறெனகிளவி' என முதல் நீண்ட வடிவினாலேயே அமைந்துளது. இது திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தால் அமைந்ததாம். இதில் திரிந்தது ஆறு என்பது அதன் திரிபாவது 'அறு'என்றாயது. அத்திரிந்த 'அறு' என்பதைக் கூற வந்த ஆசிரியர் அதனையே கூறாமல் அதன் முன்னைய வடிவாகிய ஆறு என்றே கூறினார், அறு என்னும் திரிந்த வடிவம் ஆறு என்னும் வடிவமாகிய அதுவே எனக் கருதியதால் என்க.

ஆ. மொ:

இல:

The final of 'Onbathu' will not change in its form
It will have the incremeni 'in' added

க.சு.

The final (pait) of onpān 'nine' will not undergo any modification (before words denoting measure and weight); it is neccessary that the empty word in is added.

பி. இ. நூ:

முத்து. 440.

ஒன்பான் இன்னொடும் ஒழுகும் என்ப.

இளம்.

இதுவுமது.

இ—ள்: ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது சாரியை மொழி இன் பெறல் வேண்டும்—ஒன்பது என்னும் எண்ணின் இறுதி தன் வடிவுநிலை திரியாது சாரியை மொழியாகிய இன் பெற்று முடிதல் வேண்டும்.

உ—ம்: ஒன்பதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்

'உருபு' என்றதனான், ஒன்பதிற்றகல் என்புழி இரட்டிய றகரமாகக் கொள்க.

நச்.

இது குற்றுகரம் மெய்யொடுங் கெடாது நின்று இன்பெறுக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ—ள்: அளவும் நிறையும் வருவழி ஒன்பது என்னும் எண்ணின் இறுதிக் குற்றுகரந் தன் வடிவு நிலை திரியாது நின்று, சாரியைச் சொல்லாகிய இன்பெற்று முடிதலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

உ—ம்: ஒன்பதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை வட்டி, அகல், உழக்கு எனவும்; கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

சாரியைமொழி என்றதனான் இன்னோடு உகரமும் வல்லெழுத்துங் கொடுத்துச் செய்கை செய்து முடிக்க. ஒன்பதிற்றுக்கலம், சாடி என எல்லாவற்றோடும் ஒட்டுக.

'உருபு' என்றதனான் *ஒன்பதிற்றென ஒற்றிரட்டுதல் எல்லாவற்றிற்கும் கொள்க.

இன்னும் இதனானே *ஒன்பதினாழி யென்புழி வந்த இன்னின் னகரக் கேடுங் கொள்க. 'அளவாகு மொழி முதல்' (எழு. 122) என்பதனானும் 'நிலைஇய' என்னும் இலேசானும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க

ஒன்றுமுதல் ஒன்பதுமுன் நூறு.

460. நூறுமுன் வரினும் கூறிய இயல்பே. (54)

ஆ. மொ.

இல.

Even if 'nūṟu' (hundred) joins, the enjoined rule continues.

(The rule enjoined is the same as that when 'paththu' joins with numbers from one to eight)

க. சு.

The same modification as mentioned above (takes place) also when nūṟu 'hundred' occurs (as the coming word).

பி. இ. நூ.

முத்து. 441

நூறென் கிளவிவரின் இயல் பாகும்.

இளம்.

இது ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்பதன் முடிபு கூறுகின்றது.

இ—ள்: நூறு முன் வரினும் கூறிய இயல்பு—நூறு என்பது ஒன்றுமுதல் ஒன்பான்கண் முன் வரினும் மேல் (438) பத்து என்பதனோடு புணரும் வழிக்கூறிய இயல்பு எய்தி முடியும்.

---

*ஒன்பது + கலம்→ ஒன்பது + இன் + கலம்→ ஒன்பதின்கலம்.
ஒன்பது + கலம்→ ஒன்பது + இன் + கலம்→ ஒன்பது + இற் + கலம்→ ஒன்பது + இற்ற் + கலம்→ ஒன்பது + இற்ற் + உ + கலம்→ ஒன்பது + இற்று + க் + கலம்→ ஒன்பதிற்றுக்கலம்.
ஒன்பது + நாழி→ ஒன்பது + இன் + நாழி→ ஒன்பது + இன் + னாழி→ ஒன்பது + இ + னாழி→ ஒன்பதினாழி.

உ-ம்: ஒருநூறு, இருநூறு, அறுநூறு, எண்ணூறு எனவரும். இவை மாட்டேற்றானே முடிந்தன.

நச்.

இஃது ஒன்று முதல் ஒன்பான் எண்களோடு நூறு என்பதனைப் புணர்க்கின்றது.

இ—ள்: ஒன்றுமுதல் ஒன்பான் எண்களின் முன்னர், நூறு என்னும் எண்ணுப்பெயர் வந்தாலும், மேற்பத்து என்பதனோடு புணரும் வழிக் கூறிய இயல்பு எய்தி முடியும்: எ—று.

அது குற்றுகரம் மெய்யொடுங் கெட்டு மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகி முதல் ஈரெண்ணின் ஒற்று ரகரமாய் உகரம் பெற்று இடைநிலை ரகரம் இரண்டன்கட் கெட்டு முடிதலாம்.

உ-ம்: ஒருநூறு, இருநூறு, அறுநூறு, எண்ணூறு எனவரும். இவை மாட்டேற்றான் முடிந்தன. மாட்டேறு ஒவ்வாதன மேற் கூறி முடிப்ப.

மூன்றின் திரிபு

461. மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும் (55)

ஆ. மொ:

இல.

The consonant of the 'Mūnṟu' becomes 'ṉ'.

க. சு.

The consonant of mūṉṟu 'three' is replaced by n.

பி. இ நூ.

முத்து. 442

மூன்றன் மெய்யே நகாரம் ஆகும்.

இளம்.

இது [1]மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: மூன்றன் ஒற்று நகாரம் ஆகும்—மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகரஒற்று நகர ஒற்றாகும்.

உ—ம்: முந்நூறு என வரும்.

சு. வே: 1. முன்சொன்ன மாட்டேற்றோடு

நச்.

இது மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறு முடிபு கூறுகின்றது.

இ—ள்: மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகரவொற்று நகர ஒற்றாகும்; எ—று.

உ-ம்: முந்நூறு எனவரும்.

நான்கு, ஐந்து இயல்பு.

462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா. (56)

ஆ: மொ:

இல.

'nānku' and 'Aindhu' do not change in their consonants.

க. சு.

The consonants of nāṉku 'four' and aintu 'five' do not undergo any change.

பி. இ. நூ.

முத்து, 443.

நான்கும் ஐந்தும் முதல் நிலை திரியா.

இளம்-

இதுவுமது.

இ—ள்: நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா—நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணும் தம் ஒற்றுகள் நிலை திரியாது முடியும்.

உ-ம்: நானூறு, ஐந்நூறு எனவரும்.

'மெய்' என்றதனால் 'நானூறு' என்புழி வருமொழி ஒற்றாகிய நகரக்கேடு கொள்க. இன்னும் அதனானே ஒற்றின்றி ஐநூறு எனவரும் முடிபும் கொள்க.

நச்.

இதுவுமது.

இ—ள்: நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணும் தம் ஒற்றுகள் நிலை திரியாது முடியும்; எ-று.

உ-ம்: நானூறு ஐந்நூறு எனவரும்.

'மெய்' என்றதனான் நானூறு என்புழி வருமொழி நகரத்துள் ஊகாரம் பிரித்து "னனவென வரூஉம்" (எழு. 150) என்பதனான் னகர வொற்றாக்கி ஊகாரம் ஏற்றி நிலை மொழி னகரம் கெடுத்துக் கொள்க.

சுப்.

'நான்னூறு' என்ற விடத்து னகர வொற்றின் கேட்டினை 'நெடியதன் முன்னர்' (எழு. 161) என்ற சூத்திரத்தாற் கொள்ளாது "மெய் என்றதனால்...நகரக் கேடு கொள்க" என இளம்பூரணரும், "மெய் என்றதனால்...னகரங் கெடுத்துக் கொள்க" என் நச்சினார்க்கினியரும் கூறினர்: அவ்வாறு கொள்ள வேண்டுதலின்று. 'ஐஞ்நூறு' (செய். 10) என்ற ஆசிரியர் வழக்குங் காண்க. 'இன்னுமதனானே ஒற்றின்றி ஐநூறு எனவரும் முடிபும் கொள்க' என்ற தொடர் இளம்பூரணத்தில் உள்ளது. இது நச்சினார்க்கினியத்தில் இல்லை; பிற்காலத்தவரால் எழுதியிருத்தல் கூடும்.

ஒன்பதின் திரிபு.

463. ஒன்பான் முதல்நிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறு மெய் கெடுத்து *மகாரம் ஒற்றும். (57)

ஆ. மொ:

இல:

The initial of 'onbadhu' will have the change as already noted.
The preceding consonant becomes 'ḷ' being doubled.
The word 'n̲ūṟu' loses the 'n̲'
'ū' changes into 'ā' -they say;
'i' and 'r' intervene there
'm' appears there the final being dropped.

---

* மகரம். நச். பாடம்.

க. சு.

The initial of oṉpāṉ (will have the alteration) mentioned before; the preceding consonant becomes ḷ (and is)doubled; the word nūṟu will lose the consonant, n; ū changes into ā- thus it is said; i and ra occurs in the middle at that place, and the final (part of nūṟu) disappears, replaced by m.

பி. இ. நூ.
வேமி. 21.

ஒன்பானொடு ... நூறதனை ஓதுங்கால்
முன்பாந் தகரம் ... ள முன் பிரட்டும்—பின்பான
எல்லாங் கெட்டு...இரண்டு ஆவியின் பின்...
நல்லாய் இரம் ஈறாய் நாட்டு.

நன். 194.

ஒன்பானொடு...நூறும் ஒன்றில்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு
தகரம் நிறீஇப் பஃதகற்றி னவ்வை
...ளவாத் திரிப்பது நெறியே

முத்து. 444

ஷை ஷ

இ. வி. 112

ஒன்பானொடு...நூறும் ஒன்றின்
ஒன்றிய..........ஆயிரமும்
என்று திரிய இறுதிய கெடுவழி
நின்ற னகரம்...ளவாய்
இரட்ட ஒகரமிசைத் தகரம் ஒற்றும்

இளம்.

இதுவும் அது.

இ-ள்: ஒன்பான் முதல்நிலை முந்து கிளந்த அற்று—ஒன்பது என்னும் சொல்லின் முதல் நின்ற ஒகரம் மேல் பத்து என்பதனோடு புணரும்வழிக் கூறியவாறு போல ஒகரமிசைத் தகர ஒற்று மிகும், முந்தை ஒற்று ளகாரம் இரட்டும்—அவ்வொகரத்தின் முன் நின்ற னகர ஒற்று இரண்டு ளகர ஒற்றாம், நூறு என் கிளவி நகார மெய்கெட ஊ ஆ ஆகும் இயற்கைத்து என்ப—வருமொழியாகிய நூறு என்னும் சொல்லும் நகாரமாகிய மெய்கெட அதன் மேல் ஏறிய ஊகாரம் ஆகாரமாம் இயல்புடைத்து என்பர் புலவர்,

ஆஇடை இகாரம் ரகாரம் வருதல்—அம்மொழியிடை ஓர் இகரமும் ரகாரமும் வரும், ஈறு மெய்கெடுத்து மகாரம் ஒற்றும்—இதற்கு ஈறாகிய குற்றியலுகரத்தினையும் அஃது ஏறி நின்ற ஒற்றினையும் கெடுத்து ஓர் மகரம் ஒற்றாய் வந்து முடியும். [1]"மெய் என்றதனான், நிலைமொழிக்கண் நின்ற பகரம் கெடுக்க.

உ-ம்: தொள்ளாயிரம் எனவரும்.

நச்.

இதுவுமது.

இ-ள்: ஒன்பது என்னும் எண்ணின் முதல் நின்ற ஒகரம் மேற் பத்து என்பதனோடு புணரும் வழிக் கூறியவாறு போல ஒரு தகரம் ஒற்றி அதன்மேல் ஏறி முடியும், அவ்வொகரத்தின் முன் னகரஒற்று ளகர ஒற்றாய் இரட்டித்து நிற்கும் வருமொழியாகிய நூறு என்னும் எண்ணுப் பெயர் நகரமாகிய மெய் கெட அதன் மேல் ஏறிய ஊகாரம் ஆகாரமாம் இயல்பையுடைத் தென்பர் புலவர், அம்மொழியிடை ஓர் இகரமும் ரகாரமும் வருக, ஈறாகிய குற்றுகரத்தினையும் அஃது ஏறி நின்ற ரகர ஒற்றினையும் கெடுத்து ஒரு மகர ஒற்று வந்து முடியும்: எ—று.

'மெய் என்பதனான் நிலைமொழிக்கட் பகரம் கெடுக்க.

உ-ம்: *தொள்ளாயிரம் எனவரும்.

இதனை ஒன்பது என்னும் ஒகரத்தின் முன்னர் வந்த தகர ஒற்றின்மேலே ஒகரத்தை ஏற்றிப் பகரங் கெடுத்துக் குற்றியலு கரம் மெய்யொடும் கெடுத்து நின்ற னகர ஒற்றினை இரண்டு ஒற்றாக்கி நூறு என்பதன் நகரம் கெடுத்து ஊகாரம் ஆகார மாக்கி ளகரத்தின் மேல் ஏற்றி இகரமும் ரகரமும் வருவித்து விகாரப்பட்ட உயிராகிய ஆகாரத்தின் முன் உடம்படுமெய்

ஈ. வே:

1. மெய்கெடுத்து என்றதனான்
அடிகளாசிரியர் தம்மிடம் உள்ள சுவடி 1ல் "மெய் கெடுத்து என்றதனான், குற்றியலுகரத்தினையும் மெய் யென்று கெடுக்க" என்னும் பாடம் இருப்பதாகக் குறிப்பிடுவர். அப்பாடம் தவறு, குற்றியலுகரக் கேடு இதில் கூறிவிட்டமையின்.

* இதுபற்றிய ஆய்வினை 445-ஆம் சூத்திரத்தின் உரையிற் காண்க.

யகாரம் வருவித்து றகர உகரம் கெடுத்து மகர ஒற்று வருவித்து முடிக்க.

சுப்.

பொருள்: ஒன்பது நிலைமொழியாகவும் நூறு வருமொழியாயும் இருக்குமிடத்து ஒன்பது என்றதன் முதல்எழுத்து முற்கூறப் பட்ட தன்மையவாய், தன் முன் தகர ஒற்றைப் பெறும். அதன் பின்னருள்ள 'ன்ப' என்றது கெட அதனிடத்து ஒற்றாகிய ளகரம் இரட்டும். நூறு என்றதன் நகரங் கெட, ஊ ஆ ஆக ஆகுந் தன்மைத் தென்ப. அவ்விடத்து ஆகாரத்திற்கும் இறுதி எழுத் திற்கும் இடையில் 'இர' வருதல் வேண்டும். இறுதி மெய்யாகிய 'று' கெட்டு, அவ்விடத்து மகர ஒற்று வரும்.

உ-ம்: ஒன்பது + நூறு → ஒன்ப + நூறு (460, 438, 234)→ தொள்ளாயிரம்.

முந்தை ஒற்றே ளகாரம் இரடுட்டும்' என்பதற்கு முன்னின்ற னகரவொற்று இரண்டு ளகரவொற்றாம் என உரைகாரர்கள் பொருள்கூறி 'மெய் என்றதனால் நிலைமொழிக்கண் நின்ற பகரங் கெடுக்க' என்றனா: அவ்வாறு கூறாது 'ஒன்பானிறுதி' (எழு 458) என்றவிடத்து 'இறுதி' என்பதற்கு 'இறுதி எழுத்துக்கள்' எனப் பொருள்கொள்வது போன்று ஈண்டு 'முந்தை' என்றதற்கு 'முன்னருள்ள எழுத்துக்களினிடத்தில்' என்றும் 'ஒற்றுளகாரம்' 'ஒற்றாகிய ளகாரம்' என்றும் பொருள் கொள்ளின் பகரக் கேட்டினைக் கூறாது போயினர் ஆசிரியர் என்ற குற்றம் அவர் மேல் நில்லாது.*

ஓன்பஃது என்றதை நிலை மொழியாகக் கொள்ளின் ஆய்தத்தையும் ஒற்று என்றதனாற் குறித்தனர் எனக் கூறல் வேண்டும்

---

* இக்கூற்றுப் பொருந்தாது. முந்தை என்பதற்குப் பின்னர் எனப்பொருள் கொண்டு ஒகரத்தின் பின்னர் 'ன்ப' எனக் கூறின் 'கெட' என ஒரு சொல் வருவிக்க வேண்டும். ளகாரம் இரட்டும் என்பதற்கும் ளகர ஒற்று வந்து இரட் டும் என 'வந்து' என்பது வருவிக்க வேண்டும். அன்றியும் ஒற்றேளகாரம் எனத்தொடர் அமையாது ஒற்றுளகாரம் என்றேயமைய வேண்டும்; அவ்வாறு அமையாமை யாலும் பொருந்தா தென்க.

வேங்.

இச்சூத்திரமும் தொள்ளாயிரம் என்னுஞ் சொல்லை நோக்கி இலக்கணம் கூறினவாறாம். இவ்வாசிரியர் கூற்று அமையாது என்று கருதி நன்னூலார், சின்னூலார், பின்னூலார் பலரும் பலவாறு கூறினர். அவையும் இத்தன்மையனவே.

வை. தங்கமணி

‡ ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும் (445) என்னும் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் ஒன்பஃது + பஃது எனப்பிரித்துப் புணர்த்தவர், இந்நூற்பாவிற்கு ஒன்பது + நூறு எனப் பிரிப்பானேன்?

பகரம் என்ற உயிர் மெய்யைக் கெடுக்க ஓரிடத்தில் (445 ல்) முறை மாற்றிக் கூறியதால் கெடுக்க என்றும், இச்சூத்திரத்தில் "மெய்" என்று கூறியதால் கெடுக்க என்றும் முரணாகக் கூறுவானேன்?

'ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே' என்பதால் முன்னர் 'ஒன்பான் ஒகரமிசை' (445) என்பதிற் கூறியது போல த் + ஒ = தொ; தொன்பஃது + நூறு என்றாக்கி, 'முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்' என்பதால் 'தொ' என்ற எழுத்தின் முன் நிற்கும் னகார வொற்று ளகார வொற்றாய் இரட்டிக்கும்; ள்ள்: தொள்ள்பஃது + நூறு என்றாக்கி, இவ்வாறு தொள்ள்பஃது + நூறு என்று நின்ற நிலையிலேயே விட்டு விட்டு வருமொழிக்குச் செல்கிறார் ஆசிரியர். பஃது என்ற சொல்லைத் தவிர முன்பின் உள்ள எழுத்துகள் புணர மிகத் தெளிவாக விதி சொல்லிச் செல்லும் காப்பியர், 'மெய்' என்பதாலும், மாட்டேற்றாலுந் தான் பஃது என்ற சொல்லைக் கெடுக்க வேண்டுமா? அந்த வெற்றிடம் ஏன் வந்தது? வெற்றிடத்தில் ஏதோ இருக்க வேண்டும் போல் தோன்றவில்லையா? எல்லாம் சொல்லிச் செல்பவர் வெற்றிடம் விட்டுச் செல்வாரா? அந்த நூற்பாவில் கூடுதல் ஒரு அடி எழுத அவர்க்குச் சிரமமாக இருந்திருக்குமா?...

படி எடுத்தோரால் விடப்பட்ட அவ்வெற்றிடத்தில் 'பஃது என் கிளவி இடம் இட்டகல' என்றிருந்திருக்க வேண்டும் எனக் கொண்டு தொள்ள் + நூறு என்றாக்கி,

---

‡ வை. தங்கமணி எனக்கு ஏ. என். பெருமாள் மூலம் அனுப்பி வைத்துள்ள 'தொள்ளாயிரம்' என்னும் கட்டுரை (கையெழுத்து படி) யின் சுருக்கம்.

படி எடுத்தோரால் விடப்பட்ட அவ்வெற்றிடத்தில் 'பஃது என் கிளவி இடம் இட்டகல' என்றிருந்திருக்க வேண்டும் எனக் கொண்டு தொள் + நூறு என்றாக்கி 'நூறென் கிளவி நகார மெய் கெட, 'ஊ ஆவாகும் இயற்கைத் தென்ப' என்பதால் வரு மொழி முதல் நகர மெய் கெட நிற்கும் ஊ, 'ஆவாகும்' என்பதால் தொள் + ஆ + இர + று என்றாக்கி, 'ஈறுமெய் கெடுத்து,மகாரம் ஒற்றும்' என்பதால் இவற்றையும் மெய்யையும் கெடுத்து—அதாவது இறுதியில் நிற்கும் குற்றியலுகரத்தையும் றகர மெய்யையும் கெடுத்து, அவ்விடத்தில் மகர மெய் தோன்றி முடியும் என்பதாம். இப்போது வெற்றிடம் நிரப்பப்பட்ட நூற் பாவின் முழு வடிவம் பார்ப்போம்.

ஒன்பான் முதல்நிலை முந்து கிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
பஃதென் கிளவி இடம்விட் டகல
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆ ஆகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்

இவ்வாறு கொள்வதால் குற்றியலுகரப் புணரியல் 'ஒன்பான் ஒகரமிசை' (445) என்னும் நூற்பாவிற்கு நிறுத்த சொல் கொண்டிருப்பதற்கும் இந்நூற்பாவில் நிறுத்தசொல் கொண் டிருப்பதற்கும் முரணின்றி ஒரே விதமாகப் பிரித்துக் காட்டி முன்பின் சிக்கல் இல்லாமல் புணர்தலையும் காணலாம்.

ஒன்று இரண்டுமுன் ஆயிரம்

464. ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதல் ஈர் எண்ணின் உகரம் கெடுமே (58)

ஆ. மொ.

இல.

When the word 'Āyiram' joins, the 'u' of first two numerals disappears.

க. சு.

When the word āyiram 'thousand' occurs, the sound u of the first two numerals will be drapped.

பி. இ. நூ.
முத்து. 445.

உகரம் கெடுமுத லோடு மிரண்டும்
ஆயிர முன்வரும் காலை யான

இளம்.

இது, அவ்வொன்று முதல் [1]ஒன்பான்கள் முன் ஆயிரம் என்பது [2]வருங்கால் முடிபு கூறுகின்றது.

இ-ள் : ஆயிரக்கிளவி வருங்காலை முதல் ஈர் எண்ணின் உகரம் கெடும்—ஆயிரம் என்னுஞ் சொல் ஒன்று முதல் ஒன்பான் கள் முன் வருங்காலத்து முதல் ஈர் எண்கள் பெற்று நின்ற உகரம் கெட்டு முடியும்.

உ-ம் : ஓராயிரம், இராயிரம் என வரும்.

நச்.

இஃது அவ்வொன்று முதல் ஒன்பான் எண்களோடு ஆயிரம் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள் : ஆயிரம் என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பான் எண்கள் முன் வருங்காலத்து, ஒரு இரு என்னும் இரண்டு எண்ணின்கண் பெற்று நின்ற உகரங் கெட்டு முடியும் ; எ-று.

உகரம் கெடும் எனவே ஏனையன முன்னர்க் கூறியவாறே நிற்றல் பெற்றாம்.

உ-ம் : ஓராயிரம், இராயிரம் என வரும்.

சுப்.

பொருள்: ஆயிரம் என்பது வருமொழியாய் இருக்க, ஒன்று இரண்டு இவற்றின் உகரம் கெடும் என்க.

ஈண்டு ஒன்று, இரண்டு என்பன ஒரு, இரு என ஆகும் என்று கூறியபின்னரே ஆங்குள்ள உகரம் கெடும் எனக் கூறுதல் பொருந்து மாகலான், ''ஆயிரக் கிளவி வரூஉங் காலை—முற் கூறியற்கை பெறுதல் உரித்தே'' எனத் தனிச் சூத்திரமாகவும், ''முதல் ஈர் எண்ணின் உகரம் கெடுமே'' என்பது ஒரு தனிச் சூத்திரமாகவும் இருந்திருத்தல் வேண்டும். 'முற்கூறியற்கை

சு. வே.

1. ஒன்பான்களோடு ஆயிரம் என்னும் சொல் ஒன்றி முடிதல் கூறுகின்றது.
2. வரின் முடியும் முடிபு.

பெறுதல் உரித்தே' எனக் கூறியிராவிடின் ''மூன்ற னொற்றே வகாரம் ஆகும்'' (466) என்றது தொடங்கி ''ஆறன் மருங்கிற் குற்றியலுகரம்'' (469) ஈறாகவுள்ள சூத்திரங்களில் கூறியவற்றால் முவ்வாயிரம், நாலாயிரம், ஐயாயிரம், ஆறாயிரம் என்பன வற்றிற்கு இலக்கணம் முழுமையும் கூறப்படாததாகும்.

சிவ.

சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறுவதுபோல 'முற்கூறியியற்கை பெறுதலும் உரித்தே' என்பது கூறப்பட வேண்டுவதில்லை.

> முதல்ஈர் எண்ணின் ஒற்று ரகரம் ஆகும்
> உகரம் வருதல் ஆவயி னான (439)

என்று முன்னர்க் கூறிவிட்டமையின் ஒன்று இரண்டு என்பன ஒரு, இரு என வந்து நிலைமொழியாக அமைந்தன. அவை அப்படியே அமைய ஆயிரம் வருடமித்து எவ்வாறாம் என்பது இச்சூத்திரத்தில் கூறப்படுகின்றது.

மேலும் ஓர் முடிபு

465 முதல்நிலை நீடினும் மானம் இல்லை (59)

ஆ.மொ:

இல.

There is no harm even if the initials lengthen.

க. சு.

It is no fault if the inilial (vowel) is lengthened.

இளம்.

இது, எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ—ள்: முதல் நிலை நீடினும் மானம் இல்லை—[1] அம்முதல் ஈர் எண்ணின் முதற்கண் நின்ற ஒகர இகரங்கள் நீண்டு முடியினும் குற்றம் இல்லை.

உ-ம்: ஓராயிரம், ஈராயிரம் எனவரும்.

நச்.

இஃது எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள்: அம்முதல் ஈர் எண்ணின் முதற்கண் நின்ற ஒகார இகாரங்கள் நீண்டு முடியினும் குற்றம் இல்லை; எ—று.

உ-ம்: ஓராயிரம் ஈராயிரம் எனவரும்.

சு. வே: 1. முதல் ஈர் எண்ணின் முன்நின்ற உயிர் நீட்டித்து வரினும்

மூன்றுமுன் ஆயிரம்

466. மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும் (60)

ஆ. மொ.

இல.

The consonant of 'Mūnṛu' become 'v'

க. சு.

The consonant of mūṉṛu 'three' is replaced by v.

பி. இ. நூ.

முத்து. 446

மூன்றன் மெய்யே வகாரம் ஆகும்.

இளம்.

இதுவும் மாட்டேற்றோடு ஒவ்வா முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: மூன்றன் ஒற்று வகாரம் ஆகும்—மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வகர ஒற்றாய் முடியும்.

உ-ம்: முவ்வாயிரம் எனவரும்.

*முதனிலை என்றதனான் முதல் நீண்டு வகர ஒற்றுக் கெட்டு மூவாயிரம் என்றும் வரும்.

நச்.

இது மூன்று என்னும் எண் ஆயிரத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ—ள்: மூன்று என்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று வகர ஒற்றாகத் திரிந்து முடியும்; எ—று.

உ-ம்: முவ்வாயிரம் எனவரும்

முன்னிற் சூத்திரத்து நிலை என்றதனான் இதனை முதல் நிலை நீட்டி வகர ஒற்றுக் கெடுத்து மூவாயிரம் என முடிக்க.

நான்குமுன் ஆயிரம்.

467. நான்கன் ஒற்றே றகாரம் ஆகும். (61)

ஆ. மொ.

இல.

The consonant 'nānku' becomes 'ṟ'.

---

* மூவளவு (எழு. 5) மூவெழுத்து (எழு. 23) முதலிய ஆசிரியர் வழக்கினை நோக்க ஒற்றுமைப் போலியான் மூவாயிரம் என வந்திருத்தல் கூடும்—சாஸ்திரியார்.

க. சு

The consonant of nāṉku 'four' is replaeed by 'l.'

பி.இ.நூ.

முத்து. 477.

நான்கன் மெய்யே லகாரம் ஆகும்.

இளம்

இதுவுமது.

இ—ள்: நான்கன் ஒற்று லகாரம் ஆகும்—நான்காம் எண்ணின் கண் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாய் முடியும்.

உ—ம்: நாலாயிரம் என வரும்.

நச்.

இது நான்கு என்னும் எண் அதனொடு புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: நான்கு என்னும் எண்ணின் கண் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாகத் திரிந்து முடியும்; எ—று.

உ-ம்; நாலாயிரம் என வரும்.

ஐந்து முன் ஆயிரம்

468. ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும். (62)

ஆ. மொ.

இல:

The consona nt of 'Aindhu' beeomes 'y'.

க. சு.

The consonant of aintu 'five' is repla ced by 'y'

பி.இ.நூ:

முத்து. 448

ஐந்தன் மெய்யே யகாரம் ஆகும்.

இளம்.

இதுவுமது.

இ—ள்: ஐந்தன் ஒற்று யகாரம் ஆகும்—ஐந்தாம் எண்ணின் கண் நின்ற நகர ஒற்று யகர ஒற்றாய் முடியும்.

உ-ம்: [1]ஐயாயிரம் எனவரும். [2]முன்னர் இவ்வாறு ஓதாமையான், ஐயகல் ஐயுழக்கு உடம்படு மெய் பெற்றது.

சு. வே. 1. ஐய்யாயிரம்.

2. இத்தொடர் தம்மிடம் உள்ள சுவடியில் இல்லை என்பர் அடிகளாசிரியர்.

நச்.

இஃது ஐந்து என்னும் எண் அதனொடு புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: ஐந்து என்னும் எண்ணின் நின்ற நகர ஒற்று யகர ஒற்றாகத் திரிந்து முடியும்; எ-று.

உ-ம்: ஐயாயிரம் என வரும்.

வேங்.

நகரமெய் யகர மாதற்குச் சிறிதும் இயைபின்மையின், இவ்விதி சொன்னிலையை நோக்கிக் கூறியதேயாகும். ஐந்து என்பதன் முதல்நிலையாகிய 'ஐ' என்பதனோடு ஆயிரம் என்னும் சொல் சேர்ந்து ஐயாயிரம் என்றாயிருக்கின்றது. இவ்வாறே ஐ என்னும் முதனிலையோடு உயிர் முதன்மொழிகள் சேர்ந்து வருகின்றன. ஐயீராயிரத் தாறைந் நூற்றொடு (செய்.101) ஐயுணர் வெய்தியக் கண்ணும்' (குறள் 354) என்பன போல்பவை பல. பிறவெழுத்துக்களும் இவ்வாறே வருதல் உண்டு. ஐவகை யடியும் விரிக்குங் காலை' (செய்.50) என்று வரும்.

ஆறு முன் ஆயிரம்.

469 ஆறன் மருங்கின் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும் (63)

ஆ. மொ.

இல.

The shortened 'u' 'Āṛu' must disappear leaving the consonant.

ஞா. சு.

The overshort u of āṛu 'six' must disappears leaving the consonant.

பி. இ. நூ.

முத்து. 449.

ஆறென் கிளவி யதனிலை திரியா

இளம்.

இதுவுமது.

இ—ள்: ஆறன் மருங்கின் குற்றியலுகரம் ஈறு மெய் ஒழியக் கெடுதல் வேண்டும்—ஆறாம் எண்ணின்கண் நின்ற குற்றியலுகரம்

தான் ஏறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்ப உகரமாகிய அவ்விறுதானே கெட்டு முடிதல் வேண்டும்.

உ-ம்: அறாயிரம் எனவரும்,

திரிந்ததன் திரிபது என்னும் நயத்தான், ஆறன் மருங்கின் என்று ஓதப்பட்டது. ஆறு என்பது அறு எனக் குற்றியலுகரமும் முற்றியலுகரமுமாக ஓதப்பட்டு நின்றமையின் அவ்வுகரக்கேடு ஓதப்பட்டது.

'ஈறு' எனவும் 'மெய்' எனவும் அவ்வுயிர் மெய்யைப் பிரித்துச் செய்கை ஓதினமையான், அவ்வுயிர் மெய்யினை ஒற்றுமை நயத் தாற் குற்றியலுகரம் என்று ஓதினானாகக் கொள்க.

ஆறன் மருங்கின் ஈறு மெய் ஒழியக் கெடும் என்னாது குற்றிய லுகரம் என்று ஓதினாமையான், நெடுமுதல் குறுகாதே நின்று ஆறாயிரம் என்றும் ஆம்.

இன்னும் அதனானே 'ஆறாகுவதே' (சொல். வேற். 18) என்றாற் போலப் பொருட் பெயர்க்கண் வரும் முடிபும் கொள்க.

மேல் மாட்டேற்றானே எண்ணாயிரம் என முடிந்தது.

நச்.

இஃது ஆறு என்னும் எண் அதனோடு புணருமாறு கூறு கின்றது.

இ—ள்: ஆறு என்னும் எண்ணின்கண் நின்ற குற்றியலுகரம் நெடுமுதல் குறுகி அறு வென முற்றுகரமாய் நிற்றலின், அது தான் ஏறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்பக் குற்றுகரமாகிய ஈறு தான் கெட்டுப் புணர்தலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

உ-ம்: அறாயிரம் என வரும்.

முன்னர் 'நெடுமுதல் குறுகும்' (எழு. 440) என்ற வழி அறு என நின்ற முற்றுகரத்திற்கே ஈண்டுக் கேடு கூறினார் என்பது பெற்றாம். என்னை? குற்றியலுகரமாயின் ஏறி முடிதலின். இது குற்றுகரந் திரிந்து முற்றுகரமாய் நிற்றலின் ஈண்டு முடிபு கூறினார். முற்றியலுகரம் ஈறு மெய் ஒழியக் கெடும் எனவே குற்றுகரங்கெடாது ஏறி முடியும் என்பது அருத்தாபத்தியாற் பெறுதும். ஆறாயிரம் என வரும்.

மருங்கென்றதனாற் பிற பொருட் பெயர்க்கண்ணும் நெடு முதல் குறுகாது நின்றுமுடிதல் கொள்க. 'ஆறாகுவதே' எனவரும்.

சுப்.

பொருள்: ஆறு என்பதன் பின்னர் ஆயிரம்வரின், அவ்வாறின் குற்றுயலுகரம் தனக்குப் பற்றுக் கோடாகிய மெய்யைவிட்டுத் தான் கெடுதல் வேண்டும். ஆறு+ஆயிரம் என்றிருக்க, இச் சூத்திரத்தான் ஆற்+ஆயிரம் என்றாக, 'ஆயிரக் கிளவி வருஉங் காலை—முற்கூறியற்கை பெறுதலுரித்தே' என்ற பொது விதி யாற் பெறப்படுட்ட 'மூன்று மாறும் நெடுமுதல் குறுகும்'' (441) என்றதனால் ஆகாரம் அகரமாக அறாயிரம் என்றாயிற்று.

'ஆயிரக் கிளவி வருஉங்காலை' என்பது அதிகரித்தது.

நெடுமுதல் குறுக்கமே முதலில் வரும் என நினைத்து உரை காரர்கள் இச்சூத்திரத்திலுள்ள குற்றியலுகரம் முற்றியலுகரம் எனப் பொருள்படக் கூறப்பட்ட தென்றனர். அது பொருந்தாது. மூன்று+பத்து என்றிருக்க ஒன்று முதல் ஒன்பான்' (438) என்ற சூத்திரத்தான் 'று' கெட, அதன் பின்னரே 'மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகும்' (441) என்றதனால் முன்+பத்து என ஆகும் எனக் கூறப்பட்டமையானும், அறுபஃது, அறுநூறு என்றவிடத்து இறுதி எழுத்துக் கெடாதது நோக்கி 'ஆறனிறுதி அல்வழியான் (438) எனக் கூறப்பட்டதாயினும், அறாயிரம் என்ற விடத்து இறுதிக் குற்றியலுகரம் கெடும் எனக் கூறவேண்டும் ஆதலானும், புணர்ச்சி கூறுமிடத்து நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தைப் பற்றியும் குறித்து வரு கிளவியின் முதல் எழுத்தைப் பற்றியும் முன்னர்க் கூறவேண்டுவது இன்றியமையாததானும், ஈண்டு ஆசிரியர் குற்றியலுகரம் எனக் கூறியதே நேரிதாகும். ஆகலின், 'ஆறு' என்பது அறு எனக் குற்றியலுகரம் முற்றியலுகர மாக ஓதப்பட்டு நின்றமையின் அவ்வுகரக் கேடு ஓதப்பட்டது. ''ஈறு எனவும் மெய் எனவும் அவ்வுயிர் மெய்யைப் பிரித்துச் செய்கை ஓதினமையின் அவ்வுயிர் மெய்யினை ஒற்றுமை நயத்தாற் குற்றியலுகரம் என்று ஓதினானாகக் கொள்க'' என்று இளம்பூரணர் கூறிய தொடரும், ''முன்னர் நெடுமுதல் குறுகும் என்றவழி அறுவென நின்ற முற்றுகரத்திற்கே ஈண்டுக்கேடு கூறினார் என்பது பெற்றாம்; என்னை? குற்றியலுகரமாயின் ஏறிமுடிதலின், இது குற்றுகரந் திரிந்து முற்றுகரமாய் நிற்றலின் ஈண்டு முடிபு கூறினார். முற்றியலுகரம் ஈறு மெய் ஒழியக் கெடும் எனவே குற்றுகரங் கெடாது ஏறி முடியும் என்பது அருத்தா பத்தியாற் பெறுதும்'' என்ற நச்சினார்க்கினியர் கூறிய தொடரும் பொருந்தா வென்க. இச்சூத்திரப்பொருள் 'புள்ளி

யீற்று முன்' (எழு. 139) என்ற சூத்திரத்தாற் பெறப்படுதலின் இச்சூத்திரம் வேண்டாம் எனின், அற்றன்று. அச்சூத்திரம் பொதுவாய் நிலை மொழியீற்றுக் குற்றியலுகரத்தைப் பற்றிக் கூறுதலானும், ஒன்று முதல்...ஆறனிறுதியில் வழியான'' (438) என்பது நிலை மொழி ஆறு ஆயிருக்க, அச்செய்கையை ஒருவாறு விலக்குதலானும் ஐயம் வரும்; அவ்வையத்தைப் போக்கிற்று இச்சூத்திரம் என்க. ஆறாயிரம் என்பது பிற்கால வழக்கென்க.

''மேல்மாட்டேற்றானே எண்ணாயிரம் என முடிந்தது'' என இளம்பூரணத்தில் உள்ளது. மாட்டேறு கூறிய 'ஆயிரக்கிளவி' (463) என்ற சூத்திரத்தில் ஆய்த பகரம் கெட எனப் பொருள் கொண்ட ஓரடி விடப்பட்டதென்றதை இளம்பூரணர் நோக்கிலர் என்பது வியப்பிற் கிடமாகின்றது

வேங்.

இச்சூத்திரத்தில் 'குற்றியலுகரம்' என்றது 'அறு' என்னும் சொல்லில் உள்ள முற்றிய லுகரத்தை என்று உரையாசிரியரும் (இளம்பூரணர்) நச்சினார்க்கினியரும் கூறிய பொருளே அமைவு உடையது.*சிவஞான முனிவர் கூறிய பொருள் அமைதியின்று. அதனை யானெழுதியுள்ள குற்றியலுகரம் என்னும் கட்டுரையிற் காணலாகும்.

சிவ.

'திரிந்ததன் திரிபு' நயம்;

இச்சூத்திரத்தின்படி நிலைமொழி 'அறு' என்பதாகும்; 'ஆறு' என்பதன்று. ஆறு என்னும் எண்ணின் முன் 'பஃது' என்னும் எண் வரும்போது முன்னையது நெடு முதல் குறுகி அறுபஃது என வரும் என்பது ''மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்'' (குற் 35.) என்னும் சூத்திரத்திற் கூறப்பட்டது. அதன் பின்னர் அளவுப் பெயர் முதலிய பெயர்கள் வரும்போது எவ்வெவ்வாறு புணரும் என்று கூறிவந்த இடம் எங்கும் 'அறு' என்பதே நிலை மொழியாகக் கொள்ளப்பட்டது. ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வருமொழியாக வரும்போதும் நிலைமொழி 'அறு' என்பதே. அதனால் ஆசிரியர் ''அறு வின் மருங்கிற் குற்றியலுகரம், ஈறு மெய் யொழியக் கெடுதல் வேண்டும்'' என்று கூறியிருத்தல் வேண்டும். ஆனால் 'ஆறு' என்பது நிலை மொழிபோல ''ஆறன் மருங்கின்'' என்று தொடங்கினார்.

---

* சிவஞான முனிவர் ஆறு என்பதன் முன் ஆயிரம்வரின் குற்றிய லுகரம் கெடும் என்றார் (சூத்திர விருத்தி.)

காரணம் 'திரிந்த தன் திரிபு அது' என்னும் நயத்தைக் கொண்டதேயாம்.

'அறு' என்பது 'ஆறு' என்னும் எண்ணுப் பெயரின் திரிந்த வடிவம். அதில் திரிந்தது 'ஆ' என்னும் நெட்டெழுத்து. அதன் திரிபாவது 'அ' எனக் குறுகியமை. அக்குறுக்கமாகிய திரியைத் தனித்திரிபாகக் கருதாமல் அதன் முன்னைய வடிவாகிய நெடிலாகவே ஆசிரியர் கருதியது 'அது' எனக் கருதலாம். ஆதலின் ஆறு என்பது நிலைமொழிபோல் 'ஆறன் மருங்கின்' என்றார். என்றாலும் 'அறு' என்பதே நிலைமொழியாகும். இவ்வாறு கூறியது திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறியதாம். ஒற்றுமை நயம்:

ஆறு என்னும் எண்ணின் இறுதி 'று' என்னும் எழுத்தை ஈறு (உ) எனவும், மெய் (ற்) எனவும் பின்னர்ப் பிரித்துரைக்கும் ஆசிரியர் முன்னர்க் குற்றியலுகரம் எனக் கூறியது, 'று' என்னும் எழுத்தை உயிர் மெய்யாகக் கருதிய ஒற்றுமை நயத்தான் என்க.

ஆறன் மருங்கின் என்பதற்கு ஆறு என்னும் பொருளதாகிய அறு என்னும் சொல்லிடத்து எனப் பொருள் கொள்க.

'மேல்மாட்டேற்றானே எண்ணாயிரம் என முடிந்தது' என இளம்பூரணர் உரையில் இருப்பது இடைச்செருகலாகலாம். மாட்டேறு கூறப்பட்டது யாண்டு என்பது விளங்கவில்லை. ஒரு கால் மாட்டேற்றுச் சூத்திரம் ஒன்று மறைந்ததோ என்று கருதுதலும் கூடும்.

ஒன்பதுமுன் ஆயிரம்

470. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே (64)

ஆ மொ:

இல்:

The final of 'onbān' will not change in its form.
It must have the traditional increment 'in'.

க.சு.

The shape of final (part) of oṉpāṉ 'nine' will not change it is (according to) the tradition that it must receive the empty morph iṉ

பி. இ. நூ.
முத்து 450

ஒன்பான் இன்னொடு வருமென மொழிப.

இளம்.

இதுவுமது.

இ—ள் : ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மரபு இன்பெறல் வேண்டும்—ஒன்பது என்னும் எண்ணின் இறுதிக் குற்றியலுகரம் தன்வடிவு நிலை திரிந்து கெடாது சாரியையாகிய மரபினையுடைய இன்பெற்று முடிதல் வேண்டும்.

உ-ம்: ஒன்பதினாயிரம் என வரும்.

உருபு என்றும், நிலை என்றும், சாரியை மரபு என்றும் கூறிய மிகுதியான், ஆயிரமல்லாத பிற எண்ணின்கண்ணும் பொருட்பெயரிடத்தும், இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபும் கொள்க.

ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றுத் தடக்கை, ஒன்பதிற்றெழுந்து என வரும்.

இன்னும் அவ்விலேசானே, மேல் எண்ணாயிரம் என்ற வழி ஒற்றிரட்டுக் கொள்க.

நச்.

இஃது, ஒன்பது என்னும் எண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ-ள் : ஒன்பது என்னும் எண்ணின் இறுதிக் குற்றுகரம், தன்வடிவு நிலைதிரிந்து கெடாது, சாரியையாகிய மரபினை யுடைய இன் பெற்று முடிதலை விரும்பும் ஆசிரியன் ; எ-று.

உ-ம் : ஒன்பதினாயிரம் என வரும்.

உருபு என்றும் நிலை என்றும் சாரியை மரபு என்றும் கூறிய மிகையால் ஆயிரமல்லாத பிற எண்ணின்கண்ணும் பொருட் பெயரிடத்தும் இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபும் கொள்க. ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றொன் பது, ஒன்பதிற்றுத்தடக்கை, ஒன்பதிற்றெழுத்து என வரும்.

இன்னும் அவ்விலேசானே வேறொரு முடிபின்மையிற் கூறாதொழிந்த எண்ணாயிரம் என்றவழி ஒற்றிரட்டுதலும் ஈண்டுக் கூறியவற்றிற்கு ஒற்றிரட்டுதலும் கொள்க. 'அளவாகு

மொழி முதல்' (எழு. 121) என்பதனுள் 'நிலைஇய' என்றதனான் னகரம் றகரமாதல் கொள்க.

வேங்.

'ஒன்பான் இறுதி யுருபுநிலை திரியாது இன் பெறல் வேண்டும்' எனவே, குற்றுகரம் கெடாது நின்றே இன் என்பதனோடு புணர்தல் தெளிவாகும். இதனானும், மேற் சூத்திரத்திற் குறித்தது 'அறு' என்னும் முற்றுகர வீற்றுச் சொல்லையே என்பது போதரும். ஆறு என்னும் எண்ணுப் பெயரிலுள்ள குற்றுகரவுயிர் கெடுதற்கு விதி கூறினாராயின், ஈண்டும் 'ஒன்பானிறுதி யுயிர்கெட வேண்டும்' என்று கூறல் வேண்டுமன்றோ?

ஒன்று முதல் ஒன்பதுமுன் நூறாயிரம்

471. **நூறா யிரமுன் வரூஉங் காலை**
நூறன் இயற்கை முதல்நிலைக் கிளவி **(65)**

ஆ.மொ:

இல:

When nūṟāyiram' follows the numbers from one to nine the word standing first undergoes the same change as in the case of 'nūṟū'

க. சு.

When the nūṟayiram 'hundred thousand' follows the numerals, the word standing, first undergoes the same change as in the case of nūṟu 'hundred'

பி.இ. நூ.

முத்து. 451

நூறா யிரம்வரின் இயல்பா கும்மே.

இளம்.

இது ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்னும் அடையடுத்து ஆயிரம் என்பது முடியுமாறு கூறுகின்றது.

இ-ள் : நூறாயிரம் முன்வரு காலை முதல் நிலைக்கிளவி நூறு என் இயற்கை—நூறாயிரம் என்னும் அடையடுத்த மொழி ஒன்றுமுதல் ஒன்பான்கண் முன்வருங்காலத்து முதல்

நிலைக் கிளவியாகிய ஒன்று என்னும் சொல் அவ்வொன்றனோடு முடிந்த விகார இயற்கை எய்தி முடியும்.

வழிநிலைக் கிளவியாகிய இரண்டு முதல் எண்கள் விகாரம் எய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்.

உ-ம் : ஒருநூறாயிரம் என வரும், இருநூறாயிரம், இரண்டு நூறாயிரம் ; முந்நூறாயிரம், மூன்று நூறாயிரம் ; நானூறாயிரம், நான்கு நூறாயிரம் ; ஐந்நூறாயிரம், ஐந்து நூறாயிரம்; அறு நூறாயிரம், ஆறு நூறாயிரம்;எண்ணூறாயிரம் எட்டு நூறாயிரம் ; ஒன்பது நூறாயிரம் என வரும்.

உரையிற் கோடல் என்பதனால், தொள்ளாயிரம் என்ற முடிபினோடு மாட்டேறு சென்ற தேனும் அவ்வாறு முடியா தென்று கொள்க.

'முன்' என்பதனான் இன்சாரியை பெற்று ஒன்பதி னூறாயிரம் என்றும் ஆம்.

நிலை என்றதனான், மூன்றும் ஆறும் இயல்பாய் முடியும் முடிபின்கண் நெடுமுதல் குறுகாமை கண்டு கொள்க. இன்னும் அதனானே நானூறாயிரம் என்புழி வருமொழி நகரக்கேடு கொள்க.

நச்.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான் எண்களோடு நூறு என்னும் எண் அடையாக அடுத்த ஆயிரம் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள்: நூறாயிரம் என்னும் அடையடுத்தமொழி ஒன்று முதல் ஒன்பான் எண்கள் முன் வருமொழியாய் வருங்காலத்து, ஒன்றென்னும் முதனிலைக் கிளவி ஒன்றுமுன் நூறு என்னும் எண்ணோடு முடிந்தாற்போல விகாரம் எய்தி முடியும். எனவே வழிநிலைக் கிளவியாகிய இரண்டு முதலிய எண்கள் விகாரம் எய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்; எ—று.

உ-ம்: ஒரு நூறாயிரம் எனவரும். ஏனைய இரு நூறாயிரம் இரண்டு நூறாயிரம், முந்நூறாயிரம் மூன்று நூறாயிரம், நானூறாயிரம் நான்கு நூறாயிரம், ஐந்நூறாயிரம் ஐந்து நூறாயிரம், அறுநூறாயிரம் ஆறுநூறாயிரம், எண்ணூறாயிரம் எட்டு நூறாயிரம், ஒன்பது நூறாயிரம் எனவரும் இவ்விகாரப் பட்டனவற்றிற்குக் குற்றுகரம் மெய்யொடும் கெடுத்து முதலீ ரெண்ணின் ஒற்று ரகரமாக்கி உகரம் வருவித்து மூன்றும் ஆறும் நெடு முதல் குறுக்கி மூன்றனொற்று நகாரமாக்கி நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா வாக்கி எட்டனொற்று ணகரமாக்கி

இலேசுகளாற் கொண்ட செய்கைகளில் வேண்டுவனவும் கொணர்ந்து முடிக்க.

ஏற்புழிக் கோடல் என்பதனால் தொள்ளாயிரம் என்ற முடிபினோடு மாட்டேறு சென்றதேனும் அவ்வாறு முடியா தென்று கொள்க. 'முன்' என்பதனான் இன்சாரியை பெற்று ஒன்பதினூறாயிரம் என்றுமாம். நிலை என்றதனான் மூன்றும் ஆறும் இயல்பாக முடிவுழி நெடுமுதல் குறுகாமை கொள்க.

வேங்

உரையாளர் இருவரும் 'முதனிலைக் கிளவிக்கு இவ்வாறு விதிகூறவே வழிநிலைக் கிளவி விகாரம் எய்தியும் எய்தாதும் வரும்' என்று கூறி உதாரணம் காட்டினர். இரண்டு நூறாயிரம் மூன்று நூறாயிரம் என்னுமிடத்து நூறாயிரம் என்பது தனிச் சொல்லாய் நிற்றல் போல, இருநூறாயிரம் முந்நூறாயிரம் என்னுமிடத்து, நூறாயிரம் என்பது தனிச் சொல்லாய் நிற்ற லின்று. ஆண்டு இருநூறு முந்நூறு என்பவை ஒருமொழித் தன்மையில் நின்று, ஆயிரம் என்னும் வருமொழியோடு புணர்ந்த தெனினும் ஒக்கும்.

பாவாணர்

*இலக்கம், கோடி என்னும் எண்ணுப் பெயர்கள் இவ்வியலிற் கூறப்பட்டமையால் பழந்தமிழர்க்கு 99,999 வரைதான் எண்ணத் தெரிந்திருந்தது என்று சிலர் கொள்வர். இலக்கம், கோடி என்பன குற்றியலுகரச் சொற்கள் அல்ல என்றும், குற்றுகரச் சொற்களே இவ்வியலின் புணர்த்துக் காட்டப்படுவன வென்றும், இக்காலத் தில் மறுபெயரான நூறாயிரம் என்னும் சொல்லும் பத்து நூறாயிரம் வரை புணர்த்தற்கிடமும் அடுத்த (எழு. 471) நூற்பாவில் கூறப்பட்டுள வென்றும், இலக்கம் கோடி என்னும் பெயர்கள் முறையே பெரிய இலக்கம், கடைசி எண் என்று பொருள்படும் தனித்தமிழ்ச் சொற்களே என்றும் அறிந்து கொள்க

---

* இலக்கம் என்பதை ஆயிரம் போலக் கொண்டு ஓரிலக்கம் ஈரிலக்கம் மூவிலக்கம் முதலியவாகவும், கோடி என்பதைக் கலம், கழஞ்சு, போலக் கொண்டு ஒருகோடி இருகோடி முக்கோடி, நாற்கோடி, ஐங்கோடி முதலிய வாகவும், இரண்டு இலக்கம், மூன்று இலக்கம், இரண்டு கோடி மூன்றுகோடி முதலியவாகவும், பதின் இலக்கம் பதிற்றிலக்கம், பதின்கோடி பதிற்றுக்கோடி முதலிய வாகவும் புணர்க்க.

நூறுமுன் ஒன்று முதல் ஒன்பது

472. நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனவொற்று மிகுமே. (66)

ஆ. மொ:
இல.

The word 'ṉūṟu' when prceeding the numbers from one to nine has the final limb there being doubled.

க. சு.

When the word nūṟu 'hundred' prceedes the numbers from one to nine, the final number in that position will be doubled.

பி. இ. நூ:
முத்து. 452.

நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே.

இளம்.

இது, நூறு என்பதனோடு ஒன்றுமுதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ—ள்: நூறு என் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு ஈறுசினை ஒழிய இனஒற்று மிகும்—நூறு என்னும் சொல் ஒன்றுமுதல் ஒன்பான்களோடு புணருமிடத்து '[1]*ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினையும் கெடாது நிற்பச் சினைக்கு *[2]*இனமாகிய இனஒற்று மிக்கு முடியும்.*

உ—ம்: நூற்றொன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது எனவரும்.

சு. வே:

1. *அடிகளாசிரியர் தம் வசம் உள்ள சுவடி 1-ல், "ஈறாகிய குற்றியலுகரம் கெட்டும் கெடாதும் நிற்க, அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினை......ற்ப சினைக்கு இனமாகிய இனவொற்று மிக்கு முடியும்" என்னும் பாடம் உளதாகக் குறிப்பிடுவர்.*
2. *இனமாகிய ஒற்று.*

*ஈறுசினை என்று ஓதிய மிகையானே நூறு என்பதனோடு பிற எண்ணும், பிற பொருட்பெயரும் இவ்விதியும் பிறவிதியும் முடியுமாறு கொள்க. நூற்றுக்கோடி, நூற்றுப்பத்து, நூற்றுத் தொண்ணூறு எனவும்; நூற்றுக்குறை, நூற்றடுக்கு எனவும் வரும்.

நச்.

இது நூறு என்பதனோடு ஒன்றுமுதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ—ள்: நூறு என்னும் எண்ணுப்பெயர், ஒன்றுமுதல் ஒன்பான் எண்களோடு புணருமிடத்து, ஈறாகிய குற்றுகரந் தன்னாற் பற்றப்பட்ட மெய்யொடுங் கெடாது நிற்ப, அச்சினைக்கு இனமாகிய றகர ஒற்று மிக்கு முடியும்: எ—று.

உ—ம்: நூற்றொன்று என வரும். இரண்டு முதல் ஒன்பது அளவும் செய்கை அறிந்து ஒட்டுக.

'ஈறுசினை' என்று ஓதிய மிகையான் நூறு என்பதனோடு பிற எண்ணும் பிறபொருட்பெயரும் இவ்விதியும் பிறவிதியும் எய்தி முடிதல் கொள்க. நூற்றுப்பத்து, நூற்றுக்கோடி, நூற்றுத் தொண்ணூறு எனவும், நூற்றுக்குறை, நூற்றிதழ்த்தாமரை, நூற்றுக்காணம், நூற்றுக்கால் மண்டபம் எனவும் இனஒற்று மிக்கன கொள்க ‡இன்னும் இதனானே இருநூற்றொன்று, இரண்டு நூற்றொன்று என நூறு அடையடுத்த வழியும் கொள்க.

வேங்.

ஈறு சினை என்றது இறுதிச்சினை (235) என்பது போல வந்தது. ஈறாகிய சினையெழுத்து றுகரம். 'ஒழிய' என்பது 'தவிர' என்னும் பொருளது. ஈறாகிய சினை எழுத்தேயன்றி இன ஒற்று மிகும் என்றவாறு. 'ஈறு மெய் ஒழிய' (469) ஒட்டிய மெய் யொழித்து (177) என்னுமிடத்து, ஒழிதல் என்னும் சொல்லின் பொருளை நோக்குக. இனவொற்று மிகவே 'நூற்று' என்று அமை

---

* ஈறு என்பதும் சினை என்பதும் ஒன்றாதலின் ஈறு என்றலே அமையும்; சினை என்றது மிகை.

‡ 'இதனை அடையொடு தோன்றினும் '(எழு. 111) என்பதனாற் கொள்ளல் கூடும்' என்பர் சாஸ்திரியார்.

யும். 'புள்ளியீற்றுமுன்' என்னுஞ் சூத்திரத்தான் 'நூற்று'என்னுங் குற்றுகர வீற்றின்மேல் ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு ஒன்பது என்னும் உயிர் முதன் மொழிகள் ஏறிமுடியும். மெய் முதன் மொழிகள் வருமிடத்துக் குற்றியலுகரம் கெடாதாகலின் நூற்று நான்கு என்று வரும்.

சிவஞானமுனிவர் இச்சூத்திரத்தானும் 'ஆறன் மருங்கின் குற்றியலுகரம்' என்னுஞ் சூத்திரத்தானும் குற்றியலுகரம் கெட நின்றவொற்றின் மேல் உயிர் வந்து ஒன்றி முடியும் என்று ஆசிரியர் விதித்தார் என்று பொருள் கொண்டார். நூறு என்பதில் குற்றியலுகரம் கெட்டதாயின், நூற்றுமூன்று, நூற்று நான்கு என்று வருதல் அமையாது. ஒன்று முதல் ஒன்பது முடிய உள்ள ஒன்பது எண்ணுப் பெயர்களுக்கும் ஒருங்கே விதி கூறி இருப்ப, அவற்றுள் மூன்று நான்கு என்னும் இரண்டு எண்ணுப் பெயர்கட்கு மட்டும் ஒரு விதியும், ஒன்று இரண்டு ஐந்து ஆறு ஏழு எட்டு ஒன்பது என்னும் ஏழு எண்ணுப் பெயர்கட்கு ஒரு விதியும் ஆமோ? மூன்று நான்கு என்பவை மெய்ம் முதல் மொழியாகலின் அவை வந்த வழிக் குற்றியலுகரம் கெட்டிலது எனின், அவ்வாறாயின், அவ்விரண்டெண்ணுப் பெயர் வரும்வழிக் குற்றுகரம் கெடாதிருக்கும் என்று அடுத்து வேறு சூத்திரத்தால் சிறப்பு விதி கூறி இருத்தல் வேண்டுமன்றே? ஆசிரியர் அவ்வாறு கூறாததனான் சிவஞான முனிவர் கூற்றுப் பொருந்துவதன்று.

நூறு முன் ஒருபஃது முதலியன.

473. அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும். (67)

ஆ. மொ.
இல.

Even when they precede 'Paththu' the same change takes place.

க. சு.

The same change takes place also when they precede Pattu 'ten'

பி- இ. நூ.
முத்து. 453.

அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும்.

இளம்.

இது, அந்நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்கள் அடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: அவை ஊர் பத்தினும் அத்தொழிற்று ஆகும்—அந்நூறு என்பது ஒன்று முதல் ஒன்பான்களான் ஊரப்பட்ட பத்தினோடு புணருமிடத்தும் அத்தொழிற்றாய் இன ஒற்று மிக்கு முடியும்.

உ-ம்: நூற்றொருபஃது, இருபஃது முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அருபஃது எழுபஃது, எண்பஃது என வரும்.

ஆகும் என்றதனான், நிலைமொழி அடையடுத்து வரும் [1]முடிபும் கொள்க. ஒரு நூற்றொருபஃது என ஒட்டுக.

நச்.

இஃது அந்நூறென்பதனோடு ஒன்று முதல் ஒன்பான் எண்கள் அடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: அந்நூறு என்பது நின்று முற்கூறிய ஒன்று முதல் ஒன்பான் எண்களையூர்ந்து வந்த பத்து என்பதனோடு புணருமிடத்தும், ஈறு சினை ஒழிய இனவொற்று மிக்கு முடியும்; எ-று,

உ-ம் : நூற்றொருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது. ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது என வரும். மற்று நூற்றொன்பது அவையூரப்பட்டு வந்தது அன்மை யுணர்க.

ஆகும் என்றதனான் ஒரு நூற்றொருபஃது, இருநூற்றொருபஃது என நிலைமொழி அடையடுத்து முடியும் முடிபும் கொள்க.

நூறுமுன் அளவு நிறைப் பெயர்கள்

474. அளவும் நிறையும் ஆயியல் *திரியா
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர் (68)

கு.வே; 1. மொழியும்

* திரியாது. நச். பாடம். இது தவறு ; அளவும் நிறையும் என்னும் பன்மைக்கு திரியா என்னும் பன்மை முடிபே பொருந்தும்.

ஆ. மொ:

இல.

The measures and weights do not deviate from the above rules ; shortened 'u' and the nature of the hard consonant stand as mentioned already-say the poets.

க. சு.

Learned men say that (word denoting) measures and weights do not deviate from the above rnles ; over-short u and the plosive (ṛ ṛ) are the same as before.

பி.இ.நூ.

முத்து. 454.

அளவோடு நிறைவரின் அவ்வியல் நிலையும்

இளம்.

இது, அந்நூறு என்பதனோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள் : அளவும் நிறையும் ஆ இயல் திரியா—அந்நூறு என்பதனோடு புணருமிடத்து அளவுப் பெயரும் நிறைப் பெயரும் மேற்கூறிய இயல்பில் திரியாதே நின்று இனவொற்று மிக்கு முடியும், குற்றியலுகரமும் வல்லெழுத்து இயற்கையும் முன் கிளந்த அன்ன என்மனார் புலவர்—அவ்விடத்துக் குற்றியலுகரங் கெடாமையும் இனவொற்று மிக்கு வன்றொடர் மொழியாய் நின்றமையான் வருமொழி வல்லெழுத்து மிகும் இயல்பும் மேல் வன்றொடர் மொழிக்குக் கூறிய தன்மையவென்று சொல்லுவர் புலவர்.

உ-ம் : நூற்றுக்கலம், சாடி, தூதை பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் ; கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'திரியா' என்றதனான், நூறு என்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க.

ஒருநூற்றுக்கலம், இருநூற்றுக்கலம் என ஒட்டுக.

நச்.

இது நூறு என்பதனோடு அளபுப் பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள் : நூறு என்பதனோடு அளவுப் பெயரும் நிறைப் பெயரும் புணருமிடத்து முற்கூறிய இயல்பிற் றிரியாது இன ஒற்று மிக்கு முடியும், அவ்விடத்துக் குற்றியலுகரம் கெடாமையும் இனவொற்றுமிக்கு வன்றொடர்மொழியாய் நிற்றலின் வருமொழி வல்லெழுத்து மிகும் இயல்பும், 'வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து மிகுமே' (227) என வன்றொடர் மொழிக்குக் கூறியதன்மையவாய் முடியும் என்று கூறுவர் புலவர்; எ-று.

உ-ம் : நூற்றுக்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை வட்டி, அகல், உழக்கு எனவும் ; கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'திரியாது' என்றதனால் நூறு என்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க. அஃது ஒரு நூற்றுக்கலம் இருநூற்றுக்கலம் என வரும்.

ஒருபஃது முதலியவற்றுமுன் ஒன்றுமுதல் ஒன்பது

475. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் **(69)**

ஆ. மொ:
இல.

The numbers from one onwords
When prceeding, 'paththu' will have the
Consonant appeared in the midble.
The standing 'āytham' must disappears.

க. சு.

The numerals from one to nine when preceding the word pattu 'ten' will have the dubling of the consonant in the middle; the accorring āytam must disappear.

பி. இ. நூ.
நன். 196

ஒருபஃ தாதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்
எண்ணும் அவையூர் பிறவும் எய்தின்
ஆய்தம் அழிய ஆண்டாகும் தவ்வே.

இ. வி. 14

ஒருபது ஒருபஃதாதி யென்று ஆதி
ஒன்பதும் அவையூர் பிறவும் எய்தின்
கெடுதலும் திரிதலும் இல்லென மொழிப.

முத்து. 455.

ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே.

இளம்.

இது ஒன்றுமுதல் எட்டீறாகிய எண்கள் அடையடுத்த [1]பத்தினோடு ஒன்றுமுதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ—ள்: ஒன்றுமுதலாகிய பத்து ஊர்கிளவி—ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஊரப்பட்ட சொற்கள், ஒன்றுமுதல் ஒன்பாற்கு—அவ்வொன்று முதல் ஒன்பான்கள் வருமொழியாய் வந்து புணருமிடத்து, நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்—ஆண்டு நின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும், ஒற்று இடை மிகும்—கெட்ட வழி இனவொற்றாய் ஓர் தகர ஒற்று இடைமிக்கு முடியும்.

உ-ம்: ஒருபத் தொன்று, இருபத் தொன்று, ஒருபத்திரண்டு, இருபத்திரண்டு, ஒருபத்துமூன்று, இருபத்துமூன்று என ஒட்டிக் கொள்க.

*நிறை என்றதனான், மேல் 'ஒருபதிற்றுக்கலம்' என்னும் முடிபிற்கு இன்பேறும் கொள்க.

நச்.

இஃது ஒன்றுமுதல் எட்டு ஈறாகிய எண்கள் அடையடுத்த பத்தனோடும் ஒன்றுமுதல் ஒன்பான் எண்களைப்புணர்க்கின்றது,

இ—ள்: ஒன்றுமுதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஏறி ஒரு சொல்லாகி நின்ற ஒருபஃது முதலிய எண்கள், ஒன்று முதல் ஒன்பான் எண்கள் வருமொழியாய் வந்து புணருமிடத்து, பஃது என்பதன்கண் நின்ற ஆய்தம் கெட்டு முடிதலை விரும்பும்

சு. வே: 1. பத்தனொடு.

* இதனை அதிகாரப் புறனடையாற் கொள்ளலாம் என்பர் சாஸ்திரியார்.

ஆசிரியன், ஆண்டு இன ஒற்றாகிய ஒரு தகர ஒற்று இடைமிக்கு முடியும்; எ—று.

உ-ம்: ஒருபத் தொன்று, இருபத் தொன்று, ஒருபத்திரண்டு இருபத்திரண்டு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் ஒருபத்தொன்று ஒருபத்திரண்டு என்னும் எண்கள் அதிகாரத் தால் நின்ற நூறு என்பதனோடும் அடுத்து வரும் என்றுணர்க.

அவற்றின் முன் ஆயிரம்.

476. **ஆயிரம் வரினே *இன்னாம் சாரியை**
ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை. (70)

ஆ. மொ:

இல.

If 'Āyiram' comes, there appears the increment 'in and the consonant does not appear in the middle.

க சு.

If āyiram 'thousand' occurs, the consonant is not doubled in the middle at that place (but) the empty motph in (is inserted).

பி. இ. நூ.

முத்து. 456

ஆயிரம் வரினே இன்னே சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகாதியல் பாகும்.

இளம்.

இது அவ்வடையடுத்த பத்தினோடு ஆயிரத்தினைப் புணர்க் கின்றது.

இ-ள்: ஆயிரம்வரின் சாரியை இன்ஆம்—அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் ஆயிரம் என்பதுவரின் இடை வந்து புணரும் சாரியை இன்ஆம், ஆவயின் ஒற்று இடைமிகுதல் இல்லை—அவ்விடத்து முன் கூறிய ஒற்று இடைமிகுதல் இன்றி முடியும்.

---

* இன்னென் சாரியை நச். பாடம். இதில் 'பெறும்' என ஒரு சொல் வருவித்தல் வேண்டும். அதனால் சாரியை இன் ஆம் என்ற பாடம் சிறக்கும்.

உ-ம்: ஒரு பதினாயிரம், இருபதினாயிரம் என ஒட்டுக.

'ஆவயின்' என்றதனான், ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு உகரமும் வல்லெழுத்துப் பேறும் கொள்க.

நச்.

இஃது ஒருபஃது முதலியவற்றோடு ஆயிரத்தைப் புணர்க்கின்றது.

இ-ள்: அவ்வொன்று முதலாகிய பத்து ஊர் கிளவி முன் ஆயிரம் வந்து புணருமிடத்து இன்சாரியை பெறும், அவ்விடத்துத் தகர ஒற்று இடையில் மிகாது; எ—று.

உ-ம்: ஒருபதினாயிரம், இருபதினாயிரம் என எண்பதின் காறும் ஒட்டுக. இவை நூற்றொருபதினாயிரம் எனவும் வரும்.

ஆவயின் என்றதனால் நூறாயிரத்தொருபத்திராயிரம் என்றாற்போல அத்துப் பெறுதலும் பிறவும் கொள்க.

அவற்றுமுன் அளவு நிறைப் பெயர்கள்.

477. அளவும் நிறையும் ஆயியல் திரியா. (71)

ஆ. மொ.

இல.

The measures and weights do not change in the way above enjoined. (The measures and weights stand for their names. If such names occur as the coming words, the standing word 'Paththu' maintains the same nature, which it has when preceding 'Āyiram' i.e. having increment 'in' and dropping the middle consonant 'th')

க. சு.

(The word denoting) measures and weights do not change tha rule.

பி. இ. நூ.

முத்து. 456.

அளவும் நிறையும் ஆயியல் திரியாது

இளம்.

இது, அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்: அளவும் நிறையும் ஆ இயல் திரியா—அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் மேல் ஆயிரத்தோடு புணரும் வழி முடிந்த இயல்பில் திரியாதே நின்று இன்பெற்று முடியும்.

உ-ம்: ஒருபதின்கலம், இருபதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; ஒரு பதின் கழஞ்சு, தொடி, பலம் எனவும் கொள்க.

'திரியா' என்றதனான், ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்னின் னகரம் இரட்டி றகரமாதலும், ஒரு பதினாழி என்னும் முடிபின்கண் வருமொழி நகரம் திரிந்த வழி நிலை மொழியின் னகரக் கேடும் கொள்க.

நச்.

இஃது ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி முன்னர் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் புணர்க்கின்றது.

இ—ள்: ஒருபஃது முதலிய எண்களின் முன்னர் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் வந்தால் ஒற்று இடைமிகாது இன் சாரியை பெற்று முடியும்: எ—று.

உ—ம்: ஒருபதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; ஒருபதின் கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும். இவற்றிற்கு நூறு அடையடுத்து ஒட்டுக.

திரியா என்றதனான் ஒருபதிற்றுக்கலம் இருபதிற்றுக்கலம் என்னுந் தொடக்கத்தனவற்றின்கண் இன்னின் னகரம் றகரமாகத் திரிந்து இரட்டுதலும் உகரமும் வல்லெழுத்துப் பெறுதலும் கொள்க. இன்னும் இதனானே ஒருபதினாழி என்ற வழி வரு மொழி நகரம் திரிந்துழி நிலைமொழி னகரக்கேடும் கொள்க.

'அளவு நிறையு மதனோ ரன்ன' என்று பாடம் ஓதுவார் முன்னர்ச் சூத்திரத்து 'ஆவயின்' என்றதனானும் அதன் முன்னர்ச் சூத்திரத்து 'நின்ற' என்றதனானும் இவற்றை முடிப்பர்.

சுப்.

'திரியா என்றதனான்...னகரக் கேடும் கொள்க' என்றனர் உரைகாரர்கள். இதனை 'நெடியதன் முன்னர்' (எழு. 161), 'குறுமையும்' (எழு. 50) என்ற சூத்திரங்களாற் கொள்ளல் தகும்.

"அளவு நிறையு மதனோ ரன்ன...இவற்றை முடிப்பர்" இத்தொடர் நச்சினார்க்கியம் மகாலிங்கையர் பதிப்பில் இல்லை. இஃது இளம்பூரணர் கொள்கை என்பது அவரது உரையான் விளங்கும்.

ஒன்றுமுதல் எட்டுமுன் பொருட்பெயர்.

478. **முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர். **(72)**

ஆ. மொ:
இல.

If hard consonants, 'ñ', 'n̲', 'm', 'y' and 'v' occur before the first number, the same nature formerly enjoined prevails.

க.சு.

Learned men say that if the first numeral is followed by a plosive, or if ñ, n, m occur, or if y and v occur (the rule is of) the (same) nature as mentioned before.

இளம்.

இது, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெயரைப் புணர்க்கின்றது.

இ—ள்: முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும் ஞ ந ம தோன்றினும் ய வ வந்தியையினும் — முதனிலை எண்ணாகிய ஒன்று என்னும் எண்ணின் முன் வல்லெழுத்து முதன்மொழி வரினும் ஞ ந மக்களாகிய மெல்லெழுத்து 'முதன் மொழி' வரினும் ய வக்களாகிய இடையெழுத்து முதன்மொழி வந்து பொருந்தினும், முதல்நிலை இயற்கை என்மனார் புலவர்— அவ்வொன்றுமுதல் ஒன்பான்கள் முன்எய்திய முடிபுநிலை எய்தி முடியும் என்று சொல்லுவர் புலவர்.

எனவே, வழிநிலை எண்ணாகிய இரண்டு முதலிய எண்கள் அம்முதனிலை முடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாதும் இயல்பாயும் முடியும்.

உ—ம்: ஒரு கல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு என வரும். இருகல், இரண்டு கல், சுனை, துடி,

பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு எனவும் ஒன்பதின்காறும் ஒட்டுக.

ஒன்பதின் கலம் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க.

'நிலை' என்றதனான், மாட்டேற்றுக்கு ஏலாத ஞகர யகரங் களின் முடிபு கொள்ளப்பட்டது.

நச்.

இஃது, ஒன்றுமுதல் ஒன்பான் எண்களோடு பொருட் பெயரைப் புணர்க்கின்றது.

இ—ள்: ஒன்று என்னும் எண்ணின்முன் வல்லெழுத்து முதன் மொழி வரினும், ஞ ந மக்களாகிய மெல்லெழுத்து முதன் மொழி வரினும், ய வக்களாகிய இடையெழுத்து முதன்மொழிவரினும், அவ்வொன்று முதல் ஒன்பான் எண்களும் முன் எய்திய முடிபு நிலைமை யெய்தி முடியும் என்று கூறுவர் புலவர்; எ—று.

எனவே, வழிநிலை யெண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம்மூன்று கணமும் முதன்மொழியாய் வரின் முதனிலை முடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்.

உ-ம்: ஒருகல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு எனவும்; இருகல், இரண்டுகல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு எனவும் ஒட்டுக. இவ்வெண் களிற் குற்றியலுகரம் மெய்யொடுங் கெட்டு முதல் ஈரெண்ணின் ஒற்று ரகரமாய் உகரம் வந்தது. இருகல், இருசுனை முதலியவற் றிற்கு இரண்டு என்பதன் இடைநிலை ரகாரம் கெடுக்க. முக்கல், மூன்றுகல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு என ஒட்டுக. இதற்கு நெடுமுதல் குறுக்கி 'மூன்றனொற்றே வந்த தொக்கும் (148) என்பதனான் முடிக்க. முன்னர் எண்ணுப் பெயரும் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வருவழிக் கூறிய விகாரங்களிற் பொருட்பெயர்க்கும் ஏற்பன கொணர்ந்து முடித்து எல்லாவற்றிற்கும் 'நிலை' என்றதனான் ஒற்றுத் திரித்து முடிக்க. அவை மூன்றற்கும் ஐந்தற்கும் ஞகரம் வரும்வழி ஞகர ஒற்றா தலும், மூன்றற்கு யகரம் வருவழி வகர வொற்றாதலும் ஆம். நாற்கல், நான்குகல், சுனை, துடி, பறை; நான் ஞாண், நான்கு ஞாண், நூல், மணி, யாழ், வட்டு; ஐங்கல், ஐந்துகல், சுனை, துடி, பறை; ஐஞ்ஞாண், ஐந்துஞாண், நூல், மணி, ஐயாழ், ஐந்துயாழ் ஐவட்டு, ஐந்துவட்டு; அறுகல், ஆறுகல், சுனை, துடி, பறை,

ஞாண், நூல், மணி, யாழ், வட்டு; எண்கல், எட்டுக்கல், சுனை, துடி, பறை, எண்ஞாண்; எட்டுஞாண், நூல், மணி, யாழ், வட்டு ஒன்பதுகல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ் வட்டு என ஒட்டுக. ஒன்பதின்கல் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க; இன்னும் மாட்டேறின்றி வருவனவற்றை 'முடிபுநிலை' என்றதனான் முடிக்க.

சுப்

ஆவோ டல்லது யகரமுதலாது (எழு. 65) என்று முன்னர்க் கூறியிருத்தலானும், மேலைச் சூத்திரத்தில் 'அதனிலையுயிர்க்கும் யாவருகாலையும்' என்று கூறுவதனாலும், இச்சூத்திரத்தில் ஞநம தோன்றினும் வ வந்தியையினும் என்றே ஆசிரியர் கூறியிருத்தல் கூடும்.

'முதனிலை இயற்கை' என்றதற்கு, 'அவ்வொன்று முதல் ஒன்பான்கள் முன் எய்திய முடிபுநிலை' எனப் பொருள் கூறினர். ஈண்டு இரண்டு, மூன்று இவற்றிற்கு ஆசிரியர் செய்கை கூறா விடினும், "எனவே, வழிநிலை எண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம்முதனிலை முடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாதும் இயல்பாயும் முடியும்" என அவ்விருவரும் கொண்டமையான் அவ்வாறு கூறினர்போலும். அது பொருத்தமின்று. பின்னர்ச் சூத்திரத்து 'ஓர்யாழ்' என்ற உதாரணம் கூறியிருக்க, ஈண்டு 'ஒருயாழ்' என்பது பொருந்துமா?

அவற்றுமுன் உயிர்முதல் மொழியும் யகரமும்

479. **அதனிலை உயிர்க்கும் யாவரு காலையும்**
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே **(73)**

ஆ. மொ.
இல.

When vowel, and 'y' succeed (oru) the initial 'O' changes into ō and the 'u' of 'r' disappears completely.

க. சு.

When a vowel of yā follow (oru), the initial sound o will become the sound ō; and the u of the sound r completely disappears.

இளம்.

இது, ஒன்றுமுதல் ஒன்பான்களோடு [1]பொருட்பெயருள் உயிர்முதன்மொழி முடியுமாறும் மேற்கூறிய யகரம் வேறுபட முடியுமாறும் கூறுகின்றது.

இ-ள் : அதன் நிலை உயிர்க்கும் யா வருகாலையும் முதல் நிலை ஒகரம் ஓ ஆகும்—அவ்வொன்று முதல் ஒன்பான்களோ்டு புணருமிடத்து உயிர்முதன்மொழி வந்த இடத்தும் யா முதல் மொழி வந்த இடத்தும் முதல்நிலை எண்ணாகிய ஒன்று என்பதன்கண் ஒகரம் ஓகாரம் ஆம் ரகரத்து உகரம் துவரக் கெடும்—அவ் விடத்து ரகரத்து உகரம் முற்றக் கெட்டு முடியும்.

எனவே, வழிநிலை எண்களுள் உயிர்நின்ற முதன்மொழி வந்த இடத்து முன் கூறியவாறே இருவாற்றானும் [2]முடியும்.

உ-ம் : ஓரடை, ஓராடை எனவும் ; இருவடை இருவாடை ; இரண்டடை, இரண்டாடை எனவும் உயிர்முதல் மொழிகளை ஒட்டிக் கொள்க.

யா முதன்மொழி 'ஓர் யாழ்' என வரும்.

'துவர' என்றதனான், இரண்டு என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் செய்யுளகத்து ஈரசையெனவும் மூவசை யென வும் முதல்நீண்டு வேறுபட முடியுமாறு கொள்க.

'அதனிலை' என்றதனான், முதனிலை நீளாதே நின்று உகரம் கெட்டு ஒரடை, ஒராடை, ஒர்யாழ் எனவரும் முடிபும் கொள்க.

நச்.

இஃது ஒன்று முதல் ஒன்பான் எண்களோடு பொருட் பெயருள் உயிர் முதல் மொழி முடியுமாறும் மேற்கூறிய யகாரம் வேறுபட முடியுமாறும் கூறுகின்றது.

இ-ள் : [3]ஒன்றென்னும் எண்ணின் திரிபாகிய ஒரு என்னும் எண்ணிற்கு, உயிர்முதன்மொழியும் யா முதன்மொழியும் வரு மொழியாய் வருங்காலத்து, அம்முதல் நிலையின் தன்மை

சு. வே.

1. பொருட்பெயர் உயிர்
2. முடியும் என்றவாறு

சு. வே :3. ஒன்றென்னும் எண்ணிற்கு

இவ்வாறாம், ஒகரம் ஓகாரமாய் நீளும், ரகரத்து மேல் நின்ற உகரம் முற்றக் கெட்டு முடியும் ; எ-று.

*நான்காவதனை முதனிலையோடு கூட்டி அதன்கண் நின்ற உம்மையை உயிரோடும் கூட்டுக. எனவே, வழிநிலை எண்கள் உயிர்முதன் மொழி வந்த இடத்து முற்கூறியவாறே இரு வாற்றானும் முடியும்.

உ-ம் : ஓராடை, ஓராகம், ஓரிலை, ஓரீட்டம், ஓருலை, ஓரூசல், ஓரெழு, ஓரேடு, ஓரையம், ஓரொழுங்கு, ஓரோலை, ஓரௌவியம் என வரும். குற்றியலுகரம் மெய்யொடுங்கெடுத்து முதல் எண்ணின் ஒற்று ரகரமாக்குக. ஓர்யாழ், ஓர்யானை என வரும். 'துவர' என்றதனான் இரண்டு என்னும் எண்ணின் இகரத்தை நீட்டி ரகரத்துள் உகரத்தைக் கெடுத்து ஈரசை ஈர்யானை எனவும், மூன்று என்னும் எண்ணின்கண் னகர வொற்றுக் கெடுத்து மூவசை மூயானை எனவும் முடிக்க. இவை செய்யுள் முடிபு. இன்னும் இதனானே இங்ஙனம் வருவன பிறவும் அறிந்து முடித்துக் கொள்க.

இரண்டு முதல் ஒன்பதுமுன் மா

480. **இரண்டுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர அளபொடு நிகரலும் உரித்தே (74)

ஆ. மொ:

இல:

After the final of the number from two to nine if the Word 'Ma' appears in usage it stands in the position of 'M' measure

ஆ. சு.

If the word 'ma' a measure genarelly in usage occurs after (numerals beginning with irantu 'two' and ending with onpān 'nine', it is proper that (the change) is the same (as when the coming word denotes) measure (and begins with) the sound 'm'

---

* "ஈண்டு உயிர்க்கும் என்பது ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. அவ்வாறிருக்க "நான்காவதனை முதனிலையோடு... யாவோடும் கூட்டுக" என நச்சினார்கினியார் கூறுவது பொருத்தமில் கூற்றாம்" என்பர், சாஸ்திரியார்.

இளம்.

இது இரண்டு முதல் ஒன்பான்கள் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மா என்பது புணருமாறு கூறுகின்றது,

இ-ள்: இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்—இரண்டு முதலாக ஒன்பதுஈறாகச் சொல்லப்படுகின்ற எண்களின் முன்னர், வழங்கு இயல் மா என் கிளவி தோன்றின்—வழக்கின்கண்ணே கிடக்கின்ற விலங்கு [1]மரம் முதலிய அல்லாத அளவு முதலியவற்றிற்குரிய மா என்னும் சொல் தோன்றின், மகர அளபொடு நிகரலும் உரித்து—இயல்பாய் முடிதலேயன்றி மேற்கூறிய மண்டை என்னும் அளவுப் பெயரோடு ஒத்து வேறுபட முடிவனவும் பெறும்.

உ-ம்: இரண்டுமா இருமா; மூன்றுமா மும்மா என ஒன்பதின் காறும் இவ்வாறு ஒட்டுக,

இரண்டுமுதல் ஒன்பான் என்று எடுத்தமையின், ஒன்றற்கு ஒருமா என்னும் முடிபேயன்றி ஒன்றுமா என்னும் முடிபு இல்லையாயிற்று. இவற்றுள் மிக்க எண்ணோடு குறைந்த எண் வருங்கால் உம்மைத் தொகையாகவும், குறைந்த எண்ணோடு மிக்க எண் வரின் பண்புத் தொகையாகவும் முடித்தார் என்க.

நச்.

இஃது இரண்டு முதல் [2]ஒன்பான் ஈறாகவுள்ள எண்களின் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மா என்பதுபுணருமாறு கூறுகின்றது.

இ-ள்; இரண்டு என்னும் எண் முதலாக ஒன்பது என்னும் எண் ஈறாக நின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர், வழக்கின் கண்ணே நடந்த அளவு முதலியவற்றிற்கு உரிய மா என்னும் சொல் வருமொழியாய்வரின் அவ்வெண்ணுப் பெயர்களின் முன்னர்த் தந்து புணர்க்கப்படும் மண்டை என்னும் அளவுப்பெயரோடு ஒத்து விகாரப்பட்டு முடிதலும் உரித்து; உம்மையான் விகாரப்படாது இயல்பாய் முடிதலும் உரித்து; எ—று.

வழக்கியல் வழங்கியல் என விகாரம். மகர அளவு மகர முதன் மொழியாகிய அளவுப் பெயர் எனப் பண்புத் தொகை. அஃது

ஈ. வே:

1. மா முதலிய
2. ஒன்பான்களின் முன்னர்

'அளந்தறி கிளவியும்' (447) என்பதனுள் ஒரு மண்டை என முடித்ததாம்,

உ-ம்: இருமா, மும்மா, நான்மா, ஐம்மா, அறுமா, எண்மா, ஒன்பதின்மா என முன்னர்க் கூறிய சூத்திரங்களான் விகாரப் படுத்தி முடிக்க, இனிஉம்மையான் விகாரப் படுத்தாது இரண்டுமா மூன்றுமா நான்குமா ஐந்துமா ஆறுமா எட்டுமா ஒன்பதுமா என முடிக்க. புள்ளிமயங்கியலுள் 'அளவு நிறைய' (390) என்னுஞ் சூத்திரத்தான் நெடு முதல் குறுகி உகரம் வந்து புணருமாறு கூறினார், அதனான் ஈண்டு எழுமா என முடிக்க. ஏழ்மா என முடிதல் வழக்கன்று.

'இரண்டு முதல் ஒன்பான் என்று எடுத்தோதினமையின் ஒன்றற்கு ஒருமாவென்னும் முடிபே யன்றி ஒன்றுமா என்னும் முடிபு இல்லையாயிற்று.

வழங்கியன்மா என்றார் விலங்குமாவை நீக்குதற்கு.

சுப்.

இச்சூத்திரம் எற்றுக்கு எனின், இஃது இல்லாவிடின் 'அளந்தறி கிளவியும்' (446) என்ற சூத்திரத்தால் 'இருமா' என்று வருமே யன்றி இரண்டுமா என வாராது.

'வழங்கியல்மா என்றார் விலங்குமாவை நீக்குதற்கு." என்ற விடத்து விலங்குமாவை என்றதற்குப் பதிலாக 'விலங்கு மரம் முதலியவற்றை' என்றிருத்தல் வேண்டும். இது நச்சினார்கினியம் மகாலிங்கையர் பதிப்பில் இல்லாமையால் ஒருகால் இடைச் செருகலாய் இருத்தல் கூடும்.

6. அதிகாரப் புறனடை

புள்ளி மயங்குயலுள் ஒழிந்துநின்ற மெய்யீறுகளின்

செய்யுள் முடிபு

481. லனவென வருஉம் புள்ளி யிறுதிமுன்
உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான. (75)

ஆ மொ.
இல.

After the consonants 'l' and 'n' standing at the end,
'um' and 'kelu' and other incerements
Appearing in the words as of usage
In the makin g of poetry, stand to give the sense
when indicating the case relation of things

க- சு.

After the non-vocalised consonants l and n occurring finally, particles like um, keḷu, etc, appearing in the words as usage permits, in the composition of poetry, do occur when indicating the case-ertionship of items.

இளம்.

இது லகார னகார ஈற்றுச் செய்யுள் முடிபு கூறுகின்றது,

இ-ள்: லன என வரூஉம் புள்ளி இறுதிமுன்—லன என்று சொல்ல வருகின்ற புள்ளியீற்றுச் சொல்முன், உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்—உம் என்னும் சாரியையும் கெழு என்னும் சாரியையும் உளப்படப் பிற சாரியையும், அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி செய்யுள் தொடர்வயின் மெய் பெற நிலையும் —அப்பெற்றிப்பட்ட மரபினையுடைய மொழியிடைத் தோன்றிச் செய்யுள் மொழிகளைத் தொடர்ந்து சொல்லும் இடத்து மெய்ம்மை பெற நிலை பெற்று முடியும், வேற்றுமை குறித்த பொருள் வயின்—வேற்றுமை குறித்த பொருட் புணர்ச்சிக்கண்.

உ-ம்: [1]'வானவரி வில்லுந் திங்களும்', 'கல்கெழுகானவர் நல் குறு மகளே' எனவும், 'மாநிதிக் கிழவனும் போன்ம்' எனவும், 'கான்கெழுநாடு' எனவும் வரும்.

[2]'மொழியிடைத் தோன்றி' என்ற மிகையான், பிற ஈற்றுள்ளும் இச்சாரியை பெற்று முடிவன கொள்க. துறைகெழு மாந்தை, வளங்கெழுதிருநகர் எனவரும்.

'அன்ன மரபின்' என்றதனால், சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுதலும், அது காரணமாக நிலைமொழியீறு

---

௯. வே:

1. வானவரி வில்லுந் திங்களும் போலும்.
2. மொழியிடைத் தோன்றும்.

திரிதலும், சாரியையது உகரக்கேடும், எகர நீட்சியும் கொள்க. பூக்கேழூரன், வளங்கேழ்திருநகர் என்று அவ்வாறு வந்தமையறிக.

'மெய்பெற' என்றதனான், இச்சாரியைப் பேற்றின்கண் ஈற்று வல்லெழுத்து வீழ்க்க.

நச்.

இது புள்ளிமயங்கியலுள் ஒழிந்து நின்ற செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ-ள்: லகார னகாரம் என்று கூறவருகின்ற புள்ளியீற்றுச் சொற்களின் முன்னர், உம் என்னும் சாரியையும் கெழுவென்னும் சாரியையும் உட்பட, பிறசாரியையும் அப்பெற்றிப்பட்ட மரபினையுடைய மொழியிடத்தே தோன்றி, செய்யுட் சொற்களைத் தொடர்பு படுத்திக் கூறுமிடத்துப் பொருள்பட நிற்கும், வேற்றுமையைக்குறித்த பொருட் புணர்ச்சிக்கண்; எ-று.

உ-ம்: 'வானவரி வில்லுந் திங்களும் போலும்'-இதற்கு உம் என்னும் சாரியையின் மகரத்தை 'அம்மின் இறுதி' (எழு. 130) என்னும் சூத்திரத்துள் 'தன்மெய்' என்ற தனாற் பிறசாரியையும் திரியும் என நகர ஒற்றாக்கி நிலைமொழி லகரவொற்றின் மேல் உயிரேற்றி முடிக்க. வில்லுந் திங்களும் போலும் என்பதற்கு வில்லிடைத் திங்கள் போலும் என ஏழனுருபு விரித்துப் பொருள் உரைக்க. 'கல்கெழுகானவர் நல்குறு மகளே' (குறுந். 71) இதற்குக் கல்லைக் கெழீஇயின எனவுரைக்க. 'மாநிதிக் கிழவனும் போன்ம்' (அகம். 66)—இதற்குக் கிழவனைப் போன்ம்' எனவுரைக்க. இவ்வும்மை சிறப்பன்று. 'கான்கெழு நாடு' (அகம் 98`- இதற்குக் கானைக் கெழீஇய எனவுரைக்க.

இனி அன்ன மரபின் மொழியிடை' என்றதனாற் கெழுவென்றது பிற சொல்லிடத்தே 'பணைகெழு பெருந்திறற் பல்வேல் மன்னர்', 'துறைகெழு மாந்தை' (நற்.35) என இயல்பாக வருவனவும், 'வளங்கெழு திருநகர்' (அகம் 17), 'பயங்கெழு மாமழை' (புறம்.266) என நிலைமொழி யீற்றெழுத்துத்திரிய வருவனவும் கொள்க.

இன்னும் இதனானே இச்சாரியையது உகரக்கேடும் எகர நீட்சியும் கொள்க. 'பூக்கேழ் தொடலை நுடங்க வெழுந்து' (அகம் 28), 'துறைகேழ் ஊரன் கொடுமை நாணி' (ஐங்.11)—இவற்றிற்கு இரண்டாவதும் ஏற்புழி மூன்றாவதும் விரிக்க. 'செம்

கேழ் மென் கொடி' (அகம் 80) என்புழிக் கெழுவென்னும் உரிச் சொல் 'எழுத்துப் பிரிந்திசைத்தல்' (சொல்.395) என்பதனான் நீண்டதென்றுணர்க. 'மெய்' என்றதனாற் $பூக்கேழ்' என்புழி வல்லொற்று மிகுதல் கொள்க

இன்னும் சான்றோர் செய்யுட் கண் பிற சாரியை பெற்று விகாரங்கள் எய்தி முடிவனவற்றிற்கெல்லாம் இச்சூத்திரமே விதியாக முடித்துக் கொள்க.*

புணர்க்கப்படாத சொற்கள்

482. உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த வென்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலும் தொழில்தொகு மொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றா. (76)

ஆ. மொ:
இல.

The sementemes, which have either vowels or consonants as final letters, denoting suggestion, quality or sound,

---

$ பூ + கேழ் → பூக்கேழ்.
* "குற்றியலுகர இடைச் சொல்லாகிய ஞான்று என்பது "அவா வென்ப எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றுந்தவர" எனவும் "இல்வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" எனவும் வருமிதற்கு 'என்றும்' எனக் கொள்க. 'ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே' என்பது 'தாமணந்தவன்றே' யெனக் கொள்க. இது காலத்தின் கண் வரும். இத்தொடர் மகாலிங்கையர் பதில் உள்ளது.—சாஸ்திரியார் குறிப்பு.

The adjcetives, which are devoid of particles which denote five genders in those two 'uyarthiṇai' and 'A∴riṇai'.

The adjective participles 'Seyyum' and 'Seytha' which are devoid of tense denoting particles. The group of numerals which join themselves with one another when denoting their numerical sense-these and such others are found in usage and they can't be found expounded of their formations in the chapter or joining of words.

க, சு.

The 'defective' words (and) expressions ending in vowel or consonant (and) denoting *suggestion*, *quality* (or) sound, the expressions denoting the five genders under (the more general distinction into) high gender and non-gender, (and forming the first member of) paṉputtokai, the adjective partieiples (of the type) 'eeyyum' and 'ceyta' when they form the first member of a viṉaittokai, and words denoting number preceding the same words-these and all similar words have to be determined from usage and cannot be clearly discussed as to their formation in the chapter on joining words.

இளம்-

இது இவ்வதிகாரத்துப் புணர்க்கப்படா மொழிகள் இவையென அவற்றை எடுத்து உணர்த்துகின்றது.

இ—ள்: உயிரும் புள்ளியும் இறுதியாகி குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாரா குறைச் சொல் கிளவியும்—உயிரெழுத்தும் புள்ளியெழுத்தும் ஈறாகிக் குறிப்பின்கண்ணும் பண்பின்கண்ணும் இசையின்கண்ணும் தோன்றி ஒரு நெறிப்பட வாராக் குறைச் சொற்களாகிய உரிச் சொற்களும், உயர்திணை அஃறிணை ஆ இரு மருங்கின் ஐம்பால் அறியும் பண்பு தொகுமொழியும்—உயர்திணை அஃறிணையாகிய அவ்விரண்டு திணையிடத்தும் உளவாய ஐந்து பாலினையும் அறியவரும் பண்புத்தொகை மொழிகளும், செய்யும் செய்த என்னும் கிளவியின் மெய் ஒருங்கு இயலும் தொழில் தொகு மொழியும்—செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களின் படி ஒருங்கு நடக்கும் வினைச்சொல் தொக்க வினைத்தொகையும், தம் இயல் கிளப்பின்—எண்கள் தம் இயல்பு கிளக்குமிடத்து, தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதி உளப்பட பிறவும்

அன்னவை எல்லாம்—நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியு மாய் வாராது தம்முன் தாம் வரும் எண்ணின் [1]தொகுதியும் உட்பட்ட பிறவும் அத்தன்மையவெல்லாம், மருவின் பாத்திய— வழக்கிடத்து மருவி நடந்த இடத்துள்ளன, ஆதலான் அவ்வாறே கொள்ளப்படும்; புணர் இயல் நிலையிடை உணரத் தோன்றா— புணர்ச்சி இயன்ற நிலைமைக்கண் அவற்றின் முடிபு [2]விளங்கத் தோன்றா.

உ-ம்; விண் விணைத்தது, கார்கறுத்தது, ஒல்லொலித்தது- இவை குறைச்சொற்கிளவி ஆயினமையின் முடிக்கப்படாவாயின. விண்ணென விசைத்தது என இடைச் சொல்லோடு கூடியவழிப் புணர்க்கப்படும்.

[3]கருஞ்சான்றான் என்றது பண்புத்தொகை. [4]இது கரும் எனப் பண்புணர நின்றது. [5]கருஞ்சான்றான் எனத் தொகையாய வழி கரும் என்பது [6]கரியான் எனப் பால் காட்டி நிற்றலின் புணர்க்கப்படாதாயிற்று.

கொல்யானை என்றது வினைத் தொகை. அதுவும் கொல் லெனத் தொழின்மையுணர நின்றது. கொல்யானை எனத் தொகையாய வழி, கொன்ற எனக் காலம் காட்டி நின்றமையின் புணர்க்கப்படாதாயிற்று.

ஓரொன்று என இது தம்முற்றாம் வந்த எண். இது நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் அன்மையின் புணர்க்கப்படா தாயிற்று. இதுதானே ஓரொன்றாகக் கொடு என்புழிப் புணர்க்கப்படும்.

'பிறவும்' என்றதனான் முடியாதன உண்டான், கரியன் என்பன. இவை உண் எனவும் கருமை எனவும் பிரித்து நிறுத்திய வழி ஆனும் அன்னும் குறித்து வருகிளவி யன்மையான் வந்து புணராமையின் புணர்க்கப்படாவாயின.

ச. வே:

1. தொகுதி உட்பட
2. ஈண்டு விளங்கித் தோன்றா.
3. கருஞ்சான்றார்
4. இவை
5. கருஞ்சான்றார்
6. கரியார்

'தோன்றி' என்றதனால், கொள்ளெனக் கொண்டான் என்புழிக் கொள்ளென்பதனை, என என்பதனோடு புணர்க்கப் படாமை கொள்க.

மெய் ஒருங்கியலும் என்றதனான் உண்டான் என்புழிச் செய்கையும் காலமும் பாலும் தோற்றி நிற்குமாறு பிரித்துப் புணர்க்கப்படாமை கொள்க.

நச்.

இஃது இவ்வதிகாரத்திற் புணர்க்கப் படாத சொற்கள் இவையென அவற்றை எடுத்து உணர்த்துகின்றது.

இ-ள்: கூறுங்கால் உயிரும் புள்ளியும் ஈறாக நிற்பதொரு சொல்லாகி, குறிப்பினானும் பண்பினானும் இசையினானும் பிறந்து, ஒரு வழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய உரிச் சொற்களும், உயர்திணை அஃறிணையென்னும் அவ்விரண்டிடத்தும் உளவாகிய, ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலினையும் அறிதற்குக் காரணமாகிய பண்பு கொள் பெயர் தொகுந் தொகைச் சொல்லும், செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களினுடைய காலங் காட்டும் உம்மும் அகரமும் ஒகு சொற்கண்ணே சேர நடக்கும் புடை பெயர்ச்சி தொக்கு நிற்கும் சொற்களும், தமது தன்மை கூறு மிடத்து நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியுமாய் வாராது தம் முன்னர்த்தாமே வந்து நிற்கும் எண்ணுப்பெயரினது தொகுதி யும் உளப்பட, அத்தன்மையவ்வாகிய பிறவும் எல்லாம், உலகத்து மருவி நடந்த வழக்கினது பகுதியைத் தம் இலக்கணமாகவுடைய ஒன்றனோடொன்று புணருதல் நடந்ததன்மை இடம் விளங்கத் தோன்றா; எ-று.

உ-ம்: கண் விண்ண விணைத்தது,விண் விணைத்தது இவை குறிப்புரிச்சொல். ஆடை வெள்ளவிளர்த்தது வெள்விளர்த்தது இவை பண்புரிச் சொல். கடல் ஒல்லஒலித்தது ஒல்லொலித்தது இவை இசையுரிச்சொல். 'ஒல்லொலிநீர் பாய்வதே போலும் துறைவன்' என்றார் செய்யுட்கண்ணும். இவை உயிரீறாயும் புள்ளியீறாயும் நிற்றலின் ஒன்றன்கண் அடக்கலாகாமையின் நெறிப்பட வாரா என்றார். விண்ணவிணைத்தது தெறிப்புத் தோன்றத் தெறித்தது என்றும், விண்விணைத்தது தெறிப்புத் தெறித்தது என்றும் ஆம். ஏனையவற்றிற்கும் இவ்வாறே உணர்க. இங்ஙனம் நிற்றலிற் றன்மை குறைந்த சொல்லாயிற்று.

'வினையே குறிப்பே' (சொல் 258) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய என என்பதனை இவற்றோடு கூட்டியவழி இடைச் சொல்லாதலின் விண்ணென வினைத்தது எனப் புணர்க்கப்படுமாறு உணர்க.

இனிக் கரும்பார்ப்பான், கரும்பார்ப்பனி, கரும்பார்ப்பார், கருங்குதிரை, கருங்குதிரைகள் என வரும் இவற்றுட் கரியனாகிய பார்ப்பான், கரியளாகிய பார்ப்பனி கரியராகிய பார்ப்பார், கரியதாகிய குதிரை, கரியனவாகிய குதிரைகள் என ஐம்பாலினையும் உணர்த்தும் பண்பு கொள் பெயர் தொக்கவாறு காண்க. இவற்றுட் கருமை என்னும் பண்புப் பெயர் தொக்கதேற் கருமையாகிய பார்ப்பான் என விரித்தல் வேண்டும்; அங்ஙனம் விரியாமையின் பண்பு கொள் பெயர் தொக்கதென்று உணர்க.

வெற்றிலை, வெற்றுப்பிலி, வெற்றடி, வெற்றெனத் தொடுத்தல் [1]என்றாற் போல்வனவற்றுள் வெறுவிதாகிய இலையென்பது பாக்குங் கோட்டு நூறுங் கூடாததாய்ப் பண்புணர்த்தி ஈறு தொகுதலின் மருவின் பாத்தியவாய் நின்று ஒற்றடுத்தது. வெறுவிதாகிய உப்பிலியென்றது சிறிதும் உப்பிலி என நின்றது. ஏனையவும் அன்ன. இங்ஙனம் ஐம்பாலும் தொகுத்தற்கு உரிய முதல் நிலையாதலிற் புணர்த்தலாகாமை கூறினார்.

இனி ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல்யானை, செல்செலவு என நிலம் முதலாகிய பெயரெச்சந் தொக்க வினைத்தொகைகளை விரிக்குங்கால், ஆடினவரங்கு எனச் செய்த என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த அகர ஈறு இறப்பு உணர்த்தியும், ஆடும் அரங்கு எனச் செய்யும் என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த உம்மீறு ஆடாநின்ற அரங்கு என நிகழ்வும், ஆடும் அரங்கு என எதிர்வும் உணர்த்தியும் அவற்றானாய புடைபெயர்ச்சியைத் தோற்றுவித்து, இரண்டு பெயரெச்சமும் ஒரு சொற்கண் ஒருங்கு தொக்கு நிற்றலின் அதனை ஒரு பெயரெச்சத்தின்கண் அடக்கிப் புணர்க்கலாகாமையின் புணர்க்கலாகாதென்றார். உம்மிறுதி நிகழ்வும் எதிர்வும்

சு. வே:

1. என்றாற் போல்வன வெறுமெனப் பண்பு மாத்திரையே வெறுவிதாகிய விலையெனப் பண்புணர்த்தும் ஈறு தொகுதலின் மருவின் பாத்தியவாய் நின்றொற்றடுத்தன. பாக்குங் கோட்டு நூறும் கூடாததாய்ப் பின்னர் ஈறு குன்றலின ஒற்றடுத்தது.

உணர்த்துமாறு 'வினையின் தொகுதி' (சொல் 415) என்னும் எச்சவியற் சூத்திரத்துட் கூறுதும். இவ் உம் ஈறு இரண்டு காலமும் ஒருங்குணர்த்துதற் சிறப்பு நோக்கிச் செய்த என்பதனை ஆசிரியர் மூற்கூறாராயினர்.

இனிப் பத்து என நிறுத்திப் பத்தெனத் தந்து புணர்க்கப் படாது பப்பத்தெனவும் பஃபத்தெனவும் வழங்குமாறு உணர்க. ஓரோவொன்றென்பதும் அது அதுதானே ஓரொன்றோரொன் றாகக் கொடு என்றாற் புணர்க்கப்படும்.

இனி அன்னபிறவும் என்றதனானே உண்டான் என்புழி உண்ணென்னும் முதனிலையும் காலங் காட்டும் டகரமும் இடனும் பாலும் உணர்த்தும் ஆனும் ஒன்றனோடொன்று புணர்க்கப்படா, அவை நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் அன்மையின்.

கரியன் என்புழிக் கருவென நிறுத்தி அன் எனத் தந்து புணர்க்கப்படா, அஃது இன்னன் என்னும் பொருள் தருதலின். ஏனை வினைச் சொற்களும் இவ்வாறே பிரித்துப் புணர்க்கலா காமை யுணர்க.

இன்னும் அதனானே 'கொள்ளெனக் கொண்டான்' என்புழிக் கொள்ளென்பதனை என என்பதனோடு புணர்க்கப்படாமையும், ஊரன் வெற்பன் முதலிய வினைப் பெயர்களும் பிறவும் புணர்க் கப்படாமையும் கொள்க.

இவ்வாசிரியரால் புணர்க்கப்படாத இச்சொற்களையும் வடநூற்கண் முடித்த அனகன், அனபாயன், அகளங்கன் முதலிய வடசொற்களையும் பின்னுள்ளோர் முடித்தல், முதல் நூலொடு மாறுகொளக் கூறலாம் என்று உணர்க.

சுப்.

'குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாராக் குறைசசொற்கிளவி' என்றது உரிச்சொல்லைக் குறிக்கும் என்பது சொல்லதிகாரத்து உரியியல் முதற் சூத்திரத்தான் விளங்கும். குறைச்சொல் என்றதனால் பெயர், வினை இவற்றின் பகுதியே உரிச்சொல்லாம்.

'உயர்திணை...பண்பு தொகு மொழியும்' என்பது பண்புத் தொகையைக் குறிக்கும். அங்கு நல்லரசன், நன்மனைவி, நன் மக்கள், கரும்பாம்பு, கரும்பாம்புகள் என்பன முறையே நல்லன் + அசன், நல்லள் + மனைவி, நல்லர் + மக்கள், கரியது + பாம்பு,

கரியன+பாம்புகள் என்பனவற்றின் தொகையாகும். ஆங்கு பாலையறிவிக்கும் ன், ள், ர், து, அ என்பன தொக்கன காண்க.

'செய்யுஞ் செய்த...தொழில் தொகு மொழியும்' என்பது வினைத்தொகையைக் குறிக்கும். அங்கு காலத்தைக் காட்டும் வினைப்பகுதி தொக்கது காண்க. ஈண்டு 'தொழில்' என்றது வினையின் ஒரு பகுதி எனப் பொருள்படும். ஆதலின் ''வினையின் தொகுதி காலத்தியலும்'' (சொல் 415) என்ற சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறிய பொருள் பொருந்துமேயன்றிச் சேனா வரையர் கூறும் பொருள் பொருத்தமின்று.

உ—ம்: விண்விணைத்தது, கார் கறுத்தது, ஒல்லொலித்தது, நன்மக்கள், கொல்யானை, ஒரொன்று.

'அன்னவை' என்றதனால் 'உண்டான்' என்னும் இடத்துக் காலவெழுத்திற்கும் வினை விகுதிக்கும் உள்ள புணர்ச்சி முதலிய வற்றையும் 'கொள்ளெனக் கொண்டான்' என்னுமிடத்து, கொள், என இவற்றிற்கு வரும் புணர்ச்சி முதலியவற்றையும் கொள்க.

வேங்.

இவற்றுள் பண்புத்தொகை, சில வினைத்தொகை, எண்ணின் தொகுதி இவற்றிற்கு நன்னூலார் விதி கூறியுள்ளார். ஆயின், பண்புத்தொகைப் புணர்ச்சி குறித்து நன்னூலார் கூறிய விதி அமைவுடையதன்று. அவர் கூறியவாறாயின், கருமை+குதிரை= கருங்குதிரை என்றாகும். குதிரை கருமையுடையதேயன்றிக் கருமையன்று. ஆகலின், தொல்காப்பியனார் கருத்தின்படி, கரிது+குதிரை=கருங்குதிரை என்றாயிற்று என்று கோடலே முறைமையுள்ள இலக்கண விதிக்கு ஒத்ததாகும்.

குறைச்சொற் கிளவி முதலியன 'புணரியல் நிலையிடை யுணரத் தோன்றா' என்று ஆசிரியர் கூறியதற்கு உரையாளர் கூறியிருக்கும் காரணங்கள் பாராட்டற்பாலன.

வெள்.

உரிச்சொல் குறைச் சொற் கிளவியாதலானும், கருஞ் சான்றான் எனப் பண்புத் தொகையாயவழிக் கரியான் சான்றான் என மருஉவாய்த் திரிந்து நின்றதாகலானும், கொல்யானையென வினைத் தொகையாய வழிக் கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனக் காலங் காட்டுவன கொல் எனத் திரிந்தனவாகலானும், தம் முன் தாம் வரும் எண்ணுப் பெயர்கள் நிறுத்தசொல்லும் குறித்து

வரு கிளவியும் அன்மையானும்இங்ஙனம் வழக்கிடத்து மருஉவாய் வந்தன நிறுத்தசொல்லும் குறித்து வரு கிளவியுமாகப் புணர்க்கப் படாவென ஆசிரியர் விலக்கினார்.

தே. ஆண்டியப்பன்

வேற்றுமை குறித்த பொருள் புணர்ச்சியில் லன ஈற்றுச் சொற்கள் முன் உம், கெழு போன்றவை சாரியையாகலாம்.

வானவரி வில் திங்கள் என்னுந் தொடரானது வானவரி வில்லும் திங்களும் என்று உம் பெறுதல் உண்டு.

'கல்கானவர்' என்பதோ 'கல்கெழுகானவர்' என்றாகும். 'மாநிதிக் கிழவன் போன்ம்' என்பது 'மாநிதிக் கிழவனும் போன்ம்' என வரலாம். வில்லையும் திங்களையும் என நிற்க வேண்டும். அதில் ஐ உருபு தொக்கிற்று. கிழவனையும் போன்ம் என்று ஐ உருபு வர வேண்டும். உருபிழந்து நிற்கிறது. உருபு நிற்கும்போது உம் தேவையற்றுப் போகலாம். உருபின் மறைவைச் சுட்டிக் காட்ட இவை நின்றவோ என நினைக்க வேண்டியிருக்கிறது. 'கல்கெழுகானவர்' என்னும் போது 'குன்றுகளில் வாழும் கானவர் அல்லது 'கல்லைப் போன்ற கானவர்' எனப் பொருள் சொல்ல வேண்டும். கெழு என்னும் உரிச்சொல் நிறம் காட்டி வருவதே இயல்பு. 'குருவும் கெழுவும் நிறனாகும்மே' என்பர் காப்பியர். துறைகெழுமாந்தை, வளங் கெழு திருநகர் எனும் போது, உரிச்சொல்லின் பொருளில்லை: உடைமைப் பொருளே முன் நிற்கிறது. இங்கு தனக்குரிய பொருளில்லை ; குறித்து நிற்கும் உருபின் பொருளே.*

புணரியல் நிலையிட யுணரத் தோன்றாப் பிணைப்புச் சொற்கள் உண்டு. அவை பிரித்துக் காட்டுதற்கு உரிய வல்ல. விண்விணைத்தது, கார் கறுத்தது, ஒல்லொலித்தது என்பன நெறிப்பட வராத குறைச்சொற் கிளவிகள்.விண் என விசைத்தது எனும் போது இடைச் சொல்லோடு புணர்த்துப் பேசலாம். ஆனால் விண் விணைத்தது என்பது முடிக்கப்பட்டதல்ல; ஒரு சொல்லாகவே கருதப்படும்.

ஐம்பால் அறியும் பண்புதொகு மொழிகளும் பிரிப்பதற்குரிய வல்ல. கருஞ்சான்றான் என்பது பண்புத் தொகை. கரும் என்பது பண்புணர நின்றது. இங்கு மாற்றிலக்கண நெறி உதவி புரிகிறது.

---

* வேற்றுமை......பொருளே—இப்பகுதி சூ. 75ன் இறுதி யிற் சேர்க்கப்பட வேண்டுவது.

புறத் தொடரின் விளக்கத்திற்கு அக அமைப்பை அறிதல் வேண்டும்.... பண்புத் தொகையும் வினைத் தொகை போல பிரிக்கப்படாதாம் என்பார் சேனாவரையர். செந்தாமரை, செவ்வானம், செந்தமிழ் மூன்றும் வேறுபட்ட அக அமைப்பை உடையவை. 'செம்மை ஆகிய தாமரை' என்று நன்னூலார் வழி நின்று விளக்குவதானால் சில கேள்விகளை நாம் சந்திக்க நேரிடும். தாமரை இயல்பாகவே செந்நிறம். அது செம்மை ஆவதில்லை; சிவப்பதும் இல்லை. இந்நிலையில் செம்மை + தாமரை எனப் பிரிப்பது பொருந்துமா ?

1 செம்மை ஆகிய தாமரை
2 சிவந்த தாமரை
3 செவ்விது தாமரை

இம்மூன்று நிலைகளில் செவ்விது தாமரை என்ற அகவடிவே செந்தாமரையை விளக்க முடியும்.

பல்வேறு அகநிலைத் தொடர்களுக்கு (Deep Structure) இருப்பிடமாக அமைவதால் செம்+தாமரை என்று கருவி முறையில் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் பிரித்துக் விளக்க முயன்றனர்.

கருஞ்சான்றான் என்பதன் அகவடிவு யாது? இது *விரவுப் பெயராதலின் இருதிணையும் உணர்த்தும்.

கருஞ்சான்றான் → கரியன் சான்றன்
→ கரியது சான்றான்

எனவே கரும் என்பது பால்காட்டுவதற்கு இடம் உண்டு. அது பிரித்துப் பார்ப்பதற்கு உரியதன்று என்கிறார். வினைத் தொகையும் இவ்வாறே அகநிலையில் மூன்று காலங்களைப் பெறும்; எனவே அது புணர்க்கப்படாதாயிற்று என்றார். அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரியது என்றாரே தொல்காப்பியர்; அதனை நினைவு படுத்திக் கொள்ளலாம்.

---

* சான்றான் என்பது விரவுப் பெயரா? அஃறிணைப் பொருள்களில் எதற்கு அப்பெயர் வழங்கப்படுகிறது? இங்கு கருஞ்சாத்தன் என்னும் உதாரணத்தைக் காட்டலாம் —சிவ,

தொகைநிலை பெற்றும் தொகுதியாகும் மரபிற்கேற்ப ஒரு சொல்லாக எண்ணுகிறார் என்னலாம். பிரிந்த சொற்கள் எனின் புணர்க்கப்படலாம். ஒன்றே எனில் புணர்த்துப் பேச இடமில்லையல்லவா?

பப்பத்து ஒரொன்று எனத் தம்முன்தாம் வரும் எண்ணின் தொகுதியும் பிரிப்பதற்குரியதன்று. இன்னும் கூறாதவை இருப்பின் குறித்துக் கொள்க என்று வளர்ச்சிக்கு இடமளித்து, வருங் காலத் தலைமுறைக்கு இடம் அளிக்கிறார்.

அதிகாரப்புறனடை

483. **கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்**
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர். (77)

ஆ. மொ.
இல.

The poets say that you must understand those changes found in poetical usage and those which become deformed in ordinary use when they appear in situations other than those enjoined here by making scholarly researeh in conformity with the usage.

க. சு.

If changes not mentioned here occur in literary compositions and in collquial usage so that (their components) which have been uttered cannot be recognized, they follow rules other than laid down here, (and) scholars say that they should be understood after careful research of (actual) usage.

இளம்.

இது இவ்வதிகாரப் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்—முன் எடுத்தோதின அல்லாதன செய்யுளிடத்து வேறுபட வருவனவற்றையும், வழங்கு இயல் மருங்கின் மருவொடு திரிநவும்—

வழக்கு நடக்குமிடத்து மருவுதலோடு வேறுபட வருவனவற்றை யும், விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்—முன் சொன்ன முடிபியற்கையின் வேறுபடத் தோன்றின்' நல்மதி நாட்டத்து வழங்கு இயல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்—நல்லறிவினது ஆராய்ச்சியான் வழக்கு இயலுமிடத்து அவற்றின் முடிபு வேறுபாடுகளை யறிந்து நடத்துக, என்மனார் புலவர்—என்று சொல்லுவர் புலவர்.

*உ-ம்: நறவங்கண்ணி, கள்ளியங்காடு, புன்னையங்கானல், பொன்னந்திகிரி, ஆரங்கண்ணி, கானலம் பெருந்துறை என இவை வேற்றுமைக்கண் அம்முப் பெற்று முடிந்தன.

'வேர்பிணி வெதிரத்துக் கால் பொரு நரலிசை' என்பது ரகர வீறு அத்துப் பெற்று முடிந்தது.

முளவுமா, பிணவுநாய் என்பன, அல்வழிக்கண் மென் கணத்துக் குறியதன் இறுதிச் சினை கெட்டு உகரம் பெற்று முடிந்தன.

'அஞ்செவி நிறைய மந்திரங்கூறி' என்பது அகம் என்னும் நிலைமொழி, செவி என்னும் வருமொழியோடு வேறுபட முடிந்தது.

ஆயிடை என்பது அவ்வென்னும் வகர வீறு வேறுபட முடிந்தது.

தடவுத்திரை, தடவுத்தோள் என்பன உரிச்சொல் முடிபு.

அருமருந்தன்னான் எனற்பாலது அருமருந்தான் என மரூஉ வாய் முடிந்தது. சோணாடு மலாடு என்பதும் அது. பொதியில் என்பதும் அது பிறவும் அன்ன.

நச்.

இஃது இவ்வதிகாரத்து எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்றவற்றையெல்லாம் இதனானே முடிக்க என அதிகாரப் புறனடை கூறுகின்றது.

---

* இவ்வுதாரண விளக்கங்களை நச்சினார்க்கினியர் உரையில் வரும் உதாரணங்களின் அடிக்குறிப்பில் காண்க. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் காட்டிய உதாரணங்கள் அவ்வவ் வீற்றுச் சூத்திரங்களில் சொல்லப்படாதனவும், அவ்வவ்வீற்றுச் சூத்திரங்களின் இலேசுகளாற் கொள்ளப்படாதனவும் ஆகும்; அறிந்து பொருத்துதல் வேண்டும்.

இ-ள்: முன்னர் எடுத்தோதப்பட்டன அல்லாத சொற்கள் செய்யுளிடத்துத் திரிந்து முடிவனவும், நால்வகை வழக்கும் நடக்குமிடத்து மருவுதலோடு திரிந்து முடிவனவும், முன்னர்க் கூறிய இலக்கண முறைமையினின்றும் வேறுபடத் தோன்றுமாயின் அவற்றை நல்ல அறிவினது ஆராய்ச்சியாலே, வழக்கு முடிந்து நடக்குமிடத்தே முடிபு வேறுபாடுகளை அறிந்து நடாத்துக என்று கூறுவர் புலவர்: எ-று.

உ-ம்: '[1]தடவுத்திரை' என உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், 'தடவுநிலை' (புறம் 140) என உகரம் பெற்றும், அகர வீற்று உரிச்சொல் வந்தது.

[2]அதவத்தங்கனி என வேற்றுமைக் கண் அகரவீறு அத்துப் பெற்றது.

[3]கசதபத் தோன்றின் என அகர வீற்றின் முன்னர்த் தகரம் கொடுக்க

[4]'நறவங்கண்ணி நற்போர்ச் செம்பியன்.
குரவ நீடிய கொன்றையங் கானல்'

---

1. தட+திரை→தடவுத்திரை. இது உரிச்சொல் முடிபு உயிர் மயங்கியலில் அகர வீறு புணருமாறு கூறிய 'அகர இறுதிப் பெயர்' (உயிரம். 1) என்னும் சூத்திரத்தில் உரிச்சொல் முடிபு கூறப்படவில்லை. அதில் 'ஒத்த' என்னும் இலேசான் தட+கை→தடக்கை என வல்லெழுத்துமிகுதலே கொள்ளப்பட்டது. எடுத்தோதிய சூத்திரத்தும் இல்லாமல் அச்சூத்திர இலேசினும் இல்லாமல் வந்த தடவுத்திரை என்னும் முடிபை இப் புறனடையாற் கொள்க. ('தடவு நிலை'யும் இவ்வாறே கொள்க.)
2. 'அத' என்பது ஒரு மரம். மரப் பெயர்க்கிளவி மெல்லெழுத்துமிகுமே (218) என்பதன்படி அதங்கனி என வர வேண்டியது அத்தும் அம்மும் பெற்று 'அதவத்தங் கனி' என வந்தது.
3. கசதப—இவைதனி எழுத்துகள்; சொல்லல்ல-எனினும் கசதப எனச் சொல் நிலையில் வைத்து, கசதப+தோன்றின்→கசதபத் தோன்றின் என முடிக்க.
4. நறா+கண்ணி, குரா+நீடிய எனப்பிரிக்க. குறியதன் இறுதிச் சினை கெட என்பதன்படி (235) நற, குர என ஆயின. அவை அம்சாரியை பெறும் என யாண்டும் சொல்லப்பட வில்லை. இப்புறனடையாற் கொள்க.

என ஆகார விறுதி குறியதன் இறுதிச் சினை கெட்டு (232) இருவழியும் அம்முப் பெற்றன.

[5]"முளவுமா தொலைச்சிய பைந்நிணப் பிளவைப்
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ" (மலைப்படு. 176)

என அவ்வீறு அல்வழிக்கண் அம்முப் பெறாத முடிபு பெற்றன.

[6]'திண்வார் விசித்த முழவோ டாகுளி' (மலைபடு. 3) 'சுற வெறி மீன்', 'இர வழங்கு சிறு நெறி' (அகம் 318) இவை உகரம் பெறாமல் வந்தன.

[7]'கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை' (அகம். 97) என இகர வீறு வேற்றுமைக்கண் அம்முப் பெற்றன.

[8]'தீயி னன்ன வொண் செங் காந்தள்' (மலைபடு. 145) என ஈகார வீறு வேற்றுமைக்கண் இன் பெற்றது.

[9]'நல்லொழுக்கங் காக்கும் திருவத்தவர்' (நாலடி 57) என உகரவீறு வேற்றுமைக்கண் அத்துப் பெற்றது.

நறவங்கண்ணி--தேனையுடைய பூமாலை—வேற்றுமை. குரவநீடிய-குராமரம் நீண்டுள்ள—எழுவாய்த் தொடர்; அல்வழி.

5. முளா + மா, பிணா + நாய்: குறியதன் இறுதிச்சினை கெட (235) என்பதால் முள, பிண என ஆயின. வருமொழி முதலில் வல்லெழுத்தாயின் உகரமும் வல்லெழுத்தும் பெறும். இவறறில் வருமொழி முதலில் மெல்லெழுத் திருத்தலின் (யாண்டும் கூறப்படாமையின்) இச்சூத்திரத் தாற் கொள்க.

6. குறியதன் இறுதி (24) என்னும் சூத்திரப்படி முற்வு, சுறவு, இரவு என்பன உகரம் பெற வேண்டுவன பெறா மல் இருப்பதை இப்புறனடையாற் கொள்க.

7. இகரவீறு வேற்றுமையில் அம் பெறும் எனக் கூறப்பட வில்லை. இப்புறனடையாற் கொள்க.

8. ஈகார வீறு வேற்றுமையில் இன் பெறும் எனக் கூறப்பட வில்லை. இப்புறனடையாற் கொள்க

9. திரு + அவர் → திரு + அத்து + அவர் → திருவத்தவர். உகர வீறு அத்துச் சாரியை பெறும் எனக் கூறப்படவில்லை இப்புறனடையாற் கொள்க.

[10]'ஏப்பெற்ற மான்பிணை போல' (சிந்தா. 2965) என ஏகார வீறு வேற்றுமைக்கண் எகரம் பெறாது வந்தது.

[11]'கைத்துண்டாம் போழ்தே' (நாலடி 19), 'கைத்தில்லா நல்லர்' (நான் மணி. 69) எனவும், 'புள்ளையங்கானல்' (அகம் 80) 'முல்லையந் தொடையல்' எனவும் ஐகாரவீறு வேற்றுமைக்கண் அத்தும் அம்மும் பெற்றன.

[12]'அண்ணல் கோயில் வண்ணமே' (சிந்தா. நாம. 126) என ஓகாரவீறு யகரவுடம்படுமெய் பெற்றது.

இனி, [13]'அஞ்செவி நிறைய வாலின்' (முல்லைப். 89) என அல்வழிக்கண் ககரமும் அகரமும் கெட்டன.

[14]'மரவம் பாவை வயிறாறப் பருகி', 'மரவ காகம் வணங்கி மாற்கணம்' என இருவழியும் மகரம் விகாரப்பட்டு அம்முப் பெற்றன.

---

10. ஏயென் இறுதிக்கு எகரம் வருமே (278) என்பதற்கு மாறாக ஏ + பெற்ற→ஏப்பெற்ற என எகரம் இன்றி வந்தது காண்க.
11. கை+உண்டாம் போழ்தே→கை+அத்து+உண்டாம் போழ்தே→கைத்துண்டாம் போழ்தே. கை+இல்லா→ கை+அத்து+இல்லா→கைத்தில்லா. ஐகார வீறு வேற்றுமையில் அத்துப் பெறுவதாகக் கூறப்படவில்லை. இச்சூத்திரத்தால் கொள்க. அவ்வாறே அம் பெறும் எனவும் கூறப்படவில்லை. முல்லை+கானல்→முல்லை யங்கானல் என இச்சூத்திரத்தால் அம்பேறு கொள்க. பிறவும் அன்ன
12. கோ+இல்→கோவில் என் வரவேண்டுவது கோயில் என வந்தது.
13. அகமென் கிளவிக்குக் கைமுன்வரின் (316) விதி கூறப் பட்டது. செவிவரின் எவ்வாறாம் என்பது கூறப்பட வில்லை. இச்சூத்திரத்தால் அகம்+செவி→அஞ்செவி எனவரும் என்க.
14. மரம்+பாவை→மரப்பாவை என மகரவிறுதி (311) என்பதன் படிவரவேண்டுவது அம்பெற்று வந்தது. இது வேற்றுமை மரம்+காகம்→மரவகாகம் அல்வழி அவ் வாறு வந்தது. மரப்பாவை—மரத்தாலகிய பாவை' மரவகாகம்—மரமாகியகாகம்.

[15]'காரெதிர் கானம் பாடினே மாக' (புறம் 144) 'பொன்னந் திகிரி முன் சமத் துருட்டி' 'பொன்னங் குவட்டிற் பொலிவெய்தி' என னகரவீறு இருவழியும் அம்முப் பெற்றன.

[16]'வேர் பிணிவெதிரத்துக் கால்பொரு நரலிசை' (நற். 62) என ரகரவீறு வேற்றுமைக்கண் அத்துப் பெற்றது,

[17]'நாவலந் தண் பொழில்' (பெரும்பாண். 465) 'கானலம் பெருந்துறை (ஐங். 158) என லகர வீறு வேற்றுமைக்கண் அம்முப் பெற்றன. 'நெய்தலஞ் சிறுபறை' இஃது அல்வழிக்கண் அம்முப் பெற்றது.

[18]'ஆயிடை இருபேராண்மை செய்த பூசல் (குறுந். 43) என் புழி ஆயிடை என்பது உருபாதலின் 'நீட வருதல்' (எழு. 209) என்பதனான் முடிந்தது.

[19]தெம்முனை எனத் தெவ் என்புழி வகரங்கெட்டு மகர ஒற்றுப் பெற்று முடிந்தது.

---

15. கான் + பாடினேம் → கான் + அம் + பாடினேம் → கானம் பாடினேம் = காட்டைப் பாடினேம்; வேற்றுமை. பொன் திகிரி = பொன்னாலாகிய திகிரி வேற்றுமை பொன் + குவடு → பொன் + அம் + குவடு → பொன்னங்குவடு → பொன்னாகிய மலை—அல்வழி. னகரவீறு அம்பெறும் என விதிக்கப்படவில்லை. இதனாற் கொள்க.
16. வெதிர் + கால் → வெதிர் + அத்து + கால் → வெதிரத்துக் கால் = மூங்கிலினின்றும் வரும் காற்று. ரகரவீறு வேற்று மையில் அத்துப் பெறும் என விதிக்கவில்லை. இதனாற் கொள்க.
17. நாவல் + தண்பொழில் → நாவல் → அம் + தண்பொழில்; → நாவலந்தண் பொழில், கானல் + பெருந்துறை, கானல் + அம் + பெருந்துறை → கானலம் பெருந்துறை. முன் லகர வீற்றுக்கு விதிக்கப் படாத அம் இச்சூத்திரவிதிப் படிப் பெற்றதாகக் கொள்க. நெய்தல் + சிறுபறை → நெய்தல் + அம் + சிறுபறை → நெய்தலம் சிறுபறை = நெய்தலாகிய பறை என அல்வழியாகக் கொள்க.
18. அ + இடை → ஆயிடை. இடை என்பது ஏழன் உருபு. 'நீடவருதல்' என்பது பொருட் புணர்ச்சிக்குக் கூறியது. ஆதலின் ஆண்டடங்காது இது உருபுப்புணர்ச்சியாதலின், இப்புறனடையாற் கொள்ளப்பட்டது.

[19]அ என்னுஞ் சுட்டு 'அன்றியனைத்தும்' எனத் திரிந்தது.

[20]'முதிர்கோங்கின் முகை' (குறிஞ்சிக் 20) எனவும் 'காய் மாண்ட தெங்கின்பழம்' (சிந்தா 31) எனவும் குற்றுகரவீறு இன்பெறுதலும் கொள்க.

[21]'தொண்டு தலையிட்ட பத்துக்குறை' (தொல். செய. 100) என ணகரம் இரட்டாது தகர ஒற்று டகரவொற்றாய்க் குற்றியலுகரம் ஏறி முடிந்தது.

[22]இங்ஙனம் செய்யுளுள் பிறவும் திரிவன வுளவேனும் இப் புறனடையான் முடிக்க.

அருமருந்தான் என்பது ரகர வுகரம்கெட்டு அருமந்தான் என முடிந்தது.

சோழனாடு சோணாடு என அன்கெட்டு முடிந்தது. பாண்டி நாடும் அது.

தொண்டைமானாடு தொண்டைநாடு என ஈற்றெழுத்துச் சில கெட்டு முடிந்தது.

மலையமானாடு மலாடு என முதல் எழுத்தொழிந்தனபலவும் கெட்டு முடிந்தது.

பொதுவில் என்பது பொதியில் என உகரந்திரிந்து இகரமாய் யகர வுடம்படு மெய் பெற்று முடிந்தது.

பிறவும் இவ்வாறு திரிந்து மருவி வழங்குவன எல்லாம் இப் புறனடையான் அமைத்துக் கொள்க.

குற்றியலுகரப் புணரியல் உரைவளம் முற்றும்

*நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகை மரபு—பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கந்
தெரிவரிய குற்றுகரம் செப்பு.

‡எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய ஒன்பதோத் துள்ளும்—வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து.

19-20. இவ்வாறு முடிவன முன்கூறப்படவில்லை. அதனால் இங்கே கொள்க.

21. தொண்ணூறு என்று ணகரம் இரட்டியதுபோல் தொண்ண்டு என இரட்டவில்லை.

22. இதன்பின் வருவனவற்றுக்கு முன்னர் யாண்டும் விதி இன்மையின் இச்சூத்திரமே விதியாகக் கொள்ளல் வேண்டும்.

இப்பாடல்கள் ஏடெழுதினோர் யாரோ எழுதியன வாகும், நச்சினார்க்கினியர் உரையிறுதியில் கழகப் பதிப்பிலும் கணேசய்யர் பதிப்பிலும் உள.

சூத்திர முதற்குறிப்பகராதி

(எண்—பக்க எண்)

அதனிலையுயிர்க் 166
அந்நான் மொழி 67
அல்லது கிளப்பினும் 13
அல்லது கிளப்பினெல் 60
அவற்றுள், ஈரொற்றுத் 9
அவையூர்ப 156
அளந்தறி கிளவி 110
அளவு நிறையுமா...புலவர் 157
அளவு நிறையு...திரியா 162
ஆயிரக்கிளவி 140
ஆயிரம் வரினுமா 83
ஆயிரம் வரினே 161
ஆறன் மருங்கின் 145
ஆறென் கிளவி 129
இடைநிலை ரகரம் 90
இடையொற்றுத் 34
இரண்டுமுதல் 168
இருதிசை புணரி 72
ஈரெழுத்து மொழியு 30
ஈரெழுத்து மொழியும்வல் 48
ஈரெழுத்தொழிமொழி 2
உண்டென் கிளவி 69
உயிரும் புள்ளியும் 173
எட்டன் ஒற்றே 94
எண்ணுப் பெயர்க் 54
ஏனைமுன்வரி 60
ஐந்தனொற்றே மகார 93
ஐந்தனொற்றேமுந் 124
ஐந்தனொற்றே மெல் 114
ஐந்தனொற்றேயகா 144
ஐந்தும் மூன்றும் 119
ஒற்றிடையின 32
ஒற்றுநிலை திரியா 50
ஒன்பான் முதனிலை 135
ஒன்பானிறுதி...மொழியே 130
ஒன்பானிறுதி...மரபே 149
ஒன்பானொகர 94
ஒன்று முதலாக 78
ஒன்றுமுதலாகிய பத்தூர் 159
ஒன்று முதலொன் 86
கசதப 115
இளந்தவல்ல 182
சுட்டுச்சினை 65
திரிபுவேறு 116
நான்கனொற்றே லகா 123
நான்கனொற்றே றகா 92,
நான்கும் ஐந்தும் 134
நிறையுமளவு 84
நூறாயிரமுன் 151
நூறுமுன்வரி 132
நூறென் கிளவி 154
பத்தனொற்றுக் 81
பெண்டென் 56
மரப்பெயர்க் 44
முதலீரெண் 88
முதலீரெண்ணின் 125
முதனிலைநீட 142
முதனிலையெண் 164

முந்தையொற்றே 135
முன்னுயிர்வரு 58
மூன்றனொற்றே வகா 122, 143
மூன்றனொற்றே வந்த 112
மூன்றன்முதனிலை 128
மூன்றும் ஆறும் 91
மூன்றும் நான்கும் 126
மெல்லொற்றுவலியா 46
யகரம் வரும்வழி 24
யாதென்இறுதி 57
யாவினா மொழி 66
வனவெனவருஉ 170
வண்டும் பெண்டும் 55
வல்லொற்றுத் தொடர்மொழி 20
வல்லொற்றுத்தொடர் 64
வன்றொடர்மொழியும் 36

பயன் படுத்தப் பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்—இளம்பூரணம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை (1955)

2. தொல்—எழுத்து—இளம். அடிகளாசிரியர் பதிப்பு
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் (1969)

3. தொல்—எழுத்து. நச்சினார்க்கினியம்
சி. கணேசய்யர் பதிப்பு, திருமகள் அழுத்தகம்
சுன்னாகம், இலங்கை, (1957)

4. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்.
சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர் (1957)

5. தொல். எழுத்து—நச்சினார்க்கினியம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1972)

6. தொல்—எழுத்து—குறிப்புரை
பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்
பி. சு சுவாமிநாதன் பதிப்பு. திருவையாறு (1937)

7. தொல்—எழுத்ததிகார ஆராய்ச்சி
வே. வேங்கடராசுலு ரெட்டியார்
சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு (1941)

8. தொல்—நன்னூல்—எழுத்ததிகாரம்
க. வெள்ளை வாரணன்.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர் (1962)

9. இலக்கணத் தொகை—எழுத்து.
ச. வே. சுப்பிரமணியன் பதிப்பு.
விற்பனை உரிமை பாரிநிலையம் சென்னை. (1967)

10. எழுத்திலக்கணக் கோட்பாடு
செ. வை. சண்முகம், அண்ணாமலை நகர் (1680)

11. மொழிநூல், மு. வரதராசனார்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1955)

12. சொல்லாய்வுக் கட்டுரைகள்
இரா. மதிவாணன்
சேகர் பதிப்பகம், சென்னை 78, (1982)

13. மொழியியற் சிந்தனைகள்
மு. வை. அரவிந்தன்
மணிவாசகர் நூலகம், மேலசந்நிதிவீதி, சிதம்பரம் (1977

14. தமிழ்மொழி வரலாறும் ஒப்பிலக்கணமும்
இரா. அரங்கசாமி, அன்பு இல்லம்
சுவாமிநாத நகர், மேலக்காவேரி, கும்பகோணம் (1973)

15. காப்பியர் நெறி
தே. ஆண்டியப்பன்
வெற்றிவேல் பிரசுரம், வடக்குமாசிவீதி,
மதுரை (1976).

16. Tolkappiyam in English with critical studies.
Ilakkuvanar,
Kuralneri Publishing house
Madurai (1963)

17. Journal of Tamil stndies (○) september 1974
Inter national Institute of Tamil st udies
Madras 113

சொல்லகராதி

(எண்—பக்க எண்)

அஃதடைபு 50
அஃதாட்டம் 59
அங்குக் கொண்டான் 68
அஞ்செவி 183
அடிகளாசிரியர் 25 28 79 115 137 144
அடிமைத்தன்மை 103
அடையும் 9
அதவத்தங்கனி 184
அதன்கோடு 58
அது 7
அதுகடிது 60
அப்புத்துளை 41
அம்பு 6
அரங்கசாமி, இரா. 105
அரசக் கன்னி 49 50
அரச வாழ்க்கை 50
அரவிந்தன், மு. வை. 106
அரிவாள் 177
அருமருந்தன்னான் 183
அறாயிரம் 146
அறுகல் 165
அறுகலம் 115 116
அறுகழஞ்சு 115 116
அறுநூற்றெண்பத்தொன்று 16
அறுநூறாயிரம் 152
அறுநூறு 133
அறுஃபது 92
அறுமா 170
அன்று கொண்டான் 68
அன்றைக்கூத்தன் 62
ஆங்கு 68
ஆங்குக் கொண்டான் 65 66
ஆடரங்கு 177
ஆடை 59
ஆண்டுசென்றான் 66
ஆயிடை 183
ஆர்க்கு 10 11
ஆரங்கண்ணி 183
ஆறகல் 130
ஆறாயிரம் 146
ஆற்றிடை 32
ஆற்றுக்கவலை 32
ஆறுகல் 165
ஆறு நூறாயிரம் 152
ஆறுமுக நாவலர் 77
ஆறுழக்கு 130
இஃதடை 59
இங்குக் கொண்டான் 68
இதன்கோடு 58
இது கடிது 60
இரண்டடை 167 168
இரண்டன் காயம் 54 55
இரண்டு கல் 164 165

இரண்டு நூறாயிரம் 152
இரண்டுமா 169 170
இராயிரம் 141
இருகல் 164 165
இருகலம் 111 112
இருகலை 165
இருகழஞ்சு 111 112
இருகால் 111 112
இருட்டத்துக் கொண்டான் 49 50
இரு நான்கு 112
இருநூற்றுக் கலம் 158 159
இருநூறாயிரம் 150
இருநூறு 133
இருந்து கொண்டான் 66
இருபஃது 87 88 90 91
இருபத்திரண்டு 160 161
இருபத்து மூன்று 160 161
இருபத்தொன்று 160 161
இருபதின் கலம் 163
இருபதினாயிரம் 162
இருமா 169 170
இருமுக்கால் 111 112
இருமூன்று 112
இருபெயரொட்டுப் பண்புத் தொகை 62 63
இருவடை 167 168
இருவாடை 167 108
இலக்கண நூலார் 8
இலக்கண விளக்க நூலார் 98
இலக்கம் 153
இலை 59
இன்று கொண்டான் 68
ஈங்கு 68
ஈங்குக் கொண்டான் 65 66
ஈச்சங்குலை 47 48
ஈயம் 59
ஈர் 12
ஈர்க்கு 9 10 11 12
ஈர்க்கு கடிது 19 20
ஈரகல் 126
ஈரசை 167 168
ஈரரை 111 112
ஈரரைக்கால் 111 112
ஈராயிரம் 142
ஈராறு 112
ஈரிரண்டு 111 112
ஈருழக்கு 126
ஈரெட்டு 112
ஈரேழு 112
ஈரைந்து 112
ஈரொன்பது 112
உஃதடை 59
உகிர் 38
உங்குக் கொண்டான் 68
உண்டுகாணம் 70 71
உண்டுசாக்காடு 70 71
உண்டுஞாண் 70 71
உண்டு தாமரை 70 71
உண்டு பொருள் 70 71
உதன்கோடு 58
உதுகடிது 60
உபதேசம் 101
உம்மையிறந்தது தழீஇயிற்று 84
உம்மை யெதிர்மறை 21
உமண் 53
உய்த்துக் கொண்டான் 66
உயிர் 1 11 12
உரல் 59
உரையிற் கோடல் 152
உள்பொருள் 70 71 72
ஊங்கு 68
ஊங்குக் கொண்டான் 65 66

ஊர்தி 59
எஃகியாது 25
எஃகு 4, 5
எஃகு—கூர்மை 4
எஃகுக் கொண்டான் 68
எஃகு கடிது 61 62
எஃகு கடுமை 35
எஃகுகால் 35
எட்டுக்கல் 166
எட்குக்குட்டி 39 41 43
எட்டு ஞாண் 166
எட்டு நூறாயிரம் 152
எண்கல் 166
எண்கலம் 117
எண்கழஞ்சு 117
எண்கு 37
எண்கு—கரடி 38
எண்ஞாண் 166
எண்பஃது 94
எண்மா 170
எண்ணகல் 117 119
எண்ணாயிரம் 146 148 149 150
எண்ணாழி 117
எண்ணுப்பெயர் 2
எண்ணூறு 133
எண்ணூறாயிரம் 152
எதுகைத் தொடை 40
எயிற்றுப் பல் 62
எயின் 53
எழு 59
எழுத்திலக்கணக் கோட்பாடு 110
எழுவகையிடம் 5
எற்புக்காடு 41
எற்புடம்பு 43
ஏணி 59
ஏப்பெற்ற மாண்பிணை 186
ஏவல்வினை 19
ஏற்புழிக்கோடல் 153
ஏறங்கோள் 49
ஐங்கல் 165
ஐங்கலம் 115 116
ஐங்கழஞ்சு 115
ஐஞ்ஞாண் 165
ஐந்துகல் 165
ஐந்துஞாண் 165
ஐந்துநாழி 120 121
ஐந்து நூறாயிரம் 152
ஐந்நூறாயிரம் 152
ஐந்நூறு 134
ஐம்பஃது 93
ஐம்மண்டை 120 121
ஐம்மா 170
ஐய்யாயிரம் 144
ஐயாயிரம் 144 145
ஐயகல் 127 128
ஐயம் 59
ஐயாட்டையெருது 62
ஐயுழக்கு 127 128
ஐவ்வட்டி 124 125
ஐவட்டி 124 125
ஒடுக்கம் 59
ஒரடை 167 168
ஒராடை 167 168
ஒராயிரம் 141
ஒருகலம் 111 112 116
ஒருகல் 164 165
ஒருகழஞ்சு 111 112
ஒருகால் 111 112
ஒருநான்கு 112
ஒரு நூற்றுக்கலம் 158 159
ஒரு நூற்றொருபஃது 157
ஒரு நூறாயிரம் 152
ஒரு நூறு 135
ஒருபஃது 87 88 89
ஒருபத்திரண்டு 160 161
ஒருபத்து மூன்று 160 161
ஒருபத்தொன்று 160 161

ஒருபதிற்றுக்கலம் 160, 161 163
ஒருபதிற்றுநாழி 163
ஒருபதின்கலம் 163
ஒருபதின் கழஞ்சு 163
ஒருபதினாயிரம் 162
ஒருபது 87
ஒருமுக்கால் 111 112
ஒருமுந்திரிகை 111 112
ஒருமூன்று 112
ஒரோவொன்று 178
ஒல்லொலித்தது 179
ஒலிக்கட்டுப்பாடு 116
ஒன்பதிற்றகல் 131
ஒன்பதிற்றுக்கலம் 132
ஒன்பதிற்றுக்கோடி 150
ஒன்பதிற்றுத்தடக்கை 150
ஒன்பதிற்றெழுத்து 150
ஒன்பதிற்றொன்று 150
ஒன்பதின் கலம் 131 132 165 166
ஒன்பதின்கூறு 79 80
ஒன்பதின்பால் 79 80
ஒன்பதினாயிரம் 150
ஒன்பதினாழி 132
ஒன்பதினூறாயிரம் 152
ஒன்பது 8
ஒன்பது கல் 166
ஒன்பதுஞாண் 166
ஒன்பது நூறாயிரம் 152
ஒன்றன் காயம் 54 55
ஒன்றன்ஞாண் 55
ஒன்றுமா 170
ஒன்றென முடித்தல் 45 117 118
ஒன்றொழிமுந்நூற்றெழுபான் 103
ஓக்கம் 59
ஓர்யாட்டைக்குழவி 41
ஓர்யாட்டையானை 62
ஓர்யாழ் 167 168
ஓரகல் 126
ஓரடை 167 168
ஓரரை 111 112
ஓரரைக்கால் 111 112
ஓராடை 167 168
ஓராயிரம் 142
ஓராறு 112
ஓருழக்கு 126
ஓரெட்டு 112
ஓரேழு 112
ஓரைந்து 112
ஓரொன்பது 112
ஓரொன்று 111 112 175
ஔவியம் 59
கட்டு 6
கடவுள் வாழ்த்து 104
கணேசய்யர் 18 188
கமுகங்காய் 45
கயிற்றுப்புறம் 31
கரிது குதிரை 61 62 63
கரியதன் கோடு 50
கரியது குதிரை 63
கரியன் 178
கருங்குதிரை 63
கருங்குதிரைகள் 177
கருஞ்சான்றான் 175 180 181
கரும் பாம்பு 178
கரும் பாம்புகள் 178
கரும் பார்ப்பார் 177
கரும் பார்ப்பினி 177
கல்கானவர் 180
கல்கெழுகானவர் 171 172 180
கள்ளியங்காடு 183
களிற்றுக்கோடு 32
களிற்றுப்பன்றி 62
கற்று 6
கற்றுத்திரள் 41

கன்று 6 41
காட்டுக்கானம் 62
காண்டிகையுரை 77
காது 19
காபு-காப்பு 77
கார்கறுத்தது 179
காழ் 12
காழ்ப்பு 12
கான்கெழுநாடு 172
கிடந்தது குதிரை 61 62 63
கிழக்கு மேற்கு 73
கீழ் கரை 75
கீழ் கூரை 75
குடிப்பெயர் 54
குரக்குக்கால் 37
குரக்குக்கால் 41 42
குரக்குஞாற்சி 37
குரங்கியாது 25
குரங்கின் கால் 37 38 39 41 44
குரங்கு 4 5
குரங்குக்கால் 37 47
குரங்கு கடிது 21 61 62
குருட்டுக்கோழி 62
குருட்டெருது 62
குருந்தங்கோடு 46 47
குறும்பிற் சான்றார் 38
குறும்பு-சிற்றூர் 39
குன்றக் கூகை 51 52
குன்று 53
கொக்கியாது 25
கொக்கின் கால் 37 38
கொக்கு 4 5 12 23 24
கொக்குக்கடிது 19 21 64
கொக்குக்கடுமை 21
கொக்குக்கால் 37 38 39 42
கொங்கத்துழவு 51 52 53
கொல்யானை 175 177 179
கொள்ளெனக் கொண்டான் 178
கோடி 153
கோணத்திசை 77
சண்முகம் செ. வை 110
சால்பு 12
சிதம்பரம் இராமலிங்க
சுவாமிகள் 110
சிதம்பரம் பிள்ளை 19 26 116
சிலப்பதிகாரம் 38
சிவஞான முனிவர் 156
சிறு குழந்தைகள் 101
சீழ்கம்புல் 45
சீழ்கு 45
சுக்கு 6 54 55
சுண்ணாம்பு 5
சுந்தர-ரண்முகனார் 103
சுந்தர மூர்த்தி, கு. 10 42
சுப்பிரபணியம், பூ. 12
சுவடியியற் பேராசிரியர் 12
சுறவெறி மீன் 185
சூதம்போர் 50
செத்துக்கிடந்தான் 66
செந்தமிழ் 77
செந்தாமரை 44 181
செய்குன்று 177
செல்செலவு 177
செவிகருவி 21
செற்றுச் செய்தான் 66
சேரும் 9
சொல்லின் மாற்று வடிவம் 110
சோணாடு 183
சோழ நாடு 188
தங்கமணி, வை. 101 139
தங்கு 4
தடவுத்திரை 183 184
தடவுத்தோள் 183
தடவுநிலை 184
தந்து தீர்ந்தான் 66
திரிந்ததன் திரிபது 130
திரிந்ததன் திரிபு 148
திருட்டுப் புலையன் 62

திருவத்தவர் 185
திருவருட்பா 101
துறைகெழுமாந்தை 171 172
தெங்கங்காய் 45 49
தெம்முனை 187
தெவ் 187
தெங்கியாது 25
தெள்கு 456
தெள்கு கடிது 61 62
தெள்கு கால் 35
தெற்கே வடக்கு 73
தென்கிழக்கு 74 75 77
தென்துருவம் 77
தென்மேற்கு 74 75 77
தென்கோடு 45
தேவநேயப் பாவாணர் 102
தேவி பட்டினம் 29
தோடு—தொள் 100
தொடை 19291—15
தொண்டாயிரம் 107
தொண்டை நாடு 188
தொண்டைமா னாடு 188
தொண்ணூறு 96 97 99
தொண்ணூறும்
தொள்ளாயிரமும் 103
தொண்பஃது 101
தொண்பத்து 107
தொம்மிதி 100
தொல்காப்பியர் 28
தொல்காப்பியனார் 8
தொல்லை 22
தொழுவம் 104
தொள்ளாயிரம் 137 138 139
தோரை 54 55
நச்சுப் பொய்கை 41
நட்டுப்போனான் 66
நடு 78
நறவங்கண்ணி 183 184
நன்மக்கள் 178 179
நன்மனைவி 178
நன்னூல் விருத்திகாரர் 8
நன்னூலார் 8 98
நாகரிது 29
நாகியாது 25 26
நாகின்கால் 34
நாகு 4 5 6 26 27
நாகு கடிது 13 14 19 61 62
நாகு கடுமை 13 14
நாகுகால் 33
நாகு ஞாற்சி 34
நாகு யாது 26
நாடியாது 29
நால்வட்டி 124
நாலகல் 128
நாலாயிரம் 144
நாலாறு 112
நாலிரண்டு 112
நாலுழக்கு 128
நாலெட்டு 112
நாலேழு 112
நாலைந்து 112
நாலொன்று 112
நாவலந்தண் பொழில் 187
நாற்கால் 165
நாற்கலம் 113 114
நாற்கழஞ்சு 113, 114
நாற்பஃது 93
நான்குகல் 165
நான்குஞாண் 165
நான்கு நூறாயிரம் 152
நான்ஞாண் 165
நான்மா 170
நான்னூறு 135
நானூறாயிரம் 152
நானூறு 135
நிணம் 38
நிரைபசை 14
நிரைபு 17
நுங்கு 4
நூல் 55
நூற்றுக்கலம் 158 159
நூற்றொரு பஃது 157
நூற்றொரு பதினாயிரம் 162
நூற்றொன்று 43 154 155
நெடியதன் கோடு 50
நேமிநாத நூலார் 99
நேர்பசை 14
நேர்பு 17
நொய்ம்பு 10 11
பக்கிரிசாமி 29
பட்டுக்கடிது 64
படு 7
பண்டு கொண்டான் 68
புண்டைச் சான்றார் 62

பண்புத் தொகை 70 71 72
169 170
பணி 104
பத்து 6
பதிற்றிதழ் 85
பதிற்றுத் தொடி 86
பதிற்று முழம் 85
பதிற்று வேலி 85 86
பதின்கலம் 85
பதின்கழஞ்சு 85
பதின்மூவாயிரம் 15
பதின்மூன்று 79 80
பதின்றிங்கள் 85
பதினாயிரம் 83 84
பதினாறு 79 80
பதினான்கு 79 80
பதினெட்டு 79 80
பதினேழ் 80
பதினேழு 79 80
பதினைந்து 79 80
பதினொன்று 79 80
பந்துத் திரட்சி 42
பப்பத்து 178 182
பயற்றங்காய் 45 49 50
பயறு 45 54 55
பல்காயனார் 5
பலாஅ 25
பழைய தன்மை 22
பறம்பிற்பாரி 38 39 49 50
பறம்பு-ஒருமலை 39
பன்னிரண்டு 81 82
பாக்குக்கடிது 64
பாண்டி நாடு 81 83
பார்ப்பனக்கன்னி 512
பார்ப்பனக்குழவி 55
பார்ப்பனச்சேரி 51 52
பார்ப்பன மகன் 52
பார்ப்பன வனிதை 53
பார்ப்பான் சாதி 53
பார்ப்பினுட் குழவி 52
பான் 82
பிண்ணாக்கு 5
பிணவு நாய் 83
பிறகு-பிறக்கு 76
புணர்பொழுது 177
புதுவை 103
புற்றம் பழஞ்சோறு 50
புன்கங்கோடு 46 47
புன்னையங்கானல் 183
பூக்கேழூரன் 172
பெண்டன் கை 56
பெண்டின் கால் 44 55 56
பெண்டு-பெண் 55
பெண்டுக்கால் 44
பெரம்பூர் 101
பெருமாள், ஏ. என். 101 139
பேராசிரியர் 16 18 45
பொதியல் 183 188
பொதுவில் 188
பொருட்பெயர் 2
பொறு 7
பொன்னந்திகிரி 183
போவது 8
மண்ணியாது 30
மணி 55
மதிவாணன், இரா. 107
மயிலாப்பிற் கொற்றன் 49 50
மரபியல் 46
மரவகாகம் 186
மரவம்பாவை 186
மருத்துப்பை 41
மலாடு 183 188
மலைய மானாடு 188
மற்றையானை 62
மன்றப் பெண்ணை 51 52
மாணாக்கர் 18
மாநிதிக்கிழவன் 171 172
மார்பு 6
மாற்றிலக்கண நெறி 180
மாறுகொளக் கூறல் 45
மீகரை 75
மீகூரை 75
முக்கலம் 113 114 116
முக்கழஞ்சு 113 114
முகம் 38
முட்டை 31
முந்து கொண்டான் 68
முந்நாழி 120 121
முந்நூறாயிரம் 152
முந்நூறு 134
முப்பஃது 92
மும்மண்டை 120 121
மும்மா 169 170
முயிற்றின் கால் 33 34

முயிற்றுக்கால் 31
முயிற்று ஞாற்சி 31
முரசக்கடிப்பு 49 50
முரச வாழ்க்கை 50
முவ்வகல் 127 128
முவ்வட்டி 122 123
முவட்டி 122
முவ்வாயிரம் 143
முவ்வுழக்கு 127 128
முளவுமா 183
மூவகல் 129
மூவட்டி 122 123
மூவசை 168
மூவாயிரம் 143
மூவாறு 112
மூவிரண்டு 112
மூவுழக்கு 129
மூவெட்டு 112
மூவேழு 112
மூவைந்து 112
மூவொன்பது 112
மூவொன்று 112
மூழக்கு 129
மூக்கு 129
மூன்று நூறாயிரம் 152
மூன்றுமா 169 170
மெய் 2
மொய்ம்பு 9 10 11 12
மொய்ம்புகடிது 19 20 21
மொழி மரபு 23
மொழியியல் சிந்தனைகள் 106
மோனைத்தொடை 40
யாங்கு 68
யாங்குக் கொண்டான் 65 66
யாங்கு கொண்டான் 67
யாட்டின் கால் 32 33 34
யாட்டுக்கால் 31
யாட்டு ஞாற்சி 31
யாடு 34
யாண்டு 41
யாப்பருங்கலவிருத்தி 15
யாப்பருங்கல விருத்தி
யாசிரியர் 7
யாப்பருங்கல விருத்தியுரை 28
யாழ் 55
வங்கத்து வாணிகம் 51 52
வஞ்சிச்சீர் 14
வஞ்சியுரிச்சீர் 15
வட்டம்போர் 49 50
வட்டு 55
வடக்கே தெற்கு 73
வடகடல் 75
வடகிழக்கு 74 75 77
வடகு—வடக்கு 76
வடதுருவம் 77
வடமேற்கு 74 75 77
வடவரை 75
வண்டின்கால் 44 55 56
வண்டு 12
வண்டுக்கால் 42 44
வந்துபோயினான் 66
வயிற்றுத்தீ 31
வரகியாது 25
வரகின்கதிர் 34
வரகு 4 5 131 25
வரகுகடிது 61 62
வரகுகடுமை 13 14
வரகுகதிர் 33 34
வரட்டாடு 62
வருக்க எழுத்து 40
வருங்காலத் தலைமுறை 182
வருவது 8
வளங்கெழுதிருநகர் 171, 172
வளங்கேழ் திருநகர் 172
வாய் 12
வாய்ப்பு 12
வானவரி வில்லுந்திங்களும்
171 172
விடு—விள் 100
விண்ணவிணைத்தது 175, 176
விண்விணைத்தது 179
விண்ணென விணைத்தது 177
விரல் 38
விளக்கத்துக்கொண்டான் 50
வெண்டாமரை 43
வெளிற்றுப்பனை 62
வெற்றடி 177
வெற்றிலை 177
வெற்றுப்பிலி 177
வெற்றெனத் தொடுத்தல் 177
வெறுப்பு 12
வேணவா 109
வேப்பங்காய் 47
வேப்பங்கோடு 45

நிறுவன வெளியீடுகள்

		ரூ.	
1.	எண்பதில் தமிழ்	45	00
2.	பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்	8	00
3.	தமிழர் ஆடைகள்	16	00
4.	தமிழர் கண்ட மனம்	9	00
5.	தமிழக நாட்டுப்புறக் கலைகள்	10	00
6.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	14	00
7.	தமிழர் உணவு	10	00
8.	தமிழர் தோற்கருவிகள்	12	00
9.	தமிழும் தமிழரும்	5	00
10.	Lauguage & Grammar (Heritage of the Tamils)	22	00
11.	Cultural Heritage of the Tamils	20	00
12.	Literary Heritage of the Tamils	50	00
13.	தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம்	10	00
14.	தொல்காப்பியம்-உரைவளம்-நூன்மரபு	9	00
15.	தொல்காப்பியம்-உரைவளம்-மொழிமரபு	9	00
16.	தொல்காப்பியம்-உரைவளம்-பிறப்பியல்	8	00
17.	தொல்காப்பியம்-உரைவளம்-புணரியல்	10	00
18.	தொல்காப்பியம்-உரைவளம்-மரபியல்	10	00
19.	தொல்காப்பியம்-உரைவளம்-தொகைமரபு	8	00
20.	தொல்காப்பியம்-உரைவளம்-கிளவியாக்கம்	20	00
21.	தொல்காப்பியம்-உரைவளம்-உருபியல்	8	00
22.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-3	8	00
23.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-5	12	00
24.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-6	16	00
25.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-7	15	00
26.	கூவநூல்	7	00
27.	மனைநூல்	15	00
28.	பிரபந்தத்திரட்டு	16	00
29.	தந்திவனப்புராணம்	15	50
30.	திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்	7	00
31.	சின்ன மகிபன் குளுவ நாடகம்	5	00
32.	பணவிடுதூது	6	00
33.	கருவூரார் பலதிரட்டு	12	00
34.	சுவடியியல் பயிற்சி-கையேடு	6	00
35.	கும்மிப்பாடல்கள்	16	00
36.	பிரபந்த தீபிகை	12	00
37.	கண்மருத்துவம்	50	00
38.	தமிழில் விடுகதைகள்	12	00
39.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	12	00
40.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்!	6	00
41.	The Tamil Writers Directory	10	00
42.	Tamil Resarch through Journals	7	00
43.	Dr. MU. VA	20	00
44.	Dissertations on Tamilology	10	00
45.	Tirumurugan	5	00
46.	Epigraphical Evidence for Tamil Studies	10	00
47.	A Study of Peruṅkatai	12	00
48.	Tamil Drama	20	00
49.	Papers on Tamil Studies	15	00

இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை-600113.